T
6566

உ

கணபதி துணை.

மண்டல புருடன்

செய்த

# சூடாமணி நிகண்டு.

## மூலமும் - உரையும்

இஃது.

திரிசிரபுரம்

ம-ா-ா-ஸ்ரீ. தியாகராஜபிள்ளையவர்கள்

குமாரர்

## மு - தி - கந்தசாமிபிள்ளை

யவர்களால்


சிந்தாத்திரிப்பேட்டை

நெல்லு மண்டி

வெங்கட்டராமமுதலியாரவர்கள்

குமாரராகிய

கேசவமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

இராக்ஷஸ௵ - ஆனி௴

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

## சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற ... ※
மின்னுபூம்பிண்டிநீழல்வீற்றிருந்தவனைவாழ்த்தி ....... ※
மன்னியநிகண்டுசூடாமணியெனவொன்றுசொல்வ ... ..... ※
னிந்நிலந்தன்னின்மிக்கோர்யாவருமினிதுகேண்மின் ..... ※

(இதனதுபதப்பொருள்.)

பொன்னும்-பொன்னினாலும்—நன்மணியும்—நல்ல இரத்தினத்தினாலும்—முத்தும்-முத்தினாலும்—புனைந்த-அலங்கரிக்கப்பட்ட—முக்குடை - மூன்றுகுடைகளும்—நிழற்ற- நிழலைச்செய்ய-மின்னு-விளங்குகின்ற—பூ-மலர்களையுடைய—பிண்டி- அசோகமரத்தினது—நிழல்-நிழலின்கண்ணே—வீற்றிருந்தவனை வீற்றிருந்த அருகக்கடவுளை—வாழ்த்தி-துதிசெய்து—சூடாமணியென-சூடாமணியென்றுசொல்லும்படி—மன்னிய- பொருந்திய-நிகண்டொன்று- ஓர்நிகண்டை—சொல்வன்- (யான்) கூறுவேன்—இந்நிலந்தன்னில்- இந்தத்தமிழ்நாட்டின்கண்ணே—மிக்கோர்யாவரும்-(கல்வியறிவில்)மிக்கவர்சகலரும்—இனிது - நன்றாக—கேண்மின் -இதனைக்கேளுங்கள் என்றவாறு. ※ யானென்னுமெழுவாய் வருவிக்கப்பட்டது.—பொற்குடை - சகலபாசநமெனவும், மணிக்குடை-நித்தியவிநோதமெனவும், முத்துக்குடை- சந்திரவட்டமெனவும், பெயர்பெறும்,—மன்னியநிகண்டுசூடா மணியெனவொன்று - என்பது-சூடாமணியென மன்னிய நிகண்டொன்று எனமாற்றியுரைக்கப்பட்டது. துதிசெய்து கூறுவேனென்னக்கூட்டுக - நிலமெனப் பொதுப்படக்கூறினாரேனும், இந்நூல்-

தமிழ்நூலாதல்பற்றித் தமிழ்வழங்குநிலமொன்றற்கேஉரித்தாய்நி
ற்றலில் தமிழ்நாடென்றும். எல்லாம்வல்லகடவுளைத் துதிசெய்து
கூறுதலின் நன்குமுடியுமாதலான், இதுகடவுளது கிருபாசாமர்
த்தியத்தாலன்றிஇவனதுவித்தியாசாமர்த்தியத்தினால் கூறப்பட்ட
தன்றென்று துணிந்து பொறாமையையொழித்துக்கேளுங்களெ
ன்பார் இனிதுகேண்மினென்றார். (க)

பூமலியசோகினீழற்பொலிந்தவெம்மடிகண்முன்னா - *
ளேமமாமுதனூல்சொல்லக்கணதரரியன்றபாவாற் - *
றாமொருவழிநூல்சொல்லச்சார்புநூல்பிறருஞ்சொல்லத் *
தோமிலாமூன்றுநூலுந்துவமெனவுதித்தவன்றே - *

(இ-ள்) பூமலி-பூக்கள்மிகுந்த—அசோகின் - அசோகமரத்
தினது—நீழல் நிழலினகண்ணே—பொலிந்த-வீற்றிருந்த—எம்
மடிகள்-நமதுகடவுளாகிய அருகசுவாமி—முன்னாள் - முற்காலத்
தில்—ஏமமாம் - இன்பத்திற்குக்காரணமாகின்ற—முதனூல்- மு
தனூலை-சொல்ல - கூற—கணநாதர் - கணதரரென்பவர்—இயன்
ற-இயல்புபொருந்திய—பாவால்-செய்யுளினால்—தாம் - தாம்—
ஒருவழிநூல்-ஓர்வழிநூலை—சொல்ல- கூற—பிறர்-பிறர்—சார்பு
நூல்-சார்புநூலை—சொல்ல-கூற—தோமிலா - குற்றமில்லாத—
மூன்றுநூலும்-இம்மூன்றுநூல்களும்—துவமென- நிலைபெறும்
நூல்களாக—உதித்த - (இப்படியே) உண்டாயின.—(எ-று.) ❁
உம்-அன்று-ஏ-அசைகள். (உ)

அங்கதுபோயபின்றையலகினூல்பிறந்தமற்றுஞ் - *
செங்கதிர்வரத்திற்றோன்றுந்திவாகரர்சிறப்பின்மிக்க - *
பிங்கலருரைநூற்பாவிற்பேணினர்செய்தார்சேர - *
விங்கிவையிரண்டுங்கற்கவெளிதலவென்றுசூழ்ந்து - *

(இ-ள்) அங்கு-அவ்விடத்து—அது - அது—போயபின்
றை நிகழ்ந்தபின்பு---அலகில்-எண்ணிறந்த---நூல்-நூல்கள்--- பி
றந்த-உண்டாயின—மற்றும்-இன்னும்—செங்கதிர் - சூரியனது-
வரத்தின்-வரத்தினால்—தோன்றும்-உதித்த—திவாகரர்- திவாகரரு
ம்—சிறப்பின்மிக்க- (கல்விச்)சிறப்பின்மிகுந்த—பிங்கலர்- பிங்க
லரும்—உரை-சொல்லப்படுகின்ற— நூற்பாவில்-சூத்திரத்தினால்
---பேணினர்-விரும்பி—செய்தார்-(திவாகரப்பிங்கலந்தை யென்

னும்நூல்களைச்) செய்தனர்---இங்கு-இவ்விடத்து— இவையிரண்டும்-இவ்விரண்டு நூல்களும்---சேர-அந்நூல்களோடுகூட---கற்க-கற்கப்படுதற்கு—எளிதலவென்று-எளியவைகளல்லவென்று—சூழ்ந்து நினைந்து—(எ-று.) (௩)

சொல்லொடுபொருளுணர்ந்தோன்சோதிடநீதிவல்லோ *
னல்லறிவாளனெங்கணறுங்குன்றைஞானமூர்த்தி ..... ..... ..... *
பல்லுயிர்க்கொருதாயாகும்பரமன்மாமுனிவன்மெய்ந்நூல்
வல்லுநர்வல்லார்க்கெல்லாம்வரையறத்தரையில்வந்து......*

(இ-ள்) சொல்லொடு-சொற்களோடு—பொருள்- அவ்வவற்றின்பொருள்களை—உணர்ந்தோன்-அறிந்தவரும் — சோதிடம்-சோதிடசாஸ்திரத்திலும்—நீதி-நியாயசாஸ்திரத்திலும்---வல்லோன்-வல்லவரும்—நல்லறிவாளன்-நல்ல அறிவினையுடையவரும்—நறுங்குன்றை-நல்லகுன்றையூரிலிருக்கின்ற—எங்கள் - எங்களுடைய—ஞானமூர்த்தி-ஞானமேவடிவமாகக்கொண்டவரும்—பல்லுயிர்க்கு - பலஆன்மாக்களுக்கு—ஒருதாயாகும் - ஒப்பில்லாதமாதாவாயுள்ள—பரமன் சிரேஷ்டரும்—மாமுநிவன் - பெரியமுநிவருமாகி—வரையற-வரைவின்றி—மெய்ந்நூல்- மெய்மையாகிய நூல்களிலே—வல்லுநர்-வல்லவர்—வல்லார்க்கெல்லாம்- வல்லவரல்லாதவராகியயாவர்நிமித்தமும்—தரையில்-பூமியின்கண்ணே—வந்து-அவதரித்து—(எ-று) (௪)

பரிதியொன்றுதயஞ்செய்துபங்கயமநேககோடி - *
முருகெழமலர்வித்தென்னமுகமுடனகமலர்த்தி - *
மருவுமுத்தமிழைமுன்னாள் வளர்த்தபாண்டியனைபோலக் *
கருதியவெல்லாந்தந்துகவிமணிமாலைசூடி - - - - *

(இ-ள்) பரிதியொன்று-ஒருசூரியன்—உதயஞ்செய்து-உதித்து---பங்கயமநேககோடி - அநேககோடிதாமரைமலர்களை—முருகெழ-மணமெழும்படியாக—மலர்வித்தென்ன- அலரச்செய்தாற்போல—முகமுடன் முகத்தோடும்—அகம் - நெஞ்சத்தை—மலர்த்தி-அலரச்செய்து—மருவும்- பொருந்திய--- முத்தமிழை-(இயல- இசைநாடகமென்னு) மூன்றுதமிழ்களையும் -- முன்னாள்-முற்காலத்தில்---வளர்த்த-வளர்த்த--- பாண்டியன்போல-

பாண்டியராஜனைப்போல--கருதியவெல்லாம்-நினைத்தவைகள் யாவையும்--தந்து-தந்து---மணி-அழகினையுடைய---கவிமாலை- பாமாலையை---சூடி-சூடி---(எ-று) ஏ அசை. (௫)

ஜெகமெனும்பளிங்குமாடத்திகிரிவேந்தனையேபோலப். *
புகழெனும்பஞ்சுசேர்த்திப்பொலிவுறுபேரத்தாணி - *
மகிழ்குணபத்திரனெங்கள்வழித்தெய்வம்போல்வான் சொல்ல
விகபரமிரண்டும்வேண்டியியலிசைவல்லோர்கேட்க - *

(இ-ள்) ஜெகமெனும் - பூமண்டலமாகிய ---பளிங்குமாடம்-பளிங்குமண்டபத்தின்கண்ணே--திகிரி-ஆஞ்ஞாசக்கிரத்தினுடைய---வேந்தனைப்போல-அரசனைப்போல---புகழெனும் - கீர்த்தியாகிய---பஞ்சி பஞ்சணையை-- சேர்த்தி-வைக்கப்பெற்று---பொலிவுறு-பொலியாநின்ற-பேரத்தாணி-பெரிய அத்தாணியின் மீது---மகிழ்-மகிழ்ந்துவீற்றிருக்கின்ற---குணபத்திரன்- குணபத்திரனென்னும்பெயரையுடைய---எங்கள்வழித்தெய்வம் போல்வான்-எங்கள்குலத்தெய்வம்போல்பவர்---சொல்ல-கூற--இகம்- இம்மைப்பயனும்---பரம்-மறுமைப்பயனுமாகிய---இரண்டும் - இவ்விரண்டையும்---வேண்டி-விரும்பி---இயல்- இயற்றமிழிலும்--இசை-இசைத்தமிழிலும்---வல்லோர்-வல்லவர்கள்---கேட்ப - கேட்க.---(எ-று) (௬)

விரவியதேவர்மக்கள்விலங்கொடுமரமிடம்பல் - - - *
பொருள்செய்யும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பே - *
ரொருசொற்பல்பொருளினோடுமுறைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில் - *

(இ-ள்) விரவிய-பொருந்திய---தேவர்-தெய்வப்பெயர்த்தொகுதியும்---மக்கள்- மக்கட்பெயர்த்தொகுதியும்---விலங்கு- விலங்கின்பெயர்த்தொகுதியும்---மரம்-மரப்பெயர்த்தொகுதியும்---இடம்-இடப்பெயர்த்தொகுதியும்---பல்பொருள்-பல்பொருட்பெயர்த்தொகுதியும்---செயும்வடிவு-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதியும்---பண்பு-பண்புபற்றியபெயர்த்தொகுதியும்---போற்றியசெயல்-பேணப்பட்டசெயல்பற்றியபெயர்த்தொகுதியும்- ஒலிப்பேர்- ஒலிபற்றியபெயர்த்தொகுதியும்---ஒருசொற்பல்பொரு

ள்-ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதியும்---உரைத்தபல்பெயர்க்கூட்டம்-சொல்லப்பட்டபல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதியும்—திவாகரம்- திவாகரத்திலே----வருமுறைபோல்- வரும்முறைமைபோல---வைத்து- வைத்து---பிங்கலந்தைதன்னில்-பிங்கலந்தையிலே.---(எ று) ❊ ஒடு-ஓடும்-இசைநிறை-இன்-சாரியை-தான்-அசை. ஒலிப்பெயரொன்பதில்-பெயரொன்பதைத் தேவரொன்பதுமுதலியமற்றவைகளோடும்கூட்டுக. (எ)

ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்விருத்தந்தன்னி
லிருந்தவைநல்லோர்குற்றமியம்பிடாரென்பதெண்ணித் *
திருந்தியகமலவூர்தி திருப்புகழ்புராணஞ்செய்தோன் *
பரந்தசீர்குணபத்திரன்றாள்பணிந்தமண்டலவன்றானே *

(இ-ள்.)ஒருங்குளபொருளும்-உள்ளபொருள்களெல்லாவற்றையும்---ஓர்ந்திட்டு-அறிந்து---அவை- சபையின்கண்ணே---இருந்த - இருந்த---நல்லோர்-நல்லோர்கள்--குற்றமியம்பிடாரென்பது குற்றஞ்சொல்லார்களென்பதை---எண்ணி-நினைந்து--- விருத்தந்தன்னில்-விருத்தமென்னுஞ் செய்யுளால்---உரைத்தனன்-பாடினார்---திருந்திய-திருந்தின---கமலவூர்தி-அருகக்கடவுளினது.--திருப்புகழ்- சிறப்பாகியகீர்த்தியை---புராணஞ் செய்தோன்-புராணமாகப்பாடினவர்---பரந்தசீர்-பரம்பியபுகழையுடைய---குணபத்திரன்-குணபத்திரரென்பவரது---தாள் - பாதங்களை---பணிந்த - வணங்கிய---மண்டலவன் - மண்டலவர்.---(எ-று)*தான் - ஏ-அசை. மேலைச்செய்யுளிறுதியில் பிங்கலந்தைதன்னில்-என்பதை-இச்செய்யுளின் முதலில்வைத்துப் பிங்கலந்தையிலே யுள்ள பொருள்களெல்லாவற்றையுமெனக்கூட்டுக. (அ)

---

சிறப்புப்பாயிர முற்றிற்று

அருகனெண்குணனிச்சிந்தனறவாழிவேந்தன்வாமன் *
சினன்வரனாறுவன்சாத்தன்சினேந்திரனீதிநூலின் *
முனைவன்மாசேநன்றேவன்மூவுலகுணர்ந்தமூர்த்தி *
புநிதன்வென்றோன்விராகன்பூமிசைநடந்தோன்போதன் (க)

பண்ணவன்கமலவூர்திபரமேட்டிகாதிவென்றோன் *
புண்ணியன்புலவன்பத்தன்பூரணன்பொன்னெயிற்கோன் *
விண்ணவன்விமலன்வீரன்விநாயகன்வீதசோக *
னண்ணல்வின்மதனைவென்றோனருட்கொடிவேந்தனாசான் (உ)

முத்தன்மாமுநிகருத்தன்முக்குடைச்செல்வன்முன்னோன் *
சித்தனெண்சிறப்புமுள்ளோன்றிகம்பரன்கொல்லாவேத *
னித்தனின்மலனின்னாமனிராயுதனேமிநாத *
னத்தனாநந்தன்சோதியரியணைச்செல்வனாதி (ஙு)

ஆத்தன்குற்றங்களில்லானசோகமர்கடவுளாதன் *
சாத்தன்வேதாந்தநாதன்சமயநாமயன்சயம்பு *
நீத்தவன்பிதாவிதாதாநிரம்பரனநந்தஞானி *
தீர்த்தன்மால்பகவன்சாமிசீபதிசீமான்செய்யோன் (ச)

நிருமலன்வரதன்சாதுநிரஞ்சனன்விறலோன்யோகி *
தருமராசன்யுகாதிசதுர்முகன்சாதரூபி *
திருமறுமார்பனீடுசிவகதிக்கிறைதொண்ணூறே *
யருகன்பேராகுமற்றுமபிதாந*மநந்தமாமே (ரு)

சங்கரனிறையோன்சம்புசதாசிவன்பேயோடாடி *
பொங்கரவணிந்தமூர்த்திபுராந்தகன்பூதநாதன் *
கங்கைவேணியல்கங்காளன்கடுக்கையங்கண்ணிசூடி *
மங்கையோர்பாகன்முன்னோன்மகேச்சுரன்வாமதேவன் (சு)

நீலகண்டன்மாதேவனிருமலன்குன்றவில்லி *
சூலபாணியனீசானன்பசுபதிசுடலையாடி *
காலகாலன்கபாலியுருத்திரன்கைலையாளி *
யாலமர்கடவுணித்தனைம்முகன்பரசுபாணி (எ)

* அபிதாநப்-பெயர்.

அருகன்பெயர்---அநகன்-எண்குணன்-நிச்சிந்தன்- அறவாழி-வேந்தன்-வாமன்-சிநன்வரன்-உறுவன்-சாந்தன்-ஜிநேந்திரன்- முனைவன்- மாசேநன்-தேவன் - மூவுலகுணர்ந்தமூர்த்தி - புநிதன்-வென்றோன்-விராகன்-பூமிசைநடந்தோன்-போதன் (௰௬)

பண்ணவன்-கமலவூர்தி-பரமேட்டி-காதிவென்றோன் - புண்ணிய ன்-புலவன்-புத்தன்-பூரணன்-பொன்னெயிற்கோன்-விண்ணவன்-விமலன்-வீரன் விநாயகன் வீதசோகன்-அண்ணல்- மதனைவென் றோன்-அருட்கொடிவேந்தன்-ஆசான் (௰௮)

முத்தன் - மாமுநி- கருத்தன்-முக்குடைச்செல்வன்- முன்னோன்-சித்தன் - எண்சிறப்புமுள்ளோன் திகம்பரன்-கொல்லாவேதன்-நித்தன் - நிமலன்-நின்மலன் நிராயுதன்-நேமிநாதன்-அத்தன்-ஆநந்தன்-சோதி-அரியணைச்செல்வன் ஆதி (௰௯)

ஆத்தன்- குற்றங்களில்லான்-அசோகமர்கடவுள் - ஆதன்-சாத்தன்-வேதாந்தன்-நாதன்-சுமி-அநமயன்-சயம்பு - நீத்தவன்-பிதா-விதாதா-நிரம்பரன்-அநந்தஞானி திர்த்தன் மால்-பகவன்-சாமி-இப தி-சீமான்-செய்யோன் (உஉ)

நிருமலன்-வரதன்-சாது-நிரஞ்சனன்-விறலோன்- யோகி - தருமராஜன்-யுகாதி-சதுர்முகன்-சாதரூபி- திருமறுமார்பன் - சிவகதிக் கிறை (௰உ) ஆகூ (கூ0)

அரன் * பெயர்---சங்கரன் -இறையோன்- சம்பு- சதாசிவன்-பேயோடாடி-அரவணிந்தமூர்த்தி- புராந்தகன்-பூதநாதன் - கங்கை வேணியன்-கங்காளன்- கடுக்கையங்கண்ணிசூடி- மங்கையோர்பாக ன்-முன்னோன்-மகேச்சுரன்-வாமதேவன் (௰௫)

நீலகண்டன்-மாதேவன்-நிருமலன்-குன்றவில்லி- சூலபாணியன்-ஈசாநன்-பசுபதி-சுடலையாடி-காலகாலன்-கபாலி-உருத்திரன்-கைலையாளி-ஆலமர்கடவுள்-நித்தன்-ஐமுகன்-பரசுபாணி. (௰௬)

* அரன்-சிவன்.

## முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி.

அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன் - *
சந்திரசேகரனானந்தன்சடைமுடியனந்தனாதி - *
தந்தியீருரியோனம்பன்றற்பரனீறணிந்தோ - - *
னந்தியீச்சுரனேறூர்ந்தோனக்கன்மாஞானமூர்த்தி - (அ)

வரன்மறைமுதலியோகிமானிடமேந்திசோதி - - *
பிரமன்மாற்கரியோன்றாணுபிஞ்சகன்பிநாகபாணி - *
பரமனெண்டோளன்கூற்றைப்பதைத்திடவுதைத்தபாத - *
னரனதுநாமமாறைந்திரட்டியாமநந்தமற்றும். - (கூ)

இலகுமோர்குண்டலன்மற்றிரேவதிகொண்கன்முற்று - *
நிலவியமுசலின்வெள்ளைநீலவம்பரனநந்த - - *
னலமுறுபடையாக்கொண்டோனச்சுதன்முன்னர்வந்தோன் *
பலபத்திரன்காமபாலன்பனந்தாமன்பலதேவன்பேர். (ய)

மாதவன்மாயோன்செய்யவாமநன்வாசுதேவன் - *
சீதரனநந்தகோபன்றிருமகனுவணமேற்ற - - *
கேதநன்பதுமநாபன்கேசவன்பஞ்சவர்க்குத் - *
தூதனேசார்ங்கபாணிசுரிமுகச்சங்கமேந்தி - - (யக)

கொண்டல்வண்ணன்காகுத்தன்கோவிந்தனச்சுதன்மால் - *
விண்டுவேலையிற்றுயின்றோன்விரிஞ்சனுந்திபூத்தோன் - *
வண்டுழாய்மௌலியாதிவராகன்வைகுந்தநாதன் - *
முண்டகாசனைகேள்வன்றாமோதரன்முராரிநேமி - (யஉ)

வலவன்றேவகிதன்மைந்தன்வநமாலிபடியிடந்தோன் - *
சலசலோசநனநந்தசயநன்பீதாம்பரன்பே - - *
ருலகளந்தருள்வோன்பஞ்சாயுதனுலகுண்டபெம்மா - *
னலகைதன்முலையோடாவியருந்திநாரசிங்கன் - - (ய௩)

அரவணைச்செல்வன்கண்ணனறிதுயிலமர்ந்தமூர்த்தி - - *
பிரமனைப்பெற்றதாதைபின்னைகேள்வன்முகுந்தன் - *
கரியவனெடியோன்காவற்கடவுணாரணனேழே - *
யரியின்பேராகுமற்றுமபிதாதமநந்தமாமே - (ய௪)

அந்திவண்ணன்—முக்கண்ணன்---அழலாடி---பாண்டரங்கன் ---
சந்திரசேகரன்---ஆநந்தன்---அநந்தன்---ஆதி--தந்தியுரிபோன்-
நம்பன்---தற்பரன்---நீறணிந்தோன்---நந்தி---ஈச்சுரன்---ஏறூர்
ந்தோன்---நக்கன்—ஞானமூர்த்தி. (௰௭)

வரன்---மறைமுதலி---யோகி- மானிடமேந்தி---சோதி---பிரமன்
மாற்கரியோன்---தாணு --- பிஞ்சகன்---பினாகபாணி---பரமன்---
எண்டோளன்---கூற்றையுதைத்தபாதன் (௰௨) ஆக ௨௰௯

பலதேவன்பெயர்---ஓர்குண்டலன் ---இரேவதிகொண்கன்---முச
லி---வெள்ளை---நீலவம்பரன்---அநந்தன் --- அலமுறுபடையாக்
கொண்டோன்---அச்சுதன்முன்னர்வந்தோன்---பலபத்திரன்----
காமபாலன்---பனந்தாமன். ஆக ௰௧

அரி * யின்பெயர்---மாதவன்---மாயன்---வாமநன் --- வாசுதேவ
ன் ---சீதரன்---நந்தகோபன்றிருமகன்---உவணகேதநன்-- பதும
நாபன்---கேசவன்---பஞ்சவர்க்குத்தூதன் -சார்ங்கபாணி--- சங்க
மேந்தி, (௰௨)

கொண்டல்வண்ணன்---காகுத்தன் --- கோவிந்தன்---அச்சுதன்---
மால்---விண்டு---வேலையிற்றுயின்றோன்---உந்திபூத்தோன்-- து
ழாய்மௌலி---ஆதிவராகன்---வைகுந்தன் --- முண்டகாசனைநல்க
ல்வன் --தாமோதரன்---முராரி---நேமி. (௰௫)

வலவன்---தேவகிமைந்தன்---வநமாலி---படியிடந்தோன் --- சல
சலோசநன் --- அநந்சயனன் - பீதாம்பரன் - உலகளந்தருள்
வோன்--- பஞ்சாயுதன் - உலகுண்டபெம்மான் - அலகைமுலை
யோடாவியருந்தினோன்---நரசிங்கன் (௰௨)

அரவணைச்செல்வன்---கண்ணன்- அறிதுயிலமர்ந்தமூர்த்தி - பி
ரமனைப்பெற்றதாதை - பின்னைகேள்வன் - முகுந்தன் - கரியவ
ன் - நெடியோன்-காவற்கடவுள் - நாரணன் (௰) ஆக ௬௧

(௨) * அரி-விஷ்ணு.

பிரமன்மேதினிபடைத்தோன்பிதாமகன்பிதாவிதாதா *
வரனயன்மலரோனிந்தமண்பொதுத்தந்தைவேத *
னிரணியகருப்பன்போதனினியமாலுந்திவந்தோன் *
குரவனோதிமமுயர்த்தகொடியினனன்னவூர்தி. (௰௫)

இறைசதாநந்தனீண்டவெண்கணன்விதிசயம்பு *
மறையவனநந்தன்ஞாநிமான்மகள்வாணிகேள்வன் *
முறைதெரிபகவன்வானோர்முதுவனான்முகன்விரிஞ்ச *
னறைமலிகமலயோநிதாமமாறைந்துமாம்ம (௰௬)

தருமராஜன்முநீந்திரன்சிநன்பஞ்சதாரைவிட்டே *
யருள்சுரந்தவுணர்க்கூட்டுந்ததாகதனாதிதேவன் *
விரவுசாக்கியனேசைநன்விநாயகனஜினன்தவிர்ந்தோ *
னரசுநீழலிலிருந்தோனறிவரன்பகவன்செல்வன். (௰௭)

அண்ணலேமாயாதேவிசுதனகளங்கமூர்த்தி *
நண்ணியகலைகட்கெல்லாநாதன்முக்குற்றமில்லோ [தி
னெண்ணில்கண்ணுடையோன்வாமனேற்றபுண்ணியத்தின்மூர்த்
புண்ணியமுதல்வன்சாந்தன்பூமிசைநடந்தோன்புத்தன். (௰௮)

மேகவாகநன்வேள்விக்குவேந்தன்விண்முழுதுமாளி *
பாகசதனனேவச்சிரபாணிகோபதிசிறப்பா *
நாகநீணகர்க்குநாதனான்மருப்பியானையூர்தி *
போகிவாசவனேவேந்தன்புரந்தரன்புலவன்சக்கிரன் (௰௯)

மருதநன்னிலத்துவேந்தன்மருத்துவன்வானோர்கோமான் *
புருகூதன்சசிமணாளன்புரோகிதன்கௌசிகன்னே *
கரியவன்சுநாசீரனாகண்டலனுடன்வலாரி *
யரிசதக்கிருதுநீண்டவாயிரங்கண்ணனிந்திரன். (௨௰)

அங்குசபாசமேந்தியம்பிகைதநயன்முன்னோ *
னைங்கரன்மூத்தோனொற்றையணிமருப்பினனேரம்பன் *
கங்கைபெற்றோன்முககண்ணன்கணபதியீசன்மைந்தன் *
வெங்கயமுகனேயாகுவாகநன்விநாயகன்பேர் (௨௧)

கமலயோனியின்பெயர்---பிரமன்-மேதினிபடைத்தோன்- பிதா மகன் - பிதாவிதாதா - வரன் - அயன்-மலரோன் - மண்பொரூந் தந்தை - வேதன் - இரணியகருப்பன் - போதன் - மாலுந்திவந் தோன்- குரவன்- ஓதிமமுயர்த்தகொடியினன்-அன்னவூர்தி(௰௫)

இறை-சதாநந்தன்-எண்கணன் - விதி-சயம்பு - மறையவன்- அந ந்தன் - ஞாநி - மான்மகன் - வாணிகேள்வன் - பகவன் - வானோர் முதுவன் - நான்முகன் - விரிஞ்சன். (௰௪, ஆ. ௫௰.

புத்தன்பெயர்---தருமராஜன்-முநீந்திரன்-சிநன்-ததாகதன்- ஆதி தேவன்-சாக்கியன்-சைநன்-விநாயகன்- சிநந்தவிர்ந்தோன்- அரசு நிழலிலிருந்தோன் - வரன் - பகவன் - செல்வன். (௰௪)

அண்ணல் - மாயாதேவிசுதன் - அகளங்கமூர்த்தி- கலைகட்கெல்லா நாதன் - முக்குற்றமில்லோன் - எண்ணில்கண்ணுடையோன் - வா மன் - புண்ணியத்தின்மூர்த்தி-புண்ணியமுதல்வன்-சாந்தன்-பூமி சைநடந்தோன். (௰க) ஆ. ௨௫.

இந்திரன்பெயர்---மேகவாகனன் - வேள்விக்குவேந்தன் - விண் முழுதுமாளி - பாகசாதனன் - வச்சிரபாணி - கோபதி - நாகநக ர்க்குநாதன் - நான்மருப்பியானையூர்தி - போகி- வாசவன் - வேந் தன் - புரந்தரன் - புலவன் - சக்கிரன். (௰௪)

மருதநிலத்துவேந்தன் - மருத்துவன் - வானோர்கோமான் - புரு கூதன் - சசிமணாளன் - புரோகிதன் - கௌசிகன் - கரியவன்- சுநாசீரன் - ஆகண்டலன் - வலாரி - அரி - சதக்கிருது - ஆயிரங் கண்ணன். (௰௪) ஆ. ௨அ.

விநாயகன்பெயர்---அங்குசபாசமேந்தி-அம்பிகைதநயன் - முன் னோன் - ஐங்கரன் - மூத்தோன் - ஒற்றைமருப்பினன்-எரம்பன்- கங்கைபெற்றோன் - முக்கண்ணன் - கணபதி - ஈசன்மைந்தன்- கயமுகன் - ஆகுவாகநன். ஆ. ௰௫.

உக்கிரனழற்கண்வந்தோனுமைமகன்சிம்பளானேன் *
முக்கணன்சடையோன்பானைமுகவனுக்கிளையோன்வில்லி *
செக்கர்வானிறத்தன்குரோதன்சிறுவிதிமகஞ்சிதைத்தோன் *
மிக்கபத்திரைக்குக்கேள்வன்வீரபத்திரன்பேராமே. (௨௨)

முருகன்வேள்சாமியாறுமுகன்குகன்குமரன்மாயோன் *
மருகன்சேய்கார்த்திகேயன்வரைபகவெறிந்தோன்செட்டி *
யரன்மகன்நங்கைமைந்தனண்டலைக்கொடியுயர்த்தோன் *
சரவணபவன்கடம்பன்முருகற்செற்றேருசான். (௨௩)

வேட்கைபூங்குறிஞ்சிவேந்தன்வேலினுக்கிறைவிசாகன் *
சேந்தன்காங்கேயன்செவ்வேள்சிலம்பன்மாமஞ்ஞையூர்தி *
வாய்ந்தசூர்ப்பகைவன்வள்ளிமணவாளன்றெய்வயானை *
காந்தனேகுமரன்கந்தன்கலையுணர்புலவனும்பேர். (௨௪)

திருமகண்மைந்தன்மாரன்சித்தசன்சம்பராரி *
யுருவிலிமன்மதன்மீனுறுகொடியுயர்த்தமேதான்ற *
விரதிகாதலன்வசந்தனெழில்பெறுவேனிலாளி *
கருதியகருப்புவில்லிகந்தர்ப்பன்மதன்பூவாளி. (௨௫)

திங்கள்வெண்குடையோன்றென்றற்றேரினன்வில்லிமோக *
னங்கணைக்கிழவனெய்புமலர்க்கணைவேளநங்கன் *
செங்கண்மான்மைந்தன்மிக்கதிறன்மனோபவன்மனோச *
னங்கசன்மனோபுவேநீராழிவெம்முரசோன்காமன். (௨௬)

முத்தனேகுமரன்பிள்ளைமுடிவல்வெம்படையோன்காரி *
சித்தன்கேத்திரபாலன்மேனசெந்தொடைக்குரியகோமான் *
வித்தகன்ஞாளியூர்திவிறற்கருங்குதிரையாளி *
வைத்தசீர்வடுகனின்னவைரவனுமமாமே. (௨௭)

காரியேபுறத்தவன்பூங்கடல்வண்ணனெடியசாத்தன் *
பூரணைகேள்வன்யோகிபுட்கலைதன்மணாள *
னொருமாசாத்தன்செண்டாயுதன்வெள்ளையானையூர்தி *
யாரியனறத்தைக்காப்போனரிகரகுமரனையன். (௨௮)

வீரபத்திரன்பெயர்—உக்கிரன் - அழற்கண்வந்தோன்- உமைமக ன்-சிம்புளானோன்-மூக்கணன்-சடையோன்-யானைமுகனுக்கிளை யோன்-வில்லி-செக்கர்வானிறத்தன்-குரோதன்- சிறுவிதி - மகஞ் சிதைத்தோன்-பத்திரைக்குக்கேள்வன். ஆ ௰௨.

கந்தன்பெயர்--முருகன்-வேள்-சாமி-ஆறுமுகன்-குகன்-குழகன்- மாயோன்மருகன்-சேய்- கார்த்திகேயன் - வரைபகவெறிந்தோன்- செட்டி- அரன்மகன்- கங்கைமைந்தன்- ஆண்டலைக்கொடியுயர்த் தோன்-சரவணபவன்- கடம்பன் - தாருகச்செற்றோன் - ஆசான்- (௰௬)

குறிஞ்சிவேந்தன் - வேலினுக்கிறை - விசாகன் - சேந்தன் - கா ங்கேயன் - செவ்வேள் - சிலம்பன் - மஞ்ஞையூர்தி - சூர்ப்பகை வன் - வள்ளிமணவாளன் - தெய்வயானைகாந்தன் - குமரன்- புலவன். (௰௫) ஆ ௫௧.

காமன்பெயர்---திருமகண்மைந்தன் - மாரன்-சித்தஜன் - சம்ப ராரி - உருவிலி - மந்மதன் - மீன்கொடியுயர்த்தோன்றல்- இரதிகாதலன் - வசந்தன் - வேனிலாளி - கருப்புவில்லி - கந்தர் ப்பன் - மதன் - பூவாளி. (௰௪)

திங்கள்வெண்குடையோன் - தென்றற்றேரினன் - வில்லி - மோ கன் - ஐங்கணைக்கிழவன் - வேள் - அநங்கன் - மான்மைந்தன்- மநோபவன்-மநோசன்-அங்கசன்-மநோபு-ஆழிமுரசோன் (௰௫) ஆ ௨௭.

வைரவன்பெயர்---முத்தன் - குமரன்- பிள்ளை - முடிவற்படை யோன் - காரி - சித்தன் - கேத்திரபாலன் - செந்தொடைக்குரி யகோமான் - வித்தகன் - ஞாளியூர்தி - கருங்குதிரையாளி - வடு கன். ஆ ௰௨.

ஐயனார்பெயர்---காரி-புறத்தவன் - கடல்வண்ணன் - சாத்தன்- பூரணைகேள்வன் - யோகி - புட்கலைமணாளன் - மாசாத்தன்- செண்டாயுதன் - வெள்ளையானையூர்தி - ஆரியன்- அறத்தைக்காப் போன் - அரிகரகுமாரன். ஆ ௰௫.

அரனுடைத்தோழனேகிந்நரர்பிரானளகையாளி *
புருடவாகனனேசெய்யபுட்பகவிமானமுள்ளோ *
னிருநிதிக்கிழவன்மந்திரிபிங்கலனியக்கர்கோமான் *
மாகதன்றநதன்மற்றைவைச்சிரவணன்குபேரன். (௨௯)

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத்தருமனந்தகனேசண்ட *
னமன்வைவச்சுதனேமற்றைநடுவனேதென்றிசைக்கோன் *
யமனரிமறலியேமற்றெருமையூர்தியுமாமிப்பார் *
கமையில்கான்மறன்மடங்கல்காலன்பாசத்தனும்பேர். (௩௰)

மரகதவல்லிபூகமாநிழலுற்றவஞ்சி *
பரமசுந்தரியியக்கிபகவதியம்மையெங்க *
ளருணைமுடிதரித்தாளம்பிகையறத்தின்செல்வி *
தருமம்தவதைபேரம்பாலிகையென்றுஞ்சாற்றலாமே. (௩௧)

அரனிடத்தவள்காமக்கோட்டத்தியம்பிகையேமாதர *
தருமத்தின்செல்விதேவிசாம்பவிமலர்மடந்தை *
பராசிவைகௌரிமுக்கட்பார்ப்பதியொடுபவானி *
யுரைகெழுசத்திநாரியுமைபெயர்மூவைந்தாமே. (௩௨)

வரநதிநீடுமந்தாகினிதிரிபதகைமற்றைச் *
சுரநதிகங்கைபேர்சாநவிபகிரதியுஞ்சொல்லும் *
பெருகுழூதணங்குமோடிபேசியகொற்றிசூரி *
மருங்கியவடுகிமாரிவடுகன்றாய்காடுகாள்பேர். (௩௩)

மாக்கடற்பிறந்தகோதைமாவரிப்பிரியைசெய்யா *
ளாக்கம்பொன்பொறிசீதேவியலர்மகள்பொருளின்செல்வி *
தாக்கணங்கிளையாள்பூமினிலக்குமிசலதைசெல்வந் *
தேக்குமிந்திரையீரொட்டுந்திருமகணாமமாமே. (௩௪)

கலைமகள்பனுவலாட்டிகாயத்திரிஞானமூர்த்தி *
யுலகமாதாபிராமியொள்ளியவெள்ளைமெய்யா *
ளிலகுவெண்கலசமுற்றாள்பாரதியிசைமடந்தை *
மலரயன்மனைவிவாக்காள்வாணிநாமகள்பேராமே. (௩௫)

குபேரன்பெயர்---அரனுடைத்தோழன் - கிந்நரர்பிரான் - அளகையாளி - புருடவாகனன் புட்பகவிமானமுள்ளோன் - இருநிதிக்கிழவன் - மந்திரி - பிங்கலன் - இயக்கர்கோமான் - மாகதன் - தனதன் - வைச்சிரவணன். ஆ௰௨.

மறலியின்பெயர்--- சமன் - செங்கோற்கடவுள் - கூற்று - தருமன் - அந்தகன் - சண்டன் - நமன் - வைவச்சுதன் - நடுவன் - தென்றிசைக்கோன் - யமன் அரி - எருமையூர்தி - ஆ௰௩.
காலன்பெயர்---கால் - மறல் - மடங்கல - பாசத்தன். ஆ௪

தருமதேவதையின்பெயர்--- மரகதவல்லி - பூகநிழலுற்றவஞ்சி - பரமசுந்தரி - இயக்கி - பகவதி - அம்மை - அருகனைமுடிதரித்தாள் - அம்பிகை - அறத்தின்செல்வி - அம்பாலிகை. ஆ௰.

உமையின்பெயர்---அரனிடத்தவள் - காமக்கோட்டத்தி - அம்பிகை - மாதா - தருமத்தின்செல்வி - தேவி - சாம்பவி - மலைமடந்தை - பரை - சிவை - கௌரி - பார்ப்பதி - பவானி - சத்திநாரி. ஆ௰௫.

கங்கையின்பெயர்---வரநதி - மந்தாகினி - திரிபதகை - சுரநதி - சானவி - பகிரதி - ஆ௬.
காடுகாள்பெயர் - மூதணங்கு - மோடி - கொற்றி - சூரி - வடுகி - மாரி - வடுகன்றாய் - ஆ௭.

திருமகள்பெயர் --- கடற்பிறந்தகோதை - மா - அரிப்பிரியை - செய்யாள் - ஆக்கம் - பொன் - பொறி - சீதேவி - அலர்மகள் - பொருளின்செல்வி - தாக்கணங்கு - இளையாள் - பூமின் - இலக்குமி - சலசை - இந்திரை. ஆ௰௬.

நாமகள்பெயர்---கலைமகள் - பனுவலாட்டி - காயத்திரி - ஞானமூர்த்தி - உலகமாதா - அபிராமி - வெள்ளைமெய்யாள் - வெள்ளைச்சலசமுற்றாள் - பாரதி - இசைமடந்தை - அயன்மனைவி - வாக்காள் - வாணி. ஆ௰௩.

சேட்டையிந்திரைக்குமூத்தாள்சீற்கொடிசிறப்பிலாதா *
ணீட்டியவேகவேணிநெடுங்காகத்துவசமுற்றாள் *
கேட்டையேகெடிலணங்குகழுதைவாகினிகேடெல்லா *
மூட்டியகலதிதௌவைமுகடிமூதேவியாமே. (௫௬)

பொருவிலிந்திராணிசெய்யபுலோமிசைசசிபேரின்பந் *
தருமயிராணியிந்திரன்மனைவிபேர்சயந்தன்மைந்த *
னரமகளரம்பையென்பவமரர்தம்மாதர்பேரோ *
விரகுசூரணங்குதெய்வமெல்லியர்பொதுப்பேர்சொல்லும் (௫௭)

சூரிமாவிதியென்போளிசூலிசண்டிகையேதேவி *
வீரிமாதரிகங்காளிவேதாளியுமைமாதங்கி *
தாருகற்செற்றதையல்பைரவிசிவைசாமுண்டி *
யாரணிவல்லணங்கோடையையாமளைமுக்கண்ணி. (௫௮)

அலகைவெண்கொடியுயர்த்தாண்மதுபதியாளியூர்தி *
யுலவியமாயையுற்றயோகினிகாளிநாமம் *
வலவைசூர்மகடேறுமாயவளிடாகினிப்பே *
ரிலகுசந்திநிவஞ்சப்பெண்காளிதன்னேவல்செய்வோர். (௫௯)

அமரியென்போளிவெற்றியந்தரியம்பணத்தி *
சமரிபாலைக்கிழத்திசயமகள்வீரச்செல்வி *
குமரிமாமகிடற்செற்றாள்கொற்றவைசக்கிரபாணி, *
விமலைவண்கலையாநத்திவிசயைநாரணியேவிந்தை (௬௰)

நீலியேநெடியகாத்தியாயநீமேதிச்சென்னி *
மேலிடருறமிதித்தமெல்லியல்கௌரியையை *
மாலினுக்கிளையநங்கைபகவதிவாள்கைக்கொண்டாள் *
சூலிசண்டிகையேகந்திசுந்தரிதுர்க்கைநாமம் (௬௧)

அமரர்பண்ணவர்புத்தேளிர்கடவுளரண்டரும்ப *
ரிமையவர்விபுதர்வானோரிலகரோபுலவர்விண்ணோ *
ரமுதராதித்தர்மேலோராயரோசுரரோதீர்த்த *
ருமிழ்சுடர்மௌலிசூட்டுமுயர்நிலத்தவருந்தேவர் (௬௨)

மூதேவியின்பெயர்—சேட்டை - இந்திரைக்குமூத்தாள் - சீர்கேடி - சிறப்பிலாதாள் - ஏகவேணி - காகத்துவசமுற்றாள் - கேட்டை - கெடலணங்கு - கழுதைவாகநி - கலதி - தௌவை - முகடி ஆ. ௰௨

இந்திரன்மனைவியின்பெயர்—இந்திராணி-புலோமிசை-சசி-அயிராணி- ஆ. ௪] இந்திரன்மைந்தன்பெயர்—சயந்தன்-(௧)] அமரர்மாதர்பெயர்—அரமகள்-அரம்பை - ஆ. ௨] தெய்வமெல்லியர்பொதுப்பெயர்—சூர் - அணங்கு. ஆ. ௨.

காளியின்பெயர்—சூரி-மாலினி-எண்டோளி-சூலி-சண்டிகை-தேவி வீரி-மாதரி-கங்காளி-வேதாளி-உமை-மாதங்கி-தாருகற்செற்றதையல்-பைரவி-சிவை-சாமுண்டி-ஆரணி-வல்லணங்கு-ஐயை-யாமளை-முக்கண்ணி (௨௧)

அலகைக்கொடியுயர்த்தாள்-மதுபதி-யாளியூர்தி-மாயை-யோகினி (௫ ஆ. ௨௬.] இடாகினியின்பெயர்—வலவை-சூர்மகள்-மாயவள்- ஆ. ௩] காளியேவல்செய்மகளிர்பெயர்—சந்தினி - வஞ்சப்பெண். ஆ. ௨

துர்க்கையின்பெயர்—அமரி-எண்டோளி-அந்தரி-அம்பணத்தி-சமரி-பாலக்கிழத்தி-சயமகள்-வீரச்செல்வி-குமரி-மகிடற்செற்றாள் - கொற்றவை-சக்கிரபாணி-விமலை - கலையாநத்தி-விசயை-நாரணி-விந்தை (௰௭)

நீலி-காத்தியாயநி-மேதிச்சென்னி-மிதித்தமெல்லியல் -கௌரி ஐயை-மாலினுக்கிளையநங்கை-பகவதி-வாள்கைக்கொண்டாள் - சூலி-சண்டிகை-கன்னி-சுந்தரி(௰௨) ஆ. ௨௯.

தேவர்பெயர்—அமரர்-பண்ணவர்-புத்தேளிர்-கடவுளர்-அண்டர்-உம்பர்-இமையவர்-விபுதர்-வானோர் - இலேகர்-புலவர்-விண்ணோர்-அமுதர்-ஆதித்தர்-மேலோர்- ஐயர்-சுரர் - தீர்த்தர் - உயர்நிலத்தவர் ஆ. ௰௬

ஈனமில்லணங்குபுத்தேளேற்றசூர்கடவுடேவே ✻
யானதெய்வதமேதெய்வமாமெனவுரைப்பர்நூலோர் ✻
தானவரவுணரோடுதைத்தியர்திதியின்மைந்த ✻
ரேனையவசுரராகுநிசாசரென்றுமேற்கும். (சரு)

நிருதரோபிசிதவுணர்நிசாசரரரக்கர்தீமை ✻
தருமிராக்கதர்பேர்சாலகடங்கடர்தானுமாகும் ✻
விரவுவிஞ்சையர்பேர்வித்தியாதரர்கேசரருமாங்கந் ✻
தருவர்யாழ்வல்லோரோகாந்தருவர்கிந்நரருமாமே. (சசு)

குறள்கிருத்திமமேகூளிபாரிடஞ்சாதகஞ்செந் ✻
நெறியில்பூதப்பேரைந்தாநீள்பிரேதம்வேதாளம் ✻
வெறிமயல்பிசாசுபாசம்வியந்தரமண்ணேசோகோ ✻
டறிவழிகழுகுகூளியலகைபேய்கடிசாவும்பேர். (ச்ரு)

அண்டம்வானுலகுமங்குலந்தரமம்பரங்கோக் ✻
குண்டலங்ககநங்காயங்குடிலம்புட்கரமநந்தங் ✻
கண்டிடாவெளியேமீமாகத்தொடாசினிநபங்கம் ✻
விண்டலம்விசும்புவேணிவியோமமாகாயமாமே. (சசா)

வாதங்கால்வளிமருத்துவாடையேபவநம்வாயுக் ✻
கூதிர்மாருதமால்கோதைகொண்டலேயுலவைகோடை ✻
யூதைவங்கூழ்சிறந்தவொலிசதாகதியுயிர்ப்புக் ✻
காதரிகந்தவாகன்பிரபஞ்சநன்சலநன்காற்றே. (சஎ)

கோடைமேல்காற்றினுமங்கொண்டல்கீழ்காற்றிற்கேற்கும் ✻
வாடையினுமம்வீசும்வடகாற்றுவடந்தையென்ப ✻
கூடியகூதிரூதைகுளிர்பனிக்காற்றினுமம் ✻
சாடியசுழல்காற்றின்பேர்சாரிகைசூறையாமே. (சஅ)

வருதென்கால்சிறுகாறென்றிமலயக்கால்வசந்தன்றென்ற ✻
லரிவசுத்தகநணங்கியநலபவாகநன்றீ ✻
யெரிசுசிசிகியேயாரலியங்குகாற்றின்சகாயன் ✻
கருநெறிகனலியேயங்காரகன்சித்திரபானு. (சகூ)

தெய்வத்தின்பெயர்—அணங்கு - புத்தேள்-சூர்-கடவுள்-தே-தெய்வதம் - தெய்வம். ஆ-எ.

அசுரர்பெயர்—தானவர் - அவுணர் - தைத்தியர் - திதியின்மைந்தர் - நிசாசரர். ஆ-ரு.

இராக்கதர்பெயர்—நிருதர் - பிசிதவூணர் - நிசாசரர்-அரக்கர்-சாலகடங்கர். ஆ-ரு.

விஞ்சையர்பெயர்—வித்தியாதரர் - கேசரர். ஆ-உ.

கந்தருவர்பெயர்—யாழ்வல்லோர் - காந்தருவர் - கிந்நரர் ஆ-௩.

பூதத்தின்பெயர்—குறள் - கிருத்திமம் - கூளி - பாரிடம் - சாதகம் - ஆ-ரு.] பேயின்பெயர்—பிரேதம் - வேதாளம் - வெறிமபல் - பிசாசு - பாசம் - வியந்தரம் - மண்ணை - சோகு - கழுது - கூளி - அலகை - கடி - சாவு. ஆ-௰௪.

ஆகாயத்தின்பெயர்—அண்டம்- வானுலகு - மங்குல் - அந்தரம்- அம்பரம் - கோ - குண்டலம் - ககநம் - காயம் - குடிலம் - புட்கரம் - அநந்தம் - வெளி - மீ - மாகம் - ஆசினி - நபம் - கம் - விண்டலம் - விசும்பு - வேணி - வியோமம். ஆ-உஉ.

காற்றின்பெயர்—வாதம் - கால் - வளி - மருத்து - வாடை - பவநம் - வாயு - கூதிர் - மாருதம் - மால் - கோதை- கொண்டல்-உலவை - கோடை - ஊதை - வங்கூழ் - ஒலி - சதாகதி - உயிர்ப்பு- அரி - கந்தவாகன் - பிரபஞ்சநன் - சலநன். ஆ-உ௩.

மேல்காற்றின்பெயர்—கோடை (௧) கீழ்காற்றின்பெயர்—கொண்டல் (௧) வாடையின்பெயர்—வடகாற்று - வடந்தை ஆ-உ. பனிக்காற்றின்பெயர்—கூதிர் - ஊதை ஆ-உ.] சுழல்காற்றின் பெயர்—சாரிகை - சூறை. ஆ-உ.

தென்றலின்பெயர்—தென்கால் - சிறுகால் - தென்றி - மலயக்கால் - வசந்தன் ஆ-ரு] நெருப்பின்பெயர்—அரி - வசு - தகநன்- அங்கி - அநல் - அயவாகநன் - தீ - எரி - சுசி - சிகி- ஆரல் - காற்றின்சகாயன் - கருநெறி-கனலி-அங்காரகன்-சித்திரபானு ஆ-௰௬.

தழலுதாசநன்சிறந்ததநஞ்சயஞ்சாதவேதாச் *
செழுமையமுளரிதென்கீழ்த்திசையிறைசேர்ந்தார்க்கொல்லி *
யெழுவிதநவேவசந்தியேற்றபாவகனேதேயு *
வழல்சுடர்ஞெகிழியின்னநெருப்பின்பேராறைந்தாமே (ருய)

வடவைதீத்திரண்மடங்கல்வருவடவாமுகஞ்சூழ் *
கடையநலூழித்தீயாங்கனலொழுங்கஞ்சுவாலை *
யடையில்விண்வீழுங்கொள்ளியுற்கையென்றறையலாமே *
வெடிநறைகுய்யிம்மூன்றுமிகுநறும்புகையினாமம். (ருக)

தாவங்காட்டழலத்தீயைத்தருகோலேஞெலிகோலென்ப *
தீவிகைதீபமற்றைத்திகழ்சுடரொளிவிளக்கே *
யாவிதூபந்தாமத்தோடரிபுகைபொறிபுலிங்கம் *
பாவகனத்தித்தெய்வம்பாரியேசுவாகாதேவி. (ருஉ)

வாரியாலங்கீலாலமழையலர்கமலங்காண்ட *
நீரம்புட்கரமேசிந்துநெடும்புனல்சலிலம்பாணி *
காரறல்புவநநாரங்கநவிரதங்கவந்த *
மாரியம்புதமேயப்புவருணஞ்சீவநம்வநம்வார். (ருங)

பயமழையுதகந்தோயம்பயசுசம்பரம்பாநீய *
மயமளகத்தோடாமமமுதங்கஞ்சலநீராகும் *
வியனுறுநீத்தம்வாரிபிரளயம்வெள்ளத்தின்பேர் *
நயனுறுவருணனிந்தநற்புனல்வேந்தனாமம். (ருச)

பரிதிபாற்கரனாதித்தன்பனிப்பகைசுடர்பதங்க *
னிருள்வலிசவிதாச்சூரனெல்லுமார்த்தாண்டனென்று *
மருணனுதயனேமித்திரனுயிரஞ்சோதியுள்ளோன் *
தரணிசெங்கதிரோன்சண்டன்றபநனேயொளியேசான்றோன்.

அநலியேயரியேபானுவலரியேயண்டயோநி *
கனலிஞாயிறுவிகர்த்தனஃகதிரவன்பகலோன்வெய்யோன் *
றிநகரன்பகலேசோதிதிவாகரனரியமாவே *
யிநனுடனுதயன்மற்றையெல்லேயிரணமாலி. (ருசு)

தழல் - உதாசநன் - தநஞ்சயன் - சாதவேதா - மூளரி - தென்கீ ழ்த்திசையிறை - சேர்ந்தார்க்கொல்லி - எழுநா - வந்நி-பாவகன்- தேயு - அழல் - சுடர் - ஞெகிழி. (௰௪) ஆ-௱௰.

ஊழித்தீயின்பெயர்—வடவை- தித்திரள்-மடங்கல்-வடவாமுகம்- கடையநல். ஆ-ரு.] கனலொழுங்கின்பெயர் — சுவாலை. (க) விண்வீழ்கொள்ளியின்பெயர்—உற்கை. (க) நறும்புகையின்பெ யர்—வெடி-நறை-குய். ஆ-௱.

காட்டழலின்பெயர்—தாவம். (க) தீயைத்தருகோலின்பெயர்— ஞெலிகோல். (க) விளக்கின்பெயர்—தீவிகை - தீபம்-சுடர்-ஒளி- ஆ-ச.] புகையின்பெயர்—ஆவி-தூபம் - தூமம்- அரி. ஆ-ச. தீப்பொறியின்பெயர்—புலிங்கம்-(க) தீத்தெய்வத்தின்பெயர்— பாவகன் (க) தீத்தெய்வத்தின்பாரியின்பெயர்—சுவாகாதேவி(க)

நீரின்பெயர்—வாரி - ஆலம் - கிலாலம் - மழையலர்-கமலம்-கான் டம்-நீரம்-புட்கரம்-சிந்து-புனல்-சலிலம்- பாணி-கார்-அறல்-புவ னம்-நாரம்-சுநவிரதம்-கவந்தம்-மாரி-அம்பு-உதம்-❁அப்பு-வரு ணன் - சீவநம் - வநம் - வார் (உ௬)

பயம் - மழை - உதகம் - தோயம் - பயசு - சம்பரம் - பாநீயம்- அயம் - அளகம் - ஆம் - அம் - அமுதம்-கம்-சலம்-(௰௪) ஆ-௱௰. வெள்ளத்தின்பெயர்—நீத்தம்-வாரி - பிரளயம் - ஆ-௱ ] வருண ன்பெயர்—புனல்வேந்தன். (க)

சூரியன்பெயர்—பரிதி-பாற்கரன்-ஆதித்தன்-பனிப்பகை-சுடர்- பதங்கன்-இருள்வலி-சவிதா-சூரன்-எல் - மார்த்தாண்டன்-என்றூ ழ்-அருணன்-ஆதவன்-மித்திரன் - ஆயிரஞ்சோதியுள்ளோன்- தர ணி-செங்கதிரோன்-சண்டன்-தபநன்-ஒளி-சான்றோன். (உஉ)

அநலி-அரி-பாநு-அலரி-அண்டயோநி-கனலி - ஞாயிறு-விகர்த்த ன்-கதிரவன்-பகலோன்-வெய்யோன்-திநகரன்-பகல்-சோதி-திவா கரன்-அரியமா-இநன்-உதயன்-எல்லை-கிரணமாலி. (உ௰)

❁ அப்புதமென்பதை-அப்பு-உதம்-என-இருமொழியாக்காது ஒருமொழியாகக்கொள்ளினும் பொருந்தும்.

விரவுமேழ்பரியோன்வேந்தன்விருச்சிகன்விரோசனன்பே *
ரிரவிவிண்மணியருக்கனேழுஞ்சூரியன்பேர் *
பரிதியின்வட்டந்தானேவிசயமாம்பரிதிவீசுங் *
கிரணமேகரமற்றைக்கிளர்ந்ததீவிரமுமாகும். (௫௭)

நிலவுசோமன்களங்கனிசாபதிபிறைகுளிர்ந்த *
கலையினனுடுவின்வேந்தன்கலாநிதியொடுக்கும்பேரா *
னலவன்சசியேதிங்களம்புலிநிசாகரன்வா *
னுலவிமகிரணன்சாந்தமுற்றதண்ணவன்குரங்கி. (௫௮)

மதியிராக்கதிரேயிந்துமருவுசீதநவனேபல்லோன் *
விதுவொளிமுசுநண்பன்சுதாகரன்வேந்தனுலோன் *
சிதைவிலாமுயலின்கூடுசுங்கதிர்த்தேவென்றெல்லாம் *
புதியசந்திரன்மூவேழுமெட்டும்புகன்றநாமம். (௫௯)

கருதியசெந்தீவண்ணன்காட்டுமங்காரகன்சேய் *
குருதிவக்கிரனேபௌமன்குசனிலமகனாரத்தன் *
மருவியவழலோன்மற்றைமங்கலனுடனேயாரல். *
விரவியவுதிரனின்னமேவுசெவ்வாயினாமம். (௬௰)

சிந்தைகூரியன்கணக்கன்றேர்ப்பாகனருணன்சாமன் *
வந்ததூதுவனேமாலேமதிமகனறிஞன்பாக *
னந்தமாம்புலவன்மற்றையநுவழிமேதைபச்சை *
புந்திபண்டிதனொட்டும்புதன்பெயராகுமன்றே. (௬௧)

தீதிலாத்தெய்வமந்திரிசிகண்டிசனமைச்சன்சீவன் *
வேதனுண்டளப்பானாசான்வேந்தன்பொன்வியாழத்தின்பே *
ரோதியவசுரமந்திரியுசநன்பார்க்கவனேசுங்கன் *
கோதில்சுக்கிரன்பளிங்குபுகர்கவிமழைக்கோள்வெள்ளி. (௬௨)

கதிர்மகன்மந்தன்காரிகரியவன்சௌரிமேற்கோண் *
முதுமகன்பங்குநீலன்முடவனேயமுகன்சநிப்பேர் *
மதியுணுமிராகுநாமமற்றதுதமங்கரும்பா *
மதிகமாங்கேதுச்செம்மைசிகிகதிர்ப்பகையுமாமே. (௬௩)

ஏழ்பரியோன் - வேந்தன் - விருச்சிகன் - விரோசநன் - இரவி-விண்மணி - அருக்கன் (எ)
ஆ சகூ
பரிதியின்வட்டத்தின்பெயர்--- விசயம் (க) பரிதிகிரணத்தின் பெயர்---கரம் - தீவிரம்
ஆ உ

சந்திரன்பெயர்---நிலவு - சோமன் - களங்கன் - நிசாபதி-பிறை-கலையினன் - உடுவின்வேந்தன்-கலாநிதி-குபேரன்-அலவன் சசி-திங்கள் அம்புலி-நிசாகரன்-இமகிரணன்-தண்ணவன்-சுராங்கி-[illegible]

மதி- இராக்கதிர்- இந்து-தாநவன்-அல்லோன்-விது-குமுதநண்பன்-சுதாகரன் - வேந்தன் - ஆலோன் - முயலின்கூடு - பக்கதிர்த்தே (யஉ)
ஆ உகூ

செவ்வாயின்பெயர்---செந்தீவண்ணன்-அங்காரகன்-சேய் - குருதி-வக்கிரன் பௌமன்-குசன்-நிலமகன்-அரத்தன்- அழலோன்-மங்கலன்-ஆரல-உதிரன்.
ஆ யரு

புதன்பெயர்---சிந்தைகூரியன்-கணக்கன்-தேர்ப்பாகன்- அருணன் சாமன்-தூதுவன்-மால்-மதிமகன் அறிஞன் பாகன் - புலவன்-அறவழி-மேதை-பச்சை-புந்தி-பண்டிதன்
ஆ யகூ

வியாழத்தின்பெயர்---தெய்வமந்திரி சிகண்டிசன்-அமைச்சன்-சீவன்-வேதன்-ஆண்டளப்பான்-ஆசான்-வேந்தன்-பொன் ஆகூ
வெள்ளியின்பெயர்---அசுரமந்திரி உசநன்-பார்க்கவன்- சுங்கன்-சுக்கிரன்-பளிங்கு-புகர்-கவி-மழைக்கோள்
ஆகூ

சநியின்பெயர்---கதிர்மகன்-மந்தன்-காரி-கரியவன்-சௌரி- மேற்கோள் முதுமகன்-பங்கு-நீலன்-முடவன்-நோய்முகன் ஆ யக
இராகுவின்பெயர்---தமம் - கறுப்பு ஆ உ
கேதுவின்பெயர்---செம்மை - சிகி - கதிர்ப்பகை ஆ ரு

கொண்டணைமைவருடையாடுகொறிமறிமேடமென்ப *
குண்டைசேமூரிபுல்லங்கோவிடையிடபமாகுந் *
தண்டியாழ்விழவிரட்டைசனைமகணமிதுநந்தானே *
நண்டுஞெண்டலவன்சேக்கைநள்ளிகர்க்கடகமாமே. (௬௪)

கொலையரியாளிமாவேகொடும்புலிசிங்கமென்ப *
முலைமடந்தையர்பேரொல்லாமொழிந்திடுங்கந்நிதானே *
துலைநிறைநிறுப்பான்சீர்கோறாக்குவாணிகன்றுலாப்பே *
ருலைவுறுதெறுக்காறேளேயோதியவிருச்சிகட்பேர். (௬௫)

கொடுமரந்துரோணஞ்சாபங்கொடுஞ்சிலைதநுநாற்பேரோ *
வடிவின்மான்கலைசுறாவேமகரராசிக்குமுப்பேர் *
குடமொடுசீரஞ்சாடிகுடங்கரோகும்பமென்ப *
நெடியமீன்மயிலைமற்சஞ்சலசரநேருமீநம். (௬௬)

பரிமருத்துவனுள்வாசிபரவுமைப்பசியாமேழிரு *
டிரலையமுதனுள்சென்னியென்பதச்சுவிநியின்பேர் *
பரணியேகிழவன்சோறுபகலவன்றராசுதாழி *
தருமனுளடுப்புப்பூதந்தாசிமுக்கூட்டுத்தானே. (௬௭)

எரிபிறந்திடுநாளாரழலறுவாயளக்கர் *
கருதுநாவிதனேயங்கிகார்த்திகையளகுமேற்கும் *
பிரமனுள்சகடுபண்டிபேசியசதியேவைய *
முருள்விமாநந்தேருற்றுவுரோணியேயுரோகிணிப்பேர். (௬௮)

திங்களுண்மதிபேராளன்சேர்ந்தமான்றலையேமாந்து *
பொங்குமார்கழியேமும்மீன்புகழ்நரிப்புறமேபாலை *
யிங்கிவையொன்பதென்பமிருகசீரிடத்தினுமஞ் *
செங்கைமூதிரையாழீசன்றிதமிவையாதிரைப்பேர். (௬௯)

கருதியவதிதிதாளேகழைபுநர்தங்கரும்பு *
பொருவிலாப்புதிதம்பிண்டியாவணம்புநர்பூசப்பேர் *
குருவினுள்கொடிறுவண்டுகுறித்தகாற்குளமேபூச *
மாவினுள்கௌவைபாம்பேயாயிலாயிலியநாற்பேர். (௭௰)

மேடத்தின்பெயர்—மை - வருடை-யாடு - கொறி - மறி. ஆக ௫
இடபத்தின்பெயர்.குண்டை.சே.மூரி-புல்லம்-கோ-விடை ஆக ௬
மிதுநத்தின்பெயர்-தண்டு-யாழ்-விழவு - இரட்டை - சவைமகள்-
ஆக ௫.* கர்க்கடகத்தின்பெயர்- நண்டு-ஞெண்டு-அலவன் - சேக்கை - நள்ளி. - - - - - - ஆக ௫
சிங்கத்தின்பெயர்—அரி-யாளி-மா-கொடும்புலி-ஆக ௪. *கந்நியின்பெயர்,-மடந்தையர்பேரெல்லாமொழிந்திடும் - * துலாத்தின்
பெயர்—துலை நிறை-திருப்பான்-சீர்-கோல்-தூக்கு - வாணிகன்-
ஆக ௭* விருச்சிகத்தின்பெயர்—தெறுக்கால் - தேள் ஆக ௨

தநுவின்பெயர்—கொடுமரம்-துரோணம்-சாபம் - சிலை ஆக ௪
மகரத்தின்பெயர்—மான்-கலை-சுறு ஆக ௩.
கும்பத்தின்பெயர்-குடம்-சீரம்-சாடி குடங்கள் ஆக ௪
மீநத்தின்பெயர்-மீன்-மயிலை-மற்சம்-சலசரம் ஆக ௪

அச்சுவிநியின்பெயர்—பரி-மருத்துவனாள்-வாசி- ஐப்பசி-யாழ்-
ஏறு-இரலை-முதனாள்-சென்னி ஆக ௯
பரணியின்பெயர்—கிழவன்-சோறு-பகலவன்-தராசி-தாழி- தருமனாள்-அடுப்பு-பூதம்-தாசி-முக்கூட்டு ஆக ௰.

கார்த்திகையின்பெயர்—எரிநாள்-ஆரல்-இறால்-அறுவாய்-அளக்கர்-நாவிதன்-அங்கி-அளகு ஆக ௮
உரோகிணியின்பெயர் - பிரமனாள் - சகடு-பண்டி-சதி-வையம்-உருள்-விமாநம்-தேர்-ஊற்றால்-உரோகணி. ஆக ௰.

மிருகசீரிடத்தின்பெயர்—திங்களாள்-மதி-பேராளன்-மான்றலை-
மாழ்கு-மார்கழி-மும்மீன்-நரிப்புறம்-பாலை. ஆக ௯
ஆதிரையின்பெயர்-செங்கை-மூதிரை-யாழ்-ஈசன்றிநம். ஆக ௪

புநர்பூசத்தின்பெயர்—அதிதிநாள்-கழை.புநர்தம்-கரும்பு.புநிதம்-பிண்டி-ஆவணம்-ஆக ௭* பூசத்தின்பெயர்-குருவினாள் - கொடிறு-வண்டு-காற்குளம்-ஆக-௪-* ஆயிலியத்தின்பெயர்-அரவினாள்-கௌவை-பாம்பு-ஆயில் ஆக ௪

கொடுநுகம்வெள்விவாய்க்கால்குறித்ததேவட்டுவனேமாசி *
வடுவறுமுதலிற்றோன்றிவருஞ்சதிமகநாளென்ப *
விடையெழுஞ்சதியேபூர்க்கைவெளிபகவதிநாளோடு *
கடியநாவிதமனையெய்யுங்கணையிருமூப்பேர்பூரம் (௭௧)

பங்குனிகடையில்வந்துபற்றியசதியினோடு *
செங்கதிர்பிறந்தநாளுஞ்சிறந்தவுத்திரமென்றாகுந் *
தங்குகாமரமயங்கிசார்ந்தநாள்களத்துவத்தோ *
டங்கைமீன்களிறுநவ்வியையிரலத்தமேழ்பேர் (௭௨)

அளக்குநெய்பயறுமீனேயறுவையேயாடைதூசு *
துளக்கிலாநடுநாடச்சன்றுவட்டாநாள்சித்திரைப்பேர் *
விளக்கொடுமரக்கால்வீழ்க்கைவெறுநுகங்காற்றினுள்ளே *
ளத்தியகாற்றுத்தீபங்கடிலாச்சாதியேழ்பேர் (௭௩)

முற்றில்வைகாசிகாற்றுமுந்துநாண்முறத்தினோடு *
வெற்றிசேர்சுளகுசேட்டைவிசாகநாளிருமூப்பேரா *
புற்றுளிபெண்ணைதேளேபோந்தைமித்திரநாளாறுஞ்
சொற்றனரனுடமென்றுசோர்விலாநூலோர்தாமே (௭௪)

சேட்டையிந்திரனாள்வேதிசெந்தழலெரியிவ்வைந்துங் *
கேட்டைவல்லாரையென்றுங்கிளத்துபவளத்தநூலோர் *
தேட்கடைகுருகுகொக்குச்சிலையுடனன்றிலாணி *
யீட்டியவசுரநாளிவ்வேழ்பெயர்மூலமென்ப (௭௫)

உடைகுளமுற்குளந்நீருத்தித்தநாள்பூராடப்பேர் *
கடையினிற்குளமேயாணிகருதுவிச்சுவநாளாடி *
யிடையினுத்திராடமென்பமேவியவோணமாயோ *
ணடையுநாளுலக்கைமுக்கோல்சிரவணமாகுநாற்பேர் (௭௬)

மருவியகாகப்புள்ளுவசுக்களுள்பறவைபுள்ளு *
விரவுமாவணியவிட்டம்விளம்பியநாமமைந்தாம் *
பெருகியசெக்குச்சுண்டன்பேசியபோகுன்று *
வருணனாள்சதயமைந்தும்வகுத்தபேர்தொகுத்ததாமே (௭௭)

மகத்தின்பெயர்—கொடுநுகம்-வேள்வி-வாய்க்கால் - வேட்டுவன்-மாசி-முதலில்வருஞ்சனி. ஆக. சா. ✻ பூரத்தின்பெயர்—இடையெழுஞ்சனி-தூர்க்கை-எலி-பகவதிநாள் - நாவிதன் - கணை. ஆக. சா.

உத்திரத்தின்பெயர்—பங்குனி-கடையிற்பற்றியசனி-செங்கதிர்நாள். ஆக. ங. ✻ அத்தத்தின்பெயர்—காமரம்-அங்கிநாள்- கௌத்துவம் - கைம்மீன் - களிறு - நவ்வி - ஐவிரல். ஆக. எ.

சித்திரையின்பெயர்—நெய்-பயறு-மீன்- அறுவை- ஆடை-தூசு-நடுநாள்-தச்சன்-துவட்டாநாள். ஆக. கூ. ✻ சோதியின்பெயர்—விளக்கு - மரக்கால் - வீழ்க்கை - வெறுநுகம் - காற்றினாள்- காற்று - தீபம். ஆக. எ.

விசாகத்தின்பெயர்—முற்றில் - வைகாசி - காற்றுநாள் - முறம்-சுளகு - சேட்டை. ஆக. சா. ✻ அநுடத்தின்பெயர்—புல்-தாளி-பெண்ணை - தேள் - போந்தை - மித்திரநாள். ஆக. சா.

கேட்டையின்பெயர்—சேட்டை-இந்திரனாள்-வேதி- தழல்- எரி-வல்லாரை. ஆக. சா. ✻ மூலத்தின்பெயர்—தேட்கடை-குருகு-கொக்கு-சிலை-அன்றில்-ஆனி - அசுரநாள். ஆக. எ. ✻ பூராடத்தின்பெயர்—உடைகுளம் - முற்குளம் - நீர்நாள். ஆக. ங.

உத்திராடத்தின்பெயர்—கடைக்குளம்- ஆனி-விச்சுவநாள்-ஆடி. ஆக. ச. ✻ ஓணத்தின்பெயர் —மாயோனாள் - உலக்கை - முக்கோல் - சிரவணம். ஆக. ச.

அவிட்டத்தின்பெயர்—காகப்புள் - வசுக்களாள்-பறவை - புள்-ஆவணி. ஆக. ரு. ✻ சதயத்தின்பெயர்—செக்கு- சுண்டன்-போர்-குன்று - வருணனாள். ஆக. ரு.

பொருவின்முற்கொழுங்கோணாழிபுரட்டையேபூரட்டாதி *
முரசுபிற்கொழுங்கோன்மன்னனுத்திரட்டாதிமுப்பே *
ரிசவிதாள்கலம்மேதோணியேற்றமாந்தொழுவேநாவாய் *
பெருகியகடைநாள்சூலம்பெருநாளெட்டிரேவதிப்பேர். (௭௮)

வடமீனேசாலியென்பமற்றருந்ததியின்பேரோ *
டுடுவேதாரகையேபம்பேயுற்கையேசுக்கைவிண்மீன் *
கடிகைநாழிகையாங்கன்னலிருத்தையுமதுவேகாட்டுந் *
துடிகலைவிகலைமுப்பேர்சொல்லியகாலநுட்பம். (௭௯)

வேலையேபயமையஞ்செவ்வியேல்வையேபொழுதுபாணி *
காலைகொன்பதமேபோழ்துகாலப்பேரீரைந்தாகுஞ் *
சாலநீட்டித்தலோடுசார்ந்தபாணித்தருணு *
நீலவுண்கண்ணாய்மற்றுநெடித்தலுநெடும்போழ்தென்ப. (௮௰)

ஒல்லையேயிறையேயுற்றசிறுவரையுடனிலேசம் *
வல்லைமாத்திரைகள்காலவிரைவின்பேர்வகுக்கிலாறு *
நல்லநண்பகலேயுச்சிநடுப்பகன்மத்தியாந *
மிஃதுடன்பவநமோரையிராசியுமதுவேகாட்டும். (௮௧)

அல்லிபாவரியேகங்குலல்கல்யாமினியேநத்த *
மெல்லியோடியாமமாலையிரசநிநிசியிராவா *
மெல்லொடுதிவாப்பகற்பேரெல்வையேதிவசம்வைக *
லல்கலேதினமேயெல்லையாநியம்பகலேநாளாம். (௮௨)

சருவரியந்தகாரங்கச்சளந்தமந்துவாந்த *
மிருளென்பதிமிரமோடுதுணங்கறலென்றுமேற்கு *
நெருநலுநென்னலுந்தானிகழ்ந்ததுபமுன்னைநாளைப் *
பெருகியபின்றைபிற்றைபின்னையென்றியம்பலாமே. (௮௩)

புலரிவைகறையிருமம்விடியலும்போற்றுமப்பேர் *
நிலவுசந்திரிகைவெய்யினிகழ்ந்தவாதவமேயென்றா *
யிலகியமாலைசாயஞ்சந்தியாம்பாமஞ்சாம *
மிவ்வாறுபருவந்தானேயாதியமிருதுவாகும். (௮௪)

பூரட்டாதியின்பெயர்—முற்கொழுங்கோல் - நாழி - புரட்டை—
ஆ௳ரு. * உத்திரட்டாதியின்பெயர்—முரசு- பிற்கொழுங்கோல்-
மன்னன். ஆ௳ரு. * இரேவதியின்பெயர்—இரவிநாள் - கலம்-தோ
ணி-தொழு-நாவாய்-கடைநாள் - சூலம்-பெருநாள். ஆ௳அ.

அருந்ததியின்பெயர்—வடமீன் - சாலி. ஆ௳உ. * விண்மீனின்
பெயர்—உடு - தாரகை - பம் - உற்கை - சுக்கை. ஆ௳ரு.
நாழிகையின்பெயர்--கடிகை - கன்னல் - இருத்தை. ஆ௳ரு.
காலநுட்பத்தின்பெயர்—துடி - கலை - விகலை. ஆ௳ரு.

காலத்தின்பெயர்—வேலை - அமையம் - செவ்வி - எல்வை- பொ
ழுது - பாணி - காலை - கொன் - பதம் - போழ்து. ஆ௳ம.
நெடும்போழ்தின்பெயர்—நீட்டித்தல்-பாணித்தல்-நெடித்தல்.ரு

காலவிரைவின்பெயர் — ஒல்லை - இறை - சிறுவரை - இலேசம்.
வல்லை - மாத்திரை. ஆ௳சா.
மத்தியாநத்தின்பெயர்—நண்பகல்-உச்சி-நடுப்பகல். ஆ௳ரு.
ஓரையின்பெயர்—இல் - பவநம் - இராசி. ஆ௳ரு.

இராவின்பெயர்—அல்-விபாவரி-கங்குல்- அல்கல்-யாமிநி - நத்த
ம்-எல்லி-யாமம்-மாலை-இரசநி-நிசி.ஆக-மக. * பகலின்பெயர்—
எல்-திவா. ஆக-உ. * நாளின்பெயர்—ஏல்வை - திவசம் - வைகல்-
அல்கல் - திநம் - எல்லை - ஆநியம் - பகல். ஆக-அ.

இருளின்பெயர்—சருவரி - அந்தகாரம் - கச்சளம் - தவம்- துவா
ந்தம் - திமிரம் - துணங்கறல். ஆக-எ.
முன்னைநாளின்பெயர்—நெருநல் - நென்னல். ஆக-உ.
பின்னைநாளின்பெயர்—பின்றை - பிற்றை. ஆக-உ.

வைகறையின்பெயர்—புலரி-விடியல்-ஆக-உ. * சந்திரிகையின்
பெயர்—நிலவு(க)வெய்யிலின்பெயர்—ஆதவம்-என்றாழ்-ஆகஉ.
மாலையின்பெயர்—சாயம்- சந்தி. ஆக-உ. * சாமத்தின்பெயர்—
யாமம் (க) * பருவத்தின்பெயர்—ஆநியம்-இருது. ஆக-உ.

திதியொடுபக்கந்தானேயொருகலைதெரிக்குமென்ப *
மதியொடுதிங்கள்சொல்லின்மாதமேம்பதமில்லை *
மதிதெரிகலையிராவேவருஞ்சிநீவாலிநாம *
மதிமறைகலையிராவின்வரும்பெயர்குகுவென்றாமே (௮௫)

அந்தமாமுவாவேபவ்வம்பூரணையிருபேராகு *
மிந்துவோடிரவிகூட்டமமாவாசையிசையுமென்ப *
நந்தைபத்திரையினோடுநாட்டியசயையிரித்தை *
முந்துபூரணையாம்பக்கமுதற்றொட்டுமூன்றுவட்டம். (௮௬)

பரவியகார்கூதிர்முன்பினிற்பனிகளோடு *
விரவியவிளையவேனில்விளைந்திடுமுதிர்ந்தவேனின் *
மருவுமாவணியேயாதிமற்றிரண்டிரண்டுமாதம் *
பருவமூவிரண்டுமாய்ந்துபார்த்திடின்வாய்த்தபேராம். (௮௭)

இகழ்வில்வற்சரமேயாண்டேசமைமுப்பேர்வருடமென்ப *
யுகரிலாயநமுமப்பேராயநமேயாண்டிற்பாதி *
யுகமுடிவுடன்மடங்கலூழியாமாயுள்வாழ்நாண் *
மகிழ்வுறுகற்பந்தானேமலரயன்வாழ்நாளென்ப. (௮௮)

சொரிதுளிதிவலைதூவல்சீகரந்தூறன்மாரி *
வருடமோடுறையேயாலிவானமுமழைப்பேர்பத்தாம் *
பெருமழையென்பதானேபேசிலாசாரமாகும் *
விரவியபனித்தல்சோனைவிடாமழையிரும்பேராமே. (௮௯)

வாலியதிவலைதூவல்வண்சிதர்சீகரத்தோ *
டாலியேதணிமிக்கவுறைதுளியாகவேழ்பே *
ராலியேகரகமற்றைக்கநாபலமாலங்கட்டி *
மேலினுமந்தானும்பர்மேக்குமாங்கிழக்குக்கீழே. (௯௰)

பயனுறுமங்குல்சீதம்பயோதரந்தாராதாரங் *
குயின்மழையெழிலிமஞ்சுகொண்டல்சீமூதங்கொண்மூ *
வியன்முகில்விண்விசும்புவிளையுமால்சலதரஞ்செல் *
புயல்கநந்தரங்கார்பாற்றுமைமாரிமேகம். (௯௧)

ஒருகலையின் பெயர்—திதி-பக்கம் ஆக-௨
மாதத்தின் பெயர்-மதி-திங்கள் ஆக-௨
சிநீவாலியின் பெயர்-மதி தெரிகலையிரா (௧)
குருவின் பெயர்-மதிமறைகலையிரா (௧)

பூரணையின் பெயர்—உவா-பவ்வம்-ஆக-௨-* அமாவாசையின் பெயர் - இந்துவோடிரவிகூட்டம் - (௧)* முதற்பக்கந்தொடங்கி மூன்றுவட்டமாகவருகிற வைந்துபக்கங்களின் பெயர் - நந்தை - பத்திரை-சயை-இரித்தை-பூரணை *

ஆவணிமுதலிரண்டிரண்டு மாதமாகியவறுவகைப்பருவத்தின் பெயர் கார்-கூதிர்—முன்பனி-பின்பனி- இளவேனில்-முதுவேனில்

வருடத்தின் பெயர்—வற்சரம்-ஆண்டு- சமை - ஆயநம் - ஆக-௪
அயநத்தின் பெயர் - ஆண்டிற்பாதி-(௧)* ஊழிகாலத்தின் பெயர்-உகமுடிவு மடங்கல்-ஆக ௨ *-வாழ்நாளின் பெயர்-ஆயுள். (௧)
அயன்வாழ்நாளின் பெயர்-கற்பம் (௧)

மழையின் பெயர்—துளி - திவலை - தூவல் - சீகரம் - தூறல்-மாரி-வருடம் - உறை - ஆலி - வானம். ஆக-௰
பெருமழையின் பெயர்—ஆசாரம் (௧)
விடாமழையின் பெயர்-பனித்தல்-சோனை ஆக-௨

துளியின் பெயர்—திவலை - தூவல் - சிதர் - சீகரம் - ஆலி- தளி-உறை-ஆக-௭ * - ஆலங்கட்டியின் பெயர் - ஆலி - கரகம் - கநோபலம் - ஆக-௩-*-மேலின் பெயர்—உம்பர் - மேக்கு - ஆக ௨-
கீழின் பெயர்-கிழக்கு- (௧)

மேகத்தின் பெயர்—மங்குல்-சீதம்-பயோதரம்-தாராதாரம் குயின்-மழை-எழிலி மஞ்சு-கொண்டல்-சீமூதம்-கொண்மூ - முகில். விண்-விசும்பு-மால்-சலதரம்-செல்- புயல்-கநம் - கந்தரம்-கார்-மை-மாரி ஆக ௨௩.

வெடியொலியசநிசெல்லுவிண்ணேறுமடங்கலாறே - *
யிடியின்பேருருமுமற்றையனலேறுமிதன்பேரொன்ப - *
நெடியவித்துத்தடித்துநீள்சம்பைசபலையோடு - - *
கடியசஞ்சலையேமின்னல்கனருசிமின்னின்பேர் - (௯௨)

(இதன்பெயர்ப்பிரிவு)

இடியின்பெயர்—வெடி-ஒலி-அசநி-செல்-விண்ணேறு-மடங்கல் உரும்-அனலேறு ஆ-௮
மின்னின்பெயர்—வித்துத்து-தடித்து-சம்பை-சபலை-சஞ்சலை-மின்னல்-கனருசி ஆ-௭

பனியிமந்துகினமும்பேர்பரிவேடமூர்கோள்வட்டந் *
தனியிடுவானவிலையிந்திரதநுவென்றாகு *
மினையவதேவரிட்டச்செய்யணூற்றொஃறிசைத்தான் *
புனைகுணபத்திரன்றாள்போற்றுமண்டலவன்றனே (௯௩)

(இதன்பெயர்ப்பிரிவு.)

பனியின்பெயர்—இமம்-துகினம் ஆ-௨
பரிவேடத்தின்பெயர்—ஊர்கோள்-வட்டம் ஆ-௨
வானவில்லின்பெயர்—இந்திரதநு (௬)

முதலாவதுதெய்வப்பெயர்த்தொகுதி.

முற்றிற்று.

முற்றும்.

சிறப்புப்பாயிரமுட்பட செய்யுள்-௱௧.

உ

கடவுள் துணை.

---

# இரண்டாவது

# மக்கட்பெயர்த்தொகுதி.

## காப்பு.

தேனவிழ்த்தளிகளெல்லாஞ்செவ்வழிபாடாநின்ற ※
பூநகைத்திலங்குகஞ்சப்பொகுட்டின்மீதேயொதுங்கு ※
நான்முகக்கடவுள்பாதநாவினானவிற்றியேத்தி ※
மானவர்க்கியன்றபேராவகுத்திடுந்தொகுதிசொல்வாம் ※

(இதனது பதப்பொருள்.)

அளிகளெல்லாம்- வண்டுகளெல்லாம்—தேன்- தேனின்பொருட்டு —அவிழ்த்து-அலர்த்தி—செவ்வழி- செவ்வழிப்பண்ணை—பாடா நின்ற-பாடுகின்ற...பூ - மற்றைமலர்களெல்லாவற்றையும்...நகைத் து-இகழ்ந்து...இலங்கு- விளங்காநின்ற...கஞ்சம்- தாமரையினது ...பொகுட்டின்மீது- கொட்டையின்மேல்...ஒதுங்கு- நடந்த... நான்முகக்கடவுள் - நான்குமுகங்களையுடைய அருகக்கடவுளது... பாதம்-திருவடியை—நாவினால்-நாக்கினால்...நவிற்றி- சொல்லி... ஏத்தி - துதிசெய்து...மானவர்க்கியன்றபேராவகுத்திடுந்தொகுதி- மக்கட்பெயர்த்தொகுதியை...சொல்வாம் (யாம்) கூறுவாம் என்ற வாறு...ஏ - ஈற்றசை. (௧)

துறவர்சார்பில்லோர்நீத்தோர்தூய்த்தவர்முனைவர்மெய்ய *
ரறவர்மாதவர்கடிந்தோரந்தணரடிகளைய *
ருறுவார்தாபதர்விளங்குமிருடிகளுயர்ந்தோர்யோக *
ரறிஞர்பண்ணவர்சிறந்தவருந்தவர்முனிவராமே. (௨)

தாவில்சௌமியரோயோகர்திகம்பரர்சமணநீத்தோர் *
மாவிரதியரோபாசுபதர்காளாமுகர்சைவத்தோர் *
மேவுமால்சமயத்தோர்பேர்மிக்கபாகவதராகுஞ் *
சீவகர்பௌத்தரோடுதேரர்சாக்கியரோபுத்தர். (௩)

நீரினிற்பூவில்வானினினைத்தூழியொதுங்குகின்ற *
சாரணரொன்பராவார்சமணரிலிருத்தி*பெற்றோர் *
பாரியசடைமுடித்தபடிவர்தாபதரோயென்ப *
சூரியகும்பயோனிகுறுமுனியகத்தியன்பேர். (௪)

ஐயர்வேதியரோநூலோரறுதொழிலாளராய்ந்தோர் *
மையில்பூசுரரோசெந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர் *
பொய்யிலந்தணரோயாதிவருணர்முப்புரிநூன்மார்பர் *
மெய்யர்விப்பிரரோவேதபாரகர்வேள்வியாளர். (௫)

இருபிறப்பாளர்பார்ப்பாரோற்றமேற்குலருயர்ந்தோர் *
வருமறையாளர்நாமம்வன்னியேபிரமசாரி × *
யருமறைக்கொடியோன்வின்னூலாளன்பாரத்துவாசி *
தருமநெறிவழாத்துரோணாசாரியன்பேர்மூன்றுமே. (௬)

சான்றவர்மிக்கோர்நல்லோர்தகுதியோர்மேலோராய்ந்தோ *
ரான்றவருலகமேதாவியரறிஞர்கள்பேராசா *
னூன்றுதேசிகனேயோசனுபாத்தியாயன்பணிக்க *
னென்றவாசாரியன்பேரோற்றமாணாக்கன்கற்போன். (௭)

கலைஞர்மேதையரோமூத்தோர்கற்றவரவைவிற்பன்னர் *
தலைமையாங்கவிஞர்சங்கஞ்சாரதிசூரிசாடு *
புலவர்பண்டிதர்பேர்போற்றிலறிஞரும்புதருமாகுங் *
கலைஞரோகவிவல்லோராங்கணக்காயரோத்துணாய்ப்பேர். (௮)

* இருத்தி = சித்தி.

முனிவர்பெயர்—துறவர் - சார்பில்லோர் - நீத்தோர்-தவர்-முனைவர்-மெய்யர்-அறவர்-மாதவர்- கடிந்தோர் - அந்தணர் - அடிகள்-ஐயர் உறுவர்-தாபதர்-இருடிகள்-உயர்ந்தோர்- யோகர்- அறிஞர்-புண்ணவர்-அருந்தவர். ஆ௨௰

சமணநீத்தோர்பெயர்—சௌமியர்- யோகர்-திகம்பரர். ஆ௩.
சைவத்தோர்பெயர்—மாவிரதியர்-பாசுபதர்-காளாமுகர். ஆ௩.
மால்சமயத்தோர்பெயர்---பாகவதர் (க) ❊ புத்தர்பெயர் --- சிவகர்-பௌத்தர்-தேரர்-சாக்கியர். ஆ௪.

சமணரிற்சித்திபெற்றோராவார்-நீரிலும் பூதலத்திலும் வானிலுநினைத்தவிடங்களிற்சஞ்சரிக்கின்ற சாரணரொண்மர்
சடைமுடித்தபடிவர்பெயர்—தாபதர் (க) அகத்தியன்பெயர்---கும்பயோனி-குறுமுனி. ஆ௨

மறையாளர் ❊ பெயர்—ஐயர்-வேதியர்-நூலோர்- அறுதொழிலாளர்-ஆய்ந்தோர்-பூசுரர்-தீவளர்ப்பவர்- தொழுகுலத்தோர் - அந்தணர்-ஆதிவருணர்-முப்புரிநூன்மார்பர்-மெய்யர்-விப்பிரர்- வேதபாரகர்-வேள்வியாளர். (௰௭)

இருபிறப்பாளர்---பார்ப்பார்-மேற்குலர்-உயர்ந்தோர்(௪) ஆ௰௩
பிரமசாரியின்பெயர்--- வன்னி (க) ❊ துரோணாசாரியன்பெயர்---மறைக்கொடியோன்- விண்ணூலாளன்- பாரத்துவாசி. ஆ௩.

அறிஞர்பெயர்---சான்றவர்-மிக்கோர்-நல்லோர்- தகுதியோர்-மேலோர்-ஆய்ந்தோர்-ஆன்றவர்-உலகம்-மேதாவியர் ஆ௯. ❊ ஆசாரியன்பெயர்---ஆசான்-தேசிகன்-ஓசன் - உபாத்தியாயன்- பணிக்கன்-ஆ௫ ❊ மாணாக்கன்பெயர்---கற்போன். (க)

பண்டிதர்பெயர்---கலைஞர்-மேதையர்-மூத்தோர்-கற்றவர்-அவைவிற்பன்னர்-கவிஞர்-சங்கம்- சாரதி- சூரி-சாமி- புலவர்- அறிஞர்-புதர். ஆ௰௪. கலைஞர்பெயர்---கவிவல்லோர். (க)
ஒத்துரைப்போர்பெயர் ---கணக்காயர். (க)

❊ மறையாளர் - பிராமணர்.

குரவனையன்சுவாமிகோமானையடிகளத்தன் *
பரவியவுரவோனீசன்பதியிறைமூத்தோன்பேராங் *
குரிசிலோடண்ணலேந்தல்கூறியதோன்றல்செம்மல் *
பெருமையிற்சிறந்தோனென்றுபேசினர்மாசினூலோர். (௯)

நாதனேகொழுநன்காந்தனாட்டியபதிகோனீச *
னாதியனதிபன்செம்மலரன்பிரானாதிமன்ன *
னேதிலெப்பொருட்குந்தானேயிறைபெயரிவைபன்மூன்று *
மோதுசீருலகமென்பதுயர்ந்தவர்க்கியம்புநாமம். (௰)

சவைசமவாயஞ்சங்கஞ்சமுதாயஞ்சமூகங்கோட்டி *
யவைகுழாங்குழுவேகூட்டமடர்திரள்கணங்களீரா *
றிவைதிரண்டோர்பேர்பண்ணையெய்தியவோரைபொய்த *
லவைபெண்கள்கூட்டமாயங்கெடவரலதுவுமாமே. (௰௧)

புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்ன *
னரபதிபொருநன்மற்றைநகைமுடிநிருபனோடு *
குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ண *
லரசன்பேரிவைமூவைந்தாந்தலைவன்காவலனுமாமே. (௰௨)

தருதெய்வவிரதன்கங்கைதனயன்சந்தனுமுன்பெற்றோன் *
கருதியபிரமசாரிகாங்கேயன்வீட்டுமன்பேர் *
பரவுபாரதரோமற்றைப்பௌரவனொன்னுநாமங் *
குருகுலவேந்தர்க்காகுங்கௌரவனொன்றுங்கூறும். (௰௩)

தரமிகுகுவளைத்தாரானுதிட்டிரன்பொறையன்சாற்று *
முரசுயர்கொடியோனீதிமொழிபுநல்லறத்தின்சேயே *
குருகுலப்பாண்டுமைந்தன்குந்திதன்புதல்வன்மெய்ம்மை *
விரதமாக்கொள்வோன்மேன்மைத்தருமன்பேரொட்டுமாமே. (௰௪)

மருவுகாந்தாரிமைந்தனந்தியாவட்டத்தாம *
னரவுயர்த்தவன்வணங்காமுடியினனரசர்மன்ன *
னுணாகெழுசுயோதனன்கண்ணென்றுமில்லாதோனுண *
திருதராட்டிரன்றன்செல்வன்சீர்த்துரியோதனன்பேர். (௰௫)

மூத்தோன்பெயர்---குரவன்-ஐயன் - சுவாமி-கோமான்-அடிகள்-அத்தன் உரவோன்-ஈசன்-பதி-இறை ஆ ௰.
பெருமையிற்சிறந்தோன்பெயர்--- குரிசில் - அண்ணல் -ஏந்தல்-தோன்றல்-செம்மல் ஆ ௫.

எப்பொருட்குமிறையின்பெயர்---நாதன்- கொழுநன்- காந்தன்-பதி- கோன்- ஈசன்- ஆதிபன்-அதிபன்-செம்மல்-அரன்-பிரான்-ஆதி-மன்னன்- ஆ ௰௩-※உயர்ந்தவர்பெயர்---: [illegible] (௪)

திரண்டோர்பெயர்---சவை-சமவாயம்-சங்கம்-சமுதாயம்-சமூகம்-கோட்டி-அவை-குழாம்-குழூ-கூட்டம்-திரள்கணம். ஆ ௰௨.
※ பெண்கள்கூட்டத்தின்பெயர்---பண்ணை - ஓரை - பொய்தல்-ஆயம்-கெடவரல். ஆ ௫.

அரசன்பெயர்---புரவலன்- பெருமான்- ஏந்தல்- பூபாலன்- வேந்தன்-மன்னன்-நரபதி-பொருநன-நிருபன்-குரிசில்- பார்த்திவன்-கோ-கொற்றவன்-இறைவன்-அண்ணல்-தலைவன்-காவலன் ஆ ௰௭.

வீட்டுமன்பெயர்---தெய்வவிரதன்- கங்கைதனயன்- சந்தனுமுன் பெற்றோன்-பிரமசாரி-காங்கேயன். ஆ ௬.
குருகுலவேந்தர்பெயர்---பாரதர்-பௌரவர்-கௌரவர்- ஆ ௩.

தருமன்பெயர்---குவளைத்தாரான்-உதிட்டிரன்-பொறையன்- முரசக்கொடியோன்- அறத்தின்சேய்- பாண்டுமைந்தன்- குந்திபுதல்வன்-மெய்ம்மைவிரதமாக்கொள்வோன். ஆ அ.

துரியோதனன்பெயர்---காந்தாரிமைந்தன் - நந்தியாவட்டத்தாமன்-அரவுயர்த்தவன்-வணங்காமுடியினன்-அரசர்மன்னன் - சுயோதனன்-திருதராட்டிரன்செல்வன். ஆ எ.

கடுங்கதிர்மதலைவீசுங்கவசகுண்டலனேகச்சை *
நெடுங்கொடியினன்கானீனனீளங்கர்கோமான்கன்னன் *
மடங்கலின்கொடியோன்வெய்யமாருதிவாயுமைந்த *
னிடிம்பிதன்கொழுநன்வீமன்கதாயுதனென்றுமேற்கும். (௰௬)

குற்றமில்கிருட்டிணன்பற்குனன்றனஞ்சயன்காண்டீவன் *
வெற்றிசேர்சவ்வியசாசிவீபற்சுவிசயன்பார்த்தன் *
கொற்றகேசவற்குத்தோழன்சுவேதவாகனன்கிரீடி *
யற்றமிலருச்சுனற்கேயமைந்தபேர்பன்னொன்றாமே. (௰௭)

வில்லவன்கொங்கன்வஞ்சிவேந்தனேபொருந்தின்றாரோன் *
கொல்லிவெற்பன்குடக்கோக்குட்டுவன்குடகன்கோதை *
மல்லல்சேருதியன்வானவரம்பனேமலயமானே *
செல்லநீர்பொருநையாற்றோன்சேரலன்சேரன்பேரே. (௰௮)

நேரியன்சென்னிபொன்னித்துறைவனேநேரிவெற்ப *
னாரின்மாலையனேகிள்ளியபயனேகோழிவேந்தன் *
சீரியவளவன்மிக்கசெம்பியன்புலியுயர்த்தோன் *
சூரியன்புனனாடன்கோச்சோழன்மாலென்றுஞ்சொல்லும். (௰௯)

செழியனேகூடற்கோமான்றென்னவன்வேம்பின்றாரோன் *
வழுதியேகுமரிச்சேர்ப்பன்வையையந்துறைவன்மாறன் *
விழைவுறுபொதியவெற்பன்மீனவன்கைதவன்சொற் *
பழையபஞ்சவனேவெய்யகௌரியன்பாண்டியன்பேர். (௨௰)

குறும்பரேயரட்டர்வேளிர்குறுநிலமன்னராகுஞ் *
செறிந்திடுபுரோசரும்பேர்தேர்ச்சியிற்றுணைவரொண்ண *
ருறைந்திடுநூலோர்சூழ்வோருழையர்மந்திரரேநீதி *
யறிந்திடுமுதுவர்முன்னோரமாத்தியரமைச்சர்நாமம். (௨௧)

பெருகியபொருநன்சேனாபதிபடைத்தலைவன்பேரே *
வருநிமித்திகன்பேர்சாக்கைவள்ளுவனென்றுமாகுங் *
கருதுகாவிதியரொன்பகணக்கர்தம்வழியினுள்ளார் *
பரவியபரிவாரப்பேர்பரியாளமென்னலாமே. (௨௨)

கன்னன்பெயர்—கதிர்மதலை - கவசகுண்டலன் - கச்சைக்கொடியினன் - கானீனன் - அங்கர்கோமான் - ஆ ௫. வீமன்பெயர்—மடங்கலின்கொடியோன் - மாருதி - வாயுமைந்தன் - இடும்பிகொழுநன் - கதாயுதன். ஆ ௫.

அருச்சுனன்பெயர்—கிருட்டிணன்- பற்குனன்- தனஞ்சயன் -காண்டீவன்-சவ்வியசாசி- வீபற்சு-விசயன்-பார்த்தன் - கேசவற்குத்தோழன் - சுவேதவாகனன் - கிரீடி. ஆ ௰௧.

சேரன்பெயர்...வில்லவன் - கொங்கன் - வஞ்சிவேந்தன் - போந்தின்றாரோன் - கொல்லிவெற்பன் - குடக்கோ - குட்டுவன் -குடகன் - கோதை - உதியன் - வானவரம்பன் - மலயமான் - பொருநையாற்றுறைவன் - சேரலன். ஆ ௰௬.

கோச்சோழன்பெயர்...நேரியன் - சென்னி - பொன்னித்துறைவன்-நேரிவெற்பன்-ஆரின்மாலையன்-கிள்ளி-அபயன்-கோழிவேந்தன்-வளவன்-செம்பியன்- புலியுயர்த்தோன்- சூரியன்- புனனாடன்-மால். ஆ ௰௬.

பாண்டியன்பெயர்...செழியன் - கூடற்கோமான் - தென்னவன்-வேம்பின்றாரோன்-வழுதி-குமரிச்சேர்ப்பன் -வையையந்துறைவன்-மாறன்- பொதியவெற்பன்-மீனவன் - கைதவன் - பஞ்சவன்-கௌரியன். ஆ ௰௩.

குறுநிலமன்னர்பெயர்...குறும்பர்-அரட்டர்- வேளிர் - பரோசர்-ஆ ௪. அமைச்சர்பெயர்...தேர்ச்சித்துணைவர்-எண்ணர்- நூலோர்-சூழ்வோர்-உழையர்-மந்திரர்-முதுவர்-முன்னோர்-அமாத்தியர்-ஆ ௯.

படைத்தலைவன்பெயர்—பொருநன்-சேனாபதி- ஆ ௨. நிமித்திகன்* பெயர்—சாத்தை-வள்ளுவன்-ஆ ௨. கணக்கர்வழியினுள்ளார்பெயர்—காவிதியர் (௧) பரிவாரத்தின்பெயர்—பரியாளம். (௧)

* நிமித்திகன்-அரசர்க்குரியகருமத்தலைவன்.

மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானுந் *
தக்கனுந்துமாரிதானுஞ்சகரனுநளனுந்தாமுன் *
னக்குரன்சந்திமானோடந்திமான்சிசுபாலன்னே *
வுக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே. (௨௩)

பாரியாயெழிலிநள்ளிபசுந்தொடைமலயன்பேக *
னோரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதீந்தும் *
வாரியிலிறந்தோர்க்கிட்டும்வளர்புகழ்துதிக்கவீந்தும் *
பேரியல்வையமெண்ணப்பெற்றனர்முப்பாலாகும். (௨௪)

இளங்கோக்கண்மன்னர்பின்னரிப்பரொட்டியர்காராளர் *
வளம்பெறவாழ்வேளாளர்வைசியர்தம்பொதுப்பேராறுங் *
கிளந்தகோக்காத்தன்மற்றுங்கிளர்பொருளீட்டலேனை *
விளங்கவேயுழலான்மூன்றுகுலம்பெறும்வேறுசொல்வாம். (௨௫)

வந்தகோவலருடன்கோவர்த்தனரிப்பர்முப்பேர் *
மூந்துகோவைசியரொன்றுமொழிந்திடும்வணிகர்நாய்கர் *
தந்தநூற்பரதர்முப்பேர்தனவைசியர்க்கேசாற்று *
மூந்துபூவைசியர்முப்பேருழவர்மேழியர்வேளாளர். (௨௬)

இந்தமுக்குலத்துளார்க்கேயேவல்பூண்டொழுகுகின்ற *
வெந்திறலாளர்தாமேவிதித்தசூத்திரரொன்றுகுத் *
தந்தநூலுரைத்தவாறேசாற்றினமிவர்கடாமே *
யுந்தியதொழிலுக்கெல்லாமுரியவர்தெரியுங்காலே. (௨௭)

வெம்பியபிடகராயுள்வேதியர்மருத்துவர்க்கா *
மம்புவிமற்றுமாமாத்திரரொன்றுமவர்க்கேகூறுங் *
கும்பகாரன்குலாலன்குறித்தவேட்கோவன்சக்கிரி *
நம்புமட்பகைவினைந்துநாட்டியகுயவனுமம். (௨௮)

சிற்பரோவியரோமோகர்சித்திரகாரர்நாமஞ் *
சிற்பியர்துவட்டாவோவர்தபதியர்சிறப்பின்மிக்க *
வற்புதர்யவனர்கொல்லரக்கசாலையர்புனைந்தோர் *
கற்பில்கம்மியரோகண்ணுள்வினைஞர்கண்ணுளர்நாமம். (௨௯)

வரைவின்றியாவர்க்குங்கொடுக்கு முதல்வள்ள லெழுவர்பெயர்— செம்பியன்-காரி-விராடன்-நிருதி-துந்துமாரி-சகரன்-நளன் ஆ_எ
இரப்போர்க்குக்கொடுக்குமிடைவள்ளலெழுவர்பெயர்— அக்குரன்-சந்திமான்-அந்திமான்-சிசுபாலன்-வக்கிரன்-கன்னன்-சந்தன்- ஆ_எ
புகழ்வோர்க்குக்கொடுக்குங்கடைவள்ளலெழுவர்பெயர் — பாரி-ஆய்-எழிலி-நள்ளி-மலயன்-பேகன்-ஓரி ஆ_எ

வைசியர்பொதுப்பெயர்—இளங்கோக்கள்-மன்னர்பின்னர் - இப்பர்-எட்டியர்-காராளர்-வேளாளர் ஆ_சா
பசுக்காத்தலானும்-பொருளீட்டலானும்-ஏருழுதலானும் - மூன்றுகுலமாகியவைசியர்க்குமுறையேபெயர்சொல்லுமாறு

கோவைசியர்பெயர்—கோவலர்-கோவர்த்தனர்-இப்பர் ஆ_ங
தனவைசியர்பெயர்—வணிகர்-நாய்கர்-பரதர் ஆ_ங
பூவைசியர்பெயர்—உழவர்-மேழியர்-வேளாளர் ஆ_ங

இம்முக்குலத்துளார்க்குமேவல்செய்வோர்பெயர்—சூத்திரர்-தொழிற்குரியவர் ஆ_உ

மருத்துவர்*பெயர்—பிடகர்-ஆயுள்வேதியர்-மாமாத்திரர் ஆ_ங
குயவன்பெயர் — கும்பகாரன்-குலாலன்-வேட்கோவன்-சக்கிரி-மட்பகைவன் ஆ_ரு

சித்திரகாரர்பெயர்—சிற்பர்-ஓவியர்-மோகர்-ஆ_ங* கண்ணுளர்பெயர்—சிற்பியர்-துவட்டா-ஓவர்-தபதியர் -அற்புதர் - யவனர்-கொல்லர்-அக்கசாலையர்-புனைந்தோர்-கம்மியர்-கண்ணுள்வினைஞர் ஆ_யக

*மருத்துவர் வைத்தியர்.

கருமரோமனுவர்கொல்லர்காட்டியநாமமாகு *
மரவினையாளன்மற்றைமயனொடுதபதிதச்சன் *
பரியும்பொன்செய்யுங்கொல்லர்பொன்வினைமாக்கடட்டா *
ருளைகெழுசொன்னகாரரக்கசாலையருமோதும் (௫௰)

தருமுறைதெரிந்தசிற்பாசாரியர்மண்ணீட்டாளர் *
பொருளினையுருக்குந்தட்டார்பொன்செய்யும்புலவனென்ப *
பெருகியபணித்தட்டார்தம்பேர்கலந்தருநர்தாமே *
வருமுறைமுத்தங்கோப்பார்மணிகுயிற்றுநரென்றுமே (௫௧)

கலத்தைச்செய்கஞ்சகாரர்கன்னுவர்கன்னராகு *
மிலேச்சரோயாரியர்க்காமிலேச்சரும்விதித்தபேரே *
துலைப்படும்யவனரென்பசோனகருவச்சரும்பேர் *
மலைப்பிலாவுமணருப்புவாணிகர்காணுங்காலை (௫௨)

இருந்தகாழியரோதூசரீரங்கோலியரோவண்ணார் *
வரும்பெருமஞ்சிகன்சீமங்கலிமாசுதீர்த்துத் *
திருந்துமேனுதிமூன்றுஞ்சிறந்தநாவிதன்பேராகும் *
பொருந்தரோம்வதகாரர்போற்றுங்காருகர்நெய்வார்பேர் (௫௩)

பொல்லரோதுன்னரென்பபுகன்றதோற்றுன்னர்செம்மா *
ருல்லியர்கூடநூலோரொளிவளைபோழ்நர்தாமே *
மெல்லியசங்கறுப்போர்சூனரூன்விற்போரென்ப *
சொல்லியபறம்பர்தாமேதோல்வினைமாக்களுமம் (௫௪)

கொலைஞரோகளைஞர்வங்கர்குணுங்கர்மாதங்கரோடு *
புலைஞுமாயிழிஞுமாழ்பேர்பொருந்துசண்டாளர்நாம *
மூலவுசென்னியரோபண்டரோவர்வந்தித்துநிற்போர் *
பலர்புகழ்மதங்கர்சூதர்பண்ணவர்பாணராமே (௫௫)

சக்கிரிநந்திசெக்கான்றன்பெயராகுமென்ப *
தொக்ககள்விற்போர்நாமஞ்சொண்டிகர்துவசரோடு *
தக்கதோர்பிழியர்மற்றும்படுவருஞ்சாற்றுமன்றே *
மிக்கமீகாமனுமமீகான்மாலுமிநீகானும் (௫௬)

கருமர்பெயர்---மனுவர்-கொல்லர் - ஆ-௨-*தச்சன்பெயர்---மாவினையாளன்-மயன்-தபதி-ஆ-௩-*தட்டார்பெயர் - பொன்செய்யுங்கொல்லர் - பொன்வினைமாக்கள் - சொன்னகாரர்-அக்கசாலையர் ஆ-௪

சிற்பாசாரியர்பெயர்---மண்ணீட்டாளர் (௧)
பொருளினையுருக்குந்தட்டார்பெயர்---பொன்செய்யும்புலவர் (௧)
பணித்தட்டார்பெயர்---கலத்தருநர் (௧)
முத்தங்கோப்பார்பெயர்---மணிகுயிற்றுநர் (௧)

கன்னார்பெயர்---கஞ்சகாரர்-கன்னுவர் ஆ-௨
ஆரியர்பெயர்---மிலைச்சர்-மிலேச்சர் ஆ-௨
சோனகர்பெயர்---யவனர்-உவச்சர் ஆ-௨
உப்புவாணிகர்பெயர்---உமணர் (௧)

வண்ணார்பெயர்---காழியர்-தூசர்-ஈரங்கோலியர் ஆ-௩
நாவிதன்பெயர்---பெருமஞ்சிகன்-சீமங்கலி-எஞதி ஆ-௩
வேதகாரர்பெயர்---பொருந்தர் (௪)
நெய்வார்பெயர்---காருகர் (௧)

துன்னர்*பெயர்---பொல்லர் (௧) *தோற்றுன்னர்பெயர்---செம்மார்(௧) *கூ.வநூலோர்❋பெயர்---உல்லியர்(௧) *சங்கறுப்போர்பெயர்---வளைபோழ்நர் (௧) * ஊன்விற்போர் பெயர்--- சூனர்(௧)*தோல்வினைமாக்கள்பெயர்---பறம்பர் (௧)

சண்டாளர்பெயர்---கொலைஞர்-களைஞர்-வங்கர்-குணுங்கர் - மாதங்கர்-புலைஞர்-இழிஞர் ஆ-௭-*பாணர்பெயர் - சென்னியர்-பண்டர்-ஓவர்-வந்தித்துநிற்போர்-மதங்கர்-சூதர்-பண்ணவர். ஆ-௭

செக்கான்பெயர்---சக்கிரி-நத்தி ஆ-௨-*கள்விற்போர்பெயர்---சௌண்டிகர்-துவசர்-பிழியர்-படுவர் ஆ-௪ - *மீகாமன்பெயர்-மீகான்-மாலுமி-நீகான். ஆ-௩

*துன்னர்- தையற்காரர்❋கூவநூல் - கீழ்நீர்க்குறியறிசாத்திரம்.

மாவலர்வதுவரோடுவாதுவர்பண்ணுவார்பேர் *
சோர்விலாப்பாகரோடாதோரணர்யானைப்பாகர் *
காவலர்மெய்காப்பாளர்கஞ்சுகியென்றுங்காட்டு *
மேவுகாரோடமொன்பவுறைகாரர்விதித்தபேரே (௫௭)

தூயதேர்ப்பாகன்சூதன்வலவன்சாரதியுஞ்சொல்லும் *
வேயர்சாரணரேயொற்றர்விதித்தபேர்மடையர்நாம *
மேயவாலுவரேமிக்ககூவியரென்றுநாலை *
யாயும்பாணசிகனென்றும்பாசகனென்றுமாமே (௫௮)

நாடகர்கண்ணுளாளர்நடர்வயிரியர்நிருத்தர் *
கோடியர்பொருநர்கூத்தரவினயரென்றுங்கூறு *
நீடியவாயிலோரேநெடுந்தமிழ்க்கூத்தரென்ப *
ராம்ப்வேழம்பரென்பகழாயருக்கடைத்தநாமம் (௫௯)

குயிலுவர்நரம்பினுயகருவியைக்கொளுத்துமாக்க *
ளியலுந்தோற்கருவியாளரியவராம்வெறியாட்டாளன் *
சயமுறுந்தவராளன்சாலினிதேவராட்டி *
யயலவர்நொதுமலாளர்வம்பலரென்றுமாமே (௬௰)

புதியவர்விருந்தோரென்பவதிதிவம்பலரும்போற்றும் *
பதிகனேவழிச்செல்வோனும்வியவனேயேவுவான்பேர் *
மூதுவர்மூதுணர்ந்தோர்நாமங்கிழவரேயுரியோர்பேரா *
மதிகமாங்குறிக்கொள்வோர்பாராயணரென்பதாமே (௬௧)

வித்தகர்வினையுளாப்போர்விதியுளிவழியுளாப்போ *
ருத்தமமானபண்புற்றுளாயவர்தூதராகுந் *
தொத்தொடுகிணைகர்தாசர்தொழும்பொடுதொறுவிருத்தி *
யத்தகுதொண்டுசேடராளிவையடிமையாமே (௬௨)

சிலதனேநண்பன்பாங்கன்சேடனேதுணைவன்றோழ *
னெஃலுவனுமாமிவன்முன்னிலைப்பெயரோடாவென்ப *
சிலதியேசகியேபாங்கிசேடியேயிகுளைதோழி *
நலமுறுமுன்னிலைப்பேர்நாடின்மற்றேடியெல்லா (௬௫)

பண்ணுவர்பெயர்---மாவலர்-வதுவர்-வாதுவர் ஆ௳ ௩
யானைப்பாகர்பெயர்---பாகர்- ஆதோரணர் - ஆ௳ உ *மெய்காப்பாளர்பெயர்---காவலர்-கஞ்சுகி - ஆ௳ உ * உறைகாரர் பெயர்---காரோடர் (க)

தேர்ப்பாகன்பெயர்---சூதன்-வலவன்-சாரதி ஆ௳ ௩-* ஒற்றர்பெயர்---வேயர் சாரணர்-ஆ௳ உ*மடையர்பெயர்---வாலுவர்- கூவியர்-பானசிகர்-பாசகர் ஆ௳ ௪

கூத்தர்பெயர்---நாடகர்-கண்ணுளாளர்-நடர்-வயிரியர்- நிருத்தர்-கோடியர்-பொருநர்-அவினயர்-ஆ௳-அ * தமிழ்க் கூத்தர்பெயர் வாயிலோர்-(க)*கழாயர்❁பெயர்---வேழம்பர் (க)

நரம்பிலுயகருவியைக்கொளுத்துமாக்கள்பெயர் ---குயிலுவர்(க) தோற்கருவியாளர்பெயர்---இயவர்- (க) *வெறியாட்டாளன்பெயர்---தேவராளன்-(க)*தேவராட்டியின்பெயர்---சாலினி (க)அய்லவர்பெயர் ---நொதுமலாளர்-வம்பலர் ஆ௳ உ

புதியவர்பெயர்---விருந்தோர்- அதிதி-வம்பலர்-ஆ௳ ௩ * வழிச்செல்வோன்பெயர்---பதிகன்(க)*ஏவுவான்பெயர்- வியவன் (க) மூதுணர்ந்தோர்பெயர்---முதுவர்(க)*உரியோர்பெயர்---கிழவர்(க)*குறிக்கொள்வோர்பெயர்---பாராயணர் (க)

தூதர்பெயர்---வித்தகர்-வினையுரைப்போர்- வழியுரைப்போர்-பண்புரைப்பவர்-ஆ௳ ச-*அடிமையின்பெயர்---தொத்து-கிணகர்-தாசர்-தொழும்பு-தொறு விருத்தி-தொண்டு-சேடர்-ஆள்-ஆ௳ கூ

தோழன்பெயர்---சிலதன்-நண்பன்-பாங்கன்-சேடன் துணைவன்-எதுவன் - ஆ௳ எ -*தோழன்முன்னிலைப்பெயர்---ஏடா - (க)
தோழிபெயர்---சிலதி-சகி-பாங்கி-சேடி-இகுளை ஆ௳ ரு
தோழிமுன்னிலைப்பெயர்---ஏடி-எல்லா ஆ௳ உ

❁கழாயர்-கழைக்கூத்தர்.

# இரண்டாவது-மக்கட்பெயர்த்தொகுதி.

அந்தகன்சிதடனென்பகுருடனாங்கோணல்கூன்பேர் ✱
சிந்துவாமனமேகுஞ்சங்குறள்வதிர்செவிடென்றாகு ✱
முந்தியமுடமேபங்குசுணியூமைமூகைமூங்கை ✱
தந்தபெண்டகனேபேடிநபுஞ்சகனலியேசண்டன் (௪௪)

காதகன்சாருகன்றான்கடுங்கொலையாளிநாமம் ✱
வேதனைசெய்வோன்பேரேயருந்துதன்விளம்பலாகும் ✱
பீதனேசகிதனோடுபீருவுமச்சமுள்ளோ ✱
னோதியசவனன்வேகியுற்றவஞ்சகனிசாதன் (௪௫)

படிறர்பல்லவர்பரத்தர்பகரிடங்கழியரோடு ✱
விடருங்காமுகருந்தூர்த்தர்மிக்கநாகரிகரென்ப ✱
குடிநகர்ப்பதிவாழ்கின்றசதுரர்காமுகரொன்றும்பே ✱
ரடைவுளகிராமமுற்றோன்கிராமியனாகுமன்றே (௪௬)

வல்லைவல்லுநனேவல்லோன்மாட்டார்பேர்வல்லாரென்ப ✱
குலமுளோன்குலீனனாகுங்கரிபவன்குறித்தகள்வ ✱
னுலவுநோயுற்றொழிந்தோனுல்லாபன்பதாதிகாலா ✱
ளலைவில்சந்நத்தனென்பதாயுத்தமானோன்பேரே (௪௭)

மந்தனேகூர்மையில்லோனக்கனிர்வாணிநாமம் ✱
வெந்திறலியவுளென்பமிகுபுகழாளன்பேரே ✱
யுந்தியவருளோனேகாருண்ணியனென்பவொட்டர் ✱
வந்திகள்கவிகள்கற்றோர்வண்டரேகடிகைமாக்கள் (௪௮)

புரவலனீகையாளன்போற்றும்வேளாளன்றியாகி ✱
புரைகெழுவேள்வியாளனுபகாரிகொடையுளோனும் ✱
வரைவறக்கொடுத்தளிப்போன்வள்ளியோனென்றுகூறு ✱
மிரவலன்பரிசிலாளன்யாசகன்றீனனேற்போன் (௪௯)

கரவடர்சோரர்தேனர்பட்டிகர்புரையோர்கள்வர் ✱
திருடராந்தரித்திரன்பேர்செப்பிடமகிஞ்சன்பேதை ✱
மருவுநல்கூர்ந்தோனில்லோன்வறியனாதுலனேயேழை ✱
விரவியவுறுகணாளனிலம்பாட்டோன்மிடியனாமே (௫௰)

குருடன்பெயர்—அந்தகன் சிதடன்-ஆக ௨-* -கூனின்பெயர்—கோணல்-(௧) * குறளின்பெயர்-சிந்து-வாமனம்-குஞ்சம்-ஆக-௩ செவிட்டின்பெயர்—வதிர்.(௧)*மூடத்தின்பெயர்—பங்கு-குணி ஆக ௨.* ஊமையின்பெயர்—மூகை-மூங்கை ஆக ௨- * -அலியின்பெயர் —பெண்டகன்-பேடி.நபுஞ்சகன்-சண்டன் ஆக ௪

கொலையாளியின்பெயர்—காதகன் - சாருகன்-ஆக ௨-*-வேதனை செய்வோன்பெயர்—அருந்துதன்.(௧)*அச்சமுள்ளோன்பெயர் பீதன்-சகிதன் பீரு-ஆக ௩- * வேகியின்பெயர்—சவனன் - (௧) வஞ்சகன்பெயர்-நிசாதன். (௧)

தூர்த்தர்பெயர்--படிறர்-பல்லவர்-பரத்தர்-இடங்கழியர்-விடகர்-காமுகர் ஆக ௬.* நாகரிகர்பெயர்-சதுரர்-காமுகர் ஆக ௨ * கிராமமுற்றோன்பெயர்-கிராமியன். (௧)

வல்லோன்பெயர் வல்லை-வல்லுநன்-ஆக ௨-*-மாட்டார்பெயர்-வல்லார்-(௧) குலமுள்ளோன்பெயர் குலீலன்-(௧)கரியன்பெயர்-கள்வன் - (௧)நோயுற்றெழுந்தோன்பெயர்—உல்லாபன்-(௧) காலாளின்பெயர்-பதாதி-(௧)ஆயத்தமானோன்பெயர் - சந்நத்தன்(௧)

மந்தன்பெயர் - கூர்மையில்லோன்-(௧) * நிர்வாணியின்பெயர்-நக்கன். (௧) * மிகுபுகழாளோன்பெயர் இயவுள்-(௧)* அருளோன்பெயர்-காருண்ணியன்.(௧) * கடிகைமாக்கள்❁பெயர் - எட்டர்-வந்திகள்-கவிகள்-கற்றோர்-வண்டர். ஆக ௫.

கொடையுளோன்பெயர்-புரவலன் - ஈகையாளன் - வேளாளன்-தியாகி-வேள்வியாளன்-உபகாரி - ஆக ௬ வரைவறக்கொடுத்தளிப்போன்பெயர்-வள்ளியோன்- (௧) * ஏற்போன்பெயர் இரவலன்-பரிசிலாளன்-யாசகன்-தீனன். ஆக ௪.

திருடர்பெயர்-கரவடர்-சோரர்-தேனர்-பட்டிகர் - புரையோர்-கள்வர்-ஆக ௬.* தரித்திரன்பெயர்-அகிஞ்சன்-பேதை - நல்கூர்ந்தோன்-இல்லோன்-வறியன்-ஆதுலன்-ஏழை- உறுகணாளன்-இலம்பாட்டோன்-மிடியன் ஆக ௰

❁ கடிகைமாக்கள்-மங்கலப்பாடகர்.

ஐயவனேதிறலோன்மற்றைவண்டனேமிண்டன்மள்ளன் *
வியவனேவிறலோன்மீளிவீரனேதிண்ணியன்பேர் *
நயமில்கூளியரேருளர்நாட்டும்வாளுழவர்மள்ளர் *
கயமிகுமறவர்தானைத்தலைவராம்படருமாமே (௫௧)

அரிகளேசெறுநர்சேராரமராருள்ளாரோநள்ளார் *
மருவலர்தெவ்வர்மாணார்மாற்றலர்மன்னாரொன்னார் *
தரியலரொட்டார்வட்கார்சார்பிலார்பற்றார்செற்றார் *
பரரொடுகோளாரொல்லார்பகைவர்ம்பொழுமூன்றுமே (௫௨)

ஒல்லுநர்தொடர்ந்தார்சேர்ந்தாரொட்டுநர்பெட்டார்வேட்டார் *
புல்லுநர்புசைந்தார்மித்திரர்புரிந்தாரார்வலர்விழைந்தார் *
நல்லவர்காதலித்தார்நள்ளுநர்நயந்தார்கூட்ட *
மெல்லவொன்றுநர்மூவாறுமேவினர்நாமமாமே (௫௩)

உற்றவரிகுளைநட்டோருறவொக்கல்கிளையேசார்ந்தோர் *
பற்றினர்சிறந்தோர்நட்புப்பந்தமேபரிசனங்கேள் *
குற்றமினன்புகூளிகுடும்பமேகடும்புநள்ளி *
சுற்றமூவாறுபேருஞ்சூழ்ந்தபாசனமுஞ்சொல்லும் (௫௪)

பொறியிலார்கயவர்நீசர்புள்ளுவர்புல்லர்தீயோர் *
சிறியசிந்தையர்கனிட்டர்தீக்குணர்தீம்பர்தேரர் *
முறையிலாமுசுண்டர்மூக்கர்முசுடர்பல்லவரோகையர் *
மறைவிலாக்கலர்மூவாறுமன்னுபூரியருங்கீழோர் (௫௫)

முழுமகன்சிதடன்பேதைமூடனேமண்ணையஞ்ஞை *
யிழுதையேமடனேயாதனேழையேயறிவிலான்பேர் *
தொழுவர்கைம்மியரோமற்றைத்தொழில்செய்வோர்நாமமாகும் *
வழுவிலாவாயிலாளர்வாயில்காப்போர்தம்பேரோ (௫௬)

அரிவையங்கனைமடந்தையாடவளாட்டிமாயோள் *
சுரிகுழன்மகடூஉக்காந்தைசுந்தரிவனிதைமாது *
தெரிவைமானினியேநல்லாள்சிறுமியேதையணரி *
பிரியைகாரிகையணங்குபிணாப்பெண்டுபேதைபெண்பேர் (௫௭)

திண்ணியன்பெயர்—வயவன்-திறலோன்-வண்டன்-மிண்டன்-மள்ளன்-வியவன்-விறலோன்-மீளி-வீரன். ஆ கூ

தானைத்தலைவர்பெயர்...கூளியர்-எருளர்-வாளுழவர்-மள்ளர்-மறவர் படர் ஆ கூ

பகைவர்பெயர்—அரிகள்-செறுநர்-சேரார்-அமரர் - உள்ளார்-நள்ளார்-மருவலர்-தெவ்வர்-மாறுர்-மாற்றலர்-மன்னுர்-ஒன்னுர்-தரியலர் - ஒட்டார் - வட்கார் - சார்பிலார் - பற்றுர் - செற்றுர்-பரர்-கேளார்-ஒல்லார் ஆ உக

மேவினர்பெயர்—ஒல்லுநர்-தொடர்ந்தார்-சேர்ந்தார்-ஒட்டுநர்-பெட்டார்-வேட்டார்-புல்லுநர்-பசைந்தார்-மித்திரர்- புரிந்தார்-ஆர்வலர்-விழைந்தார்-நல்லவர்-காதலித்தார்-நள்ளுநர்-நயந்தார்-கூட்டம் ஒன்றுநர் ஆ யஅ

சுற்றத்தின்பெயர்—உற்றர் - இருளை - நட்டோர்-உறவு-ஒக்கல்-கிளை-சார்ந்தோர்-பற்றினர்-சிறந்தோர்-நட்பு - பந்தம்-பரிசனம்-கேள்-நண்பு-கூளி-குடும்பம்-கடும்பு-நள்ளி-பாசனம் ஆ யகூ

கீழோர்பெயர்—பொறியிலார்-கயவர்-நீசர்-புள்ளுவர்- புல்லர்-தீயோர்-சிறியசிந்தையர்-கனிட்டர்-தீக்குணர் - தீம்பர் - மேதரார்-முறையிலார்-முசுண்டர்-மூர்க்கர்-முசுடர்-பல்லவர்-கையர்-கலர்-பூரியர் ஆ யகூ

அறிவிலான்பெயர்—முழுமகன் - சிதடன்-பேதை-மூடன்-மண்உணை-அஞ்ஞை-இமுதை-மடன்-ஆதன்-எழை ஆ ய

தொழிலசெய்வோர்பெயர்—தொழுவர்-கம்மியர் ஆ உ

வாயில்காப்போர்பெயர்—வாயிலாளர் (க)

பெண்பெயர்—அரிவை-அங்கனை-மடந்தை-ஆடவள்- ஆட்டி-மாயோள்-சுரிகுழல்-மகடூ-காந்தை-சுந்தரி-வனிதை-மாது-தெரிவை மானினி-நல்லாள்-சிறுமி-தையல் - நாரி-பிரியை-காரிகை-அணங்கு-பிணு-பெண்டு பேதை. ஆ உச

ஆடவன்மைந்தன்காளையாடேவமகன்புமானே *
நீடியகுமரனேழுநிருமித்தபுருடனாம *
நாடியநம்பியோடுநங்கையென்றிரண்டாண்பெண்ணைத் *
தேடியகவிகளெல்லாஞ்சிறப்பிக்குநாமமாமே (ருஅ)

பேதையேபெதும்பைமங்கைபெருகியமடந்தையோடு *
தீதிலாவரிவைமற்றைத்தெரிவைபேரிளம்பெண்ணென்ப *
வேதமில்பருவமாண்டேழெய்துபன்னொன்றுபன்மூன் *
றோதுபத்தொன்பானையைந் துடன்முப்பத் தொன்றெண்ணந்
[தே (ருகூ)

முன்னியகைம்மைபெற்றோன்மொழிந்தகோளகனேயாகும் *
பின்னைவேற்றோற்குப்பெற்றபிள்ளைகுண்டகனேயென்ப *
பன்னிவாழ்க்கைப்படாமுன்படர்ந்தொருகளவினாலே *
கன்னியேபெற்றபிள்ளைகானீனனென்றேயோதும் (சுய)

உயர்ந்தநாற்குலத்திலாண்பெண்ணுயர்விழிவிரண்டுங்கூடி *
யியங்கியபிள்ளைப்பேரோயனுலோமனென்றுகூறு *
நயந்தவப்பெண்ணுமாணுநண்ணியவுயர்வுதாழ்வில் *
வியந்திடும்பிள்ளைப்பேரோவிரற்பிரதிலோமனாமே (சுக)

பெருத்தவவ்வனுலோமன்னேபிரதிலோமனென்றபேரி *
லுரைத்தவாண்பெண்ணில்வந்தேயுற்றவனந்தராள *
னிரைத்தவர்மாறிக்கூடிப்பிறந்தவனீண்டபேரோ *
விரித்ததுவினவிக்கேட்கில்விராத்தியனென்னுநூலே (சுஉ)

முந்தியகுரத்தியத்தைமுதல்விகோமாட்டியாசா *
டந்திடுமிரவியையைசாமியேதலைவிநாம *
நந்தியபிண்டிவாமனன்னெறிவழாதுநோற்பாள் *
கந்தியேயௌவையம்மைகன்னியேகௌந்தியென்ப (சுங)

கைம்மையேகைனிபூண்டகலன்கழிமடந்தையேங்கி *
விம்மியவிதவைநான்கேயமங்கலைவிளங்குநாம *
மைம்மையேவந்தியென்பமலடிக்குவகுத்தபேராஞ் *
செம்மையாங்கோலஞ்செய்வாடிகழ்வண்ணமகளேயென்ப (சுச)

புருடன்பெயர்—ஆடவன்-மைந்தன்-காளை-ஆடூ-மகன்-புமான்-குமரன் -ஆக ௭. ஆணைச்சிறப்பிக்கும்பெயர்—நம்பி (௧) பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர்—நங்கை. (௧)

பெண்பாற்குரியபருவமாவன—பேதை-பெதும்பை-மங்கை-மடந்தை-அரிவை-தெரிவை-பேரிளம்பெண்—முறையே யிவற்றிறுண்டாவன. (௭) (௰௧) (௰௩) (௰௯) (௨௫) (௩௧) (௪௰)

கைம்மைபெற்றோன்பெயர்—கோளகன் (௧) வேற்றோற்குப்பெற்றபிள்ளையின்பெயர்—குண்டன் (௧) கன்னிபெற்றபிள்ளையின்பெயர்—கானீனன். (௧)

உயர்ந்தநாற்குலத்தானுயர்குலத்தானு மிழிகுலப் பெண்ணுங்கூடிப்பிறந்தபிள்ளையின்பெயர்—அனுலோமன் (௧)
உயர்குலப்பெண்ணு மிழிகுலத்தானுங்கூடிப்பிறந்த பிள்ளையின்பெயர்—பிரதிலோமன் (௧)

அவ்வனுலோமத்தாணிலும் பிரதிலோமப் பெண்ணிலும் பிறந்தபிள்ளையின்பெயர்—அந்தராளன் (௧)
அனுலோமப்பெண்ணும்பிரதிலோமத்தானுங்கூடிப்பிறந்தபிள்ளையின்பெயர்—விராத்தியன் (௧)

தலைவியின்பெயர்—குரத்தி-அத்தை-முதல்வி- கோமாட்டி-ஆசாள்-இறைவி-ஐயை-சாமி-ஆக ௮. நோற்பாள்பெயர்—கந்தி- ஔவை-அம்மை-கன்னி-கௌந்தி ஆக ௫

அமங்கலையின்பெயர்—கைம்மை-கைனி-கலன்கழிமடந்தை-விதவை-ஆக ௪. மலடியின்பெயர்—மைம்மை-வந்தி ஆக ௨
கோலஞ்செய்வாள்பெயர்—வண்ணமகள் (௧)

பரத்தையேகணிகைசூளைபயனிலாள்வரைவின்மாது *
பொருட்பெண்டுபெறுவகொள்வாள்விலைமகள்போற்றும்வேசை
விருத்தையேமூத்தாளென்பமின்னிடைக்குமரிகன்னி *
நிருத்தஞ்செய்மாதுகூத்திநாடகக்கணிகைநீள்பேர். (௬௫)

குட்டினிதொழுத்தைகூளிகுறளியேபடுவிகுண்டந் *
துட்டையேயசதியாகுஞ்சூழ்ந்திடும்புவதியேயி *
ரொட்டாண்டிற்பெண்மதங்கியெய்தியவிறலியென்ப *
திட்டமாம்பாடுவிச்சிதம்பதியிரட்டையாண்பெண். (௬௬)

குறவர்கானவரோமள்ளர்குன்றவர்புனவரோடு *
மிறவுளர்குறிஞ்சிதன்னிலின்புறுமாக்கள்பேரோ *
குறியறிகுறத்திமற்றைக்கொடிச்சிபெண்ணிறைவன்றானே *
திறன்மிகுமலையன்வெற்பன்சிலம்பன்கானகநாடன்பேர் (௬௭)

கோணுறுமறவரோடுமெயினரோகுறித்தபாலை *
யாளர்புள்ளுவரிறுக்கரனைத்துமாமவரோடாடும் *
வாள்விழியெயிற்றிவன்கட்பிணாவொடுமறத்திபெண்பேர் *
மீளியேகாளையென்பவிடலையுந்தலைவனாமம். (௬௮)

குறவர்மாகுலவர்வெய்யகுன்றவர்கிராதர்மற்றை *
மறவர்கானவரோதீயவனசரர்சவரர்சொல்லு *
முறையழிகொலைஞர்பாவமூர்த்திகண்முருடர்சற்றும் *
பொறையிலாரெயினர்வேடர்புளினரீரேழ்பொதுப்பேர். (௬௯)

முல்லையர்பொதுவரண்டர்முந்துகோவிந்தரோயான் *
வல்லவர்குடவர்பாலர்மதித்தகோவலர்கோபாலர் *
சொல்லியவமுதராயர்தொறுவரோயிடையரென்ப *
முல்லையின்மாக்கள்பேர்தாமுநான்குமொன்றுமாமே. (௭௰)

தொறுவியேபொதுவியாய்ச்சிசூழ்ந்திடுங்குடத்திமற்றை *
நிறைபுணரிடைச்சிமுல்லைநிலத்திற்பெண்ணாமமைந்தாங் *
குறைவறுகானநாடன்குறும்பொறைநாடனோடு *
முறைசெயுமண்ணறோன்றன்முல்லையிற்றலைவனாமம். (௭௧)

வேசையின்பெயர்---பரத்தை-கணிகை சூளை- பயனிலாள்-வரைவி
ன்மாது-பொருட்பெண்டு-பெறுவகொள்வாள்- விலைமகள் ஆ அ
மூத்தாள்பெயர்---விருத்தை (க) குமரியின்பெயர்---கன்னி (க)
நாடகக்கணிகைபெயர்----நிருத்தமாது-கூத்தி ஆ உ

அசதியின்பெயர்---குட்டினி-தொழுத்தை- கூளி- குறளி- படுவி-
குண்டம்-துட்டை-ஆ எ. பதினாறுண்டிற்பெண்பெயர்---யுவதி-
(க) பாடுவிச்சிபெயர்---மதங்கி-விறலி ஆ உ
தம்பதியின்பெயர்---இரட்டை-ஆண்பெண் ஆ உ

குறிஞ்சிநிலமாக்கள்பெயர்---குறவர்-கானவர்- மள்ளர்- குன்றவர்-
புனவர்-இறவுளர் ஆ ௬. குறிஞ்சிநிலப்பெண்பெயர்---குறத்தி-
கொடிச்சி - ஆ உ. குறிஞ்சிநிலத்திறைவன்பெயர் --- மலையன்-
வெற்பன்-சிலம்பன்-கானகநாடன் ஆ ச

பாலைநிலமாக்கள்பெயர்---மறவர்- எயினர் - புள்ளுவர்- இறுக்கர்-
ஆ ச. பாலைநிலப்பெண்பெயர்---எயிற்றி-வன்கட்பிணா-மறத்தி-
ஆ ௩. பாலைநிலத்தலைவன்பெயர்---மீளி-காளை-விடலை. ஆ ௩

புளிஞர்பொதுப்பெயர்---குறவர்-மாகுலவர்- குன்றவர்- கிராதர்-
மறவர்- கானவர்- வனசரர்- சவரர்- கொலைஞர் - பாவமூர்த்திகள்-
முருடர்-பொறையிலார்-எயினர்-வேடர். ஆ ௰ச

முல்லைநிலமாக்கள்பெயர்---முல்லையர்-பொதுவர்-அண்டர்- கோ
விந்தர்-ஆன்வல்லவர்-குடவர்-பாலர்-கோவலர்-கோபாலர்-அமுதர்
ஆயர்-தொறுவர்-இடையர். ஆ ௰௩

முல்லைநிலப்பெண்பெயர்---தொறுவி-பொதுவி- ஆய்ச்சி- குடத்
தி-இடைச்சி. ஆ ரு
முல்லைநிலத்தலைவன்பெயர்---கானநாடன்-குறும்பொறைநாடன்-
அண்ணல்-தோன்றல். ஆ ச.

களமரோதொழுவர்மள்ளர்கம்பளருழவரோடு *
விளைஞரேகடைஞரேழ்பேர்விளைவுறுமருதமாக்க *
ளளவுறுகளமைச்சிமற்றையாற்றுக்காலாட்டிப்பெண்பே *
ருள்மகிழ்மகிழ்நனூரன்கிழவனுந்தலைவனுமே. (௭௨)

பரதவர்நுளையரோடுபஃறியர்திமிலர்சாலர் *
கருதியகடலர்கோலக்கழியரோநெய்தன்மாக்கள் *
விரவியபரத்திமேவுநுளைச்சியேயளத்திநீண்டு *
பெருகியகடற்பிணாவேநெய்தலிற்பெண்ணினாமம். (௭௩)

கொண்கனேதுறைவனோடுகுறித்தமெல்லன்புலம்பன் *
றண்கடற்சேர்ப்பனெய்தற்றலைவனைச்சாற்றுநாமம் *
பண்படுமளவர்தாமேபகர்ந்திடுமந்நிலத்தி *
லுண்படுமுப்பமைப்போருமணரும்விதித்தபேரோ. (௭௪)

அணியினிற்பண்பினுற்றவுவமையின்மகடூவோடே *
தணிவின்முன்னிலைப்பேர்வேறுசாற்றியதோற்றமாக *
வுணருமைந்திணைப்பாற்பட்டகருப்பொருளாத்தாமிப்பார் *
கணிதமின்முறைப்பேர்காட்டக்காயத்தின்பேருஞ்சொல்வாம்௭௫

தாதைதன்றாதையேமூதாதையேபாட்டனும்ம *
பேதமொன்றில்லாமற்றும்பிதாமகனென்றுமாகுந் *
தாதையேயப்பனையன்றந்தையேயம்மானத்த *
னேதமில்பிதாவென்றேழுமீன்றவனும்மாமே. (௭௬)

அவ்வையம்மனைபயந்தாளம்மையேயாயேயன்னை *
யெவ்வமிலாயிமோய்தாயீன்றவளுமமொன்பான் *
செவ்விதின்வளர்த்ததாதிசெவிலிகோடாய்கைத்தாயாந் *
தவ்வைமுன்பிறந்தாள்சேட்டைதங்கையேபின்னைதானே. (௭௭)

ஞாதியர்தாயத்தாரேநாட்டுந்தங்குடியிற்சுற்ற *
மாதுலனம்மான்மாமன்சகலரேனோர்குடியிற்கொண்டோன் *
மூதுணர்சேட்டன்றம்முன்முன்னவனண்ணன்மூத்தோன் *
பேதமில்லிளவல்பின்னையனுசனேகனிட்டன்பின்னோன். (௭௮)

மருதநிலமாக்கள்பெயர்—களமர்-தொழுவர் - மள்ளர்- கம்பளர்- உழவர்-விளைஞர்-கடைஞர். ஆ. ௭. மருதநிலப்பெண்பெயர்— கடைச்சி-ஆற்றுக்காலாட்டி. ஆ. ௨. மருதநிலத்தலைவன்பெயர்— மகிழ்நன்-ஊரன்-கிழவன். ஆ. ௩.

நெய்தநிலமாக்கள்பெயர்—பரதவர்-நுளையர்-பஃறியர்- திமிலர்- காலர்-கடலர்-கழியர். ஆ. ௭.
நெய்தநிலப்பெண்பெயர்—பரத்தி- நுளைச்சி - அளத்தி - கடற் பிணா. ஆ. ௪.

நெய்தநிலத்தலைவன்பெயர்—கொண்கன்- துறைவன்- மெல்லன்- புலம்பன்-கடற்சேர்ப்பன். ஆ. ௫.
உப்புமைப்போர்பெயர்—அளவர்-உமணர். ஆ. ௨.

அணியும் பண்பும் உவமையும் அடுத்துவந்த ஆடூஉமகடூஉப்பெயர் களும் முன்னிலைப்பெயர்களும் ஐந்திணைக் கருப்பொருட்பெயர் களும் சொன்னும் - இனி முறைப்பெயர்களும் காயத்தின் பெ யர்களும் சொல்வாம்.

பாட்டன்பெயர்—தாதைதன்றாதை-முதாதை-பிதாமகன்- ஆ. ௩.
ஈன்றவன்பெயர்—தாதை- அப்பன்- ஐயன்- தந்தை - அம்மான்- அத்தன்-பிதா. ஆ. ௭.

ஈன்றவள்பெயர்—அவ்வை-அம்மனை-பயந்தாள்- அம்மை- ஆய்- அன்னை-ஆயி-மோய்-தாய்- ஆ. ௯. வளர்த்ததாதியின்பெயர்—செ விலி-கோடாய்-கைத்தாய் ஆ. ௩. சேட்டையின்பெயர்—தவ்வை- முன்பிறந்தாள். ஆ. ௨. தங்கையின்பெயர்—பின்னை. (௧)

ஞாதியர்பெயர்—தாயத்தார் - தங்குடிச்சுற்றம். ஆ. ௨. மாமன் பெயர்—மாதுலன்-அம்மான்- ஆ. ௨. ஓர்குடியிற்கொண்டோன் பெயர்—சகலன் (௧) மூத்தோன்பெயர்—சேட்டன்- தம்முன்- முன்னவன் - அண்ணன். ஆ. ௪. பின்றோன்பெயர்—இளவல்- பின்னை-அனுசன்-கனிட்டன். ஆ. ௪.

## இரண்டாவது-மக்கட்பெயர்த்தொகுதி.

கணவனேகொழுநன்வேட்டோன்கண்டன்வல்லவனேபத்தாத் *
துணைவனேதலைவன்கொண்கன்சூழ்ந்திருந்தவனேகாந்தன் *
மணமகனுரியோனன்பன்மணவாளன்பதியேகேள்வ *
னணையுங்காதலன்பேர்பன்னேழன்றிநாயகனுமாமே. (எகூ)

இல்லவளுரிமைபன்னிகுடும்பினியில்லேயில்லாள் *
வல்லவிகளமேதாரமனையாட்டிமனைவிருந்தஞ் *
சொல்லியபாரிவாழ்க்கைத்துணைகளத்திரமேகாந்தை *
நல்லகாதலிவிரும்புநாயகிதேவிநாமம். (அய)

சந்ததிமதலைசூனுத்தனயன்காதலனேமெய்ய *
னந்தனன்சிறுவன்றோன்றல்குட்டனேநாட்டுஞ்செம்மன் *
முந்தியமருமான்பிள்ளைமுளைசுதன்புதல்வன்புத்திரன் *
மைந்தன்கால்பொருள்சேயெச்சம்வழிபிறங்கடைமகன்பேர் (அக

சிறுவிபுத்திரியினோடுசிறந்திடுந்தனயையையை *
மறுவில்பந்தனைமதிப்பாமகள்சுதைபுதல்வியேழ்பே *
ரிறையாகுமெச்சந்தானிவ்விருபாற்குமேற்குமென்ப *
குறுமக்கண்மகார்சிறாரக்கூறுபவிவர்தம்பன்மை. (அஉ)

தானையேபதாதிவெய்யதந்திரந்தளமேதண்டம் *
வாணியேககனப்பூகம்வாகினியனீகம்பாடி *
சேனையேகவனங்கூடிச்செறிபலம்பரிகலந்தா *
னூன்மில்படைமூவைந்தாமுறுபதாகினியுமப்பேர். (அங)

அணியுண்டையொட்டேயூகமாயவைபடைவகுப்பா *
மணிநெற்றிகையேதூசியடுபடையுறுப்பின்பேரா *
மணிபின்னிற்கூழையாந்தார்கொடிப்படையாகுமென்ப *
பணியக்கிழறுதலோடேயறைபோதல்படையறற்பேர். (அச)

மக்களேநரரேமாக்கண்மானவர்மாந்தர்மண்ணோர் *
தக்கவாண்டையரோமைந்தர்சாற்றியமனுடரின்பந் *
தொக்கமானிடரீனாந்துஞ்சொல்லியமனிதர்பேரா *
மக்கடம்பறப்பிற்குப்பேர்மன்பதைஞ்ஞீலென்ப. (அரு)

காதலன்பெயர்—கணவன்- கொழுநன்- வேட்டோன்- கண்டன்-வல்லவன்-பத்தா-துணைவன்-தலைவன்-கொண்கன்-தவன்-காந்தன்-மணமகன்- உரியோன்- அன்பன்- மணவாளன்- பதி- கேள்வன்-நாயகன். ஆ௨௰அ

தேவிபெயர்—இல்லவள்-உரிமை-பன்னி-குடும்பினி-இல்-இல்லாள்-வல்லவி-களம்-தாரம்-மனையாட்டி-மனை-விருந்தம்-பாரி-வாழ்க்கைத்துணை-களத்திரம்-காந்தை-காதலி-நாயகி. ஆ௨௰அ

மகன்பெயர்—சந்ததி-மதலை-சூனு-தனயன்-காதலன்-மெய்யன்-நந்தனன்-சிறுவன்-தோன்றல்-குட்டன்-செம்மல்-மருமான்- பிள்ளை-முளை-சுதன்-புதல்வன்-புத்திரன்- மைந்தன்- கால்-பொருள்-சேய்-எச்சம்-வழி-பிறங்கடை. ஆ௨௪

புதல்விபெயர்—சிறுவி-புத்திரி-தனயை-ஐயை- பந்தனை-மகள்-சுதை. ஆ௨எ. எச்சமென்னும்பெயர்—மகன் புதல்வியென்னுமிவ்விருபாற்குமேற்கும்பிள்ளைப்பன்மையின்பெயர்—குறுமக்கள்-மகார்-சிறார். ஆ௩.

படையின்பெயர்—தானை-பதாதி- தந்திரம்- தளம்- தண்டம்-வாஹினி-ககனம்-யூகம்-வாகினி-அனீகம்-பாடி- சேனை- கவனம்-பலம்-பரிகலம்-பதாகினி. ஆ௰௬.

படைவகுப்பின்பெயர்—அணி-உண்டை-ஒட்டு-யூகம் ஆ௪
படையுறுப்பின்பெயர்—அணி-நெற்றி-கை-தூசி. ஆ௪
பின்னணியின்பெயர்—கூழை (க) கொடிப்படையின்பெயர்—தார் (க) படையறற்பெயர்—கீழறுதல்-அறைபோதல். ஆ௨

மனிதர்பெயர்—மக்கள்-நரர்-மாக்கள்- மானவர்- மாந்தர்- மண்ணோர்-ஆண்டையர்-மைந்தர்-மனுடர்-மானிடர். ஆ௰.
மக்கட்பரப்பிற்குப்பெயர்—மன்பதை-பைஞ்ஞீல். ஆ௨

உடலுருப்பங்கம்யாக்கையுயிர்நிலைதேகங்காயஞ் *
சடலமேமூர்த்தமெய்யேதாவரந்தனுவாதாரக் *
கடமொடுபுதைபுணர்ப்புக்காத்திரம்பூட்சியாகம் *
புடைகொள்பூதிகஞ்சரீரம்புற்கலமுடம்பின்பேரே (௮௬)

வடிவமோடுருவமேனிசட்டகம்வடிவின்பேராங் *
கடியநீள்பிரேதம்வேறுகாட்டியசவம்பிணப்பே *
ரடையுமற்றப்பேர்தானேகளேபரமழனமென்று *
முடலினிற்குறைகவந்தமட்டையூபமுமுரைக்கும். (௮௭)

சரணமேபதமேமற்றைத்தாளொடங்கிரியேபாதங் *
கருதியசலனமற்றைக்கழலுடனடியுங்காலாம் *
பரடென்பகரட்டிணுமம்பற்றியகணைக்கால்சங்கந் *
தருமுழந்தாண்முழந்துசாணுவுமதன்பேர்தானே. (௮௮)

நெடியவூருக்குறங்குநீள்வாமங்கவான்றொடைப்பேர் *
கடிதடநிதம்பமென்பகவின்றிகழல்குலின்பேர் *
நடுநுசுப்பொடுமருங்குநாட்டுமத்திமமேபுக்க *
மிடையின்பேர்மருங்கின்பக்கமொக்கலையென்பதாமே. (௮௯)

உதரமோடகடுகுக்கியுடன்பண்டிவயிற்றின்பேராந் *
திதலையேபொறியேதுத்திதேமலாஞ்சுணங்குமாமே *
யிதலையேயுந்திநாபியிலஞ்சியேபோகில்கொப்பூழ் *
புதியவாண்குறியேகோசம்பூப்பகம்பெண்ணின்சின்னம். (௯௰)

அகலமேமருமநெஞ்சேயாகமேபுரமேமார்பா *
நகிலமேகொம்மைகொங்கைநறுங்குயந்தனங்குருக்கண் *
பகர்பயோதரஞ்சுவர்க்கம்பறம்பிவைமுலையின்பல்பேர் *
திகழ்முலைக்கண்ணிணுமஞ்சிலீமுகஞ்சூசுகங்கள். (௯௧)

கரமத்தம்பாணிதோளேகைத்தலநாற்பேராங்கூர்ப் *
பரமுழங்கைகிலுத்தம்பணித்திடுமணிக்கட்டென்ப *
வரவியகைங்கைபங்கைகுடங்கையேயுள்ளங்கைப்பேர் *
விரல்களங்குலியென்றாகுமுகிர்நகமதாமே (௯௨)

உடம்பின்பெயர்—உடல்-உற்றப்பு-அங்கம்-யாக்கை-*உயிர்நிலை-தேகம்-காயம்-சடலம்-மூர்த்தம்-மெய்-தாவரம்-தனு-ஆதாரம்-கடம்-புதை-புணர்ப்பு-காத்திரம்-பூட்சி-ஆகம்-பூதியம்-சரீரம்-புற்கலம் ஆ௨௨

வடிவின்பெயர்—வடிவம்-உருவம்-மேனி-சட்டகம் ஆ௪
பிணத்தின்பெயர்—பிரேதம்-சவம்-களேபரம்-அழனம் - ஆ௪
உடற்குறையின்பெயர்—கவந்தம்-மட்டை-யூபம் ஆ௩

காலின்பெயர்—சரணம்-பதம்-தாள்-அங்கிரி-பாதம்-சலனம்-கழல்-அடி-ஆ௮-கரட்டியின்பெயர்—பரடு (௧)
கணைக்காலின்பெயர்—சங்கம் (௧) முழந்தாளின்பெயர்—முழந்து-சானு ஆ௨

தொடையின்பெயர்—ஊரு-குறங்கு-வாமம்-கவான் ஆ௪
அல்குலின்பெயர்—கடிதடம் நிதம்பம்-ஆ௨- இடையின்பெயர்—நடு-நுசுப்பு-மருங்கு-மத்திமம்-உக்கம் ஆ௫
மருங்கின்பக்கத்தின்பெயர்—ஒக்கலை (௧)

வயிற்றின்பெயர்—உதரம்- மேடு-அகடு-குக்கி-பண்டி ஆ௫
தேமலின்பெயர்—திதலை-பொறி-துத்தி-சுணங்கு ஆ௪
கொப்பூழின்பெயர்-- இதலை உந்தி-நாபி-இலஞ்சி-போகில் ஆ௫
ஆண்குறியின்பெயர்—கோசம்(௧)பெண்ணின்சின்னத்தின் ※பெயர்—பக்கம் (௧)

மார்பின்பெயர்—அகலம் மருமம்-நெஞ்சு-ஆகம் உரம் ஆ௫
முலையின்பெயர்—நகிலம்-கொம்மை-கொங்கை-குயம்- தனம்-குருக்கண்-பயோதரம்-சுவர்க்கம்-பறம்பு ஆ௯ - முலைக்கண்ணின்பெயர்—சிலீமுகம்-சூசுகம்-ஆ௨-கைத்தலத்தின்பெயர்- கரம்-அத்தம்-பாணி-தோள் ஆ௪

முழங்கையின்பெயர்-கூர்ப்பரம்(௧)மணிக்கட்டின்பெயர்- கிலுத்தம்(௧)உள்ளங்கையின்பெயர்-அகங்கை-அங்கை - குடங்கை ஆ௩
விரலின்பெயர்-அங்குலி(௧)நகத்தின்பெயர்—உகிர் (௧)

※ பெண்ணின்சின்னம் - பெண்குறி.

விறன்மிகுபுயமுமொய்ம்புமேவியவாகுவுந்தோள் *
கறையில்கந்தரங்கிரீவங்களங்கண்டங்கழுத்தினாமம் *
புறம்வெரிநபுரம்வெந்நேபோற்றியமுதுகுநாற்பேர் *
சிறுபுறங்கயிலெருத்தஞ்சுவல்பிடர்நிகலந்தோண்மேல் (௬௩)

வதனமானனமேதுண்டம்வத்திரமுகமென்றாகு *
மிதழுதடதரமேபாலிகைமுத்தமென்றும்பேர்மே *
லுதடேயோட்டமாங்கீழுதட்டின்பேரதரமென்றாம் *
விதமுறுமெயிறுதந்தமேவியதசனம்பல்லே (௬௪)

பன்னியமுறுவன்மூரல்பல்லுமாநகையுமாகு *
முன்னியதாடிகட்டஞ்சுவுகமோவாயின்பேரா *
மன்னுநாச்சிகுவைதானைமற்றைத்தாலுவுநாக்காகுங் *
கன்னமேயள்ளுக்கேள்விகாதின்பேர்செவியுமாமே (௬௫)

அணன்மிடறாகுமற்றையண்ணமேயுண்ணாக்கின்பே *
ரணரியேயணலேயண்ணமானமேல்வாய்ப்புறப்பேர் *
குணமுறுகவுள்கபோலங்கொடிறனுகதுப்பின்கூற்றாந் *
துணைசெயாக்கிராணங்கோணந்துண்டமேநாசிமூக்காம் (௬௬)

நயனநேத்திரமேயக்கநாட்டங்கோநோக்கஞ்சக்கு *
வியனுறும்பார்வைதானைவிலோசனம்விழியேயக்கி *
செயமுறுதிருக்குத்திட்டிதிருட்டியம்பகமேகண்ணா *
மயமுறுதானைகண்ணின்மணிவிளிம்பிமையினாமம் (௬௭)

பிருகுடிநுதலேதீண்டபிருவேபுரூரம்பூருப் *
புருவமாம்புகுடியும்பேர்புடைபம்பனிச்சைசூறை *
திருநுதல்குளமிலாடஞ்சேர்ந்தமத்தகம்நெற்றி *
மருவியபாலமுண்டமளிகமும்வகுக்கலாமே (௬௮)

உரவியதலையேமூர்த்தமுவ்வியோடுத்தமாங்கஞ் *
சிரமுடிசென்னிமுண்டஞ்சிகரமத்தகமுமாகுந் *
திருமுடிசிமிலிசிக்கஞ்சிகையிவைகுடுமிநாற்பேர் *
விரவியசுளிகைசூளிமேவியநவிரமுச்சி (௬௯)

தோளின்பெயர்—புயம்-மொய்ம்பு-வாகு-ஆக ௩ - கழுத்தின்பெயர்—கந்தரம்-கிரீவம்-களம்-கண்டம்-ஆக ௪-முதுகின்பெயர்—புறம்-வெரிந்-அபரம்-வெந் ஆக ௪-பிடரின்பெயர்—சிறுபுறம் -கயில்-எருத்தம்-சுவல் ஆக ௪ தோண்மேலின்பெயர்—நிகலம் (௮)

முகத்தின்பெயர்—வதனம்-ஆனனம்-துண்டம்-வத்திரம் ஆக ௪
உதட்டின்பெயர்—இதழ் அதரம்-புறவிகை-முத்தம் ஆக ௪
மேலுதட்டின்பெயர்—ஓட்டம் (௧) கீழுதட்டின்பெயர்—அதரம்(௧)பல்லின்பெயர்—எயிறு—தந்தம்-தசனம் ஆக ௩

[illegible]வுக்கும்நகைக்கும்பொதுப்பெயர்—முறுவல்-மூரல்- ஆக ௨
மோவாயின்பெயர்—தாடி-கட்டம் சுவுகம் ஆக ௩
நாக்கின்பெயர்—நா-சிகுவை-தாலு-தாலு ஆக ௪
காதின்பெயர்—கன்னம்-அள்-கேள்வி-செவி ஆக ௪

மிடற்றின்பெயர்—அணல்(௧)உண்ணாக்கின்பெயர் — அண்ணம் (௧)மேல்வாய்ப்புறத்தின்பெயர்—அணரி -அணல் - அண்ணம்-ஆக ௩-கதுப்பின்பெயர்-கவுள்-கபோலம்-[illegible]காடிறு-அனு-ஆக ௪
மூக்கின்பெயர்—ஆக்கிராணம்-கோணம்-துண்டம்-நாசி ஆக ௪

கண்ணின்பெயர்—நயனம்-நேத்திரம்-அக்கம் - நாட்டம்-கோ-நோக்கம்-சக்கு-பார்வை-தாரை-விலோசனம்-விழி-அக்கி திருக்கு திட்டி-திருட்டி-அம்பகம் ஆக ௰௬
கண்மணியின்பெயர்—தாரை (௧) கண்ணிமையின்பெயர்— விளிம்பு (௧)

புருவத்தின்பெயர்—பிருகுடி-நுதல்-பீரு-புரூரம் - பூரு-புருகுடி ஆக ௬-நெற்றியின்பெயர்—பனிச்சை சூறை-நுதல்-குளம்-இலாடம் மத்தகம்-பாலம்-முண்டம்-அளிகம் ஆக ௯

தலையின்பெயர்—மூர்த்தம்-உவ்வி-உத்தமாங்கம்-சிரம்-முடி-சென்னி-முண்டம்-சிகரம்-மத்தகம் ஆக ௯
குடுமியின்பெயர்—முடி-சிமிலி-சிக்கம்-சிகை ஆக ௪
உச்சியின்பெயர்—சுடிகை-சூளி-நவிரம் ஆக ௩

உளைநவிர்குடுமிபித்தையோரியேகுழல்கார்குஞ்சி *
துளைசிகைதொங்கல்பங்கிதானீராறுண்மயிர்ப்பேர் *
வளர்குழல்கதுப்புக்கேசமருவியசுரியளுங்கு *
மிளையமைந்தர்க்குமற்றையிளங்கொடியார்க்குமேற்கும் (௰)

குருள்குழல்விலோதமோதிகூழைகுந்தளமராட்டங் *
குரலைம்பாலளகம்பத்தும்பெண்மயிர்கூந்தலும்பேர் *
பெருகியகொப்புமுச்சிபின்னகங்கொண்டைபந்தந் *
திருமிகுதம்மிலம்பொற்சிகழிகைமயிர்முடிப்பேர் (௰௧)

ஓரியேகேசம்பங்கியுளையுரோமம்மராட்ட *
மேருமிப்பேர்களாறும்பிறமயிர்நிகழ்த்துமென்ப *
சேருமவ்வுரோமமற்றைச்சிரோந்தமுஞ்செறிமயிர்ப்பேர் *
வாருங்குந்தளம்விலோதமயிர்க்குழற்சிப்பேர்வைக்கும் (௰௨)

குடிலமேவேணிநீண்டகோடீரம்பின்னலோடு *
சடிலமென்றைந்துபேருஞ்சடையெனவடைவேசாற்று *
நெடியகாத்தரமுறுப்புநீளங்கமவயவப்பேர் *
கடியமூட்டுங்கொளுத்துங்கந்துஞ்சந்தாகுமன்றே (௰௩)

சிலாயேசங்கன்னநாடிதிருந்தியநரம்புமுப்பே *
ரலையேகழலேகோழையையொடுகாசமாகு *
மருவுமங்கிதமேசேக்கைவசிவடுவுடற்றழும்பாந் *
தருபொறிவணாயிறைப்பேர்சணைநணாபலிதமும்பேர் (௰௪)

அழிதலையோட்டினுமங்கபாலமேயத்தியென்பு *
கழிவுறுமெலும்பினுமங்களேபரமென்றுங்காட்டும் *
கழியுடன்முழுவெலும்புகங்காளமென்பர்நூலோர் *
பிழைபொறிகரணங்கந்தமேவுமிந்திரியமுப்பேர் (௰௫)

தருசுவையொளியூறோசைசாற்றியநாற்றமோருங் *
கருவிநாக்கண்ணேமெய்யேகாதொடுமூக்குமாகுந் *
தெரிதருமுயிரோயாதன்சேதனன்பசுவேக்ஷேத *
ணரியபுற்கலனேக்ஷேத்ரஞனுவியமானனென்மா (௰௬)

ஆண்மயிரின்பெயர்—உளை-நவிர்-குடுமி-பித்தை-ஓரி-குழல்-கார்-குஞ்சி-தளை-சிகை-தொங்கல்-பங்கி ஆ௰௨
இளையமைந்தர்மயிர்க்குமிளங்கொடியார்மயிர்க்குமேற்கும்பொதுப்பெயர்—குழல்-கதுப்பு-கேசம்-சுரியல் ஆ௪

பெண்மயிரின்பெயர்—குருள்-குழல்-விலோதம்-ஓதி-கூழை-குந்தளம்-மராட்டம்-குரல்-ஐம்பால்-அளகம்-கூந்தல்-ஆ௰௧-மயிர்முடியின்பெயர்—கொப்பு-முச்சி-பின்னகம்-கொண்டை-மந்தம் தம்மில்லம்-சிகழிகை ஆ௭

பிறமயிரின்பெயர்—ஓரி-கேசம்-பங்கி-உளை-உரோமம்-மராட்டம் ஆ௬
செறிமயிரின்பெயர்—உரோமம்-சிரோத்தம்-ஆ௨-மயிர்க்குழற்சியின்பெயர்—குந்தளம்-விலோதம் ஆ௨

சடையின்பெயர்—குடிலம்-வேணி-கோடீரம்-பின்னல்-சடிலம் ஆ௫
அவயவத்தின்பெயர்—காத்திரம்-உறுப்பு-அங்கம் ஆ௩
சந்தின்பெயர்—மூட்டு-கொளுத்து-சந்து ஆ௩

நரம்பின்பெயர்—சிரை-சங்கன்னம்-நாடி ஆ௩
கழலையின்பெயர்—அரலை (௧) கோழையின்பெயர்—ஐ-காசம்-ஆ௨-உடற்றழும்பின்பெயர்—அங்கிதம்-சேக்கை-வசி-வடு-ஆ௪-இறையின்பெயர்—பொறி-வரை ஆ௨
நரையின்பெயர்—சரை-பலிதம் ஆ௨

தலையோட்டின்பெயர்—கபாலம் (௧)
எலும்பின்பெயர்—அத்தி-என்பு-களேபரம் ஆ௩
கழியுடலின்முழுவெலும்பின்பெயர்—கங்காளம் (௧)
இந்திரியத்தின்பெயர்—பொறி-கரணம்-கந்தம் ஆ௩

சுவை-ஒளி-ஊறு-ஓசை-நாற்றம்-இவற்றைமுறையேயோருங் கருவியாவன-நா-கண்-மெய்-காது-மூக்கு-உயிரின்பெயர்—ஆதன்-சேதனன்-பசு-சீவன்-புற்கலன்-கூத்தன்-அணு-இயமானன்-ஆன்மா ஆ௧௧

இருபதோடிருபான்முப்பானிருபானீரைந்துமேலு ✻
மருவியவேழுசெய்யுண்மக்கடம்பெயர்க்குச்செய்தான் ✻
குருநறுங்குன்றைவேந்தன்குணபத்திரன்றந்தநோன்மை ✻
தருநெறிநோற்கும்வீரைதழைத்தமண்டலவன்முனே (௱௭)

இரண்டாவது-மக்கட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

ஆக-தொகுதி-௨-க்கு-விருத்தம்-௨௱௮.

உ

கடவுள் துணை.

---

## மூ ன் றா வ து

# விலங்கின்பெயர்த்தொகுதி.

### கா ப் பு.

துலங்குமுக்குடைநிழற்றத்துந்துபிமுழங்கத்தேவர் *
நலம்பெறுகவரிவீசநன்மலர்மாரிதூவ *
வலங்குளையரியணைக்கிழமர்ந்தநான்முகனைப்போற்றி *
விலங்கின்பேர்த்தொகுதிதன்னைமேதினிவியப்பச்சொல்வாம். *

( இதனதுபதப்பொருள். )

துலங்கும் - விளங்காநின்ற—முக்குடை-மூன்றுகுடைகளும்—நிழற்ற - நிழலைச்செய்யவும்—துந்துபி- துந்துபியானது—முழங்க - ஒலிக்கவும்—தேவர்- தேவர்கள்—நலம்பெறு-நன்மைபெற்ற—கவரி - சாமரத்தை—வீச-வீசவும்—நன்மலர்மாரி-நல்லபுஷ்பமழையை—தூவ- சொரியவும்—அலங்கு - பிரகாசிக்கின்ற—உளை-பிடரிமயிரையுடைய—அரி - சிங்கத்தினாலேதாங்கப்படுகின்ற—அணைக்கீழ்- ஆசனத்தின்கண்ணே—அமர்ந்த - வீற்றிருந்த—நான்முகனை-அருகக்கடவுளை—போற்றி-துதித்து— விலங்கின்பேர்த்தொகுதிதன்னை - விலங்கின்பெயர்த்தொகுதியை—மேதினி-பூமியிலுள்ளோர்—வியப்ப - அதிசயிக்கும்படியாக—சொல்வாம்- (யாம்) கூறுவாம்-என்றவாறு. (௧)

அரிவயப்போத்துச்சீயமறுகுகேசரியேபூட்கை *
மருவியமிருகராசன்வயமாதேமடங்கலோடு *
பரவுகண்டீரவம்பஞ்சானனஞ்சிங்கப்பல்பேர் *
பெருகியயானையாளிப்பேர்யாளியறுகுபூட்கை. (௨)

வல்லியம்வயமாவோடுசித்திரகாயமற்றும் *
வெல்லுமாவுழுவைபாய்மாவியாக்கிரந்தரக்குவேங்கை *
யொல்லவேயெழுந்துசீறுங்குயவரிகொடுஞ்சார்த்தூலம் *
புல்லொடுபுண்டரீகங்கொடுவரிபுலியினாமம். (௩)

தும்பிமாதங்கந்தூங்கமேருல்கறையடியெறும்பி *
யும்பல்வாரணம்புழைக்கையொருத்தல்வல்விலங்குநாகங் *
கும்பிநால்வாயேபூட்கைகுஞ்சரங்கரிணியத்தி *
கம்பவேழம்மூவாவேகரியகங்களிறுகைம்மா. (௪)

சிந்துரம்வயமாவேகஞ்செறியிபம்புகர்முகங்க *
டந்திமேயமதாவளந்தந்தாவளம்வழிவையாம்பன் *
மந்தமாமருண்மாமற்றைமதகயம்போதகத்தோ *
டுந்துமேழைந்துமேனுமிரண்டுமற்றுயர்ந்தயானை. (௫)

உதவிசெய்தினத்தைக்காக்குமும்பமேலயூகநாதன் *
மதகயமதோற்கடம்பின்வாலின்பேர்தாலவட்ட *
மதனிநிவேசகந்தானுழுதுகின்பேர்மஞ்சா *
மதகமுங்கும்பந்தானுமத்தகமென்றுகூறும். (௬)

காடமேமதம்பாய்கின்றசுவடுகைந்நுதிகளேபுட் *
கரமதாமதத்தினுமங்கடங்கடாந்தானமாகும் *
பெருகியபிருதுமானம்பேசுகொம்பின்னடுப்பேர் *
கருதுகோடெயிறுதந்தநிரியாணங்கடைக்கணமே. (௭)

கண்டிடுஞ்செவியடிப்பேர்சூளிகைகவுள்கதுப்பாம் *
விண்டகையுமிழுநீரேவிலாழிபல்லடிகீரங் *
கொண்டகாத்திரமேமுன்கால்கூறியவபரம்பின்கா *
லுண்டைதொண்டலந்துதிக்கைசேவகந்துயிலிடப்பேர். (௮)

சிங்கத்தின்பெயர்—அரி-வயப்போத்து-சீயம்-அறுகு-கேசரி-பூட்கை-மிருகராசன்-வயமா - மடங்கல் - கண்டீரவம் - பஞ்சானனம்- ஆ௧௰௧

யானையாளியின்பெயர்—யாளி-அறுகு-பூட்கை ஆ௩

புலியின்பெயர்—வல்லியம்-வயமா - சித்திரகாயம்-வெல்லுமா-உழுவை பாய்மா-வியாக்கிரம்-தரக்கு- வேங்கை-குயவரி - சார்த்தூலம்-புல்-புண்டரீகம்-கொடுவரி ஆ௰௪

யானையின்பெயர்—தும்பி-மாதங்கம்-தூங்கல்-தோல் -கறையடி-எறும்பி-உம்பல்-வாரணம்-புழைக்கை-ஒருத்தல்-வல்விலங்கு - நாகம்-கும்பி-நால்வாய்-பூட்கை- குஞ்சரம் - கரிணி-அத்தி-வேழம்-உவா - கரி - கயம் - களிறு - கைம்மா (உச)

சிந்துரம் - வயமா - இபம் - புகர்முகம் - தந்தி - மதாவளம்-தந்தாவளம் - வழுவை - ஆம்பல் - மந்தமா - மருண்மா - மதகயம் - போதகம் (௰௩) ஆ௩௭

இனத்தைக்காக்குமும்பலின்பெயர்—யூகநாதன் (க) * மதகயத்தின்பெயர் - மதோற்கடம் (க) வாலின்பெயர் - தாலவட்டம்(க) வானுனியின்பெயர்—மேசகம் (க) முதுகின்பெயர்—மஞ்சு(க) மத்தகத்தின்பெயர்—மதகம்-கும்பம் ஆ௨

மதம்பாய்சுவட்டின்பெயர்—கரடம்(க) கைந்நுதியின்பெயர்—புட்கரம் (க) மதத்தின்பெயர்—கடம் - கடாம் - தானம் ஆ௩ கொம்பினடிப்பெயர்—பிருதுமானம்(க)தந்தத்தின்பெயர்-மருப்பு - எயிறு - ஆ௨ கடைக்கண்ணின்பெயர் - நிரியாணம் (க)

செவியடியின்பெயர்—சூளிகை(க)கவுளின்பெயர்—கதுப்பு(க) துதிக்கையுமிழ்நீரின்பெயர்—விலாழி (க) பல்லடியின்பெயர்—கீரம் (க) முன்காலின்பெயர்-காத்திரம்(க)பின்காலின்பெயர்—அபரம்(க) துதிக்கையின்பெயர்,தொண்டை,தொண்டலம்ஆ௨ துயிலிடத்தின்பெயர்—சேவகம் (க)

## மூன்றாவது - விலங்கின்பெயர்த்தொகுதி.

வடவையத்தினியிரண்டும்பிடிகளாங்கரிணியும்பேர் *
கடகம்யானைத்திரட்பேர்கயந்தலைபோதகங்க *
டுடியடிகளபமோடுகயமுனியானைக்கன்றாம் *
படுகுழிபயம்பாமென்பபாகலம்யானைநோயே (௯)

பரிதுரகஞ்சிறந்தபாடலங்கிள்ளைபாய்மாத் *
துரகதம்வாசியுன்னிதூசிகந்தருவங்கற்கி *
யரியயமிவுளிமாவேயச்சுவம்புரவிகோரங் *
குரகதங்கோணங்கொக்குக்கொய்யுளைசடிலங்கோடை (௰)

கந்துகங்கனவட்டம்போர்காட்டும்பத்திரிதுரங்கங் *
குந்தமத்திரியாறைந்துங்குதிரையினமாகும் *
வந்தமேசகத்தினெடுசுவல்குசைமயிர்குளம்பு *
வந்தபேர்குரங்குரச்சைமாதிகமதுபோமார்க்கம் (௰௧)

குல்வியபசுப்பேர்கூலங்கோக்குடஞ்சுரபியாவே *
யிலகியநிரையேதேனுப்பெற்றமிவ்வெட்டுமாகும் *
பலமுறுகபிலைதேனுப்பரவுதெய்வப்பசுப்பேர் *
மலடுதான்வற்சைபீற்றாவற்சலங்கன்றுவற்சம் (௰௨)

பரவுமோரீற்றாக்கிட்டிபத்திராநற்பசுப்பேர் *
சுராமுலையாகுமற்றைச்சுரதைகுணமிலாப்பசுப்பேர் *
திருமுலைமடியினுமஞ்செருத்தலாமீனமென்ப *
நிரைதொறுக்காலிகோட்டநீண்டகாலேயங்கூட்டம் (௰௩)

பாறல்சேப்பெற்றம்பூணிபாண்டில்கொட்டியமிறாலே *
யேறுடமூரிபுல்லமெருத்தின்பேரிமின்மூரிப்பாம் *
பாறல்பெருத்தினமம்பகடுந்தூர்வகமுமாகு *
மேறுக்கநாயேநந்தியிடபமாங்கூளியும்பேர் (௰௪)

தூர்வகத்துரியமென்பபொதியெருதெருமையின்பேர் *
காரானைவடலைவம்மேதிலைசரிபங்கவரிகாரா *
மூரியேமகிடமெட்டுமொழியுமற்றுண்பொதுப்பேர் *
பாரியகடாவிரேடுபகடாமைமலட்டினுமம் (௰௫)

பிடியின்பெயர்—வடவை - அத்தினி - கரிணி-ஆக ௩ -யானைத்திரளின்பெயர்—கடகம் (௧) யானைக்கன்றின்பெயர்—கயந்தலை-போதகம்-துடியடி-களபம் கயமுனி - ஆக ௫-யானைப்படுகுழியின்பெயர்—பயம்பு (௧) யானைநோயின்பெயர்—பாகலம் (௧)

குதிரையின்பெயர்—பரி-துரகம்-பாடலம்-கிள்ளை-பாய்மா- துரககதம்-வாசி-உன்னி-தூசி-கந்தருவம்-கற்கி-அரி-அயம்-இவுளி-மா-அச்சுவம்-புரவி கோரம்-குரகதம் -கோணம் - கொக்கு-கொய்யுளை-சடிலம்-கோடை (௨௪)

கந்துகம் - கனவட்டம்-பத்திரி- துரங்கம் குந்தம் - அத்திரி (௯) ஆக ௩௰- குதிரைமயிரின்பெர்—மேசகம்-சுவல்-குசை ஆக ௩-குதிரைக்குளம்பின்பெயர்—குரம்-குரச்சை-ஆக உ-குதிரைப்போமார்க்கத்தின்பெயர்—மாதிகம் (௧)

பசுவின்பெயர்—கூலம்-கோ-குடம்-சுரபி-ஆ-நிரை-தேனு - பெற்றம்- ஆக அ-தெய்வப்பசுவின்பெயர்—கபிலை-தேனு ஆக உ- மலட்டுப்பசுவின்பெயர்—வற்சை (௧) ஈன்றபசுவின்பெயர்—வற்சலம் (௧) பசுவின்கன்றின்பெயர்—வற்சம் (௧)

ஓரீற்றுப்பசுவின்பெயர் -கிட்டி (௧) நற்பசுவின்பெயர்—பத்திரை (௧) பசுவின்முலைப்பெயர்—சுரை (௧) குணமிலாப்பசுவின் பெயர்—சுதை (௧) முலைமடியின்பெயர்—செருத்தல் - ஆபீனம்- ஆக உ-பசுக்கூட்டத்தின்பெயர்— நிரை -தொறு - காலி-கோட்டம்-காலேயம் ஆக ௫

எருத்தின்பெயர்—பாறல்-சே-பெற்றம்-பூணி-பாண்டில்-கொட்டியம் இறால்-ஏறு-மூரி புல்லம்-ஆக ௰- எருத்தின் முரிப்பின்பெயர்—இமில் (௧) பேரெருத்தின்பெயர்—பாறல்-பகடு-தூர்வகம் ஆக ௩- இடபத்தின்பெயர்-ஏறு-உக்கம்-நளா-நந்தி-கூளி ஆக ௫

பொதியெருதின்பெயர்—தூர்வகம்-துரியம்-ஆக உ - எருமையின்பெயர்—காரான்-வடவை-மேதி- சைரிபம்-கவரி-காரா-மூரி-மகிடம்-ஆக அ- எருமையாண்பொதுப்பெயர்—கடா-பகடு ஆக உ-மலட்டெருமையின்பெயர்—மைமை (௧)

## மூன்றாவது-விலங்கின்பெயர்த்தொகுதி.

அருணஞ்செம்மறியேமோத்தையசமுதளுடுமேவுகொச்சை *
துருவைமேழகம்வற்காலிதுள்ளலேபள்ளைவெள்ளை *
வருடமேடங்கடாமமறிவெறிகொறியேசாகம் *
புருவையேதகர்மூவேழுமிரண்டுமாட்டின்பொதுப்பேர் (௰௬)

துருவைமைகோறிமுப்பேருந்தோற்றுஞ்செம்மறியாட்டின்பே[ர்
செருமலிதகர்கடாவேதிண்ணகமேழகங்கள்
பரவுசம்பளமென்றைந்தும்பற்றுமவ்வாணின்பேர் *
மருவியகுட்டன்சோரன்மறிபறழ்குட்டியாமே (௰௭)

வெள்ளைவற்காலிகொச்சைவெள்ளாட்டினுமமாகும் *
வெள்ளையேயதன்மறிப்பேர்மேவியசெச்சைசாகந் *
துள்ளியமோத்தைமுப்பேர்சாற்றுமேயிவற்றினாண்பேர் *
வள்ளியசரபத்தோடுவருடையும்வரையாடாமே (௰௮)

கேழலேயரிகுரோட்டங்கிரிகிடிகிருட்டியேன *
மோழலேயிருளிமுந்துவல்லுளிகளிறுமைம்மா *
போழ்முகக்கோட்டுமாவேபோத்திரிவராகங்கோலஞ் *
சூழுமீரெட்டும்பன்றிசூகரமெறுழியும்பேர் (௰௯)

சல்லியமுழவுமாவேயெய்யொடுசல்லபங்கள் *
சொல்லுமுட்பன்றியின்பேர்சொற்றவிப்பன்றிமுள்ளுஞ் *
சல்லமுஞ்சலமுமாகுங்குடாவடிகரடிதானும் *
பல்லுகம்பல்லமெண்கோடுளியமுமெலுவும்பன்னும் (௨௰)

சவரிசீகரமேவீசஞ்சாமரங்கவரியும்பேர் *
கவரிமாபடகம்பட்டமானமாவெகினுங்காட்டுங் *
கவயமாவாமாகாட்டாகாத்திரிநகுலமென்று *
லிவையிருபேருமன்றித்தீர்வையுங்கீரியாமே (௨௧)

அரிணஞ்சாரங்கநவ்வியடலுழைபிணையேகுன *
மிருமம்மறிகுரங்கமேவுமானேணமும்பே *
ரிரலைவச்சயமேபுல்வாய்கலைகருமானுமேற்கு *
மிரலைபுல்வாய்க்கும்பேராமென்றனர்குன்றநூலோர் (௨௨)

ஆட்டின்பொதுப்பெயர்—அருணம்-செம்மறி மோத்தை-அசம் உதள்-உடு-கொச்சை-துருவை-மேழகம்-வற்காலி-துள்ளல்-பள்ளை-வெள்ளை-வருடை-மேடம்-கடா-மை-மறி-வெறி-கொறி-சாகம்-புருவை-தகர். ஆ. ௨௫.

செம்மறியாட்டின்பெயர்—துருவை-மை-கொறி ஆ. ௩.
செம்மறியாட்டின்பெயர்—தகர்-கடா-திண்ணகம் மேழகம்-கம்பளம்-ஆ. ௫. ஆட்டுக்குட்டியின்பெயர்—குட்டன்-சோரன்-மறி-மறழ். ஆ. ௪.

வெள்ளாட்டின்பெயர்—வெள்ளை-வற்காலி-கொச்சை ஆ. ௩.
வெள்ளாட்டுக்குட்டியின்பெயர்—வெள்ளை (௧) வெள்ளாட்டாணின்பெயர்—செச்சை-சாகம்-மோத்தை ஆ. ௩.
வரையாட்டின்பெயர்—சரபம்-வருடை ஆ. ௨.

பன்றியின்பெயர்—கேழல்-அரி-குரோட்டம்-இரி-கிடி-கிருட்டி-ஏனம்-மோழல்-இருளி-வல்லு-களிறு-கைம்மா-கோட்டுமா-போத்திரி-வராகம்-கோலம்-சூகரம்-ஏறுழி. ஆ. ௰௮.

முட்பன்றியின்பெயர்—சல்லியம்-முழவுமா-எய்-சல்லபம். ஆ. ௪. முட்பன்றிமுள்ளின்பெயர்—சலலம்-சலம். ஆ. ௨. கரடியின்பெயர்—குடாவடி-பல்லுகம்-பல்லம்-எண்கு-உளியம்-எலு ஆ. ௬.

சாமரத்தின்பெயர்—சவரி-சிகரம்-கவரி-ஆ. ௩. கவரிமாவின்பெயர்—படகம்-பட்டம்-மானமா-எகின் ஆ. ௪. காட்டாவின்பெயர்—கவயமா-ஆமா. ஆ. ௨. கீரியின்பெயர்—காத்திரி-நகுலம்-கீர்வை. ஆ. ௩.

மானின்பெயர்—அரிணம்-சாரங்கம்-நவ்வி-உழை-பிணை-சூணம்-மிருகம்-மறி-குரங்கம்-ஏணம் ஆ. ௰. கலையின்பெயர்—இரலை-வச்சயம்-புல்வாய்-கருமான். ஆ. ௪.
புல்வாயின்பெயர்—இரலை.

கழுதையின்பெயர்வாலேயங்கர்த்தபங்காளவாயே *
யழகிலத்திரியேகோணுவேசரிகரமுமாகுங் *
குழைவுறுவேசரிப்பேர்கோவேறுகழுதைக்கூற்று *
மழிவிலொட்டகந்தாஞ்சேரமத்திரிநெடுங்கழுத்தல். (௨௩)

ஓரிகோமாயுவூளனெண்டனேயிகலன்சம்பு *
பூரிமாயுக்குரோட்டஞ்சிருகாலனரியேம்பாற்று *
மோரியேகோலாங்கூலமுற்றமைம்முகனேகள்வன் *
ஓரியகலையோலுடந்துமுசுவெனச்செப்பலாமே. (௨௪)

சூரனேமுடுவல்பாசிபுரோகதிசுணகன்குக்கல் *
கூரனேயெகினனக்கன்குனாமுகன்ஞமலிஞாளி *
சாரமேயன்சுணங்கன்சுவாவேநாய்தானைம்முப்பேர் *
வீரியமுடுவல்பெண்ணாய்விருகங்கொக்கிரண்டுஞ்செந்நாய். (௨௫)

வெருகுடனலவனோதிவிடருகம்விலாளம்பூசை *
பொருதுமார்ச்சாலம்பார்க்கனிற்புலிபூனைமியான்பான் *
மருவிகுதுருக்கநானமான்மதநரந்தநான்குங் *
கருதுகத்தூரியின்பேர்காட்டியமறுவிநாவி. (௨௬)

வலிமுகங்கடுவன்பாயும்வானரமரியேமந்தி *
பிலவங்கங்கோகிலங்கான்பெயர்ந்தகோடரமேயூகங் *
கலைகமர்க்கடமேநாகங்கவிகுரங்கிவையீராறுங் *
குலவுகாருகமேயூகங்கூறியகருங்குரங்கே. (௨௭)

சாய்ந்தசாயானதங்கள்சரட்டமேகாமரூபி *
யேய்ந்ததண்டோமானோதியிசைகோம்பிமுசலியோந்தி *
யோந்தியாஞ்சுவவுசுண்டனோதுசுந்தரிமூஞ்சூறே *
யாய்ந்திடுசிகரியாகோடிரும்பனுமகழெலிப்பேர். (௨அ)

கருப்பைகாரெலியிலைமங்களதந்துந்துளமேயாகுப் *
பெருச்சாளிமூடிகத்தோடுந்துருவென்னும்பேராம் *
வரிப்புறம்வெளிலணிற்பேர்வருந்தடிமுசலிகோதா *
தரித்தெழுமுடும்பினமஞ்சசமுயமென்னலாமே. (௨௯)

கழுதையின்பெயர்—வாலேபம்- கர்த்தபம்- காளவாய்- அத்திரி- கோகு - வேசரி - கரம் ஆ_எ
கோவேறுகழுதையின்பெயர்—வேசரி- (க) ஒட்டகத்தின்பெயர் —தாசேரம்- அத்திரி- நெடுங்கழுத்தல் ஆ_ரு

நரியின்பெயர்—ஓரி- கோமாயு- ஊளன்- ஒண்டன்- இகலன்- சம்பு- பூரிமாயு-குரோட்டம்- சிருகாலன் ஆ_சு
முசுவின்பெயர்—ஓரி- கோலாங்கூலம் - மைம்முகன் - கள்வன்- கலை - ஆ_ரு

நாயின்பெயர்—சூரன்- முடுவல்- பாசி - புரோகதி- சுனகன்-குக்கல்- கூரன்-எகினன்- அக்கன்- குறைமுகன் - ஞமலி-ஞாளி சாரமேயன்- சுணங்கன் - சுவா-ஆ_யரு. பெண்ணாயின்பெயர்—முடுவல் (க) செந்நாயின்பெயர்—விருகம் - கொக்கு ஆ_உ

பூனையின்பெயர்—வெருகு - அலவன்- ஓதி - விடருகம்-விலாளம் - பூசை - மார்ச்சாலம்- பாக்கன் - இற்புலி ஆ_சு
கத்தூரியின்பெயர்—துருக்கம்-நானம் - மான்மதம் - நரந்தம்- ஆ_ச. நாவியின்பெயர்...மறுவி (க)

குரங்கின்பெயர்...வலிமுகம்-கடுவன்- வானரம் - அரி- மந்தி-பிலவங்கம் - கோகிலம் - கோடரம் - யூகம் - மர்க்கடம் - நாகம் - கவி ஆ_யஉ
கருங்குரங்கின்பெயர்...காருகம்-யூகம் ஆ_உ

ஓந்தியின்பெயர்...சாயானதம்-சரடம்-காமரூபி-தண்டு-ஓமான் - ஓதி-கோம்பி-முசலி-ஓத்தி ஆ_சு
மூஞ்சூற்றின்பெயர்...சுவவு-சுண்டன்-சுந்தரி ஆ_ரு
எலியின்பெயர்...சிகரி-ஆகு-இரும்பன் ஆ_ரு

காரெலியின்பெயர்...கருப்பை (க) பெருச்சாளியின்பெயர்... களதம்-துந்தளம்-ஆகு-மூடிகம்- உந்துரு ஆ_ரு
அணிலின்பெயர்...வரிப்புறம்-வெளில்-ஆ_உ. உடும்பின்பெயர் ...தடி-முசலி-கோதா-ஆ_ரு. முயலின்பெயர்...சசம் (க)

கடுவன்மாவொருத்தல்போத்துக்கலைதகர்களிறுசேவ *
லொடுபகடும்பலேறோடோரியீராறுமாண்பேர் *
வடுவெறுகுரங்குபூனுமற்றிவைகடுவனுமே *
யடுதிறல்யானைபன்றியாடல்வெம்புரவிமாவாம் (௫௰)

கரடிபுல்வாய்மான்யானைகவரியோடெருமைபன்றி *
பொருபுலிமரையென்றொன்பான்புகன்றிடுமொருத்தலாகு *
மரைபசுப்புலியேபூனுமற்றைப்புல்வாயும்போத்தாங் *
கருதியமுசுவுமானுங்கலையெனக்காட்டலாமே (௫௧)

துருவாடுவேழம்யாளிசுறாத்தகரென்றேசொல்லுங் *
கரியொடுசுறவுபன்றிகளிறெனக்காட்டலாமே *
செருமலிகோழியன்னஞ்சேவலென்றோதலாகு *
மெருமையோடியானைபெற்றம்பகடிபமும்பலாமே (௫௨)

ஆனுடனெருமைபன்றியாய்மயிர்க்கவரிசங்கு *
மானொடுமரைபுல்வாயுமாறுகொள்சுறவுமேறு *
மூனுகர்நரியினோடுமுசுவிவையோரியாகு *
மானநூல்விலங்கினுணின்மரபெனவடைத்தவாறே (௫௩)

பிடிபிணைபெட்டைமந்திபிணாவேசபாணுகுபாட்டி *
கொடுவிலங்கின்பெண்பாலாங்குஞ்சரங்கவரியோடு *
நெடியவொட்டகமிம்மூன்றுநெடும்பிடிநிகழ்த்துநாமம் *
வடிவுளவுழைபுல்வாய்நாய்வராகமேபிணையின்வைக்கும் (௫௪)

ஒட்டகங்கழுதைவடசியுருசிங்கமரையிவ்வைந்தும் *
பெட்டையாமுசுவோடுகேம்பேசியகுரங்குமந்தி *
பட்டபுல்வாய்நாய்பன்றிபகர்ந்திடும்பிணாவெனும்பேர் *
கட்டியவெருமைபெற்றங்காட்டுளமரையேயாணும் (௫௫)

எருமையேமரையேபெற்றமேற்றநீர்ச்சாதிநாகா *
நரிபன்றிநாயிம்மூன்றுநாட்டியபாட்டியாகும் *
பெருகுபெண்பால்பிணாப்பெண்பேனுமானைவையுமாணும் *
பொருவினூலுணர்ந்துசொன்னபுலவர்தம்வாக்குத்தானே (௫௬)

(விலங்கினாண்மரபு.)

விலங்கினாண்பெயர்...கடுவன்-மா-ஒருத்தல்-போத்து-கலை-தகர்-களிறு-சேவல்-பகடு-உம்பல்-ஏறு-ஓரி- ஆக ௰௨. கடுவனென்னும் பெயர்...குரங்கு-பூனை-ஆகியவிரண்டிற்குமாம். மாவென்னும் பெயர்...யானை-பன்றி-புரவி ஆக ௩-ம்

ஒருத்தலென்னும்பெயர்...கரடி-புல்வாய்-மான்-யானை-கவரி-எருமை-பன்றி-புலி-மரை ஆக கூம். போத்தென்னும்பெயர்...மரை-பசு-புலி-பூனை-புல்வாய்-ஆக ரும். கலையென்னும்பெயர்...முசு மான் ஆக ௨-ம்

தகரென்னும்பெயர்—துருவாடு-வேழம்-யாளி-சுறு ஆக சம், களிறென்னும்பெயர்...கரி-சுறவு-பன்றி ஆக ௩ம், சேவலென்னும்பெயர்...கோழி-அன்னம்-ஆக ௨-ம், பகடென்னும்பெயர்...எருமை-யானை-பெற்றம் ஆக ௩-ம், உம்பலென்னும்பெயர்...இபம்- க-ம்

ஏறென்னும்பெயர்—ஆன்-எருமை-பன்றி-கவரி- சங்கு-மான்-மரை-புல்வாய்-சுறவு ஆக கூ-ம்
ஓரியென்னும்பெயர்—நரி-முசு ஆக ௨-ம்

(விலங்கின்பெண்மரபு)

விலங்கின்பெண்பாற்பெயர்...பிடி-பிணை-பெட்டை-மந்தி-பிணா ஆன்- நாகு- பாட்டி-ஆக அ. பிடியென்னும்பெயர்...குஞ்சரம்-கவரி- ஒட்டகம்-ஆக ௩-ம். பிணையென்னும்பெயர்...உழை -புல்வாய்-நாய்-வராகம் ஆக ச-ம்

பெட்டையென்னும்பெயர்...ஒட்டகம்-கழுதை-வாசி-சிங்கம்-மரை-ஆக ரு-ம். மந்தியென்னும்பெயர்...முசு- ஊகம்- குரங்கு - ஆக ௩-ம். பிணாவென்னும்பெயர்...புல்வாய்-நாய்-பன்றி-ஆக ௩-ம். ஆனென்னும்பெயர்...எருமை-பெற்றம்-மரை ஆக ௩-ம்

நாகென்னும்பெயர்...எருமை- மரை- பெற்றம்- எற்றநீர்ச்சாதி-ஆக ச-ம். பாட்டியென்னும்பெயர்...நரி பன்றி- நாய்-ஆக ௩-ம், பிணாப்பெண்ணெனன்னும்பெயர்கள்... பெண்பாலெவற்றிற்குமாம். ஆணென்னும்பெயர்...ஆண்பாலெவற்றிற்குமாம் *

பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பொடுகுருளைகன்று *
மறியேபோதகமிவ்வொன்பான்வல்விலங்கின்பிள்ளைப்பேர் *
பறழொடுகுருளைகுட்டிபற்றியமூன்றுபேரு *
முறுபுலிமுயல்வராகமோதியநரிநாயாமே (ருஎ)

மூறுகுநாயன்றிமற்றைமொழிந்திடும்பிள்ளையென்ப *
மறியென்பதாடமூங்குமானொடுகுதிரைவக்கும் *
பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பெனவைந்துபேருங் *
குறியுளகுரங்கேயாதிக்கோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை (ருஅ)

கடமைமானெருமைபெற்றங்கவயமோட்டகமேயானை *
விடுபரிமரைகராமேமேவியகவரிகன்றுங் *
கடமைமானெருமையானைகாட்டியகுழவியாகு *
மடுபுலிசிங்கம்யானையானபோதகமென்றுமே (ருகூ)

மூறுகியகிரிபூனைமுயலணிலென்பநான்கும் *
பறழொடுகுட்டிபிள்ளைபன்னியமூன்றுமாகும் *
பறழொடுகுட்டிதானேபாக்கனுமணிலுமென்ப *
பறழ்பிள்ளையிரண்டுஞ்சொல்லிற் பார்ப்பொடுதவழ்சாதிப்பேர் (சய)

குருளையுங்கன்றுமானிற்கொள்ளுபகுழவியோடு *
சுருளையும்யாளிகொள்ளுங்குழவியேமுசுவிற்குங் *
குருளையேமுசுவின்கூற்றுங்கூறியமாவேமானே *
மிருகமேகுரங்கேநான்கும்விலங்கினிற்பொதுப்பேராமே (சக)

சாலமேவியூகம்பூதஞ்சாற்றியகுலம்விருந்தங் *
கோலமார்கணம்விலங்கின்கூட்டமாம்பிறவுமேற்குங் *
கூலம்வேசகமேதோகைகுறித்திடுமிலாங்கூலம்வால் *
வாலதியென்றும்பேராம்வாலின்கீழ்வெருகமாமே (சஉ)

மருப்பொடுசிருங்கங்கோடுமற்றையவுலவைகொம்பாங் *
குருத்திடும்விடாணமும்பேர்குமரங்கொம்பிலாவிலங்காங் *
கிருத்திமம்புறணிபோர்வைகிளரதளொலியன்றுக்குத் *
துருத்தியேசருமம்பச்சைதுவக்குரிவடகந்தோலாம் (சரு)

(விலங்கின்பிள்ளைமரபு)

விலங்கின்பிள்ளைப்பெயர்...பறழ்-பிள்ளை-குழவி-குட்டி- பார்ப்பு-குருளை-கன்று-மறி-போதகம்ஆகூ கூ.பறழ்-குருளை-குட்டியென்னும்பெயர்கள்...புலி-முயல்-வராகம்-நரி-நாய் ஆகூ ரு-ம்

பிள்ளையென்னும்பெயர்...நாயொழிந்தவற்றிற்காம். மறியென்னும்பெயர்...ஆடு-அழுங்கு-மான் குதிரை ஆகூ ச-ம் பறழ்பிள்ளை-குழவி-குட்டி-பார்ப்பென்னும்பெயர்கள்... குரங்குமுதன் மரக்கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளைகட்காம்.

கன்றென்னும்பெயர்...கடமை-மான்-எருமை-பெற்றம்-கவயம்-ஒட்டகம் யானை பரி- மரை- கராம்- கவரி ஆகூ ங-ம். குழவியென்னும்பெயர்...கடமை-மான்-எருமை-யானை ஆகூ ச-ம் போதகமென்னும்பெயர்...புலி-சிங்கம்-யானை ஆகூ ௩-ம்

பறழ்குட்டிபிள்ளையென்னும்பெயர்கள்...கீரி- பூனை - முயல்-அணில்- ஆகூ ச-ம். பறழ்குட்டியென்னும்பெயர்கள்...பாக்கன்- அணில்-ஆகூ உ-ம். பறழ்பிள்ளையென்னும்பெயர்கள்...பார்ப்பு - தவழ்சாது ஆகூ உ-ம்

குருளைகன்றென்னும்பெயர்கள்...ஆன் (க-ம்) குழவிகுருளையென்னும்பெயர்கள்...யாளி (க-ம்) குழவிகுருளையென்னும்பெயர்கள்...முசு (க-ம்) மரபுமுற்றிற்று. விலங்கின்பொதுப்பெயர்...மா - மான் - மிருகம் - குரங்கு ஆகூ ச

விலங்கின்கூட்டத்தின்பெயர்...சாலம்-வியூகம்-யூதம்- குலம்- விருந்தம்-கணம்-ஆகூ சு. விலங்கின்வாலின்பெயர்...கூலம்- வேசகம் -தோகை-இலாங்கூலம் -வாலதி ஆகூ ரு விலங்கின்வாற்கிழிடத்தின்பெயர்...வெருகம் (க)

விலங்கின்கொம்பின்பெயர்...மருப்பு சிருங்கம் கோடு- உலவை-விடாணம்-ஆகூ ரு. கொம்பிலாவிலங்கின்பெயர்...குமரம் (க) தோலின்பெயர்...கிருத்திமம்-புறணி-போர்வை- அதள்-ஒலியல்-தொக்கு-க்ருத்தி-சருமம்-பச்சை துவக்கு-உரி-வடகம் ஆகூ யஉ

## மூன்றாவது - விலங்கின்பெயர்த்தொகுதி.

தசைபுலால்புலவுபண்ணேதடியொடுபுளிதந்தூவே ❋
பிசிதம்வள்ளூரம்விடக்குப்பேசிஊனின்பேர்ப்பத்தாம் ❋
பொசிதருமுடையேயூழ்த்தல்பூதியேதசைபுலாலாம் ❋
பசுவினதிறைச்சிதானேபகர்ந்தவள்ளூரமதாமே (சச)

எருவையேநெய்த்தோர்சோரியியம்பிடுமுதிரம்புண்ணீர் ❋
குருதிசெம்பால்புலாணீர்குறித்தசோணிதமேசெந்நீர் ❋
கருதியசுடுவன்மற்றைக்கறையிராறிரத்தத்தின்பேர் ❋
விரவியநிணங்கொழுப்புவிளவொடுவிழுக்குமாமே (சரு)

கருவொடுசினைமீள்சூலேகருப்பமேவயாவுமாகு ❋
மருவியவழும்பிஞமம்வழுக்கென்பவீருளீரல் ❋
கருதியமுடைபிஞமங்காட்டியபுலவோடுத்தை ❋
யுருவியமலமேமாசேயுபமலமுள்ளின்மாசாம் (சகா)

அரவுகட்செவியேபோகியகியரிவியாளஞ்சர்ப்ப ❋
முரகம்பன்னகமேநாகமுற்றமாசுணமேசக்கிரி ❋
பரவியபுயங்கம்பாந்தள்பணிமூவைந்திவைபாம்பின்பே ❋
ரிவைகொளுந்துண்டஞ்சாவையிராசிலமென்பதும்பேர் (சஎ)

விடமுமிழ்மண்டலிக்குமேவுகோளகமேநாமங் ❋
கொடியமாலுதானமேனகண்குத்திப்பாம்பென்றுகூறு ❋
நெடியமாசுணமேபாந்தணீள்பெரும்பாம்பிஞமை ❋
மூடியமேவெழுந்துசீறுமூர்க்கனேநாகமென்ப (சஅ)

வருகருவழலையின்பேரிராசமாநாகமாகுங் ❋
குரவியபறவைநாகங்குக்குடசர்ப்பமென்ப ❋
பரவிபபடம்பணம்பைபடப்பொறியுத்திதுத்தி ❋
கருதியதட்டநஞ்சுகாலும்பல்லதட்டங்காற்றும் (சகூ)

எகினமேமோதிமமராளம்விகங்கம்வக்கிராங்கமன்னஞ் ❋
சிகியொடுஞமலிதோகைசிகாவளஞ்சிகண்டிமஞ்ஞை ❋
யொகரமேமயூரமற்றுமுறுபிணிமுகங்கலாபி ❋
மகிழ்வுறுநவிரம்பீலிகேகயமயில்பன்முப்பேர் (ருய)

ஊனின்பெயர்...தசை - புலால் - புலவு - புண் - தடி - புளிதம் - தா - பிசிதம் - வள்ளூரம் - விடக்கு ஆ௰
புலாலின்பெயர்...முடை - ஊழ்த்தல் - பூதி - தசை ஆ௪
பசுவினிறைச்சியின்பெயர்...வள்ளூரம் (௧)

இரத்தத்தின்பெயர்...எருவை - நெய்த்தோர் - சோரி - உதிரம் - புண்ணீர் - குருதி - செம்பால் - புலானீர் - சோணிதம் - செந்நீர் - சுடுவன் . கறை ஆ௰௨. கொழும்பின்பெயர்...நிணம் - விளர் - விழுக்கு ஆ௩

கருப்பத்தின்பெயர்...கரு - சினை - மீள் - சூல் - வயாவு ஆ௫
வழும்பின்பெயர்...விழுக்கு (௧) ஈரலின்பெயர்...ஈருள் (௧)
முடையின்பெயர் ..புலவு - ஊத்தை ஆ௨. மாசின்பெயர்... மலம் (௧) உண்மாசின்பெயர்...உபமலம் (௧)

பாம்பின்பெயர்...அரவு - கட்செவி - போகி - அகி - அரி - வியாளம் - சர்ப்பம் - உரகம் - பன்னகம் - நாகம் - மாசுணம் - சக்கிரி - புயங்கம் - பாந்தள் - பணி ஆ௰௫
சாரைப்பாம்பின்பெயர்...துண்டம் - இராசிலம் ஆ௨

மண்டலிப்பாம்பின்பெயர்...கோளகம் (௧)
கன்குத்திப்பாம்பின்பெயர்...மாலுதானன் (௧)
பெரும்பாம்பின்பெயர்...மாசுணம் - பாந்தள் ஆ௨
நாகத்தின்பெயர் ... மூர்க்கன் (௧)

கருவழலைப்பாம்பின்பெயர்...இராசமாநாகம் (௧) பறவைநாகத்தின்பெயர்...குக்குடசர்ப்பம் (௧) பாம்பின்படத்தின்பெயர்... பணம் - பை ஆ௨. படப்பொறியின்பெயர்...உத்தி - துத்தி ஆ௨. பாம்பினச்சுப்பல்லின்பெயர்...தட்டம் (௧) பாம்புயிர்ப்பின் பெயர்...அதட்டம் (௧)

அன்னத்தின்பெயர்...எகினம் - ஓதிமம் - மராளம் - விகங்கம் - வக்கிராங்கம் ஆ௫. மயிலின்பெயர்...சிகி - குமலி - தோகை - சிகாவளம் - சிகண்டி - மஞ்ஞை - ஒகரம் - மயூரம் - பிணிமுகம் - கலாபி - நவிரம் - மீலி - கேகயம் ஆ௰௩

(அய) மூன்றாவது-விலங்கின்பெயர்த்தொகுதி.

சரணமேசிகண்டங்கூந்தல்சந்திரகங்கலாபங்கூழை *
பெருகியதோகைதொங்கல்பீலியாந்தூவியும்பேர் *
மருவியவகவலாலன்மயிற்குரலேங்கலும்பேர் *
வருமுருத்திறகின்முள்ளாமற்றன்னச்சிறகுதூவி (ருக)

மன்னியகலுழன்மற்றைவைனதேயன் *
பன்னகவைரியோடுதார்க்கியன்பறவைவேந்த *
னுன்னியகருடனுமழுவணமுமதற்கேகூறுஞ் *
சொன்னசாதகப்புட்டானேசூழ்ந்தசாரங்கமென்ப (ருஉ)

சிம்புள்வாருண்டமற்றைச்செப்பியவருடையோடு *
சம்பரந்துரோணம்வெய்யசரடமெண்காற்புட்பேராம் *
வெம்பியநேமிப்புள்ளுவிரும்புசக்கரவாகப்புட் *
கொம்பியகோகம்யானைக்குருகென்றுகூறலாமே (ருங)

இருந்தபுண்டரமேகங்கமெருவையேபவணையோடு *
கருஞ்சிறைபுவணமைந்துங்கழுகென்பசகுந்தமும்பேர் *
திருந்தியசேனம்பாரசிகைபாறுசேருங்கங்கம் *
பருந்தின்பேரசுணமாவேபகரிற்கேகயமென்றோதும் (ருச)

சாருவேயரியேவன்னிதத்தையேசுகமேகிள்ளை *
கீரமேசுவாகதந்தான்கிளியவந்திகையுமாகுங் *
கீரமுங்கிள்ளைதானுங்கிளர்கருங்கிளியின்மஞ் *
சாரமாநிலாமுகிப்பேர்சகோரஞ்செம்போத்துக்குக்கில் (ருரு)

கோகிலங்களகண்டம்மேகோரகைகுயிலின்பேர்தா *
னுகுமேபிகத்திரேனுபரபுட்டந்தானுமப்பேர் *
கூகையுமுலூகமும்போர்க்குடிஞையங்குராலுங்கோட்டா *
னுகணவாய்ப்புட்பூவைநவிற்றுஞ்சாரிகையுமாமே (ருசா)

கஞ்சனங்கிகிணியோடுவயவனேகஞ்சரீடம் *
விஞ்சுடாரத்துவாசம்வலியனைவிதித்தபேரோ *
வஞ்சுளன்வயவன்மற்றைவயாவனென்பகாரிப்பிள்ளை *
கஞ்சனங்கயவாயென்பகரிக்குருவிப்பேர்தானே (ருஎ)

மயிற்பீலியின்பெயர்—சரணம்-சிகண்டம்- கூந்தல்- சந்திரகம்-கலாபம்-கூழை-தோகை-தொங்கல்-தூவி ஆ கூ.
மயிற்குரலின்பெயர்—அகவல்-ஆலல்-ஏங்கல். ஆ ஈ. இறகின்முள்ளின்பெயர்—முருந்து (க) அன்னச்சிறகின்பெயர்—தூவி(க)

கருடன்பெயர்—கலுழன்-வைனன்-வைனதேயன்-பன்னகவைரி-தார்க்கியன்-பறவைவேந்தன்-உவணம் ஆ எ.
சாதகப்புள்ளின்பெயர்—சாரங்கம் (க)

எண்காற்புள்ளின்பெயர்—சிம்புள்-வாருண்டம்- வருடை - சம்பரம்-துரோணம்-சரபம் ஆ சா
சக்கரவாகப்புள்ளின்பெயர்—நேமிப்புள் - கோகம் - யானைக்குருகு ஆ ஈ

கழுகின்பெயர்—புண்டரம் - கங்கம்- எருவை- பவணை-உவணம்-சகுந்தம் ஆ சா
பருந்தின்பெயர்—சேனம்-பாரசிகை-பாறு-கங்கம் ஆ சு.
அசுணமாவின்பெயர்—கேகயம் (க)

கிளியின்பெயர்—சாரு-அரி-வன்னி-தத்தை-சுகம்-கிள்ளை- கீரம்-சுவாகதம் - அவந்திகை. ஆ கூ. கருங்கிளியின்பெயர் — கீரம்-கிள்ளை. ஆ உ. நிலாமுகியின்பெயர்—சகோரம் (க)
செம்போத்தின்பெயர்—குக்கில் (க)

குயிலின்பெயர்—கோகிலம்- களகண்டம்- கோரகை - பிகம்-பரபுட்டம். ஆ ரு. கோட்டான்பெயர்—கூகை-உலூகம்-குடிஞை-குரால் ஆ சு.
நாகணவாய்ப்புள்ளின்பெயர்—பூவை-சாரிகை ஆ உ.

வலியன்பெயர்—கஞ்சனம்-கிகிணி-வயவன்-கஞ்சரீட்டம்- பாரத்துவாசம் ஆ ரு.
காரிப்பிள்ளையின்பெயர்—வஞ்சுளன்-வயவன்-வயான் ஆ ஈ.
கரிக்குருவியின்பெயர்—கஞ்சனம்-வயவாய் ஆ உ.

## (அஉ) மூன்றாவது-விலங்கின்பெயர்த்தொகுதி.

சிரல்கவுதம்பொன்வாய்ப்புட்டித்திரிசிச்சிலிப்பேர் *
கருதியபெரும்புள்ளோடுகௌசிகமூமன்கூகை *
குருகுகாலாயுதம்பேர்க்குக்குடமாண்டலைப்புட் *
பெருகுவாரணமென்றெந்தும்பேசியகோழியாமே. (ருஅ)

குலிங்கமேசடகமேயூர்க்குருவியாம்புலிங்கமும்பேர் *
நிலங்குபூழாங்காதம்பநெடியகானங்கோழிப்பேர் *
கலிங்கமேகம்புள்வானம்பாடியாங்குறும்பூழ்காடை *
யிலங்குகோரசமேபுல்லோடிதல்சிவலிவைமுப்பேரே (ருகூ)

சிரவமேகவுதாரிப்பேர்சில்லையேபக்கண்டையாகு *
மருவியசலாங்குதானேவாய்த்தபொய்யாப்புள்ளாமே *
கரடம்வாய்சம்பிரிட்டங்கரும்பிள்ளைகொடியேகாக *
பிருடிபிங்கலையேயாந்தைகின்னரமென்பதும்பேர். (சுய)

கரும்புறாவின்பேர்பாராவதமென்பகபோதமும்பேர் *
பொருந்துதாதுணங்கபோதங்களரவம்புறாப்பொதுப்பேர் *
பரிந்துகான்மேயுங்களபதமேமாடப்புறாவாந் *
திருந்தியவுள்ளலுள்ளான்சிதகந்தூக்கணங்குரீஇயே. (சுக)

கருதியகம்புள்சம்பங்கோழியாங்கவுஞ்சமன்றில் *
குருகுவண்டானமென்பகொய்யடிநாரையின்பேர் *
பெருகியபிதாவேபோதாப்பெருநாரைசிகரியொன்றே *
கருநிறநாரைவெள்ளைநாரைசாரசமென்றாமே. (சுஉ)

பன்னுநீர்க்காக்கையர்க்கமற்றுங்காரண்டமும்பேர் *
பன்னியகுரண்டங்கொக்காம்வலாகமும்பகமும்பே *
ருன்னமேகிராமமற்றையுத்குரோசத்திரனோடு *
கின்னரமின்னநீரிற்கிளர்ந்தெழுபறவையாமே. (சுங)

அரியளிஞிமிறுமந்தியறுபதஞ்சிலீமுகஞ்சஞ் *
சரிரமேசரகமேவஞ்சாளிகஞ்சுரும்புகீடம் *
பிரமரமாவேகீதம்பிருங்கமேபிரசம்புள்ளு *
வரிகொள்புண்டரிகந்தும்பிமதுபநாலைந்தும்வண்டாம். (சுச)

சிச்சிலியின்பெயர்—சிரல்-கவுதம் - பொன்வாய்ப்புள் - தித்திரி-ஆக ௪-கூகையின்பெயர்—பெரும்புள் - கௌசிகம் -ஊமன்-ஆக ௩-கோழியின்பெயர்—குருகு-காலாயுதம்-குக்குடம்-ஆண்டலைப்புள்-வாரணம் ஆக ௫

ஊர்க்குருவியின்பெயர்—குலிங்கம் - சடகம் - புலிங்கம்-ஆக ௩-நிலங்கின்பெயர்—பூழ் (௧) கானங்கோழியின்பெயர் — காதம்பம் (௧) வானம்பாடியின்பெயர்—கலிங்கம் - கம்புள் - ஆக ௨ காடையின்பெயர்—குறும்பூழ் (௧) சிவலின்பெயர்—கோரசம்-புல்-இதல் ஆக ௩

கவுதாரியின்பெயர்—சிரவம் (௧) பகண்டையின்பெர்—சில்லை (௧) பொய்யாப்புள்ளின்பெயர்—சலாங்கு (௧) காகத்தின்பெயர்—கரடம்-வாயசம் - அரிட்டம்-கரும்பிள்ளை-கொடி-ஆக ௫- ஆந்தையின்பெயர்—இருடி-பிங்கலை-கின்னரம் ஆக ௩

கரும்புறாவின்பெயர்—பாராவதம்-கபோதம் - ஆக ௨ - புறாப்பொதுவின்பெயர்—தூதுணம்-கபோதம்-களரவம்-ஆக ௩ -மாடப்புறாவின்பெயர்--காளபதம் (௧) உள்ளான்பெயர்—உள்ளல் (௧) தூக்கணங்குருவியின்பெயர்—சிதகம் (௧)

சம்பங்கோழியின்பெயர்—கம்புள் (௧) அன்றிலின்பெயர்—கவுஞ்சம் (௧) கொய்யடிநாரையின்பெயர்-குருகு-வண்டானம் -ஆக ௨-பெருநாரையின்பெயர்—பிதா-போதா - ஆக ௨ - கருநாரையின் பெயர்—சிகரி (௧) வெள்ளைநாரையின்பெயர்—சாரசம் (௧)

நீர்க்காக்கையின்பெயர்—அர்க்கம்-காரண்டம்-ஆக ௨ -கொக்கின் பெயர்—குரண்டம்-வலாகம்-மகம்-ஆக ௩ - நீர்வாழ்பறவையின் பெயர்—உன்னம்-கிராமம்-உற்குரோசம்-கின்னரம் ஆக ௪

வண்டின்பெயர்-அரி-அளி-ஞிமிறு-மந்தி-அறுபதம்-சிலீமுகம்-சஞ்சரிகம் - சரகம்-சஞ்சாளிகம் - சுரும்பு-கீடம் - பிரமரம்-மாகீதம்-பிருங்கம்-பிரசம்-புள்-புண்டரீகம் - தும்பி-மதுபம் ஆக ௨௰-

கரும்புளேகேசவந்தேன்கண்டபெண்வண்டினாமஞ் *
சுரும்பொடுமதுகரங்கள்சொற்றிடுந்தும்பியாண்பேர் *
துருஞ்சிலாலாலமென்பசோர்விலஞ்சலிகைவாவ *
றருங்காபமீயன்மூதாச்சரகமேபிரசந்தேனீ (௯௫)

சிதடிசில்லிகையேசில்லைசிள்வீடுசிமிலியும்பேர் *
பதமுறுசலபம்விட்டிற்பறவையாம்பதங்கமும்பேர் *
விதமுறுநுளம்புதானேநிலத்திமின்மினிகச்சோதங் *
கொதுகின்பேர்மசகந்துள்ளல்கூறின்மற்றசவலும்பேர் (௯௬)

மயிலெழாலல்லாப்புள்ளின்வகுத்தவாண்சேவலென்ப *
மயிலெழாலெனுமிரண்டில்வாய்த்தவாண்போத்ததாகு *
மயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்ணளகென்*றோதார் *
பெயர்பெறுமெல்லாப்புள்ளின்பெண்பெடைபெட்டைபேடை

விகங்கமாசுகியேவீயேவிகிரகமேகுடிஞைபக்கி *
சகுந்தம்பத்திரிபதங்கந்தாழ்பிணிமுகத்தினோடு *
பகர்ந்திடுங்ககமேகோலப்பறவையேபதகம்போகில் *
புகழ்ந்திடுகுரீஇமூவைந்தும்புட்பொதுவயானமும்பேர் (௯௮)

சிறகொடுசதனம்வாசஞ்சிறைபிஞ்சங்கூறல்பக்கம் *
பறைசதந்தூவிதோகைபத்திரங்குரலேகூழை *
யிறையெனவுரைத்தமூவைந்தேற்றதுமிறகின்பேரோ *
யறைதருமரிட்டங்கோசமண்டமேசினையேமுட்டை (௯௯)

பிள்ளையும்பார்ப்புங்குஞ்சின்பேர்சுச்சுச்சுவவுதுண்ட *
மொள்ளியவலகுமூக்காமோசனிக்கின்றதென்ப *
புள்ளெழச்சிறகடித்துப்புடைத்தலினுமமாகுந் *
துள்ளுபுள்ளீட்டத்தோசைதுழனியாந்தொழுதிகூட்டம் (௱)

கலைசுறாமீனேறென்பகாட்டியமகரமாகுஞ், செலமுறுயானைமீ
னேமிதில்பெருமீனினும, மலைவுறுதிமிங்கிலப்பேரானையைவிழு
ங்குமீனு, மலைதிமிங்கிலகிலந்தான்மற்றதைவிழுங்குமீனே (௱௧)

---

* கோழிகூகையல்லாப்பெண்ணளகென்றோதும், என்றுபாடஞ் சொல்வாருமுளர். அது (தொல்காப்பியம்-பொருளதிகாரம் மரபியல்-௫௬), கோழிகூகையாயிரண்டல்லவை - சூழுங்காலையளகெனவமையா, என்னுஞ்சூத்திரத்திற்குமாறுபடுதலிற் பொருந்தாதென்க. மயிலின்பெண்ணும்அளகெனப்படும். அது, அப்பெயர்க்கிளவி மயிற்குமுரித்தே, என்னும்) ௫௭-ம்-சூத்திரத்தாலறிக.

பெண்வண்டின்பெயர்...சுரும்புள்-கேசவம்-தேன்-ஆடூ ௩- ஆண் வண்டின்பெயர்...சுரும்பு-மதுகரம்-தும்பி-ஆடூ ௩-நுருஞ்சிலின் பெயர்...ஆலாலம் (க) வாவலின்பெயர்...அஞ்சலிகை (க) இந்தி ரகோபத்தின்பெயர்...ஈயல்- மூதா ஆடூ ௨ - தேனீயின்பெயர்... சரகம்-பிரசம் ஆடூ ௨

சிள்வீட்டின்பெயர்...சிதடி-சில்லிகை-சில்லை சிமிலி ஆடூ ௪
விட்டிற்பறவையின்பெயர்...சலபம்-பதங்கம். ஆடூ ௨
நுளம்பின்பெயர்-நிலத்தி. (க) மின்மினியின்பெயர் - கச்சோ தம் (க) கொதுகின்பெயர்-மசகம்-துள்ளல்-அசவல் ஆடூ ௩

மயிலும்எழாலுமல்லனவாகிய புள்ளினாண்பெயர்-சேவல் (க)
மயில்எழாலென்னுமிரண்டினாண்பெய...ர்போத்து (க)
கோழிகூகைகளின்பெண்பெயர்...அளகு. (க) பறவைப்பெண் ணின்பெயர்...பெடை-பெட்டை-பேடை ஆடூ ௩

புட்பொதுவின்பெயர்...விகங்கம்-ஆசுகி-வீ-விகிரம் -குடிஞை- பக்கி-சகுந்தம்-பத்திரி-பதங்கம்-பிணிமுகம்-ககம்-பறவை- பதக ம்-போகில்-குரீஇ-வயானம் ஆடூ ௰௬

இறகின்பெயர்...சிறகு - சதனம்-வாசம் - சிறை-பிஞ்சம்-கூரல்- பக்கம்-பறை-சதம்-தூவி-தோகை - பத்திரம் - குரல் - கூழை- இறை - ஆடூ ௰௫ - முட்டையின்பெயர் - அரிட்டம் - கோசம்- அண்டம்-சினை ஆடூ ௪

பறவைக்குஞ்சின்பெயர்-பிள்ளை-பார்ப்பு ஆடூ ௨ - பறவைமூக்கி ன்பெயர்-சுச்சு-சுவவு-துண்டம்-அலகு-ஆடூ ௪ - புட்சிறகடித்துப் புடைத்தலின்பெயர் - ஓசனித்தல் (க) புள்ளீட்டத்திரேசையி ன்பெயர்...துழனி(க)பறவைக்கூட்டத்தின்பெயர்...தொழுதி (க

மகரமீனின்பெயர்...கலை-சுறு-மீனேறு ஆடூ ௩
பெருமீனின்பெயர்-யானைமீன்-திமில்- ஆடூ ௨
யானைமீனைவிழுங்குமீனின்பெயர்...திமிங்கிலம் (க) அம்மீனைவி ழுங்குமீனின்பெயர்...திமிங்கிலகிலம் (க)

## மூன்றாவதுவிலங்கின்பெயர்த்தொகுதி.

நலந்தருநந்துசுத்திநாகொடுவளைகம்புக்கோ *
டிலங்கியவாரணம்வண்டிடம்புரிவெள்ளைசங்காம் *
வலம்புரிநாமந்தானேவைத்தகொக்கணையென்றோதுஞ் *
சலஞ்சலம்பணிலமென்றுசாற்றினரேற்றநூலோர் (௭௨)

இப்பியாயிரமேசூழ்ந்ததிடம்புரியென்றுகூறு *
மொப்பில்சங்காயிரஞ்சூழுறும்வலம்புரியென்றோது *
மப்படியதுவுஞ்சூழ்ந்தசலஞ்சலமாகுமற்றைத் *
தப்பிலாச்சலஞ்சலங்கள்சார்ந்ததுபாஞ்சசன்னியம் (௭௩)

இடங்கர்சிஞ்சுமாரம்வன்மீனெழிற்கராமுதலையின்பேர் *
கொடுந்திறத்கராமற்றாண்பேர்கூர்மமேயுறுப்படக்கி *
யொடுங்குகச்சபமேயாமைகமடமுமுணைக்கற்பாற்று *
மடங்கியதுளிபெண்ணாமைமலங்கின்பேர்நூறையென்ப (௭௪)

ஏரலோடெருந்தேயூரல்கிளிஞ்சிலாமிறவீறான்மீ *
னாரலேயாராலின்பேர்கெண்டைமீசபரஞ்சேலா *
மூர்தருநந்தாநந்தைநாகுமாமுருவேயட்டை *
நீருறுமயிலைமற்சநெடும்புழன்மீன்பொதுப்பேர் (௭௫)

புள்ளியேகெவுளிபல்லிபோற்றுங்கோகிலமுமப்பேர் *
நொள்ளைநாகரவண்டின்பேருலூதையேநான்சிலம்பி *
யொள்ளியபிலஞ்சுலோபம்பிபீலிகையூரெறும்பாந் *
தெள்ளுநாங்கூழ்பூநாகஞ்சிதலையேகறையான்செல்லே (௭௬)

நளிவிடந்தெறுக்காறுட்டஞட்டியவிருச்சிகந்தேள் *
களவனேகுளிரோநள்ளிகவைத்தாள்கர்க்கடகஞெண்டே *
யுளுவுசுவாகுமென்பவுற்றமண்டூகந்தேரை *
தளரரிநுணலைநீகந்தவளையாம்பேகமும்பேர் (௭௭)

கிருமியேபுழுப்பொட்டும்பேர்கீடங்கோற்புழுவுலண்டாம் *
பிரசங்கோற்றேனிறாலேபேசியதேனின்கூட்டாம் *
விரவியவிலங்கினீட்டம்விருத்தமோரெழுபத்தெட்டும் *
வருமுறையுரைத்தான்வீரைமன்னன்மண்டலவன்றானே (௭௮)

மூன்றாவது - விலங்கின்பெயர்த்தொகுதி.

முற்றிற்று.

ஆக தொகுதி ௩-க்கு-விருத்தம்-௨௱௮௬.

சங்கின்பெயர்—நந்து-சுத்தி-நாகு-வளை-கம்பு-கோடு- வாரணம்-
வண்டு-இடம்புரி-வெள்ளை ஆ௰.
வலம்புரிச்சங்கின்பெயர்—கொக்கரை (க)
சலஞ்சலத்தின்பெயர்—பணிலம். (க)

இடம்புரி—இப்பியாயிரஞ்சூழ்ந்தது *
வலம்புரி—இடம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது *
சலஞ்சலம்—வலம்புரியாயிரஞ்சூழ்ந்தது *
பாஞ்சசன்னியம்—சலஞ்சலங்களாயிரஞ்சூழ்ந்தது *

முதலையின்பெயர்—இடங்கர்-சிஞ்சுமாரம்-வன்மீன்-கராம் ஆ௪
ஆண்முதலையின்பெயர்—கராம்(க) ஆமையின்பெயர்—கூர்மம்-
உறுப்படக்கி-கச்சபம்-கமடம் ஆ௪. பெண்ணாமையின்பெயர்—
துளி (க) மலங்கின்பெயர்—நாறை (க)

கிளிஞ்சிலின்பெயர்—ஏரல்-எருந்து-ஊரல்- ஆ௩. இறான்மீனி
ன்பெயர்—இறவு (க) ஆரான்மீனின்பெயர்—ஆரல் (க) கெண்
டைமீனின்பெயர்—சபரம்- சேல்- ஆ௨. நத்தையின்பெயர்—
நந்து-நாகு- ஆ௨. அட்டையின்பெயர்...உரு (க) மீன்பொ
துப்பெயர்...மயிலை-மர்ச்சம்-புழல் ஆ௩

பல்லியின்பெயர்...புள்ளி-கெவுளி-கோகிலம் ஆ௩. நாகரவண்டி
ன்பெயர்...நொள்ளை (க) சிலம்பின்பெயர்...உலூதை (க) எறு
ம்பின்பெயர்...பிலஞ்சுலோபம்-பிபீலிகை ஆ௨
நாங்கூழின்பெயர் ... பூநாகம் (க) செல்லின்பெயர்...சிதலை-
கறையான் ஆ௨

தேளின்பெயர்...நளிவிடம்-தெறுக்கால்-துண்டன்- விருச்சிகம்-
ஆ௪. ஞெண்டின்பெயர்...களவன்-குளிர்- நள்ளி- கவைத்தாள்-
கர்க்கடகம் ஆ௫. உளுவின்பெயர்...உசு (க) தவளையின்பெ
யர்...மண்டூகம்-தேரை-அரி-நுணலை-நீகம்-பேகம் ஆ௬

புழுவின்பெயர்...கிருமி-பொட்டு ஆ௨
உலண்டின்பெயர்...கீடம் கோற்புழு ஆ௨
கோற்றேனின்பெயர்...பிரசம்(க) தேன்கூட்டின்பெயர்-இறால்(க

திருச்சிற்றம்பலம்.

## நான்காவது.

# மரப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

திருக்கிளர்தேவர்கோமானேவலிற்குபேரன்செய்த *
விருப்புறுபொன்னெயிற்குள்விளங்கவெண்ணெழுத்திரண்டும் *
பரப்பியவாதிமூர்த்திபங்கயப்பாதம்போற்றி *
மரப்பெயர்த்தொகுதிதன்னைவருமுறைகூறலுற்றாம். (க)

சந்தானம்வேண்டிற்றெல்லாந்தருமரிசந்தனம்பூ *
மந்தாரம்பாரிசாதங்கற்பகமற்றைந்தாஞ் *
சந்தாரஞ்சாந்துசாந்தஞ்சந்திரத்திலகத்தோடு *
வந்தேறுபடீரம்பூசுமலயசஞ்சந்தனப்பேர். (உ)

மகிழுமக்கற்பகத்தில்வளர்கொடிகாமவல்லி *
யகருவேகாகதுண்டமகிலென்பபூழிலும்பேர் *
பகரும்புன்காலியோடுபாடலம்பாதிரிப்பேர் *
வகுளமேயிலஞ்சியென்பமகிழாங்கேசரமுமாமே. (ந)

மன்னியகோங்கிணுமம்வருந்துருமோற்பலம்பூங் *
கன்னிகாரமுமாமென்பசம்பகஞ்சண்பகப்பேர் *
புன்னைபுன்னாகநாகம்வழைசுரபுன்னைப்பேரோ *
நன்னிறநரந்தநாரநாரங்கநாரத்தைப்பேர். (ச)

சிவமயம்.

# நான்காவது
# மரப்பெயர்த்தொகுதி.

## காப்பு.

(இதன்பொருள்.)

திருக்கிளர்-அழகுநிறைந்த—தேவர்கோமான்-தேவர்க்கரசனாகிய இந்திரனது—ஏவலில்-ஏவலினால்—குபேசன்-குபேரன்—செய்த இயற்றிய—விருப்புறு- விருப்பம்பொருந்திய—பொன்னெயிற்குள்-பொன்மதிற்குள்—விளங்க-விளங்கும்படி—எண் -கணிதமும்—எழுத்து-இலக்கணமுமாகிய—இரண்டும்- இரண்டையும்—பரப்பிய- பரப்பிய—ஆதிமூர்த்தி - அருகக்கடவுளுடைய—பங்கயப்பாதம் - செந்தாமரைமலர்போலுந்திருவடிகளை—போற்றி-துதித்து—மரப்பெயர்த்தொகுதிதன்னை-மரப்பெயர்த்தொகுதியை—வருமுறை-வருமுறையே—கூறலுற்றும் (யாம்) சொல்லலுற்றும்—எ-று. (க)

ஐந்தருவாவன—சந்தானம்-அரிசந்தனம் - மந்தாரம்-பாரிசாதம்-கற்பகம்

சந்தனமரத்தின்பெயர்—சந்து-ஆரம்-சாந்து- சாந்தம்-சந்திரதிலகம்-படீரம்-மலயசம் ஆக எ

அக்கற்பகதருவிற்படர்கொடியின்பெயர்—காமவல்லி க

அகிலின்பெயர்—அகரு-காகதுண்டம்-பூழில் ஆக ௩

பாதிரிமரத்தின்பெயர்—புன்காலி-பாடலம் ஆக உ

மகிழமரத்தின்பெயர்—வகுளம்-இலஞ்சி-கேசரம் ஆக ௩

கோங்குமரத்தின்பெயர்—துருமோற்பலம்-கன்னிகாரம் ஆக உ

சண்பகமரத்தின்பெயர்—சம்பகம் (க) புன்னைமரத்தின்பெயர்—புன்னாகம் - நாகம் ஆக உ. சுரபுன்னையின்பெயர்—வழை (க)

நாரத்தையின்பெயர்—நரந்தம்-நாரம்-நாரங்கம் ஆக ௩

குருகுநாகவரிவாசந்திமாதவிக்குருக்கத்திப்பேர் *
தருசிறுசண்பகப்பேர்சாதிமாலதியுமாகுங் *
கருமுகைபித்திகைப்பேர்திலகமஞ்சாடிகாட்டூ *
மருகுதான்மகரவாழைவனமல்லிகைப்பேர்மௌவல். (௫)

மல்லிகைபுருண்டிமற்றைமாலதியனங்கமுப்பே *
ரல்லிபுன்காலிகாசையஞ்சனிபூவைகாயாக் *
குல்லையேசெச்சைவெட்சிகொந்தார்சிந்தூரமும்பேர் *
குல்லைபூந்துளவிரண்டுந்துழாய்வனமென்றுங்கூறும். (௬)

செங்கோடுபஞ்சரந்தான்செருந்தியேபொருந்திநிற்கு *
மங்கோலஞ்சேவழிஞ்சில்சேமரமென்றுமாகுங் *
கொங்காருந்துருக்கமென்பகுங்குமமரவமும்பே *
ரங்காணவனிச்சந்தானேயருப்பலநறவஞ்சுள்ளி. (௭)

கரவீரங்கவீரமற்றைக்கணவீரமலரியின்பேர் *
விரைமேவுதமனகந்தான்மேவியமருக்கொழுந்தே *
யிருவேலிமூலகந்தம்வேரிபீதகமுமேற்கு *
மருமேவுமிருவாட்சிக்குமயிலையுமனங்கமும்பேர் (௮)

முண்டகமுடங்கல்கைதைமுசலியேமடியேதாழை *
கண்டல்கேதகையுமப்பேர்பதிவைபட்டிகையேகாட்டும் *
வண்டுளர்வலம்புரிப்பேர்நந்தியாவர்த்தமென்ப *
விண்டபூஞ்செவ்வரத்தமேவுமந்தாரமாமே. (௯)

தாலமேபெண்ணைபுல்லுத்தாளிபுற்பதிபனைப்பேர் *
தால்மேகூந்தற்பூகந்தருகந்திப்பூகம்பூக்கம் *
சாலநீள்கமுகுமுப்பேர்சாற்றிடுந்துவர்க்காய்பாகு *
கோலமென்றிந்தமூன்றுங்குறித்தபாக்கிற்குநாமம். (௰)

பனசமேவருக்கைபாகல்பலவிவைபலாவின்பேரோ *
யனையவீரப்பலாவேயாசினியென்பதாகும் *
வினவியமாந்திசூதமேவுமாம்பிரமேகொக்கே *
சினைபடுமாழைமாவாஞ்சேதாரந்தேமாவின்பேர் (௰௧)

குருக்கத்தியின்பெயர்—குருகு-நாகரி-வாசந்தி-மாதவி ஆ சு
திருசண்பகத்தின்பெயர்—சாதி-மாலதி ஆ உ. பித்திகையின்பெயர்—கருமுகை (க) மஞ்சாடியின்பெயர்—திலகம் (க) மகரவாழையின்பெயர், மருகு(க) வனமல்லிகையின்பெயர், மௌவல்(க)

மல்லிகையின்பெயர்—புருண்டி-மாலதி-அனங்கம் ஆ ஙா
காயாவின்பெயர்--அல்லி-புன்காலி-காசை-அஞ்சனி-பூவை ஆ ரு
வெட்சியின்பெயர்—குல்லை-செச்சை-சிந்தூரம் ஆ ஙா
துழாயின்பெயர்—குல்லை-துளவு-வனம் ஆ ஙா

செருந்திமரத்தின்பெயர்...செங்கோடு-பஞ்சரம் ஆ உ
அழிஞ்சிலின்பெயர்...அங்கோலம்-சே-சேமரம் ஆ ஙா
குங்குமமரத்தின்பெயர்...துருக்கம்-மரவம் ஆ உ
அனிச்சமரத்தின்பெயர்...அருப்பலம்-நறவம்-சுள்ளி ஆ ஙா

அலரின்பெயர்...கரவீரம்-கவீரம்-கணவீரம் ஆ ஙா
மருக்கொழுந்தின்பெயர்...தமனகம் க
இருவேலியின்பெயர்...மூலகந்தம்-வேரி-பீதகம் ஆ ஙா
இருவாட்சியின்பெயர்...மயிலை-அனங்கம் ஆ உ

தாழையின்பெயர்...முண்டகம்-முடங்கல்-கைதை-முசலி-மடி-கண்டல்-கேதகை ஆ எ. பட்டிகையின்பெயர்...பறிவை க
நந்தியாவர்த்தத்தின்பெயர்...வலம்புரி க
செவ்வரத்தத்தின்பெயர்...மந்தாரம் க

பனையின்பெயர்...தாலம்-பெண்ணை-புல்-தாளி-புற்பதி ஆ ரு
கூந்தற்பூகத்தின்பெயர்...தாலம் க
கமுகின்பெயர்...கந்தி-பூகம்-பூக்கம் ஆ ஙா
பாக்கின்பெயர்...துவர்க்காய்-பாகு-கோலம் ஆ ஙா

பலாமரத்தின்பெயர்...பனசம்-வருக்கை-பாகல்-பலவு ஆ சு
ஈரப்பலாவின்பெயர்...ஆசினி (க) மாமரத்தின்பெயர்...மாந்தி-சூதம்-ஆம்பிரம்-கொக்கு-மாழை-ஆ ரு. தேமாவின்பெயர்...சேதாரம் க

தாழைதென்னுளிகேரமிலாங்கலிதாந்தெங்கின்பேர் *
சூழநெய்பரிடன்னுடைசொல்லியநாரியும்பேர் *
வாழையேகதலியாகுமற்றரம்பையுமதன்பேர் *
வேழமேகன்னலிக்குமென்கழைகரும்புநாற்பேர் (௰௨)

காம்புமாதிரிமுடங்கல்கழைபணைவிண்டுநேமி *
தூம்புவேய்தட்டைமுந்தூழ்துளைகிளைமுளையேவேணு *
வாம்பல்கீசகம்வேல்வேரலரியமைதிகிரிவேழ *
மேம்படுவனமுமெட்டுமூங்கிலாம்வெதிருமப்பேர் (௰௩)

வடமுடனியக்குரோதமற்றைக்கான்மரம்வானோங்கிப் *
படருந்தொன்மரமேகோளிபழுமரமாலின்பேரே *
குடசம்வெட்பாலையென்பகொழுங்கிரிமல்லியும்பே *
ருடையென்பகுடைவேலாகுமுற்றகாஞ்சனமேபுன்கு (௰௪)

விளாசெதிசெயலைபிண்டிமேவுகாகோளிமூன்று *
மருகமெனம்மானிருந்தேயறம்பகரசோகின்பேரா *
மாசின்பேர்சுவலைகுஞ்சராசனமச்சுவத்தந் *
திருமரம்பணையேபோதிகணவம்பிப்பிலமுஞ்செப்பும் (௰௫)

சிந்தகமம்பிரஞ்சிந்தூரமேயெகின்புளிப்பேர் *
திந்திருணியுமப்பேரோதேக்கின்பேர்சாகஞ்சாதி *
வந்தெழுமிதழிகொன்றைமதலையுங்கடுக்கையும்பேர் *
முந்துகிஞ்சுகத்திறேடுகவிருமுண்முருக்கிமுமம் (௰௬)

சம்புநேரோடுநர்வல்சாதேவங்குழிநாவற்பேர் *
நிம்பமேவேம்பினமைநீள்பிசுமந்தமும்பேர் *
சம்பீரமுருகிறேடுசதாபலமெலுமிச்சைப்பே *
ரம்புவியியிலிகுசத்தோடருணமுநாட்டுமப்பேர் (௰௭)

அதவுடனுதும்பரங்கள்கோளியேயதமேயத்தி *
யிதமுறுமாழைசிஞ்சமெகின்மூன்றும்புளிமாவின்பேர் *
வதரிகோற்கொடியிலந்தைமதுத்தகுல்வலியுமப்பேர் *
விதமுறுகோலங்கொண்டைவினவிலக்கனியின்பேரே (௰௮)

தெங்கின்பெயர்...தாழை-தென்-நாளிகேரம்-இலாங்கலி ஆ_௪
பன்னாடையின்பெயர்...நெய்யரி - நாரி ஆ_௨
வாழையின்பெயர்...கதலி-அரம்பை ஆ_௨
கரும்பின்பெயர்...வேழம்-கன்னல்-இக்கு-கழை ஆ_௪

மூங்கிலின்பெயர்...காம்பு-பாதிரி-முடங்கல்-கழை-பணை-விண்டு
நேமி-தாம்பு-வேய்-தட்டை-முந்தூழ்- துளை - கிளை-மூளை-வே
ணு- ஆம்பல் - கிசகம்-வேல்- வேரல்-அரி-அமை-திகிரி-வேழம்-
வரை-வெதிர் ஆ_௨௫

ஆலமரத்தின்பெயர்...வடம்-நியக்குரோதம்-கான்மரம் - தொன்
மரம்-கோளி-பழுமரம் ஆ_௬
வெட்பாலையின்பெயர்...குடசம்- கிரிமல்லி- ஆ_௨. குடைவேலி
ன்பெயர்...உடை (௧) புன்கமரத்தின்பெயர்...கர்ஞ்சனம் ௧

அசோகமரத்தின்பெயர்...செயலை-பிண்டி-காகோளி ஆ_௩
அரசமரத்தின்பெயர்...சுவலை-குஞ்சராசனம்- அச்சுவத்தம்- திரு
மரம்-பணை-போதி-கணவம்-பிப்பிலம் ஆ_௮

புளியமரத்தின்பெயர்...சிந்தகம்- ஆம்பிரம் - சிந்தூரம்- எகின்-
திந்திருணி- ஆ_௫. தேக்கின்பெயர்...சாகம்-சாதி ஆ_௨
கொன்றையின்பெயர்...இதழி-மதலை-கடுக்கை ஆ_௩
முண்முருக்கின்பெயர்...கிஞ்சுகம்-கவிர் ஆ_௨

நாவலின்பெயர்...சம்பு-நேரேடு ஆ_௨. குழிநாவலின்பெயர்...
சாதேவம் (௧) வேம்பின்பெயர்...நிம்பம்-பிசுமந்தம் ஆ_௨
எலுமிச்சையின்பெயர்... சம்பீரம்-முருகு-சதாபலம்-இலிகுசம்
அருணம் ஆ_௫

அத்திமரத்தின்பெயர்...அதவு-உதும்பரம்-கோளி-அதம் ஆ_௪
புளிமாவின்பெயர்... மாழை-சிஞ்சம் -எகின் ஆ_௩
இலந்தையின்பெயர்...வதரி-கோற்கொடி-குல்வலி ஆ_௩
இலந்தைக்கனியின்பெயர்...கோலம்-கொண்டை ஆ_௨

மாதுளமாதுளுங்கங்கழுமுளைமாதுளைப்பேர் *
தாதுமாதுளையினாமந்தாடிமமென்றேசாற்றுஞ் *
சாதுவேத்திரமேசூரல்சாற்றியபிரம்புமுப்பேர் *
தாதகியாத்தியாரேசல்லகியல்லாமொன்றும். (௰௯)

சில்லமேயில்லாந்தேற்றாஞ்சிரீடமேபாண்டில்வாகை *
வில்லமாலூரமேகூவிளமிவைவில்வப்பேரே *
புல்லியபசுநாவிட்டில்புக்கிவைபராவின்பேரே *
பல்லிணர்க்கிலுகிலுப்பைபகன்றையாமுலவையோடை (௨௰)

குரவகமென்பவாடாக்குறிஞ்சியாங்கோரண்டந்தான் *
பெருகியகுறிஞ்சியாகும்பேரீந்தின்பேர்கர்ச்சூரங் *
குரவமேகோட்டமென்பமழைவண்ணக்குறிஞ்சிபாணந் *
தருகரமஞ்சரிப்பேர்சாற்றுநாயுருவியாமே. (௨௧)

தளவுமாலதியேமௌவலூதிகைமுல்லைசாற்றுங் *
களவென்பகளாவினாமங்கதிரமேகருங்காலிப்பேர் *
விளவொடுகபித்தம்வெள்ளில்விளாக்கடிப்பகையினோடு *
விளையுமையவிசித்தார்த்தம்வெண்சிறுகடுகிம்முப்பேர் (௨௨)

மருதுபூதரத்தினோடுமற்றருச்சுனமுமேமற்கும் *
பெருகியகணியேவேங்கைபிரசாரந்திமிசுமப்பேர் *
திருமிகுமதுரசங்கோத்தனிகைமுந்திரிகைதானே *
வருமதிமதுரமட்டிமதுகமேயதிங்கமென்ப (௨௩)

காந்தள்செங்காந்தளாகுமிலாங்கலிதோன்றியும்பேர் *
காந்துசங்கோடல்கோடைகருதுவெண்காந்தளாகும் *
பூந்துணர்ப்பலாசுதானேபுனமுருக்கின்பேரென்ப *
சாய்ந்தெழுசமியேவன்னிநுணாவின்பேர்தணக்குத்தானே (௨௪)

குந்தமேகுருந்தமென்பகுமிழ்கூம்பல்குஞ்சங்குன்றி *
யித்துளமாராகதம்பமியைந்தநீபங்கடம்பாஞ் *
சிந்துவாரந்நிர்க்குண்டிசெப்பில்வெண்ணொச்சியாகுந் *
தந்தசத்திக்கொடிப்பேர்தாடிமஞ்சந்தானமே (௨௫)

மாதுளையின்பெயர்...மாதுளம்-மாதுளுங்கம்-கழுமுள் ஆகூ ரு
தாதுமாதுளையின்பெயர்...தாடிமம் (க)
பிரம்பின்பெயர்...சாதி-வேத்திரம்-சூரல் ஆகூ ரு
ஆத்தியின்பெயர்...தாதகி-ஆர்-சல்லகி ஆகூ ரு

தேற்றுமரத்தின்பெயர்...சில்லம்-இல்லம்-ஆகூ உ- வாகைமரத்தின்பெயர்...சிரீடம்-பாண்டில்-ஆகூ உ-வில்வமரத்தின்பெயர்...வில்வம்-மாலூரம்-கூவிளம்-ஆகூ ரு - பாராய்மரத்தின்பெயர்...பசுநா-விட்டில்-புக்கு-ஆகூ ரு-கிலுகிலுப்பையின்பெயர் - டகன்றை-(க)ஒடையின்பெயர்...உலவை(க)
வாடாக்குறிஞ்சியின்பெயர்...குரவகம்(க) குறிஞ்சியின்பெயர்...கோரண்டம்(க)பேரீத்தின்பெயர்...கர்ச்சூரம்(க) கோட்டத்தின்பெயர்...குரவம் (க) மழைவண்ணக்குறிஞ்சியின்பெயர்...பாணம்(க)நாயுருவியின்பெயர்...கரமஞ்சரி (க)

முல்லையின்பெயர்...தளவு-மாலதி-மௌவல்-ஊசிகை ஆகூ சு
களாவின்பெயர்...களவு(க)கருங்காலின்பெயர்-கதிரம் (க)
விளாவின்பெயர்...விளவு-கபித்தம்-வெள்ளில்-ஆகூ ரு வெண்கடுகின்பெயர்...கடிப்பகை-ஐயவி-சித்தார்த்தம் ஆகூ ரு

மருதமரத்தின்பெயர்...பூதவம்-அருச்சுனம் ஆகூ உ
வேங்கைமரத்தின்பெயர்...கணி-பிரசாரம்-திமிசு ஆகூ ரு
முந்திரிகையின்பெயர்...மதுரசம்-கோத்தனிகை ஆகூ உ
அதிமதுரத்தின்பெயர்...அட்டி-மதுகம்-அதிங்கம் ஆகூ ரு

செங்காந்தளின்பெயர்...காந்தள்-இலாங்கலி-தோன்றி ஆகூ ரு
வெண்காந்தளின்பெயர்...காந்துகம்-கோடல்-கோடை ஆகூ ரு
புனமுருக்கின்பெயர்...பலாசு(க)வன்னியின்பெயர்...சமி (க)
நுணாவின்பெயர்...தணக்கு (க)

குருந்தமரத்தின்பெயர்...குந்தம்(க)குமிழியின்பெயர்...கூம்பல்(க)குன்றியின்பெயர்...குஞ்சம்(க)கடம்பின்பெயர்...இந்துளம்-மரா-கதம்பம்-நீபம்-ஆகூ சு- வெண்ணொச்சியின்பெயர்...சிந்துவாரம்-நிர்க்குண்டி-ஆகூ உ- சத்திக்கொடியின்பெயர்...தாடிமஞ்சம்(க)

அரிதகிபத்தியங்கள்கடுவேயாமலகநெல்லி *
கருதியதான்றிதானேகலித்துருமந்தானாகும் *
பரவுமாகதிகாமன்றிப்பலியென்பகலினிப்பே *
ருருள்ரிசிப்பேர்கொத்துமலியெனவுரைக்கலாமே (௨௬)

கன்னிகாக்கணமிரண்டுங்கருவிளைகிகிணியும்பேர் *
முன்னமேதுரிஞ்சிலின்பேர்மொழிந்தசீக்கிரியுமாகு *
மன்னியவாடாதோடைவாசையென்றறையலாமே *
பன்னல்கார்ப்பாசமின்னபருத்தியின்பெருத்தநாமம் (௨௭)

இத்தியேசுவியிரத்தியிரத்திரியிறலியாகுஞ் *
சித்திரமேயேரண்டஞ்சிறந்தவாமணக்கினாமம் *
வைத்திடுமிருப்பைதானேமதுகமாங்குலிகமும்பேர் *
கைத்தகோடரமேகாளங்காஞ்சிரைமுட்டியெட்டி (௨௮)

செங்கருங்காலிநாமஞ்சிறுமாரோடந்தானாகுந் *
தங்கியசாலஞ்சுள்ளிமராமரமாவேயாச்சா *
பொங்கர்சான்மலியினோடுபூரணியிலவமும்பே *
வங்கமேவழுதலைப்பேர்வழுதுணையென்றுமாமே (௨௯)

கழலினுமங்கர்ச்சூரங்கழற்காயேகழங்குமற்று *
முழலுமாங்கற்றாழைப்பேர்முதிர்விலாக்குமரிகன்னி *
யிலழவுறுபுலிதொடக்கியிண்டுவாமீகையீங்கை *
புலிஞையேசிறுபூளைப்பேருன்மத்தமூமத்தைப்பேர் (௩௰)

அச்சமேமுனிகரீரமகத்தியாமெருக்கருக்கம் *
பச்சிலைமரந்தமாலம்பசும்பிடியென்றும்பேரோ *
சுச்சுவேசுண்டியென்பசமங்கையேவறட்சுண்டிப்பேர் *
வச்சிராங்கங்கண்டீர்வம்வச்சிரஞ்சதுரக்கள்ளி (௩௧)

பல்லிணர்க்குளவிதானேமலைப்பச்சைபலினிஞாழல் *
சில்லியேமேகநாதஞ்சாகினிசிறுகீரைப்பேர் *
சொல்லியசகுடஞ்சம்பாஞ்சூழ்ந்தநாளிகமேவள்ளை *
நல்லநந்தைப்பேர்கொத்தானறுவிலியலியென்றாமே (௩௨)

கடுமரத்தின்பெயர்—அரிதகி - பத்தியம் - ஆகஉ- நெல்லியின் பெயர்—ஆமலகம் (க) தான்றியின் பெயர்—கலித்துருமம் (க)
திப்பிலியின்பெயர்—மாகதி-சாமன்-கலினி ஆகரு
சொத்தமலியின்பெயர்—உருளரிசி (க)

கருவிளையின்பெயர்—கன்னி-காக்கணம்-கிகிணி ஆகரு
துரிஞ்சிலின்பெயர்—முன்னம்-சீக்கிரி ஆகஉ
ஆடாதோடையின்பெயர்—வாசை (க)
பருத்தியின்பெயர்—பன்னல்-கார்ப்பாசம் ஆகஉ

இத்தியின்பெயர்—சுவி-இரத்தி-இரத்திரி-இறலி ஆகச
ஆமணக்கின்பெயர்—சித்திரம்-ஏரண்டம் ஆகஉ
இருப்பையின்பெயர்—மதுகம்-குலிகம்-ஆகஉ-எட்டியின் பெயர்—கோடரம்-காளம்-காஞ்சிரை- முட்டி ஆகச

செங்கருங்காலியின்பெயர்—சிறுமாரோடம் (க) ஆச்சாமரத்தின் பெயர்—சாலம் சுள்ளி-மராமரம்-ஆ ஆகச.
இலவமரத்தின்பெயர்—பொங்கர்-சான்மலி-பூரணி ஆகரு
வழுதலையின்பெயர்—வங்கம்-வழுதுணை ஆகஉ

கழற்கொடியின்பெயர்—கர்ச்சூரம்(க)கழற்காயின்பெயர்—கழங்குமுழல்-ஆகஉ - கற்றாழையின்பெயர்—குமரி-கன்னி-ஆகஉ-புலிதொடக்கயின்பெயர்—இண்டு க)ஈகையின்பெயர்—ஈங்கை (க) சிறுபூளையின்பெயர்—உழிஞை(க) ஊமத்தையின்பெயர்—உன்மத்தம் (க)
அகத்தியின்பெயர்—அச்சம்-முனி-கரீரம்-ஆகரு-எருக்கின்பெயர்—அருக்கம் (க) பச்சிலைமரத்தின்பெயர்—தமாலம்-பசும்பிடி-ஆகஉ-சுண்டியின்பெயர்—சுச்சு (க)வறட்சுண்டியின்பெயர்—சமங்கை (க) சதுரக்கள்ளியின்பெயர்—வச்சிராங்கம் - கண்டீரவம்-வச்சிரம் ஆகரு
மலைப்பச்சையின்பெயர்—சூளவி (க) ஞாழலின்பெயர்—பலினி (க)சிறுகீரையின்பெயர்—சில்லி-மேகநாதம் சாகினி ஆகரு
சேம்பின்பெயர்—சகுடம்(க)வள்ளையின்பெயர்—நாளிகம் (க)
கொத்தான்பெயர்—நந்தை(க)நறுவிலியின்பெயர்—அலி (க)

திரிபுரிசாறடைப்பேர்சிறந்தகூதளங்கூதாளி *
விரவியவுருவாரந்தான்வெள்ளரிவிளங்குநாமங் *
கருதுகக்கரிவாலுங்கிகண்டேரிகாஞ்சொறிப்பேர் *
பரவுடஞ்சிகமேதாளியகன்றையாஞ்சிவேளைதானே (௫௩)

ஏலமாந்துடியேயாடாஞ்சியிரண்டுமேயிசங்கினுக்குக் *
கோலுமுத்தாபலம்பேர்குண்டலியென்றுமாகுங் *
கூலமேகாரவல்லிகூறியபாகலின்பேர் *
பூளையின்பேர்சிவந்திசிவணியென்றும்பன்னும் (௫௪)

விம்பமேதொண்டைகொவ்வைபசிரிபாவிரிதுரோணந் *
தும்பையேயலாபுமற்றைச்சுரைநூழில்கொடிக்கொத்தானுங் *
கொம்பர்சேர்முருங்கையேசிக்குருவடகிலைக்கறிப்பேர் *
பம்பியபீரம்பீர்க்காம்படலிகைபெரும்பீர்க்காமே (௫௫)

பரவுபாற்சொற்றிநாமம்பாயசமென்றுகூறும் *
விரவியவமுதவல்லிமேயசீவந்திசீந்தி *
மருவியவிலதைவள்ளிவல்லிவண்கொடிமுப்பேராஞ் *
சரமொடுகாசைதானேசாற்றிடுநாணலின்பேர் (௫௬)

நறியதாம்பூலவல்லிதாம்பூலிநாகவல்லி *
செறிதருமிலைக்கொடிப்பேர்திரையன்மெல்லிலையுமாகுங் *
கறியொடுமரீசங்காயங்கலினம்காளகந்திரங்கல் *
செறிதருமிளகுமமிரியலுஞ்செப்பலாமே (௫௭)

வரிசொல்லுவிரீகிசாலிவளர்நெல்லாம்யவமுமாகுந் *
தெரியுநன்னெல்லிஞேடுசெஞ்சாலிசெந்நெல்லின்பேர் *
பரியும்பைங்கூழ்பசும்புல்பயிர்கதிர்குரலோடேனல் *
பெருகியவிளஞ்சூல்பீட்டைபீளிளங்கதிரின்பேரே (௫௮)

பழுதறுபதரின்பேரேபதடியாம்போரேசும்மை *
பொழியத்தூற்றுதநெல்லின்பொலியேபொங்கழியென்றாகுந் *
தழுவுகோதுமையேகோதிதண்டுலமரிசிதானே *
வழுதுவைபலாலம்வைக்கோன்மலைநெல்லைவனமேவைக்கும் (௫௯

சாறடையின்பெயர்—திரிபுரி(க) கூதாளியின்பெயர்—கூதளம்-(க)வெள்ளரியின்பெயர்—உருவாரம் (க)நக்கரியின்பெயர் — வாலுங்கி (க)காஞ்சொறியின்பெயர்—கண்டூதி(க)தாளியின்பெயர்--மஞ்சிகம் (க)சிவேதையின்பெயர்-பகன்றை (க)

ஏலத்தின்பெயர்—துடி-ஆஞ்சி ஆகஉ- இசங்கின்பெயர்—முத்தாபலம்-குண்டலி-ஆகஉ-பாகலின்பெயர்—கூலம் - காரவல்லி-ஆகஉ-பாலைமரத்தின்பெயர்—சீவந்தி-சீவனி ஆகஉ

கொவ்வையின்பெயர்--விம்பம்-தொண்டை-ஆகஉ-பசிரியின்பெயர் — பாவிரி(க)தும்பையின்பெயர்—துரோணம் (க) சுரையின்பெயர்—அலாபு(க)கொடிக்கொத்தான்பெயர்— நூழில்(க) முருங்கையின்பெயர்—சிக்குரு(க) இலைக் கறியின்பெயர்—அடகு (க) பீர்க்கின்பெயர்—பீரம்(க)பெருப்பீர்க்கின்பெயர்— படலிகை (க)

பாற்சொற்றியின்பெயர்—பாயசம் (க) சீந்திக்கொடியின்பெயர்—அமுதவல்லி-சீவந்தி ஆகஉ-கொடியின்பெயர்—இலதை-வள்ளி-வல்லி-ஆகரு-நாணலின்பெயர்—சரம்-காசை ஆகஉ

இலைக்கொடியின்பெயர்—தாம்பூலவல்லி-தாம்பூலி- நாகவல்லி-திரையல்-மெல்லிலை-ஆகரு-மிளகின்பெயர்—கறி-மரீசம்- காயம் கலினை-கோளகம்-திரங்கல்-மிரியல் ஆகஎ

நெல்லின்பெயர்—வரி-சொல்-விரீகி சாலி-யவம்-ஆகரு - செந்நெல்லின்பெயர்—நன்னெல்-செஞ்சாலி ஆகஉ - பயிரின்பெயர்—பைங்கூழ்-பசும்புல்-ஆகஉ கதிரின்பெயர்---சூரல் - ஏனல்-ஆகஉ இளஞ்சூலின்பெயர்—பீட்டை (க) இளங்கதிரின்பெயர்—பீள் (க)

பதரின்பெயர்---பதடி(க)நெற்போரின்பெயர்---சும்மை (க) தூற்றுதநெற்பொலியின்பெயர்—பொங்கழி (க)கோதுமையின் பெயர்—கோதி(க)அரிசியின்பெயர்—தண்டுலம் (க) வைக்கோலின் பெயர்—வழுதூ-வைவ பலாலம்-ஆகரு-மலைநெல்லின்பெயர்— ஐவனம்(க)

தந்தவேயரிசிதோரைகுளநெல்லுத்தானீவாரஞ் *
செந்திணைசவலைகம்பாந் திணையின்பேரேனலென்ப *
பைந்திணைதானுமேனல்பகர்ந்திடுங்கருந்திணைப்பே *
ரந்தமாமிறடிகங்கே யருவியுமிருவியுந்தாள் (௪௰)

துவரையாடகமேயாமஞ் சூரமேகடலையின்பே *
ரவரைசிக்கடியேசிம்பையமுந்தியவுழுந்துமாடங் *
கவர்தருமயறுமுற்கங்காணமேகுலுத்தங்கொள்ளா *
மிவையெலாமுதிரைகூல மிதைகாராமணியிறுமம் (௪௧)

நண்ணியசொன்னல்சோளநாட்டியவிறுங்குமாமே *
யெண்ணெடுதிலமுநூவ மெட்கவ்வையிளங்காயின்பேர் *
பண்ணியங்குமிகைதானே பயனுறுமிளையெள்ளாகு *
மண்ணியவரகிறுமமருவுகோத்திரவமாமே (௪௨)

குசையொடுசுமுதங்கூர்ச்சங்குசந்தர்ப்பையென்றுகூறும் *
பசையறுபதமேதூர்வை பச்சறுகிளம்புல்சட்ப *
நிசியரிசனமேபீத நிகரில்காஞ்சனியேமஞ்ச *
ணசையுறுமிஞ்சியல்லநறுமருப்பென்றுமாமே (௪௩)

கருணையிறுமங்கந்தஞ்சூரணமென்றுங்காட்டுந் *
தருவகலியம்விருக்கந்தாவரம்விடபிதாருத் *
துருமமேகுசமென்றெட்டுஞ்சொல்லியமரப்பொதுப்பேர் *
பரவுபூருகமேசாகிபாதவமென்றும்பன்னும் (௪௪)

மூலமேசகுனங்கந்தமூலகங்கிழங்கிறுமங் *
காலொடங்குரமுளைப்பேர்கருதுதார்சிவைபேவேராங் *
கோலியம்விடபங்கொம்பர்கோடரம்பொங்கர்சாகை *
பாலமர்கவடுதாருப்பணைசினையுலவைகொம்பாம் (௪௫)

கலையொடாசினியேசேகுகாழ்ப்புக்காழ்வயிரமாகுந் *
தலைமடை-தகடுபன்னஞ்சதனம்பத்திரம்பலாச *
மிலைதமாலமுமாமற்றுமிதிற்றழையுலவையென்ப *
புலனுறுகுழலிபிள்ளைபோதகம்போத்துக்கன்றும் (௪௬)

வெயரிசியின்பெயர்—தோரை(க) குளநெல்லின்பெயர்—நீவார
ம்(க)கம்பின்பெயர்—செந்தினை-கவலை-ஆ-உ- தினையின்பெய
ர்—ஏனல்(க)பைந்தினையின்பெயர்—ஏனல் (க) கருந்தினையின்
பெயர்—இறடி-கங்கு-ஆ-உ தினைத்தாளின்பெயர்—அருவி- இ
'[ருவி-ஆ-உ

துவரையின்பெயர்—ஆடகம்(க)கடலையின்பெயர்— மஞ்சுரம்-
(க)அவரையின்பெயர்—சிக்கடி-சிம்பை ஆ-உ- உழுந்தின்பெய
ர்—மாடம்(க)பயற்றின்பெயர்—முற்கம்(க)கொள்ளின்பெயர்—
காணம்-குலுத்தம்-ஆ-உ-துவரைகடலைமுதலிய வற்றின்பெயர்—
முதிரை(க)காராமணியின்பெயர்-கூலம்-இதை ஆ-உ

சோளத்தின்பெயர்—சொன்னல்-இறுங்கு-ஆ-உ எள்ளின்பெய
ர்—எண்-திலம்-நூ-ஆ-ங-எள்ளிளங்காயின்பெயர்— கவ்வை (க)
இளையெள்ளின்பெயர்—குமிலை(க)வரகின்பெயர்-கோத்திரவம்
(க)

தர்ப்பையின்பெயர்—குசை-குமுதம்-கூர்ச்சம்-குசம்-ஆ-ச-அ
றுகின்பெயர்—பதம்-தூர்வை-ஆ-உ-இளம்புல்லின்பெயர்—ச
ட்பம்(க)மஞ்சளின்பெயர்-நிசி-அரிசனம்-பீதம்-காஞ்சனி-ஆ-ச
இஞ்சியின்பெயர்-அல்லம்-நறுமருப்பு ஆ-உ

கருணைக்கிழங்கின்பெயர்—கந்தம்-சூரணம்-ஆ-உ- மரப்பொது
வின்பெயர்—தரு-அகலியம் விருக்கம்-தாவரம்-விடவி-தாரு-து
ருமம்-குசம்-பூருகம்-சாகி-பாதவம் ஆ-யக

கிழங்கின்பெயர்—மூலம்-சகுனம்-கந்தம்-மூலகம்-ஆ-ச- முளை
யின்பெயர்—கால்-அங்குரம்-ஆ-உ - வேரின்பெயர்—தூர்-சி
வை-ஆ-உ-மரக்கொம்பின்பெயர்—கோல்-இடம் விடபம் கொ
ம்பர் கோடரம்-கொம்பர்-சாகை-கவடு-தாரு-பணை-சினை-உலவை-
ஆ-யஉ

மரவைரத்தின்பெயர்—கலை-ஆசினி சேகு-காழ்ப்பு-காழ் ஆ-ரு
இலையின்பெயர்—தலம்-அடை-தகடு-பன்னம்-சதனம்-பத்திரம்-
பலாசம்-தமாலம்-ஆ-அ-தழையின்பெயர்—உலவை(க) மரக்கன்
றின்பெயர்—குழவி-பிள்ளை-போதகம்-போத்து ஆ-ச

மெல்லியவிளங்கொம்பின்பேர்மேவியகவரோகப்பாம் *
வல்லரிகிசலயம்பூமஞ்சரிமுறியலங்கல் *
பல்லவங்குழைதளிப்பேர்பகர்குருத்தேமுருந்து *
சொல்லுங்காற்குழைத்தலோடேயிலிர்த்தலுந் தளிர்த்தலின்பேர் (௪௭)

முகைநனைகலிகைபோகின்முகுளமேமொக்குண்மொட்டு *
மகிழ்வுறுகோரகங்கண்மற்றைச்சாலகமரும்பாந் *
தகைபெறுகுசுமம்போதுதாரலர்சுமனசந்தான் *
மிகுமணமலரோதாமம்வீயிணர்துணர்பூவின்பேர் (௪௮)

தொத்துமஞ்சரியினோடுதுணரிணர்குலையைந்துப்பூங் *
கொத்தின்பேர்மகரஞ்செய்யகொங்கும்கேசரம்பூந்தாதாம் *
வைத்திடுதுணருமாகுமகரந்தம்பூந்தேனென்ப *
வைத்தெழுந்தாதிற்றூளேபராகமாம்பிரசமும்பேர் (௪௯)

அலர்தலேயவிழ்தல்விள்ளன்மலர்தலாநெகிழ்தலும்பே *
ரிலகியவிரிமலர்ப்பேரிகமலர்வெதிர்தொடப்பூப் *
பலமறுசாம்பல்செம்மல்பழம்பூவாந்தேம்பலும்பேர் *
புலனுறுமேடுதோடுதளமடல்பூவிதழ்ப்பேர் (௫௰)

அல்லியேயகவிதழ்பேரறைந்திடும்புறவிதழ்ப்பேர் *
புல்லியேவடுவும்பிஞ்சும்போற்றுந்தீவிளியுங்காயாம் *
பல்லியற்கவிஞர்சொற்றபழங்கனிபலமுமாகு *
மெல்லியபரலுங்காழும்பீசமும்விதைவித்தும்பேர் (௫௧)

குலைகுச்சந்தாறுசாறுகுடும்பொடுபடுவுங்கொத்தா *
மலரவகேசிதானேவருபலமிலாமரப்பேர் *
பலினங்காய்த்திருந்ததாருப்பகருலர்மரமேவானம் *
புலர்விலாக்கொளிவானபத்தியம்பூவாக்காய்க்கும் (௫௨)

இந்தனமுருடுகட்டையிடுகறல்சமிதைகாட்டம் *
வெந்திடுஞெகிழியேழும்விறகென்பமுளரியும்பேர் *
வந்தகோடரம்பொதும்பர்மரச்செறிவாகும்பொந்து *
மூந்தும்பர்பொள்ளலாகுமுட்கடுகண்டகம்மே (௫௩)

இளங்கொம்பின்பெயர்—கவர்-கப்பு-ஆ௨- தளிரின்பெயர்—வ
ல்லரி-கிசலயம் - மஞ்சரி முறி-அலங்கல்-பல்லவம்-குழை-ஆ௭-
குருத்தின்பெயர்-முருந்து (௧) தளிர்த்தலின்பெயர்—குழைத்த
ல்-இலிர்த்தல் ஆ௨

அரும்பின்பெயர்—முகை-நனை - கலிகை - போகில் - முகுளம்-
மொக்குள் - மொட்டு - கோரகம் - சாலகம்-ஆ௯ - பூவின்பெ
யர்—குசுமம்-போது-தார்-அலர் - சுமனசம்- மலர் - தாமம்-வீ-
இணர்-துணர் ஆ௰

பூங்கொத்தின்பெயர்—தொத்து-மஞ்சரி - துணர்-இணர் - குலை
ஆ௫ - பூந்தாதின்பெயர்—மகரம்-கொங்கு -கேசரம் - துணர்-
ஆ௪-பூந்தேனின்பெயர்—மகரந்தம் (௧)
தாதிற்றூளின்பெயர்—பராகம்-பிரசம் ஆ௨

மலர்தலின்பெயர்—அலர்தல்-அவிழ்தல்-விள்ளல் - நெகிழ்தல்-
ஆ௪-விரிமலரின்பெயர்—இகமலர்-வெதிர்-தொடர்ப்பூ-ஆ௩-
பழம்பூவின்பெயர்—சாம்பல்-செம்மல்-தேம்பல்-ஆ௩- பூவித
ழின்பெயர்—ஏடு-தோடு-தளம்-மடல் ஆ௪

அகவிதழின்பெயர்—அல்லி (௧) புறவிதழின்பெயர்—புல்லி(௧)
காயின்பெயர்—வடு-பிஞ்சு-தீவிளி ஆ௩
பழத்தின்பெயர்—கனி-பலம்- ஆ௨
விதையின்பெயர்—பரல்-காழ்-பீசம்-வித்து ஆ௪

கொத்தின்பெயர்—குலை-குச்சம்-தாறு-சாறு-குடும்பு-படு-ஆ௬
பலமிலாமரத்தின்பெயர்—அவகேசி (௧) காய்த்திருந்தமரத்தின்
பெயர்—பலினம் (௧) உலர்ந்தமரத்தின்பெயர்-வானம் (௧)
பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்—கோளி-வானபத்தியம் ஆ௨

விறகின்பெயர்—இந்தனம்-முருடு-கட்டை-கறல்-சமிதை-காட்ட
ம்-ஞெகிழி-முளரி-ஆக-௮ - மரச்செறிவின்பெயர்—கோடரம்-
பொதும்பர்-ஆ௨-மரப்பொந்தின்பெயர்—பொள்ளல் (௧) மு
ள்ளின்பெயர்—கடு-கண்டகம் ஆ௨

நுடவைநந்தனவனம்பூந்தோட்டமேயரியுய்யானங் *
கடிபொழிலுத்தியானங்காமரச்செறிவாராம *
நெடியதண்டலையினோடுநீளுபவனமேசோலை *
வடிவுடையூர்சூழ்சோலைவனமெனவைக்கலாமே (௫௪)

அடவிகான்புறவம்பொச்சையாரணியங்காந்தாரங் *
கடம்வனமுளரிதில்லங்கக்கனங்கண்டகமேதாவம் *
விடர்சுரம்பழுவங்காணன்மேவியகட்சிகானங் *
கடறுகானனமேயத்தங்களரிகாடிருபான்முப்பேர் (௫௫)

நீளறதருதூறுகுன்மநீள்பஞ்சிவிடபமும்பே *
ரறலிறல்பதுக்கைமுப்பேரறியலாஞ்சிறியதூறு *
குறியகாடிறும்பென்றுகுங்கூறியபெருங்கான்வல்லை *
மறையரணிளையிரண்டும்வைத்தகாவற்காட்டின்பேர் (௫௬)

முதையதேயிலையுதிர்ந்தமுதிர்காட்டினாமமாகும் *
பொதிகரிகாடுபொச்சைபொருந்துமேயிளைம்வலிப்பே *
ரதிமற்றகங்காழ்த்திட்டதாண்மரம்புறக்காழ்பெண்ணாம் *
விதியுளிவ்விரண்டுமில்லாவெளிறலியாகுமென்ப (௫௭)

புண்டரீகத்தினோடம்போருகங்குசேசயம்பூ *
முண்டகமரவிந்தம்மேமுளரிபங்கயம்வாரீச *
மிண்டயம்புயஞ்சரோசமெழிற்சதபத்திரிசூழ்ந்து *
வண்டுளர்நளினங்கஞ்சம்வனசந்தாமரையினாமம் (௫௮)

சலசமேகமலமற்றுஞ்சார்ந்தகோகனதத்தோடு *
தலமனுந்திருமாலுந்திசரோருகம்பதுமமும்பேர் *
மலரின்பேரரும்புவாகுமற்றிராசீவமும்பேர் *
புலர்வில்பொன்னிறத்தகொட்டைபொருட்டேகன்னிகையுமாகு
[ம் (௫௯)

விரித்திடுஞ்சுருளினாமம்விசியொடுவிளையமாகு *
மருக்கிளர்தாமரைக்காய்வராடகமென்பநாலோ *
ரரத்தமுற்பலமேவாசமடர்ந்தசெங்குவளைகோலத் *
திருக்கிளர்கல்லாரங்கள்செங்கழுநீரின்பேரே (௬௰)

சோலையின்பெயர்—துடவை-நந்தனவனம்-பூந்தோட்டம்- அரி-உப்யானம்- பொழில்- உத்தியானம்-கா-மரச்செறிவு- ஆராமம்-தண்டலை-உபவனம் ஆ௰உ. ஊர்சூழ்சோலையின்பெயர்,--வனம் (க)

காட்டின்பெயர்—அடவி-கான்- புறவம்- பொச்சை-ஆரணியம்-காந்தாரம்-கடம்-வனம்-முளரி-தில்லம்- ககனம்-கண்டகம் தாவம்-விடர்-சுரம்-பழுவம்-கானல்-கட்சி கானம் கடறு - கானனம்- அத்தம்-களரி ஆ௨௩

பெருந்தூற்றின்பெயர்—குன்மம் பஞ்சி விடபம் ஆ௩
சிறுதூற்றின்பெயர்—அறல் இறல் பதுக்கை ஆ௩
குறுங்காட்டின்பெயர்— இறும்பு (க) பெருங்காட்டின்பெயர்—வல்லை (க) காவற்காட்டின்பெயர்—அரண்-இளை ஆ௨

முதிர்காட்டின்பெயர் — முதையல் (க) கரிகாட்டின்பெயர் —பொதி-பொச்சை- ஆ௨. வேலியின்பெயர்—இளை (க) ஆண்மரமென்பது* அகக்காழ் (க பெண்மரமென்பது § புறக்காழ் க) அலிமரமென்பது ‡ வெளிறு (க)

தாமரையின்பெயர்—புண்டரீகம்-அம்போருகம்- குசேசயம்-முண்டகம் அரவிந்தம்-முளரி-பங்கயம்- வாரிசம் இண்டை அம்புயம் சரோசம் சதபத்திரி நளினம்-கஞ்சம்-வனசம் (௰௫)

சலசம்- கமலம்- கோகனதம்- திருமாலுந்தி- சரோருகம் பதுமம் ௬ ஆ௨க. தாமரைமலரின்பெயர்—இறும்பு - இராசீவம் ஆ௨
தாமரைக்கொட்டையின்பெயர்—பொகுட்டு-கன்னிகை ஆ௨

தாமரைச்சுருளின்பெயர்—விசி- வளையம் ஆ௨. தாமரைக்காயின்பெயர்—வராடகம் (க) செங்கழுநீரின்பெயர்—அரத்தம்-உற்பலம்-செங்குவளை-கல்லாரம் ஆ௪

---

* ஆண்மரத்துக்குவன்மரமென்றும்பெயர். அவைகருங்காலிமுதலியன. § பெண்மரத்துக்குவன்புல்லென்றும்பெயர். அவை பனை-கமுகு - தேங்கு - மூங்கில். ‡ அலிமரம்-முருக்கும்-நாரும்-பாலுமுள்ள மரமுதலாயினவுமாம்.

சோலமார்பானல்காவிகுவலயமணத்தைமொண்டு *
ஞாலத்தேனுலவுகின்றகருங்குவளைக்குநாம *
நீலமிந்தீவரந்தானிகழ்கருநெய்தலென்ப *
கோலவுற்பலமுமாகுங்குமுதம்வெண்ணெய்தற்பேரே (௯௧)
செங்குமுதஞ்செவ்வல்லிசேதாம்பலரக்காம்பற்பேர் *
வெங்கள்ளுநாறுமல்லிகைரவம்வெள்ளாம்பற்பேர் *
தங்கியதிரள்கோரைப்பேர்சாய்பஞ்சாய்க்கோரையென்ப *
வங்குளசெருந்திதானேயடர்ந்தவாட்கோரையாமே (௯௨)
ஒள்ளியகண்டன்முள்ளியுரைத்தருண்டகமேயன்றி *
முள்ளுடைமூலம்யாவுமுண்டகமென்றேசாற்றுந் *
தள்ளியநாரம்பாசிசைவரஞ்சடைச்சியும்பேர் *
வள்ளியகல்லாரந்தான்மற்றைநீர்க்குளிரியாமே (௯௩)
வல்லியும்புல்லும்பூடுமரமுதன்மருந்தென்றுகுஞ் *
சல்லியசரணிகூர்வேறைத்தபுண்மாற்றுந்துண்டம் *
புல்லியசெய்வதானேசந்தானகரணிபோலு *
மெல்லியவிரணந்தீர்க்குஞ்சமனியகரணிவேறே (௯௪)
மறைவிலாமிருதசஞ்சீவனியுடனமுதிரண்டுங் *
குறைவறமூர்ச்சைதீர்த்தேகுற்றுயிதருமருந்தா *
முறையொடுகுளிபம்யோகமுறுமருந்தின்பொதுப்பே *
ரறையுங்காலந்தப்பேரோயதகமுமாகுமென்ப (௯௫)
அலங்கலேபிணையலாரஞ்சிகழிகையணிசுருக்கை *
யிலம்பகந்தெரியல்சுக்கையேற்றகத்திகையேதாமந் *
துலங்கியபடலைகண்ணிதொடைதொங்கலொலியல்கோதை *
மலர்ந்ததாரிவைமூவாறுமாலைமஞ்சரியுமப்பேர் (௯௬)
சூட்டுடனிலம்பகங்கள்சூழ்நுதலணியென்றுகுந் *
தீட்டுவாசிகையின்பேரோசிகழிகைபடலையென்ப *
வீட்டியகல்விகேள்வியிருங்குடிகொடைபடைக்குள் *
வாட்டமில்லவரைவென்றுமௌலிசூட்டுவதுவாகை (௯௭)
பரப்புநீருலகுதன்னிற்பாவலர்கிளைஞருற்ற *
நிரப்படுங்குணபத்திரன்றணித்தலும்போற்றிசெய்து *
விருப்புறுவிரதசீலன்வீரைமண்டலவன்செய்தான் *
மரப்பெயர்க்கறுப்பத்தெட்டுமன்னியகவிதைதானே (௯௮)

நான்காவது - மரப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக தொகுதி - ௪-க்கு-விருத்தம்-௯௫.

கருங்குவளையின்பெயர்—பானல்-காவி-குவலயம் ஆ௳௩
கருநெய்தலின்பெயர்—நீலம்-இந்தீவரம்-உற்பலம் ஆ௳௩
வெண்ணெய்தலின்பெயர்—குமுதம் (க)

அரக்காம்பலின்பெயர்—செங்குமுதம்-செவ்வல்லி-சேதாம்பல்-ஆ௳௩. வெள்ளாம்பலின்பெயர்—அல்லி-கைரவம் ஆ௳உ
திரள்கோரையின்பெயர்—சாய்-பஞ்சாய்க்கோரை ஆ௳உ
வாட்கோரையின்பெயர்—செருந்தி (க)

முள்ளியின்பெயர்—கண்டல்-முண்டகம் ஆ௳உ
முள்ளுடை-மூலமெல்லாவற்றிற்கும்பெயர்—முண்டகம் (க)
பாசியின்பெயர்—நாரம்-சைவலம்-சடைச்சி ஆ௳௩
நீர்க்குளிரின்பெயர்—கல்லாரம் (க)

மருந்தென்னும்பெயர்—வல்லி-புல்-பூடு மரமுதலிய- சல்லியகரணியென்பது—வேல்தைத்தபுண்மாற்றுவது- சந்தானகரணியென்பது—துண்டம்புல்லிடச்செய்வது- சமனியகரணியென்பது—இரணந்தீர்ப்பது (க)

மூர்ச்சைதீர்த்துக்குற்றுயிர்தருமருந்தின்பெயர்—மிருதசஞ்சீவனி அமுது ஆ௳உ- மருந்தின்பொதுப்பெயர்—உறை-குளியம்-யோகம்-அதகம் ஆ௳௪

மாலையின்பெயர்—அலங்கல் - பிணையல்-ஆரம்- சிகழிகை-அணி-சுருக்கை-இலம்பகம் - தெரியல் - சுக்கை- கத்திகை - தாமம் - படலை - கண்ணி - தொடை - தொங்கல் - ஒலியல் - கோதை- தார்-மஞ்சரி ஆ௳௰௯

நுதலணியின்பெயர்—சூட்டு-இலம்பகம் ஆ௳உ
வாசிகையின்பெயர்—சிகழிகை-படலை ஆ௳உ
வாகையாவது—கல்வி-கேள்வி-குடி-கொடி-படை *
கட்குள்வாட்டமில்லவனாவென்றுமௌலிசூட்டுவது *

உ

கடவுள் துணை.

# ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

## காப்பு.

கடலெழுமிரவிகோடிகால்சீத்துப்பொடித்ததென்ன *
மடலவிழ்கமலவூர்திவந்தவாமனையேபோற்றி *
யுடைவுளதிணைதேழுர்வானகம்புறமாதியாய *
விடனுடைத்தாகவைத்தவிடப்பெயர்த்தொகுதிசொல்வாம் (௧)

கேடிலாவபவருக்கங்கேவலத்தோடுசித்தி *
வீடுகைவல்லியம்மேமீளாதகதியேநூலோர் *
பாடுநிர்வாணத்தோடுபரகதிசிவமேமுத்தி *
நீடுமீனாந்துமொக்கமமுதமுநிகழ்த்தலாமே (௨)

உயர்நிலையுவணைபுத்தேளுலகுபொன்னுலகுதானம் *
வியனுலகந்துறக்கமேலுலகம்விமான *
நயனுறுசுவர்க்கங்கற்பநாகம்விண்ணுலகோடும்பர் *
செயமுறுதேவலோகஞ்சிறந்திடுமீரோழ்பேரோ (௩)

பரவியநாகலோகம்பவணமாஞ்சேடிசேணி *
விரவுவிஞ்சையரூர்மற்றும்வீழதோகதிபாதாள *
நிரயமேயளறேநதியேநீள்சுவப்பிரமேவபூழ *
ரைகிருள்பவர்க்கம்பத்துநரகமாம்பூதியும்பேர் (௪)

ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

காப்பு.

(இதன்பொருள்.)

கடல்-சமுத்திரத்தினின்றும், எழும்-எழுகின்ற, இரவிகோடி-கோடிசூரியர், கால்சீத்து-இருளைநீக்கி, பொடித்ததென்ன - உதித்தாற்போல, மடலவிழ்-இதழ்விரியப்பெற்ற, கமலவூர்தி-தாமரைமலராகியவாகனத்தின்மேல், வந்த-சென்ற, வாமனையே-அருகக்கடவுளையே, போற்றி-துதித்து, அடைவுள - முறைமையுள்ள, திணை-(ஐவகை)நிலங்களும், தேம்-தேசங்களும், ஊர்-ஊர்களும், வான்-வானமும், அகம்-உள்ளிடமும், புறம்-வெளியிடமும், ஆதியாய-முதலாகிய, இடம்-இடங்களின்பெயர்களை, உடைத்தாக-உடையதாக, வைத்த-வைக்கப்பட்ட, இடப்பெயர்த்தொகுதி- இடப்பெயர்த்தொகுதியை, சொல்வாம் (யாம்) கூறுவாம் - என்றவாறு. ❁ தாமரைமலரை, வாகனமாகக்கொண்டு - அதனையூர்ந்துசென்றனரென்று, சைனநூல்களிற்சொல்லப்படுதலின். கமலவூர்திவந்தவாமனெனக்கூறினர், அதுதிருநூற்றந்தாதி (௮௪) ம்-பாட்டு, (நாயகத்தேவர்தநம்முதற்றேவனை நாண்மலர்வான்மீயகத்தே வரமேற்கொள்ளுந் தேவனைமெய்யடியார் - வாயகத்தேவரும்வண்புகழ்த்தேவனைமாற்றிநெஞ்சே, நீயகத்தேவனையித்தனைநாளுநினைத்தனையே) இதனாலறிக *

மோக்கத்தின்பெயர்—அபவருக்கம்-கேவலம்-சித்தி-வீடு - கைவல்லியம்-மீளாதகதி-நிர்வாணம்-பரகதி - சிவம்-முத்தி - அமுதம்-
ஆக ௰௯

தேவலோகத்தின்பெயர்—உயர்நிலை-உவணை-புத்தேளுலகு- பொன்னுலகு-தானம்-வியனுலகம்-துறக்கம்-மேலுலகம் - விமானம்-சுவர்க்கம்-கற்பம்-நாகம்-விண்ணுலகு-உம்பர் ஆக ௰௪

நாகலோகத்தின்பெயர்—பவனம்(௧) விஞ்சையரூரின்பெயர்-சேடி-சேணை ஆக ௨-நரகத்தின்பெயர்—அதோகதி-பாதாளம் நிரயம் அளறு-தீ-சுவப்பிரம்-ஊழல்-நரகு-இருள்- பவர்க்கம்-பூதி ஆக ௰

அரிதமாதிரம்விசும்போடம்பரமுலகுகாட்டை *
கருதியதிசையோடாசைககுபமுந்திசையுந்திக்காம் *
பெருகுபூருவங்குணக்கேபிராசியிந்திரிகிழக்காந் *
தெரியும்யாமியமவாசிதக்கணஞ்சிவேலைதெற்கே (௫)

குடக்குவாருணமேமேக்குக்குறுத்தபச்சிமமேமேற்கா *
நடத்தியபிரத்தியக்குமற்றதன்பேரேநாட்டும் *
வடக்குதக்குதீசியென்பமற்றையுத்தரமுமாகும் *
விடப்படாத்திணைபேமாம்வவேலிபூதிலநாற்பேரே (௬)

அவனிகாசினிசகத்தோடகலிடமகிலம்பாரி *
குவலயம்விபுலைமற்றைக்கோத்திராகோவேகுவ்வே *
புவனிமண்டலந்தலம்பூப்பொழிலவசுந்தரையுடன்பார் *
பவனந்தாரணியிம்ருப்படிபுவிதரணிவையம் (௭)

தாலமேயசலைமேநமிவசுமதிதலாதரித்திரி *
ஞாலந்தாத்திரியளக்கர்நாடுபூதலங்கிடக்கை *
பாலமேபூஜியங்கள்பார்த்திவம்பொறையனந்தை *
வேலைசூழ்மகியாறேழும்மதினியுலகுப்பூமி (௮)

பாடிமண்டலமேசும்மைபைதிரமுலகுதேய *
நீடியவகலுளேணிநீவரங்கோட்டங்கண்டம் *
பீடுறுசனபதங்கள்பெரும்பொழிலிவைபன்மூன்று *
நாடுதண்ணடையுமாகுமழுவமுநாட்டுமப்பேர் (௯)

விலங்கலேபொறைவேதண்டம்விண்டுமாதிரமேவெற்புச் *
சிலம்புகோத்திரமடுக்கல்சிலோச்சயஞ்சிமயம்பொங்கர் *
நலங்கொள்குத்திரம்பரம்புநகங்குறும்பொறையேநாக *
மிலங்கியவரையேபொச்சையிறும்புகல்லகமேயோங்கல் (௰)

பொருப்பொடுகுவடுக்கல்லுப்பொகுட்டோதிதிகிரிகுன்று *
பருப்பதஞ்சைலஞ்சாரல்பாதவம்பதலைகாணுப் *
பெருத்தபூதரமேசையம்பிறங்கலத்திரியேமலி *
புருத்திகழ்கிரிமலைப்பேரொன்றடனெண்ணைந்தென்ப (௰௧)

திக்கின்பெயர்—அரிதம்-மாதிரம்-விசும்பு-அம்பரம் உலகு-காட்டை-திசை-ஆசை-ககுபம்-திகை-ஆ ௰. கிழக்கின்பெயர்—பூருவம்-குணக்கு-பிராசி-இந்திரி-ஆ ௪. தெற்கின்பெயர்—யாமியம்-அவாசி-தக்கணம்-சிவேதை ஆ ௪.

மேற்கின்பெயர்—குடக்கு-வாருணம்-மேக்கு-பச்சிமம்-பிரத்தியக்கு-ஆ ௫. வடக்கின்பெயர்—உதக்கு-உதிசி-உத்தரம் ஆ ௩
நிலத்தின்பெயர்—திணை-மா-வேலி-பூ ஆ ௪

பூமியின்பெயர்—அவனி-காசினி-சகம்-அகலிடம்- அகிலம்-பாரி-குவலயம்-விபுலை-கோத்திரை-கோ-கு-புவனி-மண்டலம்-தலம்-பூ-பொழில்- வசுந்தரை- பார் -பவனம் -தாரணி -படி- புவி-தரணி-வையம் உ௪

தாலம்-அசலை-நேமி-வசுமதி-தரை-தரித்திரி-ஞாலம்-தாத்திரி-அளக்கர்-நாடு-பூதலம்-கிடக்கை-பாலம்-பூதியம்-பார்த்திவம்-பொறை-அனந்தை-மகி-மேதினி-உலகு (உ௰) ஆ ௪௪

நாட்டின்பெயர்—பாடி-மண்டலம்-சும்மை-டைதிரம்-உலகு-தேயம்-அகனுள்-ஏணி-நீவரம்-கோட்டம்-கண்டம்-சனபதம்-பொழில்-தண்ணடை-அழுவம் ஆ ௰௫

மலையின்பெயர்—விலங்கல்-பொறை-வேதண்டம்-விண்டு-மாதிரம்-வெற்பு-சிலம்பு-கோத்திரம்-அடுக்கல் - சிலோச்சயம்- சிமயம்-பொங்கர்- குத்திரம்-பறம்பு- நகம்- குறும்பொறை-நாகம்-வரை-பொச்சை-இறும்பு-கல்லகம்-ஓங்கல் (உஉ)

பொருப்பு-குவடு-கல்-பொகுட்டு-ஒதி-கிரி-குன்று-பருப்பதம்-சைலம்-சாரல்-பாதவம்-பூதலை-தாணு-பூதரம்-சையம் - பிரங்கல்-அத்திரி-மேலி-கிரி (௰௯) ஆ ௪௧

புடைபடுமிரும்புகுன்றுபொற்றையேசிறுமலைப்பேர் *
படுகுறும்பொறையுமற்றைப்பதலையுமதன்பேர்வாரந் *
தடமொடுசாரல்சானுதருமலைப்பக்கங்கோடு *
கொடுமுடிசிகரங்கூடங்குவடிவைமலையினுச்சி (௰௨)

நிலைபெறும்பொன்மலைப்பேர்நீள்பரிசன்னியமேரு *
விலையில்வெண்மலைவேதண்டம்விசயார்த்தம்வெள்ளிவெற்பா *
மலயந்தென்மலையேதென்றல்வருமலைசிமயநான்கும் *
புலமைசேர்கும்பயோனிபொதியமாமலையினாமம் (௰௩)

பொறைதுறுகல்லென்றுகும்புகலுங்கற்பாழிகாண்டை *
முறைமையாம்விவரத்தோடுமுடுக்கர்கந்தரமுழைப்பே *
ரறைமுரஞ்சாம்பிலங்கிழறையென்பகுகைநிகுஞ்சம் *
சிறுகியதிடர்பதுக்கைதிட்டையுமிட்டநாமம் (௰௪)

சிலையொடுகன்னேசையஞ்சிராவணமுபலங்கல்லா *
முலமென்பதிரண்டகற்பேருறும்பரல்பருக்கையென்ப *
துலைபெறுதிடறுதிட்டைசுவன்மெட்டுக்குவாலேகுப்பை *
குலவியதிடரோமேடுகுவையென்றுமிவையேகூறும் (௰௫)

பரவைதெண்டிரையேசிந்துபௌவமேபாராவார *
நரலையார்கலியேயுந்திநதிபதியம்புராசி *
குரவையேசக்கரங்கார்கோள்வேலாவலயமுந்நீ *
ரரிமகராலயந்நீராழியம்பரமேவேலை (௰௬)

வாரிதியளக்கர்நீண்டவாரியேயுததியோதம் *
வீரையன்னவமேபத்திவெள்ளஞ்சாகரமேயாழி *
சாறுருசலதியுப்புச்சலநிதிசமுத்திரஞ்சூழ் *
வாரணமிவையாறுறுமறிகடலுவரியும்பேர் (௰௭)

பாரியபாராவாரம்பகர்வேலைகடற்கரைப்பே *
ராறுஞ்சீகரங்கல்லோலமற்றரங்கந்திரைப்பேர் *
வாரமேபாரங்கோடுவரையணைதடமேகூலந் *
தீரமேநீர்க்கரைப்பேர்செறிவார்ப்பிற்கும்பேரே (௰௮)

சிறுமலையின்பெயர்—இறும்பு-குன்று-பொற்றை-குறும்பொறை-பதலை ஆ௳ ௫ மலைப்பக்கத்தின்பெயர்-வாரம்-தடம்-சாரல்-சாணு-ஆ௳ ௪-மலையினுச்சியின்பெயர்—கோடு-கொடுமுடி-சிகரம்-கூடம்-குவடு ஆ௳ ௫

பொன்மலையின்பெயர்—பரிசன்னியம்-மேரு ஆ௳ ௨
வெள்ளிமலையின்பெயர்—வெண்மலை-வேதண்டம்-விசயார்த்தம்-ஆ௳ ௩ பொதியமலையின்பெயர்—மலயம்-தென்மலை-தென்றல்-வருமலை-சிமயம் ஆ௳ ௪

குறுகல்லின்பெயர்—பொறை(௧)கற்பாழி❀யின்பெயர்—காண்டை(௧)மலைமுழையின்பெயர்—விவரம்-முடுக்கர்-கந்தரம்-ஆ௳ ௩-அறை*யின்பெயர்—முரஞ்சு(௧ கிழறையின்பெயர்—பிலம்(௧)குகையின்பெயர்—நிகுஞ்சம்(௧) சிறுதிடரின்பெயர்—பதுக்கை-திட்டை ஆ௳ ௨

கல்லின்பெயர்—சிலை-கன்-சையம்-சிராவணம்-உபலம் ஆ௳ ௫
திரண்டகல்லின்பெயர்—உலம்(௧) பருக்கைக்கல்லின்பெயர்—பரல்(௧)மேட்டின்பெயர்—திடறு-திட்டை-சுவல்-மெட்டு-குவால்-குப்பை-திடர்-குவை ஆ௳ ௮

கடலின்பெயர்—பரவை-தெண்டிரை-சிந்து-பௌவம்-பாராவாரம்-நரலை-ஆர்கலி-உந்தி-நதிபதி-அம்புராசி-குரவை-சக்கரம்-கார்கோள்-வேலாவலயம்-முந்நீர்-அரி-மகராலயம்-நீராழி-அம்பரம்-
[வேலை (௨௰)
வாரிதி-அளக்கர்-வாரி-உததி-ஓதம்-வீரை-அன்னவம்-அத்தி-வெள்ளம்-சாகரம்-ஆழி-சலதி-உப்பு-சலநிதி சமுத்திரம்-வாரணம்-உவரி (௰௭) ஆ௳ ௩௰௭

கடற்கரையின்பெயர்—பாராவாரம்-வேலை-ஆ௳ ௨-திரையின்பெயர்—சீகரம்-கல்லோலம்-அறல்-தரங்கம்-ஆ௳ ௪-நீர்க்கரையின்பெயர்—வாரம்-பாரம்-கோடு-வரை-அணை-தடம்-கூலம்-தீரம் ஆ௳ ௮
இவைவரம்பிற்கும்பெயர்— ❀

❀ கற்பாழி-கற்புழை*அறை-பாறை.

அருவியேகழிமுகம்பேராருவிப்பேருவண்டயாகு ✻
மருவியேமலையின்சார்லாற்றமிதானமென்ப ✻
வுண்டசெயிலுவர்நீர்தானேயுறையென்பகுரம்புதான்செய் ✻
கணையின்பேர்குலைடுஞ்சேதுங்காட்டுபமீட்டதற்கே (௰௯)

உந்தியேதுறையேமற்றையொலியலேகுடிஞையேர்ணஞ் ✻
சிந்துவேநதியேவீசுந்திரைவருபுனலேயாறுங் ✻
கந்தமார்சலுழிமுல்லைக்கான்யாறுங்கழிமுகப்பேர் ✻
முந்தியகயவாயென்பபுகாரதோமுகமுமாமே (௨௰)

கழியின்பேர்முரம்புகாயல்கானலுப்பளமென்றாகுங் ✻
கழிநிலமுப்பளப்பேர்காட்டுமுப்பளமேகாய ✻
லழிவிலாவுவளகத்தோடளக்கராம்புளினமென்ப ✻
வொழிவிலாமணற்குன்றின்பேருவர்த்தரைபிருண்மாமே (௨௧)

பொன்னிகாவிரியிரண்டும்பொருந்துகாவேரியின்பேர் ✻
பன்னியபொருனையின்பேர்பகர்ந்ததண்பொருந்தந்தானே ✻
கன்னியேகுமரியென்பகௌதமையின்பேர்கோதை ✻
பின்னியவிருத்தகங்கைவிமலிகோதாவரிப்பேர் (௨௨)

படுகரோதாங்கல்கேணிபல்லவம்படுவேபட்ட ✻
மடுவுவளக்மேபண்ணைவாவியேசுனையேவட்டந் ✻
தடமொடுகயம்பயம்பூந்தடாகமேகுளமேகுட்ட ✻
மடைவுளகிடங்குசூழியலந்தையேகுண்டம்பங்கம் (௨௩)

இலஞ்சிகோட்டகமேபொய்கையேல்வையேயோடையேரி ✻
நிலந்தனிற்குளிர்ந்தநீர்நிலையாறைத்தொன்று நீங்கத் ✻
தலந்தனிற்றெளிந்தநீராச்சசற்சலமென்றிசைப்ப ✻
ரிலங்கையேதுருத்தியாற்றினிடைக்குறையரங்கமும்பேர் (௨௪)

நுரைமொக்குள்பௌவத்தோடுமெநாவ்வுயபுற்புதங்கள் ✻
குரைகொணீக்குமிழியைந்தாங்கொப்புளும்பேர்தாமே ✻
நுரையின்பேர்பேனமாகுநொய்யநீர்ச்சுழியேயுந்தி ✻
பிரளயம்வாரிநீத்தம்பெருக்கோதம்வெள்ளமென்ப (௨௫)

அருவியின்பெயர்—கருமுகம் (க) பேரருவியின்பெயர்—உவந்தை (க) மலைச்சாரலாற்றின்பெயர்—அருவி (க) உவர்நீரின்பெயர்—உறை(க)செய்கரையின்பெயர்—குரம்பு-குலை-சேது ஆ௳ ௩.

யாற்றின்பெயர்—உந்தி-துறை-ஒலியல்-குடிஞை-ஓணம்-சிந்து-நதி-வருபுனல் ஆ௳ அ
முல்லைக்கான்யாற்றின்பெயர்---கலுழி (க)
கழிமுகத்தின்பெயர்—கயவாய்-புகார்-அதோமுகம் ஆ௳ ௩

கழியின்பெயர்—முரம்பு-காயல்-கானல்-உப்பளம் ஆ௳ ௪
கழிநிலம் உப்பளப்பெயர்களைக்காட்டும்-உப்பளத்தின்பெயர்—காயல்-உவளகம்-அளக்கர்-ஆ௳ ௩-மணற்குன்றின்பெயர்—புளினம் (க) உவர்த்தரையின்பெயர்—இருணம் (க)

காவேரியின்பெயர்—பொன்னி -காவிரி-ஆ௳ உ-பொருநை*யின் பெயர்—பொருந்தம் (க) கன்னியின்பெயர்---குமரி (க)
கௌதமையின்பெயர்—கோதை (க) கோதாவரியின்பெயர் விருத்தகங்கை-விமலை ஆ௳ உ

நீர்நிலையின்பெயர்—படுகர்-தாங்கல்-கேணி-பல்லவம்-படு-பட்டம்-மடு-உவளகம்-பண்ணை-வாவி-சுனை-வட்டம்-தடம்-கயம்-பயம்-தடாகம்-குளம்-குட்டம்-கிடங்கு-சூழி-அலந்தை-குண்டம்-பங்கம் (உ௩)

இலஞ்சி-கோட்டகம் பொய்கை-ஏல்வை-ஓடை-ஏரி (௬)
ஆ௳ உ௯-தெளிந்தநீரின்பெயர்—சத்சலம் (க) யாற்றிடைக்குறையின்பெயர்—இலங்கை-துருத்தி-அரங்கம் ஆ௳ ௩

நீர்க்குமிழியின்பெயர்—நுரை - மொக்குள்-பௌவம்-புற்புதம்-கொப்புள் ஆ௳ ௫-நுரையின்பெயர்—பேனம் (க) நீர்ச்சுழியின் பெயர்-உந்தி (க) வெள்ளத்தின்பெயர்—பிரளயம்-வாரி-நீத்தம்-பெருக்கு-ஓதம் ஆ௳ ௫

*பொருநை-தாமிரபர்ணிநதி.

மண்டியநிறைபுனற்பேர்வழாஅறொடுபிராறுமாகு *
மிண்டியவகாதநீர்தும்வெம்புனலென்றநூலோர் *
கண்டிடுங்கலங்கனீரேகலுழியாவிலமுமாகுங் *
குண்டமூழ்ந்தொடுகயங்கள்கூறுகம்பீரமாழம் (௨௬)

கோலமேபெருகுகின்றகொழுந்துநீரோட்டமென்ப *
கோலியகிணறுகூபங்கூவலேபசும்புங்கூறு *
மேலிடாதஃகிழூறும்வெம்புனலூறவியூற்று *
யோலமிட்டேரிலுள்ளாருண்பதூருணியென்றோதும் (௨௭)

அள்ளல்சேதகமேதோணிபளறுடனளக்கர்தொய்யில் *
கொள்ளமேசெதும்புபங்கங்குழையொடுசுழம்புகாலாழ் *
தெள்ளியவசறுசெய்யலீரேழுஞ்சேறுஞ்சேற்றிற் *
புள்ளியேகுமிழ்பொகுட்டாநொதியருவருத்தசேறு (௨௮)

பரவுசாட்டுவலமென்பபசும்புல்லுத்தனையின்பேரே *
விரவியசாம்புபாழாம்வானுகம்வெண்மணற்பேர் *
மருவியதவரிலேடையிருநுண்மணலாமாற்றிற் *
கரைதனிற்கொழித்தநுண்மைக்கருமணலறலென்றோதும் (௨௯)

கோடுசூழ்மலையின்சாரல்குறிஞ்சியாம்வனச்சார்முல்லை *
நாடுசார்மருதமாகுநற்கடற்சார்வுநெய்த *
வீடியகொடுங்கோன்மன்னர்நெடுங்குடைக்கீழ்வாழ்கின்ற *
பாடிலாக்குடிகள்போலப்படுநிலம்பாலையாமே (௩௰)

பழனமேசெறுவரம்புள்பணைபானல்கைதைபண்ணை *
கழனியேயாலவாலங்காட்டியதடிபுலஞ்செய் *
விழைவுறுவயலேமாவேவிளைநிலமீரேழ்பேராங் *
குழைவுறுபாத்தியோடுகுண்டிலுஞ்சிறுசெய்கூறும் (௩௧)

செந்நெலேவிளைவதானசிறப்புடைநிலஞ்சாலேய *
மின்னதென்றுமையுண்டாமுருவரையென்பதானே *
மன்னியவகணிபானல்வயலபணைமருதநாற்ப *
ரந்நிலவரம்புதானேகுரம்பதனருகுகங்கு (௩௨)

நிறைபுனலின்பெயர்—வழாறு-பிராறு - ஆ௨ - நீந்துபுனலின்
பெயர்—அகாதம்- (௧) கலங்கனீரின்பெயர்—கலுழி - ஆவிலம்-
ஆ௨-ஆழத்தின்பெயர்—குண்டு-அழுந்து - கயம் - கம்பீரம்-
[ஆ௪

நீரோட்டத்தின்பெயர்—கோலம் (௧)
கிணற்றின்பெயர்—கூபம்-கூவல்-அசும்பு ஆ௩
ஊறுபுனலின்பெயர்—உறவி-ஊற்று ஆ௨
ஊரிலுள்ளாருண்ணு நீரின்பெயர்—ஊருணி (௧)

சேற்றின்பெயர்—அள்ளல்-சேதகம்-தோணி- அளறு - அளக்கர்-
தொய்யில்-கொள்ளம்-செதும்பு-பங்கம்-குழை-குழம்பு-காலாழ்-
அசறு-செய்யல் ஆ௰௪ சேற்றிற்புள்ளின்பெயர்-குமிழ்-பொகு
ட்டு- ஆ௨-அருவருத்தசேற்றின்பெயர்—நொதி (௧)

பசும்புல்லுத்தரையின்பெயர்—சாட்டுவலம் (௧) பாழ்நிலத்தின்
பெயர்—கரம்பு (௧) வெண்மணலின்பெயர்-வாலுகம் (௧)
நுண்மணலின்பெயர்—அதர்-அயிர் ஆ௨
கருமணலின்பெயர்-அறல் (௧)

மலைசார்ந்தநிலம்-குறிஞ்சி,வனஞ்சார்ந்தநிலம்-முல்லை, நாடுசார்ந்
தநிலம்-மருதம்,கடல்சார்ந்தநிலம்-நெய்தல், கொடுங்கோன்-மன்
னர்குடைக்கீழ்வாழ்கின்றகுடிகள்போலப்படுநிலம்-பாலை- *

விளைநிலத்தின்பெயர்—பழனம்-செறு- வரம்புள்-பணை-பானல்-
கைதை-பண்ணை-கழனி ஆலவாலம்-தடி - புலம்-செய்-வயல்-மா-
ஆ௰௪-சிறுசெய்யின்பெயர்—பாத்தி-குண்டில் ஆ௨

செந்நெல்விளைநிலத்தின்பெயர்—சாலேயம் (௧) அனைத்துமுண்
டாகுநிலத்தின்பெயர்—உருவரை (௧) மருதநிலத்தின்பெயர்—
அகணி-பானல்-வயல்-பணை- ஆ௪-அந்நிலவரம்பின்பெயர்—குர
ம்பு-(௧) வரம்பருகின்பெயர்—கங்கு (௧)

புறவொடுபுறம்பணைப்பேர்புணர்முல்லைகுறிஞ்சிக்கும்பேர் *
பறையும்வன்பால்குறிஞ்சிபாலையாமருதந்தானே *
நிறையுமென்பாலாம்வெற்பினீரினில்வெவ்வனத்திற் *
கறைபடுமிகுதிதானேகருநிலமாகுமென்ப (௩௩)

பாக்கமேயிருக்கைபாழிபட்டினம்பள்ளிகூட்டம் *
பூக்கஞ்சம்வாகநொச்சிபூரியம்பாடிபூண்டி *
மாக்கிளர்கோட்டம்வாழ்க்கைமடப்பமேகுடிகுடிக்கா *
டாக்கமாங்குறிச்சிகுப்பமருப்பமேநத்தஞ்சுழ்மை (௩௪)

அகர்மேபுரமேசேரியகலுள்வைப்புறையுள்வேலி *
நகரம்பக்கணங்கிராமநவில்கருவடங்குறும்பு *
நிகரில்வேசனமேதாமநிவேசனம்பதியேபேடு *
புகர்புரியெண்ணைந்தூர்நீர்பண்ணைகுழூர்கிராமம் (௩௫)

குடிநூறுபட்டவிருந்தாற்குறைவுளகிராமமூர்கு *
நெடியதுகுடியைஞ்ஞூறுநிறைந்ததுபெருங்கிராமம் *
வடிவுடையிராசதானிமணிமதிற்கோபுரங்கள் *
புடைபடுமகழாற்சூழ்ந்தபுரம்புரிநகரமும்பேர் (௩௬)

மலைசெறிவதுவேகேடமலையுடனாறுசூழ *
ரலைவருகருவடங்களைஞ்ஞூறுகிராமத்திற்கே *
தலைமைபெற்றதுமடப்பத்தாழ்கடற்றீரந்தன்னிற் *
பலபலதீவிற்பண்டம்பகர்வபட்டினமென்றாமே (௩௭)

மட்டறுநெல்லும்புல்லும்மத்தகந்தன்னிலேற்றுத் *
தட்டறுமலையினூரோசம்வாகமென்றுசாற்றுந் *
தொட்டகோணமுகந்தான்சூழ்கழியிருக்கையென்ப *
பட்டுநொச்சியுமேசிற்றூர்பள்ளியுமதன்பேர்மன்னும் (௩௮)

குறிச்சிசிற்றூரோசீறூர்குறிஞ்சிநன்னிலத்தூர்ப்பேராம் *
பறித்திடுமுல்லையூரோபாடிபட்டினமேநெய்தல் *
குறித்தெழுகுறும்பரூரேகுறும்புபாலைக்கேகூறும் *
பறித்தபாசறையேதெவ்வார்முனைப்பதிபாடிவீடு (௩௯)

முல்லைக்குங்குறிஞ்சிக்கும்பெயர்---புறவு-புறம்பணை ஆ௨
வன்பாலெலன்பது-குறிஞ்சியும்பாலையும் ✻
மென்பாலென்பது ❁ மருதம்-கருநிலமென்பது-வெற்பினும்- நீ
ரினும்-வனத்தினும்-கறைபடுமிகுதி ✻

ஊரின்பெயர்—பாக்கம்-இருக்கை-பாழி-பட்டினம்-பள்ளி- மூ
ட்டம்-பூக்கம் -சம்வாகம்-நொச்சி-பூரியம்-பாடி-பூண்டி- கோட்ட
ம்-வாழ்க்கை-மடப்பம்-குடி-குடிக்காடு-குறிச்சி-குப்பம்- அருப்
பம்-நத்தம்-சும்மை (௨௨)

அகரம்-புரம்-சேரி-அகனுள்-வைப்பு-உறையுள்-வேலி-நகரம்- பக்
கணம்-கிராமம்-கருவடம்-குறும்பு-மிவசனம்-தாமம் -நிவேசனம்-
பதி-பேடு-புரி(௰அ) ஆ௪௰
நீரும்வயலுஞ்சூழ்ந்தவூர்-கிராமம் ✻

சிறுகிராமமென்பது-நூறுகுடிநிறைந்தவூர் ✻
பெருங்கிராமமென்பது-ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூர் ✻
இராசதானியின்பெயர்—புரம்-புரி-நகரம் ஆ௩

மலைசெறிந்தவூரின்பெயர்—கேடம்(௧)மலையும்யாறுஞ்சூழ்ந்தவூ
ரின்பெயர்—கருமடம்(௧)ஐஞ்ஞூறுகிராமத்திற்குத்தலைமைபெற்
றகிராமத்தின்பெயர்—மடப்பம்(௧)கடற்கரையிற்பலபலதீவிற்ப
ண்டம்விற்குமூரின்பெயர்—பட்டினம் (௧)

நெல்லும்புல்லும்நிறைந்தமலையினூரின்பெயர்—சம்வாகம் (௧)
கோணமுகமென்பது-சூழ்கழியிருக்கை ✻
சிற்றூரின்பெயர்—பட்டு-நொச்சி-பள்ளி ஆ௩

குறிஞ்சிநிலத்தூரின்பெயர்—குறிச்சி-சிற்றூர்-சீறூர் ஆ௩
முல்லைநிலத்தூரின்பெயர்—பாடி (௧) நெய்தநிலத்தூரின்பெய
ர்—பட்டினம்(௧)பாலைநிலத்தூரின்பெயர்—குறும்பு (௧)
பாசறையின் ✻ பெயர்—தெவ்வர்முனைப்பதி-பாடிவீடு ஆ௨

---

❁ குறிஞ்சியும்-பாலையும்வன்பாலெனவும்-மருதம்-மென்பாலெ
னவுங்கூறவே-முல்லையுநெய்தலும் சமப்பாலென்பதுதானேபெ
றப்படுதலில்-சொல்லாதொழிந்தார்-அது-முல்லையுநெய்தலுமெ
ழிசமப்பாலே-என்னுந்-திவாகரச்சூத்திரத்தாலறிக.

✻ பாசறை-பகைமேற்செல்வோருறைவிடம்.

புரிகுடநகரம்பூக்கம்புரங்குடிநிகாயம்பள்ளி *
சரணமாவாசம்பாக்கந்தாவளநியமந்தாமம் *
பரவியநிலயங்கோட்டம்பதிவாழ்க்கைசேர்வுபாழி *
மருதநன்னிலத்தூரீரைந்திரட்டியாம்வசதியும்பேர் (௪௰)

காழகங்கடாரமென்பகாசியேவாரணசி *
யீழமேசிங்களம்வீறெய்தியகருவூர்வஞ்சி *
கோழியேயுறையூர்மாரன்கூடலேமதுரையாகுந் *
தாழ்விலாகாஞ்சிகச்சிசாற்றிடிவலந்தியுஞ்சை (௪௧)

மிதிலையேவிதேகையாங்காவிரிப்பூம்பட்டினம்புகாராம் *
விதமுறுவினிதைகோலமிக்ககோசலைசாகேத *
நிதிவளரயோத்திநாமநிமலமாம்புலியூர்தில்லை *
கதிதருசிதம்பரப்பேர்கமலையேதிருவாரூராம் (௪௨)

பெருகிபகடங்காப்புப்பிராகாராநொச்சியாரல் *
புரிசைவேணகையேவாரிபுகழுளகமேயிஞ்சி *
யரணமேயெயிலேயோதையருஞ்சிறைவேதிசால *
மருவியவகப்பாவேலியறுமூன்றுமதிலினாமம் (௪௩)

பரிகமேகிடங்குகேணிபாம்புரியுடுவேயோடை *
விரவியவகழாறேபேர்மேவுமெந்திரமேகோச *
மருவியநாஞ்சிரோணிஞாயிலம்மதிலுறுப்பாம் *
பரிகமேயகப்பாவோடுபதணமுள்ளுயர்ந்தமேடை (௪௪)

விரிந்தகோபுரமேகோட்டிமிகுபுரவாயிலிற்பேர் *
பொருந்துமக்கதவில்விட்டுப்புகுவழிபுதவுதானே *
திருத்துமவ்வழிசார்திண்ணையளிந்தமாஞ்சிறந்தவாயில் *
பரந்திடும்படிச்சுருட்குப்பகாத்திநகமேநாமம் (௪௫)

கோதிலாவணமங்காடிகூலம்பீடிகையுமப்பேர் *
தீதில்லையாளிவீதிதிகழ்செண்டுவெளியேயென்ப *
சாதியாம்பரவிவட்டந்திருமுற்றந்தானுமப்பேர் *
வீதியின்பேரோஞெள்ளல்பூரியமாக்கள்வீதி (௪௬)

மருதநிலத்தூரின்பெயர்—புரி-குடம்-நகரம்- பூக்கம்-புரம்-குடி-நிகாயம்-பள்ளி-சரணம்-ஆவாசம்-பாக்கம்-தாவளம்-நியமம் -தாமம்-நிலயம்-கோட்டம் பதி-வாழ்க்கை-சேர்வு-பாழி-வசதி ஆ ௨௧.

கடாரமென்னுமூரின்பெயர் — காழகம் (௧) காசியின்பெயர்—வாரணாசி (௧) சிங்களத்தின்பெயர்—ஈழம்(௧) கருவூரின்பெயர்—வஞ்சி (௧) உறையூரின்பெயர்—கோழி (௧) மதுரையின்பெயர்—கூடல் (௧)காஞ்சியின்பெயர்—கச்சி (௧)அவந்திநகரின்பெயர்—உஞ்சை (௧)

மிதிலையின்பெயர்—விதேகை (௧) காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர்—புகார் (௧) அயோத்தியின்பெயர்—வினிதை- கோசலை- சாகேதம்- ஆ ௩. சிதம்பரத்தின்பெயர்—புலியூர்-தில்லை ஆ ௨ திருவாரூரின்பெயர்—கமலை (௧)

மதிலின்பெயர்—கடகம்-காப்பு- பிராகாரம்-நொச்சி - ஆரல்-புரிசை- வேணகை- வாரி- உவளகம்- இஞ்சி- அரணம்- எயில்- ஓதை-சிறை-வேதி-சாலம்-அகப்பா-வேலி ஆ ௰௮.

அகழின்பெயர்—பரிகம்- கிடங்கு- கேணி- பாம்புரி-உடு- ஓடை- ஆ ௬. மதிலுறுப்பின்பெயர்—எந்திரம்-கோசம்-நாஞ்சில்-தோணி-ஞாயில் - ஆ ௫. மதிலுள்ளுயர்ந்தமேடையின்பெயர்—பரிகம்-அகப்பா-பதணம் ஆ ௩

கோபுரவாயிலின்பெயர்—கோபுரம்-கோட்டி-ஆ ௨. கோபுரவாயிற்கதவில்விட்டுப்புகுவழியின்பெயர்—புதவு (௧) கோபுரவாயிற்றிண்ணையின்பெயர்—அளிந்தம் (௧) கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர்—அத்திணகம் (௧)

அங்காடி ※ யின்பெயர்—ஆவணம்-கூலம்-மிடிகை- ஆ ௩. குதிரைவையாளிவீதியின்பெயர்—செண்டுவெளி- பரவிவட்டம்-திருமுற்றம் ஆ ௩. வீதியின்பெயர்—ஞெள்ளல் (௧) அரசர்வீதியின்பெயர்—பூரியம் (௧)

※ அங்காடி-கடைவீதி.

நெடுந்தெருமன்றமார்க்கநியமமிம்மூப்பேர்செப்பு *
மொடுங்கியகுறுந்தெருக்களோதியமறுகுதானே *
முடங்கியகோணந்தன்னைமுடுக்கெனலடுக்குமிப்பா *
லடங்கியமுச்சந்திப்பேரந்தியென்றறையலாமே (௪௭)

தக்கசந்தாஞ்சதுக்கந்தருஞ்சிருங்காடகந்தா, *
னொக்குநாற்சந்தியாகுமோதியசதுக்கமும்பேர் *
திக்குறும்வாடைசேடிசிரோணியாமாயர்வீதி *
மிக்கவாபீனமாமாவேசனம்சிற்பர்வீதி. (௪௮)

பற்றியவேடர்வீதிபக்கணமாகுமென்ப *
மற்றையம்பலமேமன்றம்பொதிபொதுச்சபையுமாகுந் *
தெற்றியம்பலந்தானென்றேசித்திரகூடநாமம் *
வெற்றியத்தாணியோடுவேந்தவையரசிருக்கை. (௪௯)

சாலைமாளிகைகுலங்கள்சாற்றியபவனங்கோயின் *
மாலைவேலரசரிப்பேர்மந்திரநிலயங்கோட்ட *
மாலயஞ்சினகரஞ்சேதிமந்தளிதேவர்கோயில் *
சாலைமற்றறத்தின்சாலையறப்புறமோதும்பள்ளி. (௫௰)

மனைதருசமித்தமோமமண்டபமன்னன்றேவி *
புனையில்லங்கந்தவாரம்போற்றுமந்தப்புரப்பேர் *
மனையில்லம்புக்கின்மாடமந்திரம்வசதிவீடாம் *
புனைகலனிருக்கைதானேபோற்றியபண்டசாலை. (௫௧)

விரவினாவீட்டிறப்பேவளைவியுமாம்விடங்கந் *
தருமுகட்டின்பேர்வேயுள்வெய்தலாந்தகுமண்ணீடு *
மருவியவேயாமாடமங்கணமுன்றின்முற்றந் *
கருதுகல்விக்களப்பேர்கழகங்கல்லூரியாமே. (௫௨)

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களமரங்கமென்ப *
வாயிலேகடைதுவாரம்வாரியாஞ்சோபானமே *
தூயதாழ்வாரமென்பவங்கணந்தூம்புவாயா *
மாயபித்திகைசுவர்க்காமரமியநிலாமுற்றப்பேர். (௫௩)

நெடுந்தெருவின்பெயர்—மன்றம்- மார்க்கம்-நியமம் ஆ௳௩
குறுந்தெருவின்பெயர்—மறுகு (க)
கோணத்தெருவின்பெயர்—முடுக்கு (க)
முச்சந்தியின்பெயர்—அந்தி (க)

சந்தின்பெயர்—சதுக்கம் (க) நாற்சந்தியின்பெயர்—சிருங்காடகம்-சதுக்கம்-ஆ௳உ. சிரேணியின்பெயர்—வானட-சேடி- ஆ௳உ ஆயர்வீதியின்பெயர்—ஆபீனம் (க)சிற்பர்வீதியின்பெயர்—ஆவேசனம் (க)

வேடர்வீதியின்பெயர்—பக்கணம் (க) அம்பலத்தின்பெயர்—மன்றம்-பொதி-பொது-சபை ஆ௳௪
சித்திரகூடத்தின்பெயர்—தெற்றியம்பலம் (க)
அரசிருக்கையின்பெயர்—அத்தாணி-வேந்தவை ஆ௳உ

அரசரில்லின்பெயர்—சாலை- மாளிகை-குலம்- பவனம்-கோயில்- ஆ௳௫. தேவர்கோயிலின்பெயர்—மந்திரம்- நிலயம்-கோட்டம்- ஆலயம்-சினகரம்-சேதிமம்-தளி-ஆ௳எ. சாலையின்பெயர்—அறச்சாலை (க) ஓதும்பள்ளியின்பெயர்—அறப்புறம் (க)

ஓமமண்டபத்தின்பெயர்—சமித்தம் (க) மன்னன்றேவி புனையிலத்தின்பெயர்—கந்தவாரம்-அந்தப்புரம்ஆ௳உ. வீட்டின்பெயர்—மனை-இல்லறம்-புக்கில்-மாடம்-மந்திரம்-வசதி ஆ௳௬
பண்டசாலையின்பெயர்—புனைகலனிருக்கை (க)

வீட்டிறப்பின்பெயர்—இறை-வளைவி ஆ௳உ. முகட்டின்பெயர்—விடங்கம்(க)வேயுளின்*பெயர்—வேய்தல் (க) வேயாமாடத்தின்பெயர்—மண்ணீடு(க)முற்றத்தின்பெயர்—அங்கணம் - முன்றில்ஆ௳உ. கல்விபயில்களத்தின்பெயர்—கழகம்-கல்லூரி ஆ௳உ

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களத்தின்பெயர்—அரங்கம்(க) வாயிலின்பெயர்—கடை-துவாரம்-வாரி-ஆ௳௩. தாழ்வாரத்தின்பெயர்—சோபானம்(க)தூம்புவாயின்§பெயர்—அங்கணம் (க) சுவரின்பெயர்—பித்திகை(க)நிலாமுற்றத்தின்பெயர்—அரமியம் (க)

* வேயுள்-வேய்ந்தமாடம். § தூம்புவாய்-சலதாரை.

ஆலயமோளிவாரியானையின்கூடமாமே *
சாலைமந்திரமிரண்டும்வாசியின்பந்திதானே *
சாலகஞ்சாளகம்வாதாயனக்குறுங்கண்சாலந் *
காலதாபல்கணிப்பேர்கரந்தகற்படைசுருங்கை (௫௪)

குட்டிமம்படுத்தபூமிகுறடுவேதிகைமண்ணீடு *
திட்டையேதிண்ணைசிற்றில்கூரையாங்குடில்குரம்பை *
தட்டுருவடிச்சேரிப்பேர்தானடிக்குடிலென்றுமே *
யட்டிலேபாகசாலையடுக்களையடைப்பள்ளிப்பேர் (௫௫)

காழுறுகூழுதஞ்சுல்லிகாமரமடுப்புமுப்பேர் *
தாழுமுத்தானமும்பேர்தடவொடுவேள்விக்குண்டம் *
வேள்வியேயோமகுண்டநித்தமும்வேதியும்பேர் *
பாழிதாபதங்கரண்டைபள்ளியேமுனிவர்வாசம் (௫௬)

மஞ்செனப்புகைசூழ்சுள்ளைமட்கலஞ்சுடுசூளைப்பேர் *
பஞ்சரம்பண்ணுங்கூடாம்பகர்குலாயனமுமப்பேர் *
குஞ்சுறைகட்சிகூண்டுகுடம்பையேகூட்டின்பேராம் *
விஞ்சுநென்முதலாம்பண்டம்வீழ்குதிர்புகலென்றோதும் (௫௭)

சட்டகம்பாயல்பள்ளிசயனமேபுறையுள்பாழி *
கட்சியேயமளிசேக்கைகண்படைமனிதர்பாலாம் *
பட்டமேபோத்துச்சேக்கைபண்ணையும்விலங்கின்பாலா *
மிட்டசேவகமேதண்டம்யானையின்றுயிலிடப்பேர் (௫௮)

சுடுகாடுபுறங்காட்டோடுதொடர்காளவனப்பிணக்கா *
டிடுகாடுபிதிர்வனத்தோடூமமேவனமயானம் *
படுகாடுசுடுநிலங்கள்பன்னொன்றுஞ்சுடலையின்பேர் *
கடிதாஞ்செம்புப்பிணம்வீழ்களம்பறந்தலையுமாமே (௫௯)

வெற்றிகொள்களரியேயாகவபூமிவிளாகமேமொய் *
செற்றிடும்போர்க்களம்வெஞ்செருக்களம்பொருகளப்பேர் *
புற்றுவன்மீகமென்பபகுமோதுக்கிடமேதுச்சி *
ஒற்றவேதிடமேகாந்தமொருவந்தமென்றும்பேரோ (௬௰)

யானைக்கூட்டத்தின்பெயர்---ஆலயம்-ஒளி-வாரி ஆ௩. குதிரைப் பந்தியின்பெயர்---சாலை-மந்திரம்-ஆ௨. பல்கணியின்பெயர்---சாலகம்-சாளரம்-வாதாயனம்-குறுங்கண்-சாலம்-காலதர்- ஆ௬ கற்படை * யின்பெயர்---சுருங்கை. (௧)

கற்படுத்தநிலத்தின்பெயர்---குட்டிமம்(௧) திண்ணையின்பெயர்---குறடு-வேதிகை-மண்ணீடு-திட்டை ஆ௪. சிற்றின்பெயர்---கூரை (௧)குடிலின்பெயர்---குரம்பை(௧)அடிக்குடிலின்பெயர்--- அடிச்சேரி(௧)மடைப்பள்ளியின்பெயர்---அட்டில்-பாகசாலை-அடுக்களை-ஆ௪

அடுப்பின்பெயர்---குமுதம்-சுல்லி-காமரம்-உத்தானம் ஆ௪ ஓமகுண்டத்தின்பெயர்---தடவு-வேள்விக்குண்டம்-வேள்வி - நித்தம்-வேதி-ஆ௫. முனிவர்வாசத்தின்பெயர்--- பாழி - தாபதம்-கரண்டை-பள்ளி ஆ௪

மட்கலஞ்சுடுசூளையின்பெயர்-- சுள்ளை(௧)பண்ணுங்கூட்டின்பெயர்---பஞ்சரம்-குலாயனம்ஆ௨. கூட்டின்பெயர்---கட்சி-கூண்டு-குடம்பை ஆ௩. குதிரின் § பெயர்---புகல் (௧)

மனிதர் துயிலிடத்தின்பெயர்---சட்டகம்-பாயல்-பள்ளி-சயனம்-உறையுள்-பாழி-கட்சி அமளி-சேக்கை கண்படை ஆ௰. விலங்கு துயிலிடத்தின்பெயர்---மட்டம்-போத்து-சேக்கை- பண்ணை ஆ௪. யானைத்துயிலிடத்தின்பெயர்---சேவகம்-தண்டம் ஆ௨

சுடலையின்பெயர்---சுடுகாடு-புறங்காடு-காளவனம்-பிணக்காடு- இடுகாடு-பிதிர்வனம்-ஈமம்-வனம்-மயானம்-படுகாடு-சுடுநிலம் ஆ௰௧ பிணம்வீழ்களத்தின்பெயர்---செம்புலம்-பறந்தலை ஆ௨

பொருகளத்தின்பெயர்---களரி-ஆகவபூமி-விளாகம்-மொய் போர்க்களம்-செருக்களம்-ஆ௬. புற்றின்பெயர்---வன்மீகம் (௧)
ஒதுக்கிடத்தின்பெயர்--- துச்சில் (௧)
ஏகாந்தத்தின்பெயர்---வேறிடம்-ஒருவந்தம் ஆ௨

* கற்படை-கோட்டையிற்கள்ளவழி. § குதிர்-நெல்முதலியவைக்குங்குதிர்.

இழிவுகீழ்பய்ம்புதாழ்வேயேற்றிடும்படிகேர்ஞெள்ளல் *
குழியுவளகங்கிழக்குக்கூறவல்பள்ளம்பத்தாம் *
பழைபதாங்கொல்லைப்பேரோபகர்முதைப்புனமாமென்ப *
விழைவுறுபுதியகொல்லையிதைப்புனமுழவுதொய்யில் (சூக)

வதிசுரம்வட்டைநீண்டவகுந்தொடுவயவைவாரி *
யதர்நெறிசெலவுதாரியயனமேயிடவைமார்க்கம் *
பதமைமேயயத்தஞ்செப்பம்பட்டமேயியவைபாதை *
யுதவியசரியேதாரையொழுக்கமேநடவையாறு (சூஉ)

தெருவகிர்கிறிமூவொன்பான்செப்பியவழியின்பேரே *
யருநெறிப்பேர்சுரத்தோடத்தமுங்கடமுமாகுங் *
கருதியகவலைதானேகவர்ந்திடுவழிப்பேரென்ப *
பெருமதயானைசெல்லும்பிறவழிதண்டமாமே (சூ௩)

சிறுவழிவிடங்கராகுஞ்சிறந்தகற்படியினுமை *
மறுவில்சோபானம்மியாரோகணந்தானுமற்று *
நெறிபடுமளக்கரொன்பநீள்வழிநாமந்தானே *
யுறுதியாம்புதுவரம்பினுறுவழிமரிசியென்ப (சூச)

இடையுழிவழிநிலம்பாலில்லுழையுளிகண்பக்கம் *
புடைதலைமுதல்வளாகம்புலம்வலஞ்சூழல்பாங்கர் *
கடைவயின்பட்டிவைப்புக்கால்களந்தேயம்பாடே *
யிடமென்பமுன்பின்சார்வாய்கீழ்மேலுமதுவேயென்ப (சூ௫)

பாங்கர்பாரிசமருங்குபால்புடைபுறமேபக்க *
ஞாங்கருஞ்சிறையுமாடுநாட்டுபவதுவேமீட்டு *
நாங்கிளர்நள்ளுநாப்புணனந்தலைபிரமமைய *
மாங்குறுமத்தியமத்தோடாகுநாநடுவேழ்பேரே (சூசா)

ஈண்டேயிவ்விடமென்பேராமிம்பரோயிவணெனுஞ்சொல் *
யாண்டேயெவ் விடமென்பேராம் யாங்கெனப வெவணெனுஞ் [சொல்
லாண்டேயவ்விடமென்பேர்தானுகுங்கூப்பிடுகுரோசந்
காண்டும்யோசனைபுகைப்பேர்காவதங்காதமாமே (சூஎ)

பள்ளத்தின்பெயர்--இழிவு-கீழ்-பயம்பு-தாழ்வு-படுகர்-ஞெள்ளல் குழி-உவளகம்-கிழக்கு-அவல். ஆ ய. பழங்கொல்லையின்பெயர்--- முதைப்புனம் (க) புதுக்கொல்லையின்பெயர்---இதைப்புனம் (க) உழவின்பெயர்---தொய்யில் (க)

வழியின்பெயர்---வழி-சுரம்-வட்டை-வகுந்து-வபவை-வாரி-அதர்-நெறி-செலவு-தாரி-அயனம்-இடவை-மார்க்கம்- பதவை- அத்தம்-செப்பம்-பட்டம்- இயவை- பாலதை-சரி-தாரை-ஒழுக்கம்-நடவை-ஆறு (உச)

தெரு-வகிர்-கிறி (௩) ஆ உஎ
அருநெறியின்பெயர்---சுரம்-அத்தம்-கடம் ஆ ௩
கவர்வழியின்பெயர்---கவலை (க)
யானைசெல்லும்வழியின்பெயர்---தண்டம் (க)

சிறுவழியின்பெயர்--- விடங்கர் (க)
கற்படியின்பெயர்---சோபானம்-ஆரோகணம் ஆ உ
நீள்வழியின்பெயர்---அளக்கர் (க)
புதுவரம்பின்வழியின்பெயர்---மரிசி (க)

இடத்தின்பெயர்---இடை- உழி- வழி- நிலம்- பால்- இல்- உழை-உளி- கண்- பக்கம்- புடை- தலை- முதல்- வளாகம் - புலம் - எல்-சூழல்-பாங்கர்-கடை-வயின்-பட்டி- வைப்பு-கால்- களம்-தேயம்-பாடு-முன்-பின்-சார்-வாய்-கீழ்-மேல் ஆ ௩உ

பக்கத்தின்பெயர்---பாங்கர்-பாரிசம்-மருங்கு-பால்- புடை-புறம்-ஞாங்கர்-சிறை-மாடு ஆ கூ
நடுவின்பெயர்---நள்-நாப்பண்-நனந்தலை-பிரமம்-மையம்- மத்தியம்-நா ஆ எ

இவ்விடத்தின்பெயர்---ஈண்டு (க) இம்பரென்பது-இவண் (க)எவ்விடத்தின் பெயர் — யாண்டு(க) யாங்கென்பது--- எவண் (க) அவ்விடத்தின்பெயர்---ஆண்டு (க) கூப்பிடுதூரத்தின் பெயர்---குரோசம் (க) யோசனைதூரத்தின்பெயர்---புகை (க) காதத்தின் பெயர்---காவதம் (க)

முன்றெனுமேலுமற்றுமொழியுமஞ்ஞாங்கர்தானே *
முன்னரோதலத்தாளாகுமுதலொடுபுரமுமப்பே *
ரன்றிவ்விடப்பேர்க்கெட்டோடறுபதுவிருத்தஞ்செய்தான் *
மன்னுசீர்க்குணபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றானே (௬௮)

ஐந்தாவது - இடப்பெயர்த்தொகுதி
முற்றிற்று.
ஆக தொகுதி-௫-க்கு-விருத்தம்-௬௱௨௨.

௳.
சிவமயம்.

ஆறாவது
## பல்பொருட்
# பெயர்த்தொகுதி.

## காப்பு.

உலகெலாமிறைஞ்சியேத்தவுலகெலாமுணர்ந்தமூர்த்தி *
யலகிலாஞானவாரியாறிருகணங்களோடு *
மிலகுமூவெயிலுள்யாளியெழிலணையிருந்தோன்பாதம் *
பலமுறைவணங்கியேத்திப்பல்பொருட்பெயருஞ்சொல்வாம் (௧)

மாசைபீதகமேபீதமாடையேமாடுவேங்கை *
யாசையேசுவணங்காரமருத்தங்காஞ்சனமேகாணந் *
தேசிகங்கனகங்கைத்துச்செந்தாதுபொலமேயத்தம் *
பேசியசாமிவித்தம்பெருந்தனமுடலேபண்டம் (௨)

இரணியநிதிவெறுக்கைபீகைகல்யாணமேமம் *
பொருளுணாசத்திரஞ்சாம்பூனதம்பூரிபீழந் *
திரவியஞ்சாதரூபஞ்செங்கொல்லுநிதானமாழை *
யரிதமனியமாறேழுஞ்செம்பொனுடகமுமாமே (௩)

ஞாங்கரொன்பது—முன்-மேனுக்கும்பெயர் *
முன்னரின்பெயர்—தலைத்தாள்-முதல்-புரம் ஆ௲௯

௨

# ஆறுவது

# பல்பொருட்பெயர்த்தொகுதி.

காப்பு.

(இதன்பொருள்.)

உலகெலாம்-உலகத்தவர்கள்யாவரும், இறைஞ்சி - வணங்கி, ஏத்த-துதிக்க, உலகெலாம் உலகமுழுதையும், உணர்ந்த அறிந்த, மூர்த்தி-கடவுளும், அலகிலா-அளவில்லாத, ஞானவாரி-ஞானக்கடலும், ஆறிருகணங்களோடும்-பன்னிரண்டுகணங்களோடும், இலகு விளங்குகின்ற, மூவெயிலுள் - மும்மதிலையுடையசமவசரணத்துனுள்ளே, எழில் - அழகினையுடைய, யாளியணை- சிங்காதனத்தில், இருந்தோன் - வீற்றிருந்தவரும் ஆகிய அருகக்கடவுளுடைய, பாதம்-பாதத்தை, பலமுறை-பலதரம், வணங்கி-வணங்கி, ஏத்தி - துதித்து, பல்பொருட்பெயரும் - பல்பொருட்பெயர்த் தொகுதியையும், சொல்வாம் (யாம்) கூறுவாம்—என்றவாறு. *

பொன்னின்பெயர்—மாசை-பீதகம்-பீதம்-மாடை-மாடு - வேங்கை-ஆசை-சுவணம்-காரம்-அருத்தம்-காஞ்சனம்-காணம்- தேசிகம்-கனகம்-கைத்து-செந்தாது-பொலம்-அத்தம் - சாமி- வித்தம்-தனம்-உடல்-பண்டம் (௨௯)

இரணியம்-நிதி - வெறுக்கை - ஈகை-கல்யாணம்-ஏமம்-பொருள்-உரை-சந்திரம்-சாம்பூனதம்-பூரி-ஈழம்-திரவியம்-சாதரூபம்-செங்கொல்-நிதானம்-மாழை-அரி-தமநியம்-ஆடகம்(௨௰) ஆ௲௪௯

## ஆறாவது-பல்பொருட்பெயர்த்தொகுதி.

எதிரில்பொன்வெள்ளிசெம்பீயமிரும்பியம்பஞ்சலோகம் ✻
பொதிகஞ்சந்தராவுங்கூட்டிப்புகன்றிடினேழுலோகங் ✻
கதிர்நவமணியின்பேருங்கடவுண்மாமணியின்பேரு ✻
நிதிநிதானங்களென்பநீண்டபொற்காசுகாணம் (௪)

கருதியமணிப்பொதுப்பேர்காசொடுமனவுமாகு ✻
மரதனஞ்சலாகைதெய்வவகன்மணிப்பொதுப்பேர்தானே ✻
மருவுசெம்மணியேமற்றைமாமணிமாணிக்கப்பேர் ✻
பரவியபதுமராகங்கௌத்துவமென்றுபன்னும் (௫)

வனைவறுவாலவாயம்வைடூரியத்திருமை ✻
நிறைபெறுமணியெனும்பேர்நீலமாமணியின்பேரோ ✻
மரகதமரிமம்பச்சைவச்சிரம்வைசமாரந் ✻
தரளநித்திலமேமுத்துமௌத்திகந்தானுமப்பேர் (௬)

துப்புடன்றுவரரத்தந்துகிர்பிரவாளமந்த ✻
மெய்ப்படுபவளமென்பவித்துருமந்தானும்பேர் ✻
கைப்படுதகணிமாழைநாட்டும்வங்காரமுப்பே ✻
ரொப்பமேயுருக்கிக்கூட்டுமுலோகத்தின்கட்டியாமே (௭)

சங்கநீணிதியத்தோடுதாமரைநிதியந்தானே ✻
யங்கண்மாஞாலத்தேயிவ்விருவுருவாகுமென்ப ✻
பொங்கியகோசந்தண்டப்போற்றுபண்டாரமாகுந் ✻
தங்கிடுமுருக்கிறுமமெஃகெனச்சாற்றலாமே (௮)

கருதியசுல்லுத்தாரங்களதௌதம்வெண்பொன்னோடு ✻
மிரசதம்வெள்ளியின்பேரோற்றகாரீயநாக ✻
மெருவையேயுதும்பரந்தாமிரமொடுவெடுவேசெம்பாம் ✻
பொருவறுசீருள்சிக்கமிவைகளின்பொதுப்பேராமே (௯)

திருந்தியவீயம்வங்கஞ்சீருளும்பாரிலோதும் ✻
புரிந்தபித்தளையேமாயாபுரியாரகூடமும்பேர் ✻
கருங்கஞ்சமுறைகளேவெண்கலமதுகந்தராவாங் ✻
கருங்கொல்லேயயமேசொன்னகரும்பொன்னுமிரும்பினமம் (௰)

பஞ்சலோகமாவன—பொன்- வெள்ளி- செம்பு- இரும்பு-ஈயம். ஏழுலோகமாவன—பொன்-வெள்ளி-செம்பு-இரும்பு-ஈயம்- கஞ்சம்-தரா. நவமணியின்பெயர்—நிதி (௧) கடவுண்மணியின்பெயர்—நிதானம் (௧) பொற்காசின்பெயர்—காணம் (௧)

மணிப்பொதுப்பெயர்—காசு-மணவு ஆ௨
தெய்வவகன்மணிப்பொதுப்பெயர்—அரதனம்-சலாகை ஆ௨
மாணிக்கத்தின்பெயர்—செம்மணி-மாமணி ஆ௨
பதுமராகத்தின்பெயர்—கௌத்துவம் (௧)

வைடூரியத்தின்பெயர்—வாலவாயம் (௧) நீலமணியின்பெயர்—மணி (௧) மரகதத்தின் * பெயர்—அரி-பச்சை ஆ௨. வைரத்தின் பெயர்—வச்சிரம் (௧)
முத்தின்பெயர்—ஆரம்-தரளம்-நித்திலம்-மௌத்திகம் ஆ௪

பவளத்தின்பெயர்—துப்பு-துவர்-அரத்தம்-துகிர்-பிரவாளம்-வித்துருமம் ஆ௬
உலோகக்கட்டியின்பெயர்—தகணை-மாழை-வங்காரம் ஆ௩

சங்கநிதியென்பது—சங்கின்வடிவினது
பதுமநிதியென்பது—தாமரைவடிவினது
பண்டாரத்தின்பெயர்—கோசம்-தண்டம் ஆ௨
உருக்கின்பெயர்—எஃகு (௧)

வெள்ளியின்பெயர்—சுல்லு-தாரம்-களதௌதம்- வெண்பொன்-இரசதம் ஆ௫. காரீயத்தின்பெயர்—நாகம் (௧) செம்பின்பெயர்—எருவை உதும்பரம்-தாமிரம்-வடு - ஆ௪. இவைகளின்பொதுப்பெயர்—சீருள்-சிக்கம் ஆ௨

ஈயத்தின்பெயர்—வங்கம்-சீருள் ஆ௨
பித்தளையின்பெயர்—மாயாபுரி ஆரகூடம் ஆ௨. வெண்கலத்தின் பெயர்—கஞ்சம் - உறை ஆ௨. தராவின்பெயர்—மதுகம் (௧)
இரும்பின்பெயர்—கருங்கொல்-அயம்-கரும்பொன் ஆ௩

* இதுமரதகமெனவும்வழங்கும்.

தொந்தமாயிரும்புள்வாங்குஞ்சலாகைசும்பகமேயென்ப *
சந்திரகிரணநீர்கால்சலாகைமேயசந்திரகாந்தம் *
வந்தசூரியகாந்தந்தான்மற்றதனொளிதீக்காலு *
நந்துவைரிகமேதாதுநற்செங்கல்காவிக்கல்லே (௰௧)

கண்ணியபளிங்கிறைமங்காழ்படிகம்பருக்கை *
மண்ணியகவடிம்சாகிரடிமேயபலகறைப்பேர் *
பண்ணியம்வளமேகூலம்பண்டாரம்பண்ணிகார *
நண்ணியபலபண்டப்பேர்நடைப்பரிகாரமும்பேர் (௰௨)

விருப்பமாமரும்பண்டப்பேர்மேவியதாரமாகுங் *
கருப்பூரம்பளிதத்தோடுகனசாரஞ்சசிமுப்பேரோ *
பிரித்தமான்மதங்கத்தூரிமிதமேகலவையோடு *
பொருத்தும்வட்டிகையுமற்றைப்புலியுநால்வகையிற்சாந்து (௰௩)

கலவைச்சேறேகாலேகவண்ணமேகளபம்மெய் *
குலவியவிலாமேயசாந்தாங்குங்குமப்பேர்செஞ்சாந்தா *
மிலகியதகரமேலங்காசறைமயிர்ச்சாந்தின்பேர் *
கலவையேகளபமென்பகலம்பகங்கண்டபேரோ (௰௪)

உலப்பிலாத்தேட்வைசெச்சைசெறிகுழம்புற்றபேர்கைத் *
தலத்தினிற்கொட்டலப்பல்சாத்துதல்சதுர்த்தலும்பேர் *
புலர்த்தல்வரித்தலென்பபூசுதலின்பேர்தானே *
யலத்துமெய்ப்பூசும்பூச்சினபிதானமங்கராகம் (௰௫)

இலகியவெழுதுகோலாலிளையவர்முலையுந்தோளு *
நலமிகவெழுதுகோலநவின்றிடுந்தொய்யிலென்ப *
திலகமேசுடிகைசுட்டிதிலதமுமதன்பேர்செப்புந் *
திலகப்புண்டரங்களென்பசெறிநெற்றிக்குறிகளாமே (௰௬)

இங்குலிகந்தான்சாதிலிங்கமாங்குலிகமும்பேர் *
குங்குலியந்தானேகுங்குலுவாங்குக்குலுவுமப்பேர் *
செங்கதிர்க்கிரணப்போலுஞ்சிந்தூரப்பேர்சேலேக *
மிங்குமேவுபெருங்காயப்பேர்பொழிலலத்தகஞ்செம்பஞ்சு (௰௭)

இரும்புள்வாங்குஞ்சலாகை * யின்பெயர்—சும்பகம் (௧)
சந்திரகாந்தமாவது—சந்திரகிரணத்தினீர்கால்சலாகை *
சூரியகாந்தமாவது—சூரியனொளியிற்றீக்காய்வது *
காவிக்கல்லின்பெயர்—கைரிகம்-தாது-செங்கல் ஆ௩

பளிங்கின்பெயர்—காழ்-படிகம்-பருக்கை ஆ௩
பலகறையின்பெயர்—கவடி-மீசாகி-வராடி ஆ௩
பலபண்டத்தின்பெயர்—பண்ணியம்-பவளம்- கூலம்- பண்டார
ம்-பண்ணிகாரம்-நடைப்பரிகாரம் ஆ௬

அரும்பண்டத்தின்பெயர்—தாரம் (௧)
கருப்பூரத்தின்பெயர்—பளிதம்-கனசாரம்-சசி ஆ௩
கத்தூரியின்பெயர் — மான்மதம் (௧) நால்வகைச்சாந்தாவன—
மிருகமதம்-கலவைவட்டிகை-புலி *

சாந்தின்பெயர்—கலவைச்சேறு-காலேகவண்ணம்-களபம் விரை
ஆ௫. குங்குமத்தின்பெயர்—செஞ்சாந்து (௧)
மயிர்ச்சாந்தின்பெயர்—தகரம்-ஏலம்-காசறை ஆ௩
கலவையின்பெயர்—களபம்-கலம்பகம் ஆ௨

செறிகுழம்பின்பெயர்—தேய்வை-செச்சை ஆ௨
அப்பலின்பெயர்—கொட்டல்-சாத்துதல்-சதுர்த்தல் ஆ௩
பூசுதலின்பெயர்—புலர்த்தல்-வரித்தல் ஆ௨
மெய்ப்பூச்சின்பெயர்—அங்கராகம் (௧)

இளையவர்முலையினுந் தோளினுமெழுதுகோலத்தின் பெயர்—
தொய்யில் (௧)
திலகத்தின்பெயர்—சுட்டிகை-சுட்டி-திலதம் ஆ௩
நெற்றிக்குறியின்பெயர்—திலகம்-புண்டரம் ஆ௨

சாதிலிங்கத்தின்பெயர்—இங்குலிகம்-குலிசம் ஆ௨. குங்கிலியத்
தின்பெயர்—குங்குலு-குக்குலு ஆ௨. சிந்தூரத்தின்பெயர்—
சேலேகம் (௧) பெருங்காயத்தின்பெயர்—இங்கு (௧) செம்பஞ்
சின்பெயர்—அலத்தகம் (௧)

* இரும்புள்வாங்குஞ்சலாகை-ஊசிக்காந்தம்.

புறையரக்கர்த்தந் துப்புரம்பழுப்பென்பதரித்தரப்பே *
ரறுசுவெள்ளரிசிகூட்டியுணிவதச்சுதமென்றுருகுங் *
குறுணியொவ்வொன்றதாகக்கொள்கலம்பல்லுணுக்கள் *
பெறுமுறைபரப்பிவைப்புபிரப்பெனப்பேசலாமே (௰௮)

வெற்றிடுஞ்சமிதையோமவிறகெனவறையலாகு *
திற்றைசெய்ஞெகிழிகொள்ளிநெருப்புறுவிறகின்பேரே *
கந்துளேயிருந்தைநல்லங்கரியென்பகடைக்கொள்ளிக்கு *
முந்துபேராலாதமுற்கமுளரியோடிராதமாமே. (௰௯)

அடலைவெண்பலிசாம்பர்ப்பேராந்திருநீறேபற்பம் *
பொடியொடுவிபூதிகாப்பாம்புண்ணியசாந்தஞ்சாணி *
பொடிதுகள்சுண்ணந்தூளிபூழியேபுழுதியாகுஞ் *
சுடுசுண்ணச்சாந்துமண்ணுஞ்சுதையொடுகளபமும்பேர் (௨௰)

நொய்யதோரிலவின்பஞ்சுநுவன்றபேர்பூளைதானே *
பையெனும்பருத்திபன்னல்பரியுமாந்தூலம்பஞ்சா *
மையநுண்ணிடையார்நூற்குமப்பஞ்சிற்றொடர்நுனிப்பேர் *
துய்யெனுநாமமாகுந்தொடர்பிசின்பயினென்றம்பேர் (௨௧)

அடிசில்போனகமேமூரலமலையேயயினிபொம்மன் *
மடைமிசையுணப்படுக்கல்வல்சிபாளிதமேயன்னந் *
தொடுபதமிதவைபாத்துத்துற்றுண்டிசொன்றிபுன்க *
மொடுசருவசனமூண்கூழோதனம்புகாவேசோறும் (௨௨)

பெச்சமிழ்கவியிரேணுபலிசருவின்னோருணு *
மச்சமில்பொதிசோறென்பதாற்றுணைத்தோட்கோப்பும்பேர் *
மிச்சிலோடெச்சஞ்சேடமிகுபொருளென்பழப்பே *
ருச்சிட்டமொன்றேயெச்சில்பிரப்பும்பருண்டியாமே (௨௩)

நிறையநெய்பொதிபாற்சோறுநிகழ்த்துபாயசமென்றுரு *
நறையிநிங்கருனைதாமேநாட்டியபொரிபலின்பே *
ரறைதருவெந்தைபிட்டாமஃகுலவியக்காரிப்பேர் *
வறையலின்பேரேபோச்சைமலாவகம்பிண்ணாக்கின்பேர் (௨௪)

அரக்கின்பெயர்—அரத்தம்-துப்பு-ஆ௨. அரிதாரத்தின்பெயர்—பழுப்பு(௧)அச்சுதமென்பது—அறுகுவெள்ளரிசிகூட்டியணிவது. பிரப்பென்பன—குறுணியொவ்வொன்றதாகக் கொள்கலத்துட்பல்லுணுக்கள் பரப்பிவைப்பனவாம் *

ஓமவிறகின்பெயர்—சமிதை (௧) நெருப்புறு விறகின்பெயர்—ஞெகிழி-கொள்ளி-ஆ௨. கரியின்பெயர்—நந்துள் - இருந்தை-நல்லம்-ஆ௩. கடைக்கொள்ளியின்பெயர்—அலாதம் - உற்கம்-முளரி-இராதம் ஆ௪

சாம்பரின்பெயர்—அடலை-வெண்பலி ஆ௨. திருநீற்றின்பெயர்-பற்பம் பொடி-விபூதி-காப்பு ஆ௪. சாணியின்பெயர்---புண்ணியசாந்தம்(௧) புழுதியின்பெயர்—பொடி-துகள்-சுண்ணம்-தூளி-பூழி ஆ௫. சுண்ணச்சாந்தின்பெயர்—மண்-சுதை-களபம் ஆ௩

இலவின்பஞ்சின்பெயர்—பூளை (௧) பருத்தியின்பெயர்—பன்னல்-பரி ஆ௨. பஞ்சின்பெயர்—தூலம் (௧) நூற்கும்பஞ்சிற்முடர் நுனியின்பெயர்—துய் (௧) பிசினின்பெயர்—பயின் (௧)

சோற்றின்பெயர்—அடிசில்-போனகம்-மூரல்-அமலை - அயினி-பொம்மல்-மடை-மிசை-உணா-புழுக்கல்-வல்சி-பாளிதம் - அன்னம்-பதம்-மிதவை பாத்து-துற்று - உண்டி-சொன்றி-புன்கம்-சரு-அசனம்-ஊண்-கூழ்-ஓதனம்-புகா ஆ௨௬

விண்ணோருணின்பெயர்—அமிழ்து-அவி-பலி-சரு ஆ௪. பொரிசோற்றின்*பெயர்—ஆற்றுணா-தோட்கோப்பு- ஆ௨
மிகுபொருளின்பெயர்—மிச்சில்-எச்சம்-சேடம் ஆ௩. எச்சிலின்பெயர்—உச்சிட்டம்(௧)பேருண்டியின்பெயர்—பிரப்பு (௧)

பாற்சோற்றின்பெயர்—பாயசம் (௧) பொரியலின்பெயர்—கருனை(௧)பிட்டின்பெயர்—வெந்தை (௧) உக்காரியின்பெயர்—அஃகுல்லி(௧)வறையலின்பெயர்—ஒச்சை(௧) பிண்ணாக்கின்பெயர்—பிலாவகம் (௧)

---

* பொதிச்சோறு-கட்டுச்சோறு.

நொடிதரிலருப்பம்பிட்டுருவணேபிண்டிமாப்பே *
ரிடியுமாமிலட்டுகத்தோடேற்றமோதகம்ம்தாசை *
யடைநொலையபூபங்கஞ்சமண்டகையப்பவர்க்க *
மிடையறநுகர்வோர்தங்கட்கிவைகள்சிற்றுண்டியாமே (௨௫)

கூடியதுவையெனுஞ்சொற்புளிங்கறிகூட்டமைத்து *
நீடியேசமைப்பதாகுநீடாணங்கறிகளின்பேர் *
காடியேவர்க்கும்மாழைகஞ்சிபாகேகுழம்பாம் *
பாடிலாவமிழ்துகீரம்பயசுதுத்தம்பயம்பால் (௨௬)

ததிதயிர்பெருகுமாகுந்தக்கிரமேகலாய *
மதிதமோடளையருப்பமச்சிகைமுசரோமோர்ப்பேர் *
விதமுறையங்கவீனநவநீதம்வெண்ணெயாநெய் *
யிதமுறுகிருதநேயமிழுதாச்சியந்துப்பாமே (௨௭)

கண்டம்பாளிதங்களென்பகண்டசர்க்கரையிலுமங் *
கண்டதேயயிரும்புல்லகண்டமுமதற்கேகூற்றும் *
பிண்டமுகட்டிகன்னல்விசயமேகுளமக்காரம் *
பிண்டசர்க்கரையைந்தேம்பேர்பிரசந்தேன்மதுவுமப்பேர் (௨௮)

அரியல்பாடலிதேன்மட்டேயரிட்டமேசுண்டைதொண்டி *
முருகுசாயனமேகௌளையைமுண்டகஞ்சாதிசாலி *
பிரசமாதவமேமேரைபிழிம்சறுதணியன்மாரி *
சுராமதுசுமாலிமாலிசுலோகியேசொல்விளம்பி (௨௯)

நறவொடாசவமேதொப்பிநணையிக்கஞாளிகுந்தி *
வெறிவெடிசாறுபானம்விகுணியேசோபம்வேரி *
மறவிதேஞ்சுவிகைதேறன்மகரந்தமதுணாயாம்ப *
லறிவழிபவாறெட்டுங்கள்ளினுக்கமைத்தபேரோ (௩௰)

அரியதோரமிழ்துதானேயமரியேசுதைமருந்தாங் *
கரளமேயாலங்காரிகடுவுடன்காளஞ்சிங்கி *
விரவியவாலகாலம்விடமெட்டுநஞ்சின்பேரோ *
டருகுதறுவையேபானம்பகர்நேயந்தைலமெண்ணெய் (௩௧)

மாவின்பெயர்—அருப்பம்-பிட்டு-நுவணை-பிண்டி-இடி-ஆ௫-
அப்பவர்க்கமாவன-இலட்டுகம்-மோதகம்-தோசை-அடை-தொ
லை-அபூபம்-கஞ்சம்-அண்டகை
இவைகள்சிற்றுண்டியாம்

புளிங்கறியின்பெயர்—துவை (க) கறியின்பெயர்-நீடாணம் (க)
கஞ்சியின்பெயர்—காடி-வர்க்கு-மோழை ஆ௩
குழம்பின்பெயர்—பாகு (க) பாலின்பெயர்- அமிழ்து-க்ஷீரம்-ப
யசு-துத்தம்-பயம் ஆ௫

தயிரின்பெயர்—ததி-பெருகு-ஆ௨-மோரின்பெயர் — தக்கிர
ம்-கலாயம்-மதிதம்-அளை-அருப்பம்-மச்சிகை-முசரீ- ஆ௭-வெ
ண்ணெயின்பெயர்—ஐயங்கவீனம்-நவநீதம்- ஆ௨ - நெய்யின்
பெயர்—கிருதம்-நேயம்-இழுது-ஆச்சியம் துப்பு ஆ௫

கண்டசர்க்கரையின்பெயர்—கண்டம்-பாளிதம்- அயிர்-புல்லகண்
டம் ஆ௪-சர்க்கரையின்பெயர்—கட்டி-கன்னல்-விசயம்-குளம்-
அக்கரம்- ஆ௫
தேனின்பெயர்—பிரசம்-மது ஆ௨

கள்ளின்பெயர்—அரியல்-பாடலி-தேன்-மட்டு - அரிட்டம்-சுண்
டைதொண்டி-முருகு-சாயனம்-கௌவை-மூண்டகம்-சாதி - சா
லிபிரசம்-மாதவம்-மேதை-பிழி சேறு-தணியல் மாரி-சுரா-மது-
சுமாலி-மாலி-சுவோகி-சொல்விளம்பி (௨௬)

நறவு-ஆசவம்-தொப்பி-நனை-இக்கு-ஞாளி - குந்தி-வெறி-வெடி-
சாறு-பானம்-விருணி-சோபம்-வேரி-மறவி-தேம் - சுவிகை-தேற
ல் - மகரந்தம்-மதுரை-ஆம்பல்-பயு (௨௨) ஆ௪௮

அமிழ்தின்பெயர்—அமரி-சுதை-மருந்து-ஆ௩- நஞ்சின்பெய
ர்—காளம்-ஆலம்-காரி-கடு-காளம்-சிங்கி ஆலகாலம்-விடம் ஆ௮
பானத்தின்பெயர்—பருகுதல்-துவை ஆ௨
எண்ணெயின்பெயர்-நேயம்-தைலம்- ஆ௨

அலைவுறுதுற்றியுண்பவாந்திற்றிதின்பவாகு *
மிலைநுதர்விலங்குணவேகுளகெனவியம்புலாகு *
நலனுறுபறவையோடுநாட்டொருசார்விலங்கி *
னுலகினூனுண்டியூட்டியுணவினையுறையுமாமே (௩௨)

துப்புடனேனுமென்னுஞ்சொற்றுணைக்காரணப்பே *
ரொப்பவேசாதனத்தோடுபகரணமுமாம்பேர் *
செப்பியவுகளத்தோடுசேர்ந்திடுமுபயமென்ப *
வப்படியிரண்டிலக்கத்தபிதானமாகுந்தானே (௩௩)

பணிவுறுகானல்வெண்டேர்பாந்த்தபேய்த்தேருமாகுந் *
துணியுறைதூக்குத்தானேசல்லியாஞ்சொல்லுநெல்லின் *
மணிபலத்தநறுயிரேணுமகிழ்விதையலகென்றாமே *
யணிதருபந்தியோளிநிரைநிரலாகுமென்ப (௩௪)

மகரகேதனனைவென்றவாமற்கேதொழும்புசெய்வோ *
னிகலிலாக்குணபத்திரன்றனிருசரணிதயத்துவைத்தோன் *
மிகுபுகழ்புனையாநின்றவீரமண்டலவன்செய்தான் *
புகர்தருமுப்பத்தைந்துபல்பொருட்பெயர்க்குச்செய்யுள் (௩௫)

ஆறுவது பல்பொருட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

ஆ-தொகுதி-௬-க்கு-விருத்தம்-௪௱௫௭.

## ஏழாவது.

## செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

முழுமதிமுக்குடைக்கீழ்மூர்த்திதாள்போற்றல்செய்தே *
யெழுவகையுலோகந்தன்னிலேற்றமண்மரங்கடம்மிற் *
பழுதறுதோலினூலிற்பற்பலவிதங்களாக *
வழுவுறுதிடுஞ்செயற்கைவடிவப்பேர்த்தொகுதிசொல்வாம் (௧

உண்பவற்றின்பெயர் — துற்றி(க) தின்பவற்றின்பெயர் — தீற்றி(க) இலைநுகர்விலங்குணவின்பெயர் — குளகு(க) பறவைமுதலியவொருசார்விலங்குகளினுணவின்பெயர் — உண்டி - ஊட்டி - உணவு - இரை - உறை ஆ ௫

துணைக்காரணத்தின்பெயர் — துப்பு - ஏது - சாதனம் - உபகரணம் - ஆ ௪ - இரண்டென்னுமிலக்கத்தின்பெயர் - உகளம் - உபயம் ஆ ௨

கானலின்பெயர் — வெண்டேர் - பேய்த்தேர் ஆ ௨
கல்வியின்பெயர் — துணி - அறை - தாக்கு ஆ ௩
நென்மணிபலகறைமகிழ்விதையென்பவற்றின்பெயர் — அலகு (க)
பந்தியின்பெயர் — ஒளி - நிரை - நிரல் ஆ ௩

## ஏழாவது.

# செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

## காப்பு.

(இதன்பொருள்.)

முழுமதி - பூரணசந்திரன்போலும் - முக்குடைக்கீழ் - மூன்றுகுடையின்கீழ் - வீற்றிருந்த - மூர்த்தி - அருகக்கடவுளுடைய - தாள் - பாதத்தை - போற்றல்செய்து - துதிசெய்து - எழுவகை, யுலோகந்தன்னில் - எழுவகைப்பட்ட - உலோகத்தினாலும் - ஏற்றமண்மரங்கடம்மில் - இயைந்தமண்ணினாலும் - மரங்களினாலும் - பழுதறு - குற்றமற்ற - தோலின் - தோலினாலும் - நூலில் - நூலினாலும் - பற்பலவிதங்களாக - பலபலவிதங்களாக - வழுவுறு - குற்றம்பொருந்தாமல் - இடும் - செய்யப்படுகின்ற - செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி - செயற்கைவடிவப்பெயர்த் தொகுதியை - சொல்வாம் (யாம்) கூறுவாம் - எ - று. * இடுமென்னும் பெயரெச்சம் - வடிவமென்னும்பெயரோடுமுடிந்தது. *

## (௱௪௰) ஏழாவது செயற்கைவடிவப் பெயர்த்தொகுதி.

பரசொடுநவியந்தண்ணம்பாலமேகணிச்சியென்ப *
விரவியமழுப்படைப்பேர்மேவுசக்கரப்பேர்நேமி *
பரிதியேவலயமெஃகம்பகர்சுதரிசனமாழி *
திருமிகுமொளிவட்டம்மேதிகிரியாம்வளையுமப்பேர் (உ)

தனுவொடுசிந்துவாரந்தடிசராசனங்கோதண்டங் *
குனிசிலைதுரோணஞ்சாபங்கொடுமரம்பிணாகம்வேணு *
முனிதவர்சார்ங்கம்மகார்முகமுமைந்திவை வில்லின்பே *
ரினியமேதார்சார்ங்கமால்வில்லீசன்விற்பிணாகமாமே (௩)

பூரியேதொடையேயாவம்பூட்டேசிஞ்சினிநரம்பு *
நாரியேடங்குணந்தாருணியொன்பானேநாமங் *
கூரியசரமேவாளிகொடுங்கணைபகழிவண்டு *
பாரியகதிரங்கங்கபத்திரமத்திரங்கால் (௪)

பாணமாசுகமேபூதைபத்திரிவிசிகம்புங்கந் *
தோணிசாயகமேபல்லந்தொடைசிலீமுகமேயம்பாம் *
பூணுறுமம்புக்கட்டுப்புதைபுழுகாகுஞ்சேப்பி *
கோணிலாக்குலம்பியபுங்கங்குதையுதண்மொட்டம்பாமே (௫)

ஆவமேதூணியாவநாழிகையம்புக்கூடாந் *
கோவைசெய்வில்லிலிட்டகுதைதானுங்குலையென்றோது *
மேவியவுடுவேயீர்க்கில்விரவியசிறகாமம்பு *
பாவகமாகக்கட்டும்பாசம்பற்றுக்கையாமே (௬)

அயில்கத்தியெஃகஞாங்கருடம்பிடியைந்தும்வேலாம் *
வயிரமேகுலிசஞ்சம்பம்வச்சிராயுதத்தின்பேரோ *
சயமுறுமசனியென்றுஞ்சதகோடியென்றுஞ்சாற்றுங் *
குயமொடுபுள்ளமற்றைக்கொடுவாளேயரிவாளின்பேர் (௭)

கழுமுளேகழுக்கடைப்பேர்கைப்பிடிவாளேகண்டங் *
கழுமுண்மூவிலைவேல்காளங்கழுவொடுசத்திசூலஞ் *
சுழல்படைவட்டம்யாராவளையெனச்சொல்லுமிப்பா *
லெழுவென்பகணையத்தோட்டிபரிகமுமென்னலாமே (௮)

மழுப்படையின்பெயர்—பரசு-நவியம்-தண்ணம்-பாலம்-கணிச்சி ஆ௫-சக்கரத்தின்பெயர்—நேமி-பரிதி-வலயம்-எஃகம் சுதரிசனம்-ஆழி-ஒளிவட்டம்-திகிரி-வளை ஆ௯

வில்லின்பெயர்—தனு சிந்துவாரம்-தடி-சராசனம் - கோதண்டம் சிலை-துரோணம்-சாபம்-கொடுமரம்-பினாகம்-வேணு-முனி-தவர் சார்ங்கம் கார்முகம் ஆ௰௫ - மால்விலலின்பெயர்—சார்ங்கம்(௧)ஈசன்வில்லின்பெயர்—பினாகம் (௧)

நாணியின்பெயர்—பூரி-தொடை-ஆவம்-பூட்டு சிஞ்சினி-நரம்பு-நாரி-வடம்-குணம்-ஆ௯-அம்பின்பெயர்—சரம் வாளி கணை-பகழி-வண்டு கதிரம்-கங்கபத்திரம்-அத்திரம் கோல் (௯)

பாணம்-ஆசுகம் பூதை-பத்திரி விசிகம்-புங்கம் தோணி-சாயகம்-பல்லம்-தொடை-சிலீமுகம்-எ (௰௨) ஆ௨௧-அம்புக்கட்டின்பெயர்—புதை(௧)அம்புக்குப்பியின்பெயர்—புழுகு (௧) அம்புக்குதையின்பெயர்—குலை-புங்கம் ஆ௨- மொட்டம்பின்பெயர்—உதண் (௧)

அம்புக்கூட்டின்பெயர்—ஆவம்-தூணி-ஆவநாழிகை ஆ௩
விற்குதையின்பெயர்—குலை (௧)
அம்புச்சிறகின்பெயர்—உடு ஈர்க்கில் ஆ௨
அம்புகட்டும்பாசத்தின்பெயர்—பற்றுக்கை (௧)

வேலாயுதத்தின்பெயர்—அயில்-சத்தி-எஃகம்-ஞாங்கர் - உடம்பிடி-ஆ௫-வச்சிராயுதத்தின்பெயர்—வயிரம்-குலிசம்- சம்பம்-அசனி-சதம்கோடி-ஆ௫-அரிவாளின்பெயர்—குயம்-புள்ளம்- கொடுவாள் ஆ௩

கழுக்கடையின்பெயர்—கழுமுள்(௧)கைப்பிடி வாளின்பெயர்-கண்டகம்(௧)சூலத்தின்பெயர்—கழுமுள்-மூவிலைவேல் - காளம்-கழு-சத்தி ஆ௫- சுழல்படையின்பெயர்—வட்டம் - பாராவளை-ஆ௨-எழுவின்பெயர்—கணையம்-பரிகம் ஆ௨

(௩௪௨) ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

அசிநவிரோதிநாட்டமானநாந்தகமேகட்கம் *
வசிமட்டாயுதந்தூவத்திவஞ்சமேயுவணிகோண *
மிசையுங்கண்டகமேவேணுகரவாளமென்றுமேற்கு *
நசையுறுகோணமென்பநாட்டியகூன்வாளாமே (௯)

கொண்டெழுமுடைவாளின்பேர்குறும்பிடிசுரிகையாகும் *
பிண்டிபாலத்தினமம்பிலித்தண்டெஃகமும்பேர் *
விண்டடரிட்டியிட்டிவிட்டேற்றின்பேரோகோலாந் *
தண்டிற்றுறிருப்புமுள்ளாஞ்சலாகைநாராசமாமே (௰)

குந்தமேபடையைவெல்லுங்கொடுஞ்சிறுசவளமென்ப *
குந்தந்தோமரமிரண்டுங்கொடும்பெருஞ்சவளமாகும் *
வந்தவேதினமேயீரும்வாள்கரபத்திரமும்பே *
ருந்தியதறிகைதானேகணிச்சியாமுளிக்கும்பேரோ (௰௧)

கவிபுகழ்கைவேலின்பேர்கப்பணந்தோமரந்தா *
னவியமேமழுக்கோடாலிநாட்டியகுடாரமும்பேர் *
குவியிலைமுக்கரிந்தகத்தியேகுளிரொன்றேதுஞ் *
சுவரகழ்கருவிநாமஞ்சொன்னபேர்கன்னமாமே (௰௨)

தடிகதையெறுழேதண்டாந்தட்டையுந்தழலுங்கிள்ளை *
கடிகருவிப்பேராகுங்குணில்குறுந்தடிப்பேர்காட்டுங் *
கொடியதோர்கவணினமங்குணிலொடுகவணையோடே *
யொடிசிலுங்குளிருமென்றேயுரைத்திடலாகுமென்ப (௰௩)

எசிலஞ்சனக்கோல்கோலாந்துகிலிகையெழுதுகோலே *
சூசியேயூசியென்பசொற்றலூசித்துளைப்பேர் *
பாசமாமாலைதீட்டும்படைகண்டத்துடனேயாணி *
யூசியுமாகுமென்றேயுரைத்தனர்விரித்தநூலோர் (௰௪)

தைத்திடுந்தொடர்துவக்கேயிடங்கணிசங்கிலிப்பேர் *
வைத்தகற்பொறியேயள்ளுவலிபெறப்பிற்றிரும்பா *
மத்திரமென்பதம்பேயாதியாவிடுபடைப்பேர் *
சத்திரமென்பசெங்கைத்தலம்விடாப்படையினமம் (௰௫)

வாளின்பெயர்—அசி-நவிர்-எஃகு-நாட்டம்-நாந்தகம்-கட்கம் -வசி-மட்டாயுதம்-தூவத்தி-வஞ்சம்-உவணி - கோணம் - கண்டகம்-வேணு-கரவாளம் ஆ ௰ரு
கூன்வாளின்பெயர்—கோணம் (க)

உடைவாளின்பெயர்—குறும்பிடி-சுரிகை- ஆ உ - பிண்டிபாலத்தின்பெயர்-ஏலித்தண்டு-எஃகம்- ஆ உ-ஈட்டியின்பெயர்—இட்டி (க) விட்டேற்றின்பெயர்—கோல (க) இருப்புமுள்ளின்பெயர்—தாறு (க) நாராசத்தின்பெயர்—சலாகை (க)

சிறுசவளத்தின்பெயர்—குந்தம் (க) பெருஞ்சவளத்தின்பெயர்—குந்தம்-தோமரம் ஆ உ
ஈர்வாளின்பெயர்—வேறினம்-கரபத்திரம் ஆ உ
தறிகைக்குமுளிக்கும்பெயர்—கணிச்சி (க)

கைவேலின்பெயர்—கப்பணம்-தோமரம் ஆ உ
கோடாலியின்பெயர்—நவியம்-மழு-குடாரம் ஆ ௩
இலைமூக்கரிகத்தியின்பெயர்—குளிர் (க)
சுவர்கருவியின்பெயர்—கன்னம் (க)

தண்டின்பெயர்—தடி-கதை-எறுழ் ஆ ௩-கிளிகடிகருவியின்பெயர்—தட்டை-தழல் ஆ உ
குறுந்தடியின்பெயர்—குணில் (க)
கவணின்பெயர்—குணில்-கவணை-ஒடிசில்-குளிர் ஆ ௪

அஞ்சனக்கோலின்பெயர்—கோல் (க) எழுதுகோலின்பெயர்—தூலிகை (க) ஊசியின்பெயர்—சூசி (க) ஊசித்துளையின்பெயர்—பாசம் (க) ஓலைதீட்டும்படையின்பெயர்—கண்டம்-ஆணி ஊசி ஆ ௩

சங்கிலியின்பெயர்—தொடர்-துவக்கு-இடங்கணி ஆ ௩
பற்றிரும்பின்பெயர்—பற்பொறி-அள்- ஆ உ
கைவிடுபடையின்பெயர்—அத்திரம் (க)
கைவிடாப்படையின்பெயர்—சத்திரம் (க)

(௱௪௪) ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

படைதானேகாழுருளேவேல்படைக்கலஞ்சுதனந்துப்புக் *
கடுமேதிகருவியெஃகங்கடிபுமாயுதப்பொதுப்பே *
ரடைவாம்வைரிசிகம்பூவாளாயில்வசியாறுங்கூர்மை *
ஈட்டெருடுகருவிப்புட்டில்படையுறைநுதிநுனிப்பேர் (௰௬)

சருதியகோதையேகைக்கட்டிகைப்புடையுமாகுஞ் *
சிரகங்கீசகமிரண்டுஞ்செப்பியதலைத்திராண *
மரணஞ்சாலிகைசடாரியாசுகந்தளமேகண்டம் *
பருமமெய்புறையேகச்சைபரம்பத்துங்கவசப்பல்பேர் (௰௭)

சேடகங்கடகந்தட்டிசேரும்வேதிகையேவட்டங் *
கேடகந்தோலிநேடுகிடுகெட்டும்பலகையின்பேர் *
சூடுந்தோற்பலகைதட்டுத்தோற்பரந்தோலுமாகு *
நீடியபரிசையேமாவட்டணநெடியவட்டம் (௰௮)

நிலைபெறுபிரம்பின்வட்டநீள்வள்ளித்தண்டையாகு *
மலைவின்மந்தனமேசூழிமதயானைமுகபடாப்பேர் *
கலைவிலாப்புரசைதூசாங்கமுத்திடுகயிறேகச்சை *
யிலகடம்பலகாரங்கள்யானைமேற்றவிசிறுமம் (௰௯)

பரியினிற்கலணையின்பேர்ந்திர்பகற்பரமும்பண்ணும் *
பருமமும்படையும்பன்னும்பல்லணந்தானுமாகும் *
பரவியகச்சமோடுபடியங்கவடியின்பேரோ *
மருவுசம்மட்டியேகோல்வாய்த்தமத்திகையுமப்பேர் (௨௰)

மறுவறுகுதிரைவாயின்வடம்வடிகயிறுவற்கங் *
கறுழொடுகலியங்கௌவுங்கடிவாளங்கலினமும்பேர் *
திறவிமற்றதற்கணிந்தநெடுமயிருளையென்றேதுஞ் *
செறிபுனைதளைவிலங்காஞ்சிருங்கலைநிகளமும்பேர் (௨௧)

கடிகைசேசரங்கிரீடஞ்சூடிகைமகுடமௌலி *
முடியின்பேரோராருகுமுடிமாலையேகம்ராடி *
முடியுறுப்பைந்தாந்தாமமுகுடமேபதுமத்தோடு *
நெடியகோடகமேமற்றுநேர்ந்தகிம்புரியென்றுமே (௨௨)

ஆயுதப்பொதுப்பெயர்—படை-தானை-கழுமுள்-வேல்- படைக்கலம்-சுதனம்-துப்பு-எதி-கருவி-எஃகம். ஆ ய. கூர்மையின்பெயர்—வை-நிசிதம்-பூ-வள்-அயில்-உசி. ஆ சு.படையுறையின்பெயர்—கடாறு-கருவிப்புட்டில் ஆ உ- நுனியின்பெயர்—நுதி (க)

கைக்கட்டியின்பெயர்—கோதை-கைப்புடை ஆ உ. தலைத்திராணத் * தின்பெயர்—சிரகம்-சீசகம் ஆ உ. கவசத்தின்பெயர்—அரணம்-சாலிகை-சடாரி-ஆசு-கந்தளம்- கண்டம்- பருமம்-மெய்யுறை-கச்சை-பரம் ஆ ய

பலகையின்பெயர்—சேடகம்-கடகம்- தட்டி-வேதிகை- வட்டம்-கேடகம்-தோல்-கிடுகு ஆ அ. தோற்பலகையின்பெயர்—தட்டு-தோற்பரம்-தோல் ஆ ௩. பரிசையின்பெயர் — மாவட்டணம்-நெடியவட்டம் ஆ உ

பிரம்பின்வட்டத்தின்பெயர்—வள்ளித்தண்டை (க) யானைமுகபடாத்தின்பெயர்—மந்தனம்-சூழி ஆ உ. யானைப்புரசையின்பெயர்—தூசு (க) யானைக்கழுத்திடுகயிற்றின்பெயர் — கச்சை (க) யானைமேற்றவிசின்பெயர்—இலகடம்-பலகாரம் ஆ உ

குதிரைக்கலணையின்பெயர்—பரம்-பண்-பருமம்-படை - பல்லணம். ஆ ரு. குதிரையங்கவடியின்பெயர்—கச்சம்-படி ஆ உ
குதிரைச்சம்மட்டியின்பெயர்—கோல்-மத்திகை ஆ உ

குதிரைவாயின்வடத்தின்பெயர்—வடி-கயிறு-வற்கம் ஆ ௩
குதிரைக்கடிவாளத்தின்பெயர்—கறுள்-கலியம்-கலினம் ஆ ௩
குதிரைக்கணிமயிரின்பெயர்—உளை (க)
விலங்கின்பெயர்—புனை-தளை-சிருங்கலை-நிகளம் ஆ ச

முடியின்பெயர்—சுடிகை சேகரம்- கிரீடம்-சூடிகை- மகுடம்-மௌலி ஆ சு. முடிமாலையின்பெயர்—கரோடி (க) முடியுறுப்பைந்தாவன—தாமம்-முகுடம்-பதுமம்-கோடகம்-கிம்புரி *

* தலைத்திராணம்-தலைச்சீரா.

அம்பொனாரம்பதக்கங்கண்டிகைமதாணியும்பேர் *
செம்பொனங்கதங்கேயூரந்திகழ்வாகுவலயத்தின்பேர் *
பம்புதாடங்கந்தோடாம்பகர்குழைகுண்டலப்பேர் *
கம்பிவல்லிகைகுணுக்குக்கடிப்பிணைகாதணிப்பேர். (௨௩)

கருதுகங்கணத்தினாமங்கடகமேதொடியுமாகுஞ் *
சரிதொடிகுருகுவண்டுசங்குசூடகமேகன்று *
பெருகுகைவளையாம்பிள்ளைக்கைவளைபிடகமென்ப *
விரவியசுடிகைசுட்டிவிட்டொளிரோடைபட்டம் (௨௪)

பரிபுரமென்பதானேபாதகிண்கிணியினாமம் *
பெரியநூபுரஞ்சிலம்பிற்பேதமேவேறொன்றில்லை *
பரியகங்காற்சரிப்பேர்பகர்ந்தகைச்சரிக்கும்பேரோ *
யரவமேசிலம்பினாமமாஞ்சிறுமணிசதங்கை (௨௫)

நீடுபாடகத்தினாமநெடும்பாதகடகமென்ப *
தேடியகுடச்சூலோலைசெய்தளைஞெகிழமும்பேர் *
பாடுறுபாதசாலம்பதத்தணிப்பொதுப்பேராகு *
மாடவர்கொடைவீரத்தாலணிவதுகழலென்றாமே (௨௬)

ஏழுகோவைகளாற்சூழ்ந்தவெழின்மணிமேகலைப்பேர் *
காழிருநான்கேகாஞ்சிகலாபமீரெட்டுத்தாமந் *
தாழுழுவாறுகோவைசாற்றியபருமமென்ப *
வீழுமெண்ணான்குகோவைவிரிசிகையென்பதாமே (௨௭)

சரிமணிநாமந்தானேசாற்றியகலாபந்தோரை *
யரையினிற்பட்டிகைப்பேரத்தொடுமறுவுமென்ப *
ரிரதனமரைநாணின்பேரோற்றிடுந்தொங்கலுத்தி *
மருவியசெவிமலர்ப்பூமன்னுகன்னவதஞ்சம் (௨௮)

விரலணியாழிவீகமிலச்சினைமோதிரப்பேர் *
சரமொடுகாழேயாரந்தாமமேமணிவடப்பேர் *
மருவுசங்கிலியேயென்பவைரச்சங்கிலியினாம *
முருவியன்மார்பிலிட்டவுபவீதம்பூணுநூலே (௨௯)

பதக்கத்தின்பெயர்—ஆரம்-கண்டிகை-மதாணி- ஆ௲ ரு - மாகுவல யத்தின்பெயர்—அங்கதம்-கேயூரம்-ஆ௲ உ- குண்டலத்தின்பெய ர்—குழை(க)தோட்டின்பெயர்—தாடங்கம் (க) காதணியின்பெ யர்—கம்பி-வல்லிகை-குணுக்கு-கடிப்பிணை ஆ௲ ச

கங்கணத்தின்பெயர்—கடகம்-தொடி- ஆ௲ உ-கைவளையின் பெய ர்—சரி தொடி-குருகு-வண்டு-சங்கு-சூடகம்-கன்று- ஆ௲ எ-பின் னாக்கைவளையின்பெயர்—பிடிகம் (க) சுட்டியின்பெயர்—சுடி கை(க)பட்டத்தின்பெயர்—ஓடை (க)

பாதகிண்கிணியின்பெயர்—பரிபுரம்(க)நூபுரமாவது- சிலம்பின் பேதம்(க)காற்சரியின்பெயர்—பரியகம் (க) கைச்சரியின்பெய ர்—பரியகம்(க)சிலம்பின்பெயர்-அரவம் (க)
சதங்கையின்பெயர்-சிறுமணி (க)

பாடகத்தின்பெயர்—பாதகடகம் (க) ஓசைசெய்தளையின்பெய ர்—குடச்சூல்-ஞெகிழம் - ஆ௲ உ-பதத்தணிப் பொருவின்பெ யர்—பாதசாலம்(க)ஆடவர்கொடைவீரத்தாலணிவதின்பெயர்- க [ழல்(க)

மேகலையென்பது-எழுகோவைமணி-காஞ்சியென்பது - எட்டுக் கோவைமணி-கலாபமென்பது-பதினாறுகோவைமணி- பருமமெ ன்பது-பதினெட்டுக்கோவைமணி-விரிசிகையென்பது- முப்பத் திரண்டுகோவைமணி *

அரிமணியின்பெயர்—கலாபம்-தோரை ஆ௲ உ
அரைப்பட்டிகையின்பெயர்—அத்து-மருங்கு ஆ௲ உ
அரைநாணின்பெயர்—இரதனம்(க)ஆபரணத்தொங்கலின் பெய ர்—உத்தி(க)செவிமலர்ப்பூவின்பெயர்—கன்னவதஞ்சம் (க)

மோதிரத்தின்பெயர்—விரலணி-ஆழி-வீகம்-இலச்சினை ஆ௲ ச
மணிவடத்தின்பெயர்—சரம்-காழ்-ஆரம்-தாமம் ஆ௲ ச
வைரச்சங்கிலியின்பெயர்—சங்கிலி (க)
பூணூலின்பெயர்—உபவீதம் (க)

(௱௪௮) ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

இலம்பகம்புல்லகஞ்சுட்டிவைநுதலணிமுப்பேரோ *
பொலம்புனைதிருவேதெய்வவுத்தியாம்பிஞ்ஞகந்தான் *
றுலங்கியதலைக்கோலைப்பேர்தொய்யகந்தலைப்பாளப்பேர் *
குலம்பெறுகல்லழுத்துங்குழிவட்டங்கேவணந்தான் (௬௰)

அணிகளிற்கடைப்புணர்ப்பேயதுமடைகயிலுமாகும் *
புணருங்கோளகையேதாங்கிவயிரங்கிம்புரிபூணாற்பே *
ரணிகலன்வள்ளிபூணேயணியொடுகலமேமஞ்சு *
பணியிழைபூடணங்கள்பகரிலாபரணமாமே (௬௧)

தட்டம்பாசனமேதாலந்தளிகையுண்கலத்தின்பேரோ *
வட்டிலேசடகங்கோரம்வள்ளமாஞ்சிறுவட்டிற்பேர் *
கிட்டியகிண்ணங்கன்னல்கிளந்தநாழிகைவட்டிற்பேர் *
சட்டுவஞ்சிலகமென்பதவ்வியுஞ்சருவியும்பேர் (௬௨)

விஞ்சுதர்ப்பணமேயாடிமிகுமொளிவட்டம்வேறு *
வஞ்சியருருவங்காட்டவரும்படிமக்கலம்பொற் *
கஞ்சனமுகுரமத்தம்புளகமெண்பேர்கண்ணாடி *
கஞ்சனைகலசப்பானைபடியகம்படிக்கங்காட்டும் (௬௩)

தொட்டநெய்த்துடுப்பினுக்குச்சுருக்கொடுசுருவமாம்பே *
ரிட்டமாந்தூபமுட்டியிந்தளந்தடவுமேற்கு *
மட்டமார்கின்றதூபமணியேகைம்மணியென்றாகுங் *
கிட்டியேயாண்டில்கஞ்சங்கிணினென்னுந்தாளமுப்பேர் (௬௪)

அடிபடுபெருமணிப்பேரறைந்திடுங்கண்டையாகும் *
படலிகைபரந்தவட்டங்கைம்மணிபகர்ந்தபேரோ *
டிடுதிடென்றிடத்தெழித்தசேகண்டியெறிமணிப்பேர் *
கடுகியபீலிசின்னங்காகளங்காளமாமே (௬௫)

கோடுடனிரலையாம்பல்கொம்பின்பேர்வயிருங்கூறும் *
பீடிகைதுமானங்காண்டம்பேணுங்கண்டிகைகடிப்பங் *
கோடிகமிருமுப்பேர்பூண்கொள்கலம்பரணிகோய *
நீடுமஞ்சிகமேபெட்டிநெடுமஞ்சிகையேபேழை (௬௬)

நுதலணியின்பெயர்—இலம்பகம்-புல்லகம்-சூட்டு ஆ ௩
தெய்வவுத்தியின்பெயர்—திரு(௧) தலைக்கோலத்தின்பெயர்—பி
ஞ்ஞகம்(௧) தலைப்பாளையின்பெயர்—தொய்யகம் (௧)
கலலுழத்துங்குழிவட்டத்தின்பெயர்—சேவணம் (௧)

அணிகளின்கடைப்புணர்வின்பெயர்—மடை-கயில் ஆ ௨
பூணின்பெயர்—கோளகை-தாங்கி-வைரம்-கிம்புரி ஆ ௪
ஆபரணத்தின்பெயர்—அணிகலன்-வள்ளி-பூண்-அணி - கலம்-ம
ஞ்சு-பணி-இழை-பூடணம் ஆ ௯

உண்கலத்தின்பெயர்---தட்டம்-பாசனம்-தாலம்-தளிகை ஆ ௪
வட்டிலின்பெயர்---சடகம்-கோரம்-வள்ளம்-ஆ ௩- சிறுவட்டிலி
ன்பெயர்---கிண்ணம்(௧)நாழிகைவட்டிலின் பெயர்---கன்னல்(௧)
சட்டுவத்தின்பெயர்---சிலகம்-தவ்வி-தவிரு ஆ ௩

கண்ணாடியின்பெயர்---தர்ப்பணம்-ஆடி-ஒளிவட்டம்-மடிமக்கல
ம்-கஞ்சனம்-முகுரம்-அத்தம்-புளகம் ஆ ௮
கலசப்பானையின்பெயர்---கஞ்சனை(௧) படிக்கத்தின்பெயர் --- ப
[டியகம்(௧)
நெய்த்துடுப்பின்பெயர்---சுருக்கு-சுருவம் ஆ ௨
தூபமுட்டியின்பெயர்---இந்தளம்-தடவு ஆ ௨
தூபமணியின்பெயர்---கைம்மணி (௧)
தாளத்தின்பெயர்---கிட்டி-பாண்டில்-கஞ்சம் ஆ ௩

பெருமணியின்பெயர்---கண்டை (௧)
கைம்மணியின்பெயர்-படலிகை-பரந்தவட்டம் ஆ ௨
எதிமணியின்பெயர்---சேகண்டி (௧)
சின்னத்தின்பெயர்---பீலி(௧)காளத்தின்பெயர்---காகளம் (௧)

கொம்பின்பெயர்---கோடு-இரலை-ஆம்பல்-வயிர் ஆ ௪
பூண்கொள்கலத்தின்பெயர்---பேடிகை-சுமானம்-காண்டம்- கண்
டிகை-கடிப்பம்-கோடிகம்-ஆ ௬-பரணியின்பெயர்--- கோயம்-
(௧)பெட்டியின்பெயர்---மஞ்சிகம் (௧) பேழையின்பெயர்---ம
ஞ்சிகை (௧)

குண்டிகைகரகநீர்பெய்கோலமார்காண்டகங்கள் *
கண்டநற்கமண்டலப்பேர்கடிப்பங்கோடிகமேகெண்டி *
கொண்டவெண்குடையினுடமங்குளிர்தொங்கல்கவிப்புப்பிச்சந் *
தண்டுசேர்கவிகையாதபத்திரஞ்சத்திசத்திரம் (௩௭)

ஆலவட்டத்திறேடுமடுத்திடுங்கால்செய்வட்ட *
மேலிழுக்கந்தாலவிருந்தம்பேராலவட்டம் *
மிலிவீசனஞ்சாந்தாற்றிபெருகியவிசிறிநான்குஞ் *
சீலமாங்காற்றுவீசுஞ்சிற்றாலவட்டந்தானே (௩௮)

இடக்கையின்பேரோயாமந்திரிகையாங்குளிர்முழாவாம் *
படித்தெழுபணவந்திண்டியானகம்படகமூப்பேர் *
கடிப்பின்பேர்குணிலாமொந்தைதாளருகட்பறைப்பே *
ரடித்தபேரிகைப்பேர்நந்தியாகுளிசிறுபறைப்பேர் (௩௯)

கல்லரிதிமிலேயென்பதண்ணுமைநிசாளமாகும் *
பல்லுளகொடியபன்றிப்பறைகுடப்பறையென்றுமே *
கல்லெனும்பகுவாயாமோர்கட்பறைபதலைதானே *
யொல்லெனுங்கரடிநாமமுதுபறைதட்டையாமே (௪௰)

தொண்டகமுருகியம்போர்த்துடிகுறிஞ்சிப்பறைப்பேர் *
மிண்டியதுடியேபாலைவேடர்தம்பறையினுமங் *
கொண்டெழுபம்பையேறங்கோட்பறைமுல்லைக்காகுந் *
திண்டியமருதமுற்றகிளர்பறைகிணையென்றுமே (௪௧)

நிறுவுசாபறையேயென்பநெய்தலிற்பறையினமம் *
பெறுமுவகைப்பறைக்குப்பேரோதூரியமென்றேறுது *
முறுமியதண்ணுமைம்பேருடுக்கையாமிடைசுருங்கு *
பறையின்பேர்துடிமருங்கின்மார்ச்சனைபகரின்பண்ணும் (௪௨)

தூரியமுழவுதிண்டிதுந்துபிமுருடுதக்கை *
பேரியேதகுணிதம்போர்ப்பிலியேதடாரிபம்பை *
வீரியமாசுதண்ணமேவுகோடணையியங்கள் *
வாரியின்முழங்குசன்னடைவாச்சியப்பொதுவிரண்டுபேர் (௪௩)

குமண்டலத்தின்பெயர்—குண்டிகை-கரகம்-காண்டகம் ஆ௩
கெண்டியின்பெயர்—கடிப்பம்-கோடிகம் ஆ௨
வெண்குடையின்பெயர்—குளிர்-தொங்கல்- விப்பு- பிச்சம்-கவிகை-ஆதபத்திரம்-சத்தி-சத்திரம் ஆ௮

பேராலவட்டத்தின்பெயர்—ஆலவட்டம்- கால்செய்வட்டம்-உக்கம்-தாலவிருத்தம் ஆ௪. சிற்றாலவட்டத்தின்பெயர்—சிவி - விசனம்-சாந்தாற்றி-விசிறி ஆ௪

இடக்கையின்பெயர்—ஆமந்திரிகை-(௧) முழவின்பெயர்—குளிர்(௧) படகத்தின்பெயர்—பணவம்-திண்டி-ஆனகம் ஆ௩
கடிப்பின்பெயர்—குணில்(௧) ஒருகட்பறையின்பெயர்—மொந்தை (௧) பேரிகையின்பெயர்—நந்தி(௧) சிறுபறையின்பெயர்—ஆகுளி (௧)

திமிலையின்பெயர்—சல்லரி (௧) நிசாளத்தின்பெயர் — தண்ணுமை (௧) பன்றிப்பறையின்பெயர்—குடப்பறை (௧) ஒருகட்பகுவாய்ப்பறையின்பெயர்—பதலை (௧) கரடிப்பறையின்பெயர்—தட்டை (௧)

குறிஞ்சிப்பறையின்பெயர்--தொண்டகம்-முருகியம்-துடி. ஆ௩
பாலைப்பறையின்பெயர்—துடி (௧) முல்லைப்பறையின்பெயர்--பம்பை-ஏறங்கோட்பறை ஆ௨
மருதப்பறையின்பெயர்---கிணை (௧)

நெய்தற்பறையின்பெயர்---சாப்பறை (௧)
உவகைப்பறையின்பெயர்---தூரியம் (௧)
தண்ணுமையின்பெயர்---உடுக்கை (௧) இடைசுருங்குபறையின்பெயர்---துடி (௧) மார்ச்சனையின்பெயர்---மண் (௧)

வாச்சியப்பொதுவின்பெயர்---தூரியம்-முழவு-திண்டி-துந்துபி-முருடு-தக்கை-பேரி-தகுணிதம்-சிவி-தடாரி-பம்பை-முரசு- தண்ணம்-கோடணை-இயம்-சன்னை. ஆ௰௩

(௱௫௨) ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

இரதமேகொடிஞ்சிபோடுமியந்திரங்குயவுவைய *
மரியொடுகூவிரந்தேராஞ்சயந்தனமுமப்பேர் *
பரிதியேசில்லியாழிபாரியகாலேநேமி *
யுருளுட-னுருளுந்தேரினுருளென்பவுந்தியும்பேர் (சச)

ஆறொனுநாமந்தேரினகத்தினுட்செறிகதிர்ப்பேர் *
தேர்நடுப்பேரோதட்டுச்செப்பியநாப்பணும்பேர் *
கார்பலகைப்பாபாராஞ்சார்ந்தகூவிரங்கொடிஞ்சி *
தேர்மொட்டுக்கூம்புதேரின்மரச்சுற்றுக்கிடுகுதானே (சரு)

பாண்டில்கஞ்சிகைவையம்போர்ப்பரிகள்பூண்டீர்க்குமூர்தி *
தாண்டியசகடுவையஞ்சாகாடேயொழுகைசாடு *
தூண்டியவுருளென்றுஞ்சொல்லுமேபண்டியின்பே *
ரீண்டியபண்டியுள்ளிருப்புகந்திருகூமாமே (சசு)

விஞ்சியமுத்தினூர்திவெண்முத்தின்சிவிகைதானே *
தஞ்சமாஞ்சிவிகைவையந்தண்டிகையணிகம்யானந் *
கஞ்சிகைமணிக்காற்பள்ளியென்பனகதிர்வேன்மன்ன *
வொஞ்சலிலசிறப்பினேறுமிராசவ[illegible]மதாமே (சஎ)

அலமுழுபடைதுடுப்போடாம்படைவாள்கலப்பை *
கலனைநாஞ்சிலுமாமற்றைநக்கந்தெழுமதலைதம்ப *
நிலைபெறுதறிகாழுணுநெடுந்தூணும்வெளில்யானைத்தூண் *
புலையில்வேள்வித்தூண்யூபம்போதிகைகுறுந்தரிப்பேர் (சஅ)

கதவின்பேர்வாரியாரிகாப்பொடுகவாடந்தோட்டி *
புதவுமாங்காழுஞ்சிப்புப்போற்றியகடிகையுந்தாழ் *
மதமுறும்யானைதன்னைவணக்குமங்குசமேதோட்டி *
விதமுறுகோணமென்றும்விளம்புவரளந்தநூலோர் (சகூ)

பட்டடையடைகுறட்டின்பாலதாமுலையாணிக்கோல் *
சுட்டுக்கோலென்றுநாமஞ்சொல்லுபநல்லநூலோர் *
முட்டிபெருங்குறட்டைமுருடெனமொழிபவோங்கிச் *
கொட்டுஞ்சம்மட்டிகூடங்கொள்கொழுவென்றுகூறும் (ருய)

தேரின்பெயர்—இரதம்-கொடிஞ்சி-இயந்திரம்-குய்வு-வையம்-அரி-கூவிரம்-சயந்தனம்-ஆக அ. தேருருளின்பெயர்—பரிதி-சில்லி-ஆழி-கால்-நேமி-உருள்-உருளி-உந்தி ஆக அ

தேரினகத்திற்செறிகதிரின்பெயர்—ஆர் (க) தேர்நடுவின்பெயர்—தட்டு-தாப்பண்-ஆக உ தேர்ப்பலகைப்பாவின்பெயர்—பார்-(க) தேர்க்கொடிஞ்சியின்பெயர்—கூவிரம் (க) தேர்மொட்டின்பெயர்—கூம்பு(க)தேர்மரச்சுற்றின்பெயர்—கிடுகு (க)

பரிகள்பூண்டூர்க்குமூர்தியின்பெயர்—பாண்டில்-கஞ்சிகை-வையம்-ஆக ௩. பண்டியின்பெயர்—சகடு-வையம்-சாகாடு-ஒழுகை-சாடு-உருள்-ஆக ௬. பண்டியுள்ளிரும்பின்பெயர்—கந்து-இருசு-ஆக உ

முத்துச்சிவிகையின்பெயர்—முத்தினூர்தி(க) சிவிகையின்பெயர்—வையம்-தண்டிகை-அணீகம்-யானம்-ஆக ச. இராசவாகனத்தின்பெயர்—கஞ்சிகை-மணிக்காற்பள்ளி ஆக உ

கலப்பையின்பெயர்—அலம்-உழுபடை-துடுப்பு-படைவாள்-கலனை-நாஞ்சில்-ஆக ௬. தூணின்பெயர்—கந்து-மதலை-தம்பம்-தறி-கால்-தாணு-ஆக ௬. யானைத்தூணின்பெயர்—வெளில் (க) வேள்வித்தூணின்பெயர்—யூபம்(க)குறுந்தறியின்பெயர்-போதிகை(க)

கதவின்பெயர்—வாரி - ஆரி-காப்பு * கவாடம்-தோட்டி- புதவு-ஆக ௬. தாழின்பெயர்—காழ்-சீப்பு-கடிகை ஆக ௩
யானைத்தோட்டியின்பெயர்—அங்குசம்-கோணம் ஆக உ

அடைகுறட்டின்பெயர்—பட்டடை(க) உலையாணிக்கோலின்பெயர்—சுட்டுக்கோல்(க)பெருங்குறட்டின்பெயர்—முருடு(க)சம்மட்டியின்பெயர்—கூடம்(க)கொழுவின்பெயர்—கோள் (க)

* கபாடமெனினுமொக்கும்.

(௱௫௪) எழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

பாதையேவங்கந்தோணிபாரதியஃறியம்பி *
போதமேம்தலையானம்பிணைசதாநவ்வேறாவாய் *
பேதமில்பாறுதொள்ளைமேபணுறுமரக்கலப்பேர் *
வாதைநீர்மரக்கலப்பாயிலைதயெனவழங்கலாமே (௫௧)

பகட்டம்பிபஃறியோடம்பகர்பெயர்திமிலேதோணி *
பகடிபட்டிகையேயம்பிபடுவையேபுணையேதெப்ப *
மிகைபடுமிதவையும்பேர்விசியின்பேரரியென்றுறும் *
பகர்தருபாரிமஞ்சம்பரியங்கம்பாண்டில்கட்டில் (௫௨)

விட்டரந்தவத்தோர்பீடம்விளங்கும்பீடிகையுமப்பே *
ரிட்டசிங்காதனம்பத்திராசனமென்பதாமே *
திட்டையேகறையேமற்றுச்செப்பியவுலூகலந்தான் *
முட்டியவுரலின்முட்பேர்முசலமேதடியுலக்கை (௫௩)

உறிசிதர்சிக்கந்தூக்கோடோதியசிமிலிநாற்பேர் *
நிறுவியவுஞ்சலூசனீண்டவிண்டாண்டுமப்பே *
ரிறைவையேசேணியேணிமால்புகண்ணேணியின்பேர் *
குறைவிலம்பணந்தூம்போடுகுளகங்கச்சமுமரக்கால் (௫௪)

விரவியகுஞ்சநாழிவிரித்தகொத்தளிப்பாயானா *
பெருகியசாப்பைபுற்பாய்பிரப்பம்பாய்சாதிப்பாயாஞ் *
சருமந்தோற்பாய்தடுக்கேதவிசாகுங்குழாயேதண்டாம் *
பெருகுகோடிகம்பூந்தட்டேபெட்டியேமூழிவாயாம் (௫௫)

சட்டமேகிடுகாமென்பசாற்றியகம்பந்தம்பம் *
விட்டொளிர்கௌசிகங்கண்மத்திகைவிளக்குத்தண்டாந் *
தட்டொடுசின்னஞ்சேட்டைதருமுறமுற்றிலும்பேர் *
புட்டிலேயிறைவையென்பவட்டிகைகூடையாமே (௫௬)

சுளகின்பேர்சூர்ப்பமென்பதுடைப்பஞ்சோதினிமாறும்பேர் *
வளமுறுமூழ்பிமூழையகப்பையாம்துமத்தம் *
வெளிறயிர்கடைதறிப்பேர்மெச்சும்பாவாற்றிகுச்சா *
மளவில்காருகதாடாநூலாழியேயாகுமென்ப (௫௭)

மரக்கலத்தின்பெயர்—பாதை-வங்கம்-தோணி-பார்தி பஃறி-அம்பி-போதம்-மதலை-யானம்-புணை-சதா-நவ்வு-நாவாய்-பாறு-தொள்ளை-ஆ ௰௫. மரக்கலப்பாயின்பெயர்—இதை (௧)

ஓடத்தின்பெயர்—பகடு-அம்பி-பஃறி ஆ ௩. தோணியின்பெயர்—திமில்(௧)தெப்பத்தின்பெயர்—பகடு-பட்டிகை-அம்பி-படுவை-புணை-மிதவை-ஆ ௬. விசியின்பெயர்—அரி (௧)
கட்டிலின்பெயர்—பாரி-மஞ்சம்-பரியங்கம்-பாண்டில் ஆ ௪

தவத்தோர்பீடத்தின்பெயர்—விட்டரம்-பீடிகை ஆ ௨
சிங்காதனத்தின்பெயர்—பத்திராசனம் (௧)
உரலின்பெயர்—திட்டை-கல்லுறை-உலூகம் ஆ ௩
உலக்கையின்பெயர்—முசலம்-தடி ஆ ௨

உறியின்பெயர்—சிதர்-சிக்கம்-தூக்கு-சிமிலி-ஆ ௪. ஊஞ்சலின்பெயர்—ஊசல்-விண்டாண்டு ஆ ௨. ஏணியின்பெயர்—இறைவை-சேணி-ஆ ௨. கண்ணேணியின்பெயர்—மால்பு(௧)மரக்காலின்பெயர்—அம்பணம்-தூம்பு-குளகம்-கச்சம் ஆ ௪

நாழியின்பெயர்—குஞ்சம்(௧)கொத்தளிப்பாயின்பெயர்—ஆனா(௧)புற்பாயின்பெயர்—சாப்பை (௧) பிரப்பம்பாயின்பெயர்—சாதிப்பாய்(௧)தோற்பாயின்பெயர்—சருமம்(௧)தடுக்கின்பெயர்—தவிசு (௧)குழாயின்பெயர்—தண்டு (௧) பூந்தட்டின்பெயர்—கோடிகம்(௧)பூப்பெட்டியின்பெயர்—மூழிவாய் (௧)

சட்டத்தின்பெயர்—கிடுகு(௧)விளக்குத்தண்டின்பெயர்—கம்பம்-தம்பம்-கௌசிகம்-மத்திகை-ஆ ௪. முறத்தின்பெயர்—தட்டு-சின்னம்-சேட்டை-மூற்றில்-ஆ ௪. புட்டிலின்பெயர்—இறைவை (௧)கூடையின்பெயர்—வட்டிகை (௧)

சுளகின்பெயர்—சூர்ப்பம்(௧)துடைப்பத்தின்பெயர்—சோதினி-மாறு-ஆ ௨. அகப்பையின்பெயர்—மூழி-மூழை-ஆ ௨. மத்தின்பெயர்—மத்தம்(௧)தயிர்கடைதறியின்பெயர்—வெளில்(௧)பாவாற்றியின்பெயர்—குச்சு(௧)தாழியின்பெயர்—தாடா (௧)

(௱௫௬) எழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

கிழார்பூட்டைக்காம்பியம்பிகிளந்தகாராம்பியாகும் ✳
பிழாரிடாரிறைகூடைப்பேர்பெருந்தூம்பம்பணநீர்ப்பத்தர் ✳
துழாவியகாசுவல்லுச்சூதின்பேர்கழங்குமாகுந் ✳
தழாதுருள்கவற்றிற்றுயமாயமாஞ்சாரிநாயாம் (௫௮)

கடிகையேதுணிப்பேதுண்டங்காட்டியவகிர்வார்வள்ளாஞ் ✳
சுடுவொடுசுமடுதாங்குஞ்சுமையடைசும்மாட்டின்பேர் ✳
வடிவுறுவலையேசாலமற்றதிர்கயிறுமூரமே ✳
தொடருறுநூலேதந்துசூத்திரம்பனுவலும்பேர் (௫௯)

பழுதையேதாமங்கச்சைபாசமேயிரச்சேநாணே ✳
வழுவிலாத்தாம்பேபயக்கம்வடம்புரிகயிறதாமே ✳
தழுவியதாம்பெனும்பேர்தாமணிதனக்குநாமஞ் ✳
சுழல்கறங்கேகாற்றாடிசொல்லியகதலியும்பேர் (௬௰)

பந்துமட்டத்துருத்திபகர்பெருந்துருத்திநீளாச் ✳
சிந்தியசிவிறியாகுஞ்சீப்பின்பேர்சிக்கங்கங்கம் ✳
பைந்தொடிமகளிராட்டப்படுங்களமோலாயென்ப ✳
தொந்தமாம்பாதங்காப்புக்கழறுடுதோல்செருப்பாம் (௬௧)

இட்டபாதுகையேபாவன்மிதியடியிதன்மேலிட்ட ✳
கொட்டயாங்குடைபற்சீவுங்கோன்மெல்கோல்வளிசந்தாண்டில்
பட்டவம்மனையம்மானைபந்துகந்துகமென்றோது ✳
மூட்டையேதவிட்டினுமமுடையுமாநொறுங்குநொய்யே (௬௨)

உண்டியவுலைத்துருத்தியதியுமத்திரியுமாகுங் ✳
கோதிலாச்சிவையிறேடுகுருகுகொல்லுலைமூக்கின்பேர் ✳
சோதினிசிக்குங்காடுதுராணரசன்மபலேசெத்தை ✳
சாதுயர்ப்பாடைவெள்ளில்சிலாவட்டஞ்சாணைக்கல்லே (௬௩)

ட்டம்படுபதலைதாழிதளஞ்சாடியகளும்பே ✳
ரிடங்கரோநிறையேவட்டமேற்றநீர்ச்சாலிம்முப்பேர் ✳
கிடந்தகொப்பரிதசும்புகடாரமாங்குடத்தினமங் ✳
குடங்கரேபிடங்கர்தாழிகுணங்கடங்கலசங்கும்பம் (௬௪)

காராம்பின்பெயர்---கிழார்-பூட்டை-காம்பி-அம்பி ஆ௨ ச. இறை
கூடையின்பெயர்---பிழார்-இடார் ஆ௨ உ.நீர்ப்படத்தாரின்பெயர்--
தாம்பு-அம்பணம் ஆ௨ உ.சூதின்பெயர்-காசு வல்லு-கழங்கு ஆ௨ ௩
கவற்றிற்றுயத்தின்பெயர்---ஆயம்(க) சாரியின்பெயர்---தாய் (க)

துண்டத்தின்பெயர்---கடிகை-துணி ஆ௨ உ.வகிரின்பெயர்---வார்-
வள் ஆ௨ உ.சும்மாட்டின்பெயர்---சுடுவு-சுமடு-சுமையடை ஆ௨ ௩.
வலையின்பெயர்---சாலம் (க) வலைக்கயிற்றின்பெயர்---சாலம் (க)
நூலின்பெயர்---தந்து-சூத்திரம்-பனுவல். ஆ௨ ௩

கயிற்றின்பெயர்---பழுதை-தாமம்-கச்சை-பாசம்-இரச்சு- நாண்-
தாம்பு-அக்கம்-வடம்-புரி ஆ௨ ۱௰. தாமணியின்பெயர்---தாம்பு (க)
காற்றாடியின்பெயர்---சுழல்-கறங்கு-கதலி ஆ௨ ௩

மட்டத்துருத்தியின்பெயர்---பத்து(க) பெருந்துருத்தியின்பெ
யர்---சிவிறி (க) பீச்சியின்பெயர்---சிக்கம்-கங்கம் ஆ௨ உ
மகளிராடுங்களத்தின்பெயர்---ஓரை (க)
செருப்பின்பெயர்---பாதங்காப்பு-கழல்-தொடுதோல் ஆ௨ ௩

மிதியடியின்பெயர்---பாதுகை-பாவல் ஆ௨ உ.மிதியடியின்மேவி
ட்டகொட்டையின்பெயர்---குடை(க) பற்சீவுங்கோலின்பெயர்--
மெல்கோல் (க) தூண்டிலின்பெயர்---வளிசம் (க) அம்மானையி
ன்பெயர்---அம்மனை(க)பந்தின்பெயர்---கந்துகம்(க) தவிட்டின்
பெயர்-முட்டை-மூடை-ஆ௨ உ.நொய்யின்பெயர்-நொறுங்கு(க)

உலைத்துருத்தியின்பெயர்---உதி-அத்திரி-ஆ௨ உ கொல்லுலைமுக்கி
ன்பெயர்---சிவை-குருகு ஆ௨ உ.செத்தையின்பெயர்---காடு-தூரா
ல்-நரல்-மயல்-ஆ௨ ச.பாடையின்பெயர்---வெள்ளில் (க) சாணைக்
கல்லின்பெயர்---சிலாவட்டம் (க)

சாடியின்பெயர்---பதலை-தாழி-தளம்-அகளம்-ஆ௨ ச.நீர்ச்சாலின்
பெயர்---இடங்கர் நிறை-வட்டம் ஆ௨ ௩. கொப்பரியின்பெயர்---
தசும்பு-கடாரம் ஆ௨ உ. குடத்தின்பெயர்---குடங்கர் - இடங்கர்-
தாழி-குணம்-கடம்-கலசம்-கும்பம். ஆ௨ ௭

(௱௫௮) ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

தடாவொடுக்கீர நீரைத்தருமுகைகுழிசிநான்கு *
மிடாவென்பபானையின்பேர்மேவியகுண்டத்தோடு *
மிடாவுமாம்விரும்புநல்லார்வெண்டயிர்கடையுந்தாழி *
குடாரமந்தினியேயென்னக்குறித்திடும்வெறுப்பினாலே (௬௫)

கரகங்கற்கரியேகன்னல்சிகரநான்குபேருங் *
கரகத்திணுமமாகுங்கருத்துவற்கரியுமென்ப *
திருவறஞ்செய்யாரோற்குந்தீயமட்கலத்திணுமம் *
பரவியகடிஞையையம்பாத்திரமென்றும்மேற்கும் (௬௬)

இடிஞ்சிலேபாண்டிலென்பவெரிசுடர்த்தகழிநாம *
மொடுங்கியசுடுவைகுண்டமொளிபெறுவிளைசட்டி *
படங்குசுத்திகையினோடுசராவமேயகலின்பேர்தா *
னிடுங்கலம்பாண்டமேற்குங்கொள்கலமெவற்றிற்கும்பேர் (௬௭)

கோடிகோடிகம்படாமேகோசிகங்கூறைபஞ்சி *
சாடிநீவியம்மசிளாசம்படங்கலைகலிங்கஞ் *
சூடிகாடிகமேபுட்டந்தூசுகாழகமேவட்ட *
மாடையாவரணந்தானையறுவையம்பரமாசாரம் (௬௮)

மடிபரிவட்டஞ்சேலைவத்திரமுடுக்கைவாச *
மிடையுறுபுடைவையாலறந்திலக்காரமென்றும்பேரா *
மிடையல்வேதகமேபட்டேயேடகமிவைதுகிற்பேர் *
நடைபெறுநாகம்பாரிநல்லாடையிருபேராமே (௬௯)

பட்டுவர்க்கத்திணுமம்பாளிதங்கோசிகம்பேர் *
பட்டுநேத்திரமாங்காம்புபடமதன்விகற்பநாம *
மிட்டநற்பணிதூசின்பேரோத்திடுந்தேவாங்கந்தான் *
மட்டமாமுரிகஞ்சூழமயிரகமயிர்ப்படாமே (௭௰)

அத்தவாளந்தானேயுல்லாசமாம்வடகமும்பேர் *
புத்தகமென்பசித்திரப்படாமாகும்பார்வைமீக்கோள் *
வைத்தமூன்றனேதோலைமூதர்கொய்சகமேநீவி *
புத்தரீயம்மேகாசமுத்தராசங்கமும்பேர். (௭௧)

மிடாவின்பெயர்—தடா-கரீரம்-முகை-குழிசி ஆ_௪
பானையின்பெயர்—குண்டம்-மிடா ஆ_௨
தயிர்கடைதாழியின்பெயர்—குடாரம்-மந்தினி ஆ_௨

கரகத்தின்பெயர்—சிரகம்-கற்கரி-கன்னல்-சீகரம்-வற்கரி ஆ_௫
ஏற்குமட்கலத்தின்பெயர்—கடிஞை-ஐயம்-பாத்திரம் ஆ_௩

தகழியின்பெயர்—இடிஞ்சில்-பாண்டில் ஆ_௨
குடுவையின்பெயர்—குண்டம்(க)சட்டியின்பெயர்—விசளை (க)
அகலின்பெயர்—சுத்திகை-சராவம் ஆ_௨. கொள்கலம்யாவற்றிற்
குப்பெயர்—இடுங்கலம்-பாண்டம் ஆ_௨

புடைவையின்பெயர்—கோடி-கோடிகம்-படாம்-கோசிகம்-கூ
றை-பஞ்சி-சாடி-நீவியம்-சீரை-சம்படம்-கலை-கலிங்கம்-சூடி-கா
டகம்-புட்டம்-தூசு-காழகம்-வட்டம்-ஆடை-ஆவரணம்-தானை-
அறுவை-அம்பரம்-ஆசாரம் ௨௬

மடி-பரிவட்டம்-சேலை-வத்திரம்-உடுக்கை-வாசம்-இலக்காரம் (எ)
ஆ_௩௧. துகிலின்பெயர்—இடையல்-வேதகம்-பட்டு-எடகம்-
ஆ_௪. நல்லாடையின்பெயர்—நாகம்-பாரி ஆ_௨

பட்டுவர்க்கத்தின்பெயர்—பாளிதம்-கோசிகம் ஆ_௨. பட்டின்
பெயர்—நேத்திரம்(க)பட்டுவிகற்பத்தின்பெயர்—காம்பு (க)
நற்பணித்தூசின்பெயர்—தேவாங்கம் (க)
மயிர்ப்படாத்தின்பெயர்—முரிகம்-மயிரகம் ஆ_௨

அத்தவாளத்தின்பெயர்—உல்லாசம்-வடகம் ஆ_௨. சித்திரப்படா
த்தின்பெயர்—பொத்தகம்(க)போர்வையின்பெயர்—மீக்கோள்
(க)முன்றானையின்பெயர்—தோகை(க) மாதர்கொய்சகத்தின்பெ
யர்—நீவி(க)உத்தரீயத்தின்பெயர்—ஏகாசம்-உத்தராசங்கம் ஆ_௨

 ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

கம்பலங்கம்பளங்கள்கம்பளிப்படாத்தின்வர்க்கம் *
வம்புவார்விசிகைக்கச்சம்வைத்தபட்டிகையுமாகும் *
விம்புவட்டுடையும்பேர்விரிகஞ்சம்விடுந்தலைப்பாம் *
கம்பலம்படங்குவானிவிதானமேற்கட்டியாமே (௭௨)

கஞ்சுளியங்கிமற்றைக்காஞ்சுகமொடுகுப்பாயம் *
விஞ்சுகஞ்சுகமேமெய்ப்பைமிளிரும்வாரணமேசட்டை, *
கஞ்சிகையவிடியோடுகாண்டமேயெழினிசண்டந் *
தஞ்சமாம்படாம்படங்கள்சடிதியிலிடுதிரைப்பேர் (௭௩)

தவிசணைதளிமமெத்தையுபதானந்தலையணைப்பேர் *
துவசமேசத்திவானிதோகைகேதனம்பதாகை *
துவழ்விலோதனம்படங்குதரும்படாம்பெருங்கொடிப்பேர் *
துவலுங்கால்வீதிகட்டிநுடங்கியகொடிவிடங்கம் (௭௪)

கத்திகைசிறுகொடிப்பேர்கருத்கூவிரந்தேர்க்கட்டுஞ் *
சத்தியாந்துணிசிதாரஞ்சாற்றியசிதவலும்பேர் *
சித்திரமோவியஞ்சீர்தீட்டும்வட்டிகையாமென்ப *
வைத்தனர்பொறித்தறீட்டல்வரைதலுமெழுதலாமே (௭௫)

மற்றைவற்கலையிறைஞ்சிமரவுரிசீரையும்பேர் *
சுற்றலேயுடுத்தலென்பதற்றலையிறுக்கலாகுங் *
குற்றமிலெழுபத்தாறுதொடர்செய்தான்குணபத்திரன்று *
ணிற்றலும்வணங்கிநீதிநிறுத்தமண்டலவன்றனே (௭௬)

ஏழாவது - செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி
முற்றிற்று.
ஆ தொகுதி(எ)க்கு-விருத்தம்-௲௱௩௰௩.

கம்பளிப்படாத்தின்வர்க்கப்பெயர்—கம்பலம்- கம்பளம்- ஆ௨
கச்சின்பெயர்—வம்பு-வார்-விசிகை-பட்டிகை- வட்டுடை-ஆ௫
விடுந்தலைப்பின்பெயர்—கஞ்சம்(௧) மேற்கட்டியின்பெயர்—கம்
பலம்-படங்கு-வானி-விதானம் ஆ௪

சட்டையின்பெயர்—கஞ்சுளி-அங்கி- காஞ்சுகம்-குப்பாயம்-கஞ்
சுகம் - மெய்ப்பை - வாரணம் ஆ௭. இடுதிரையின்பெயர்—
கஞ்சிகை-அவிடி-காண்டம்-எழினி-கண்டம்-படாம்-படம் ஆ௭

மெத்தையின்பெயர்—தவிசு-அணை-தளிமம்- ஆ௩. தலையணையி
ன்பெயர்—உபதானம் (௧) பெருங்கொடியின்பெயர்—துவசம்-
சத்தி-வானி-தோகை-கேதனம் - பதாகை- விலோதனம்-படங்கு-
படாம்ஆ௯. வீதியிற்கட்டியகொடியின்பெயர்—விடங்கம் (௧)

சிறுகொடியின்பெயர்—கத்திகை (௧) தேரிற்கட்டுங்கொடியின்
பெயர்—கூவிரம்(௧) துணியின்பெயர்—சீதாரம்-சிதவல் ஆ௨
சித்திரத்தின்பெயர்—ஓவியம்-வட்டிகை ஆ௨
எழுதலின்பெயர்—பொறித்தல்-தீட்டல்-வரைதல் ஆ௩

மரவுரியின்பெயர்—வற்கலை-இறைஞ்சி-சீரை ஆ௩
உடுத்தலின்பெயர்—சுற்றல் (௧) இறுக்கலின்பெயர்—தற்றல் (௧)

௮

சுபமஸ்து.

---

எட்டாவது

# பண்புபற்றியபெயர்த்தொகுதி.

காப்பு.

கடிமலர்ப்பிண்டிநீழற்காவலன்சரணம்போற்றி *
வடிவினிலளவுதன்னில்வண்ணத்திற்காட்சியாகு *
நெடியதோர்பொருளின்மற்றுநீருணர்வாலேகாணப் *
படுபொருளின் குணப்பேர்ப்பண்பதாந்தொகுதிசொல்வாம் (௧)

நல்லகோளகையேகொம்மைநாட்டியவலயந்தட்டுச் *
சொல்லியபரிதிபாண்டில்சூழ்ந்திடுகடகநேமி *
சில்லிமண்டலமேயாழிதிகிரிபாலிகைவிருத்தம் *
வல்லைசக்கரமீரொட்டும்வட்டமென்றிட்டநாமம் (௨)

உண்டையேகுவவுகொம்மையொடுபந்தம்புஞ்சஞ்சேடு *
முண்டமேகணையேவட்டுமுத்தையேதுறுமல்சோகங் *
கொண்டசேர்வுடனேமாழைகுதவிலேதொழுதிபூகம் *
பிண்டமூவாறுபேருந்திரட்சியாம்பிழம்புமாமே (௩)

தொழுதியேகுவவுதோடுதொகைசமுதாயஞ்சங்கந் *
தழுவியகுழுவேகோட்டிசமவாயநிகாயங்குப்பை *
குழுமலேகுவாலிராசிகுவிதன்மூவைந்துங்கூட்ட *
[illegible]கட்டளைமரியடணாம்மையாமே (௪)

உ

முருகன்றுணை.

# எட்டாவது

# பண்புபற்றியபெயர்த்தொகுதி.

## காப்பு.

(இதன்பொருள்.)

கடி-மணம்பொருந்திய, மலர்-பூக்களையுடைய, பிண்டிநீழல்-அசோகமரத்தினது நிழலின்கண்ணேவீற்றிருந்த, காவலன்-அருக்கடவுளுடைய, சரணம்-திருவடிகளை, போற்றி-துதித்து, வடிவினில்-வடிவினாலும், அளவுதன்னில்- அளவினாலும், வண்ணத்தில்-வண்ணத்தினாலும், காட்சியாகும்-கண்ணுக்குப்புலப்படும், நெடியது-பெரிதாகிய, பொருளின்-பொருளினிடத்தும், மற்று-அவையன்றி, நீளுணர்வால்-உயர்ந்தஅறிவினால், காணப்படு - காணப்படும், பொருளின்-பொருளினிடத்தும், பொருந்திய-குணப்பேர், பண்புகளின்பெயர்களைத்தெரிவிக்கின்ற - பண்பதாந்தொகுதி, பண்புப் பெயர்த் தொகுதியை - சொல்வாம் (யாம்) கூறுவாம்-(எ-று.) ஓர்-ஏ-அசை *

வட்டத்தின்பெயர்—கோளகை-கொம்மை-வலயம்-தட்டு- பரிதி-பாண்டில்-கடகம்-நேமி-சில்லி-மண்டலம்-ஆழி- திகிரி-பாலிகை-விருத்தம்-வல்லை-சக்கரம் ஆ-ய௰௬

திரட்சியின்பெயர்—உண்டை-குவவு-கொம்மை-பந்தம் - புஞ்சம்-சேடு-முண்டம்-கணை-வட்டு-முத்தை-துறுமல்-சோகம்-சேர்வு-மாழை-குவிதல்-தொழுதி-பூகம்-பிண்டம்-பிழம்பு ஆ-ய௰௯

கூட்டத்தின்பெயர்—தொழுதி-குவவு-தோடு-தொகை- சமுதாயம்-சங்கம்-குழூகோட்டி-சமவாயம்-நிகாயம்-குப்பை-குழுமல்-குவால்-இராசி-குவிதல் ஆ-ய௰௫

கட்டியின்பெயர்—அரி-அடர்-ஐம்மை ஆ-௩

## எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி.

குடிலமேகுலாவல்கோணல்கோட்டங்கூன்கோணைவளாவல் *
வடிவுளதட்டுவாங்கல்வணர்பத்தும்வளைவின்பேரே *
படலையேபடர்ச்சிபம்பல்பரந்திடும்வடிவினாமம் *
புடைபடுகுமிழ்ப்புத்தானேபுளகம்ரொமாக்குள்கொப்புள் (௫)

குழல்சுகிர்தும்புநாழிகூறியபுணாவேய்வேணு *
வொழுகியசுணாநாளத்தோடொன்பதுமுட்டுளைப்பேர் *
புழைகுழறுளையுடைத்தாம்பொருள்பிணர்சர்ச்சணைப்பேர் *
செழுமயிர்கதிர்கள்போலச்சேர்ந்திடுந்தொகுதிகற்றை (௬)

மதநனிபெருகலூக்கன்மற்றையவிதப்புச்சால *
அதிகம்மிசிறப்பிறப்போடலைதவவமலையான்றல் *
கதழ்வொடுபிறங்கல்கூடோகழுமல்பூரிப்பேயூங்குப் *
டுதுமையேயுருத்தன்மூவேழ்மிகுதியாம்பொங்கலும்பேர் (௭)

மன்னிமோடேக்கமோங்கல்வார்தல்சேணுழுக்கம்பொங்கல் *
பன்னியநிமிர்தல்புங்கம்பரிபுணாயுச்சந்துங்க *
மின்னியநிவப்புகப்புமிசைமேடுபிறங்கலந்த *
னுன்னதஞ்சிகரமூவேழுயர்ச்சியுத்துங்கமும்பேர் (௮)

விரிவின்பேர்விசாலமாகும்விபுலமுமாம்பரப்புப் *
பரவைபப்பழுவந்தாவல்பாய்தலாஞெமிர்தலும்பேர் *
மருவியபயினிசங்கமற்றிவையிரண்டுங்கூடல் *
பருமையினாமம்பீனம்பணம்பருஉவென்றும்பேரே (௯)

பாடுமாண்பாழிபீளிபணைபொழில்பகடுமூரி *
மோடுமாறடம்மவீறுமுடலைகொன்கருமையண்ண *
லீடுமாநணியேமானமிருமையேகயவோடேந்தல் *
பீடுவால்குவவுசெம்மைபெருமைப்பேரிருபத்தேழே (௰)

அணுநுழைமுளரிநுட்பமாய்தன்முள்ளயிர்நுணுங்கு *
நுணுகொடுநுவணைநுழைநொசியீராநில்வநுண்மைப்பேர் *
கணமிறைவறிதுசின்னங்கணுசுதன்னமொட்டே *
யணைதருகிலமேதோகமழ்பமிட்டிடையுமாமே (௰௧)

வளைவின்பெயர்—குடிலம்-குலாவல்-கோணல்-கோட்டம்-கூனி-கோண்-வளாவல்-தட்டு-வாங்கல்-வணர்-ஆ௰-பாதத்தவடிவின்பெயர்—படலை-படர்ச்சி-பம்பல்-ஆ௩-புளகத்தின்பெயர்—குமிழ்ப்பு(௧)கொப்புளியின்பெயர்—மொக்குள் (௧)

உட்டுளையின்பெயர்—குழல்-சுகிர்-தூம்பு-நாழி-புரை-வேய்-வேணு-சுரை-நாளம்-ஆ௯ - துளையடைப்பொருளின் பெயர்—பழை முழல்-ஆ௨-சர்ச்சரையின்பெயர்—பிணர் (௧)மயிர்த்தொகுதிகதிர்த்தொகுதிபோல்வனவற்றின்பெயர்—கற்றை, (௧)

மிகுதியின்பெயர்—மதம்-தனி-பெருகல்-ஊக்கல்-விதப்பு-சால்-அதிகம்-சிறப்பு-இறப்பு-அலை-தவ-அமலை-ஆன்றல்-கதழ்வு-பிறங்கல் - கூர் - கழுமல் - பூரிப்பு - ஊங்கு - புதுமை - உருத்தல்-பொங்கல் ஆ௨௨

உயர்ச்சியின்பெயர்—மோடு-ஊக்கம்-ஓங்கல்-வார்தல்- சேண்-ஒழுக்கம்-பொங்கல்-நிமிர்தல்-புங்கம்-பரி-புரை-உச்சம்-துங்கம்- நிவப்பு-உமப்பு-மிசை-கேடு-பிறங்கல்-எந்தல்-உன்னதம்-சிகரம்-உத்துங்கம் ஆ௨௨

விரிவின்பெயர்—விசாலம்-விபுலம்-ஆ௨- பரப்பின்பெயர்—பரவை-பப்பு-அழுவம்-தாவல் பாய்தல்-ஞெமிர்தல் ஆ௬
கூடலின்பெயர்—பயினி-சங்கம் ஆ௨
மருமையின்பெயர்—மீனம்-பனம்-பரூஉ ஆ௩

பெருமையின்பெயர்—பாடு-மாண்-பாழி-மீளி-பணை-பொழில்-பகடு-மூரி-மோடு-மால்-தடம்-வீறு-முடலை-கொன்-கருமை- அண்ணல்-நெடு-பா-தனி-மானம்-இருமை-கயவு-எந்தல்-மீடு-வான்-குவவு-செம்மை ஆ௨௭

நுண்மையின்பெயர்—அணு-நுழை-முளரி-நுட்பம்-ஆய்தல்-முள்-அயிர்-நுணுங்கு-நுணுகு-நுவணை-நூழை-நொசிவு- ஆ௰௨-அற்பத்தின்பெயர்—கணம்-இறை-வறிது- சின்னம்-கன்று-ஆசு-தன்னம்-ஒட்டு-கிலம்-தோகம்-இட்டிடை- ஆ௰௧

அகறல்கண்ணறையேபாழியாய்வொடுபடர்தலொன்ற *
லகலுளேவியலிடங்களகலமிவ்வெட்டுமாகுந் *
திகழ்செம்மையிருசுசெப்பஞ்செவ்வனேர்செவ்வையைந்தா *
நிகழுஞ்சேண்சேய்மைதூரநீளிடைதானுமப்பேர் (௰௨)

வடிதலேயொழுகல்போகல்வரியுறைவார்தறீர்த *
னெடிலொடாயதமேநேர்புநெடுமைசேண்கொடிநீளப்பே *
ரடையவெல்லாஞ்சமத்தமடங்கலேயகிலம்யாவு *
முடியவேயனைத்தகண்டமுழுவதாமுற்றுமப்பேர் (௰௩)

குறைதலின்பேர்நிரப்பேகுன்றலேபருகலஃகல் *
சிறுகலேயீனமூனஞ்சிங்கலேயெஞ்சறேய்வாந் *
துறுமலேசடிலத்தோடுதுன்னலேகுறுகல்வீங்கல் *
செறிதலிபொதுளல்செத்துத்திணுங்கல்பத்துநெருங்கல் (௰௪)

பிறங்குதறிளைத்தலார்த்தல்பெருகுதல்கழுமன்மல்க *
னிறைந்திடலாந்துவன்றல்பூரணங்கமமுநேரும் *
பறைந்தபால்பயலருத்தம்பாகங்கூறைந்தும்பாதி *
யறைந்தசீர்குருக்கனஞ்ஞாட்பதிபாரம்பொறையுமாமே (௰௫)

மிருதுவேசுகுமாரந்தான்மென்மையாமிலகுநொய்வு *
மருவியவிலேசிம்மூன்றும்வகுத்திடுநொய்மையின்பேர் *
துருவமேதுவமேசற்றுஞ்சலியாதுதோன்றிநிற்றல் *
கருதுபற்றுக்கோடேத்தங்கந்துதாத்தஞ்சமும்பேர் (௰௬)

அளவையேகடனேகச்சமளத்தலினுமமுப்பே *
ரளவின்மையமானமற்றையபாரமேயநந்தமுப்பேர் *
வெளிபடாத்துதைதலோடுததைத்தலுமிடைதலென்ப *
வொளிபெறுகழிவுங்கூர்ப்புமுள்ளதுசிறத்தலின்பேர் (௰௭)

அடிமுதலெழுவாய்மோனையாதிபூருவந்தலைத்தா *
னிடைசமன்புகமேநாப்பணெய்துமத்தியநள்ளும்பேர் *
கடையின்பேரிறுதியந்தங்கட்டியபின்னேமுற்று *
முடிவுடனெல்லையாகுமொழிந்திடுமீறுமப்பேர் (௰௮)

அகலத்தின்பெயர்—அகறல்-கண்ணறை-பாழி-ஆய்வு-படர்தல்-ஆன்றல்-அகலுள்-வியலிடம் ஆக ௮. செவ்வையின்பெயர்—செம்மை-இருசு-செப்பம்-செவ்வன்-நேர் ஆக ௫. தூரத்தின்பெயர்—சேண்-சேய்மை-நீளிடை ஆக ௩

நீளத்தின்பெயர்—வடிதல்-ஒழுகல்-போகல்-வரி-உறை-வார்தல்-தீர்தல்-நெடில்-ஆயதம்-நேர்பு-நெடுமை-சேண்-கொடி ஆக ௰௩
முழுவதின்பெயர்—அடைய-எல்லாம்-சமத்தம்-அடங்கல்-அகிலம்-யாவும்-முடிய-அனைத்து-அகண்டம்-முற்றும் ஆக ௰

குறைதலின்பெயர்—நிரப்பு-குன்றல்-அருகல்-அஃகல்-சிறுகல்-ஈனம்-ஊனம்-சிங்கல்-எஞ்சல்-தேய்வு ஆக ௰. நெருங்கலின்பெயர்—துறுமல்-சடிலம்-துன்னல்-கஞறல்-வீங்கல்-செறி-நளி-பொதுளல்-செற்று-திணுங்கல் ஆக ௰

நிறைந்திடலின்பெயர்—பிறங்குதல்-திளைத்தல்-ஆர்தல்-பெருகுதல்-கழுமல்-மலிகல்-துவன்றல்-பூரணம்-கமம் ஆக ௯
பாதியின்பெயர்—பால்-பயல்-அருத்தம்-பாகம்-கூறு ஆக ௫
பாரத்தின்பெயர்—சீர்-குரு-கனம்-ஞாட்பு-பொறை ஆக ௫

மென்மையின்பெயர்—மிருது-சுகுமாரம் ஆக ௨
நொய்ம்மையின்பெயர்—இலகு-நொவ்வு-இலேசு ஆக ௩
சலியாதுநிற்றலின்பெயர்—துருவம்-துவம் ஆக ௨
பற்றுக்கோட்டின்பெயர்—ஊற்றம்-கந்து-தா-தஞ்சம் ஆக ௪

அளத்தின்பெயர்—அளவை-கடன்-கச்சம் ஆக ௩
அளவின்மையின்பெயர்—அமானம்-அபாரம்-அநந்தம் ஆக ௩
நுடைதலின்பெயர்—துதைதல்-ததைதல் ஆக ௨
உள்ளதுசிறத்தலின்பெயர்—கழிவு-கூர்ப்பு ஆக ௨

அடியின்பெயர்—முதல்-எழுவாய்-மோனை-ஆதி-பூருவம்-தலைத்தாள் ஆக ௬. இடையின்பெயர்—சமன்-பகல்-நாப்பண்-மத்தியம்-நள் ஆக ௫. கடையின்பெயர்—இறுதி-அந்தம்-பின்-முற்று-முடிவு-எல்லை-ஈறு ஆக ௭

நாளொடுவரையேமானந்தனை துணைபவதிமட்டே *
காளொடுபிரமாணங்களளவின்பேர்கருதிலொன்பான் *
கூறியவெல்லையின்பேர்கொற்றமேவரைப்புக்காட்டை *
யேறியபரியந்தத்தோடேணியிவ்வைந்துமென்ப (௰௯)

குருகுபாறவளம்வெள்ளைகுருத்துவால்சுவேதம்பாண்டு *
றரைவிளர்பத்தும்வெண்மைசிதமுஞ்சுக்கிலமுநாட்டுங் *
குருதிகிஞ்சுகமிராகங்குறித்திடுஞ்சேதுப்பூவ *
லருணன்செய்சோணஞ்செக்கராத்தஞ்சேப்பிவைசிவப்பாம் (௨௰

பாசுபைபரிதஞ்சாமம்பசுமைசாமளமேபச்சை *
பேசுபிங்கலம்பசப்புப்பீதகம்பீதம்பொன்மை *
பூசியகுரால்புற்கோடுபுகர்கபிலமுமாமென்ப *
மாசின்பேர்கறைகளங்கமலினமாங்கசடுமப்பேர் (௨௧)

இருண்மணிநீலநல்லமேற்றகாளகமேகாளங் *
கருள்களங்காரிகார்மால்கறைமாயுங்கறுப்பின்பேரோ *
விரியண்மின்னிலவுவில்வாள்வெயினிழல்வாமநீம *
மரிநகைக்கிரணங்காந்தியாஞ்சோதியொளியீரேழ்பேர் (௨௨)

அலங்குதனகல்விளங்கலவிர்தலிஞொடுவயங்க *
விலங்குதன்மிளிர்தன்மின்னவிலகுதலுடனிமைத்த *
றுலங்குதலொளிர்தலெங்குஞ்சுடருதல்பிறழ்தலீரேழ் *
நலங்கொளவொளிசெயற்பேர்தயங்கலுநாட்டலாமே (௨௩)

எழில்வண்ணம்யாணர்மாமையிராமமேர்நவ்விநோக்குஞ் *
செழுமையேசேடுசெவ்விசித்திரநலமேமாதர் *
குழகொடுபொற்புநன்குகோலமேமணிவனப்புப் *
பழிபடாவிடங்கமாழைபத்திரந்தோட்டிபாங்கு (௨௪)

சுந்தரமணங்குமஞ்சுசொக்குத்தேசிகமம்பொன்னே *
சந்தங்கராரிகைவின்பூத்தளிமமேவாமங்காம் *
ரந்தமேமயமேயொண்மையாய்ந்தவாறேழுந்தானே *
வந்திடுமழகின்பேராம்வட்கல்புல்லெனன்மழுங்கல் (௨௫)

அளவின்பெயர்—தாறு-வரை-மானம்-தனை-துணை-அவதி-மட்டு-காறு-பிரமாணம் ஆ ௯
எல்லையின்பெயர்—கொற்றம்-வரைப்பு-காட்டை-பரியந்தம்-ஏணி ஆ ௫

வெண்மையின்பெயர்—குருகு-பால்-தவளம்-வெள்ளை-குருத்து-வால்-சுவேதம்-பாண்டு-நரை-விளர்-சிதம்-சுக்கிலம் ஆ ௰௨
சிவப்பின்பெயர்—குருதி-கிஞ்சுகம்-இராகம்-சேது-பூவல்-அருணம்-சேய்-சோணம்-செக்கர்-அரத்தம்-சேப்பு ஆ ௰௩

பச்சையின்பெயர்—பாசு-பை-அரிதம்-சாமம்-பசுமை-சாமளம் ஆ ௯. பொன்மையின்பெயர்—பிங்கலம்-பசப்பு-பீதகம்-பீதம் ஆ ௪. புகர்நிறத்தின்பெயர்—குரால்-புற்கு-கபிலம் ஆ ௩
மாசின்பெயர்—கறை-களங்கம் மலினம்-கசடு ஆ ௪

கறுப்பின்பெயர்—இருள்-மணி-நீலம்-நல்லம்-காளகம்-காளம்-கருள்-களம்-காரி-கார்-மால்-கறை-மாயம்- ஆ ௰௩
ஒளியின்பெயர்—விரியல்-மின்-நிலவு-வில்-வாள்-வெயில்-நிழல்-வாமம்-நீமம்-அரி-நகை-கிரணம்-காந்தி-சோதி ஆ ௰௪

ஒளிசெயலின்பெயர்—அலங்குதல்-நகல்-விளங்கல்-அவிர்தல்-வயங்கல்-இலங்குதல் மிளிர்தல்-மின்னல்-இலகுதல்-இமைத்தல்-துலங்குதல்-ஒளிர்தல்-சுடருதல்-பிறழ்தல்-தயங்கல் ஆ ௰௫

அழகின்பெயர்—எழில்-வண்ணம் யாணர்-மாமை-இராமம்-ஏர்-நவ்வி-நோக்கு-செழுமை-சேடு-செவ்வி-சித்திரம்-நலம்-மாதர்-குழகு-பொற்பு-நன்கு-கோலம்-மணி-வனப்பு-விடங்கம்-மாழை-பத்திரம்-தோட்டி-பாங்கு உரு

சுந்தரம்-அணங்கு-மஞ்சு-சொக்கு-தேசிகம்-அம்-பொன்-சந்தம் காரிகை-கவின்-பூ-தளிமம்-வாமம்-காமர்-அந்தம்-மயம்-ஒண்மை-(௰எ) ஆ ௪௨. மழுங்கலின்பெயர்—கட்கல்-புல்லெனல் ஆ உ

வரிபுகர்சாயல்சந்தமாமைகேழ்பசப்புவண்ணங் *
குருவுருவருணமேனியீராறுநிறப்பேர்கூறுங் *
கருதுகட்டழகுகாமர்கருதலங்காரமும்பேர் *
பெருகியவிசித்திரந்தான்பேரழகாகுமென்ப (௨௫)

குருளையேமழவுவெண்மைகுழவுகோமளமேகொம்மை *
புருவையௌவனமேநாகுபோதகந்தருணநவ்வி *
முருகிளையிளமையீரேழ்முற்றலேவிருத்தமூப்பா *
மருவியவண்ணஞ்சந்தம்வடிவின்பேர்செண்ணமாமே (௨௭)

மிடல்வயந்திண்மைமைந்துமெய்ந்நலந்தீரமும்பன் *
முடலைகொன்வாய்மைகூளிமூரியேயூக்கமீளி *
யடல்விறலீட்டேயேணமாண்மையேதிறலேநோன்மை *
முடுகலேமல்லல்பாழிமொய்ம்புரன்முரணேதுப்பு (௨௮)

தானமேமதமேதோற்றஞ்சத்துலந்தாவேயாற்றன் *
மானமல்லுரமேமூன்புமதுகையேயெறுழெண்ணைந்து *
மூனமில்வலிவீரப்பேருறுபராக்கிரமஞ்சூர *
மீனமில்சௌரியம்வீரியமேசேவகமுமாமே (௨௯)

தளர்விலாவமைதியான்றல்சால்பொடுசெழுமைவாய்த்தல் *
வளநிறைமாண்புமாண்டன்மாண்பத்துமாட்சிமைப்பேர் *
நளிர்பனியளிசீதந்தண்ணன்மழைசாந்தமேழுங் *
குளிர்வளப்பங்கொழுப்பாங்கொழுமையேசெழுமையென்ப ௩௰

மேதைஞாபகந்தெருட்சிமிகுமதியுணர்வுஞானம் *
போதமேதெளிவுபுந்திபுலனுரனறிவின்பேரா *
மேதகுபுனிதந்தூவேமேத்தியஞ்சௌசந்தூய்மை *
தூய்துபாவனமேசுத்தஞ்சுசிபவித்திரந்துப்பும்பேர் (௩௧)

குறைவிலாவலனேவென்றிகொற்றமேவெற்றமுல்லை *
விறல்சயம்வாகையாடுவிசயம்பத்திவைவெற்றிப்பேர் *
மறுவில்சீர்விபவமாடுவாழ்க்கையேவிருத்தியாக்கம் *
பொறியிடந்திருப்பெருக்கம்போற்றியவெறுக்கைசெல்வம் (௩௨)

நிறத்தின்பெயர்—வரி-புகர்-சாயல்-சந்தம்-மாமை-கேழ்-பசப்பு வண்ணம்-குரு-உரு-வருணம்-மேனி ஆ௰உ
கட்டழகின்பெயர்—காமர்-அலங்காரம் ஆ௨
பேரழகின்பெயர்—விசித்திரம் (க)

இளமையின்பெயர்—குருளை-மழவு-வெண்மை-குழவு-கோமளம்-கொம்மை-புருவை-யெளவனம் நாகு-போதகம்-தருணம்-நவ்வி-முருகு-இளை ஆ௰சு. மூப்பின்பெயர்—முற்றல்-விருத்தம்-ஆ௨. வண்ணத்தின்பெயர்—சந்தம் (க) வடிவின்பெயர்—செண்ணம் (க)

வலியின்பெயர்—மிடல்-வயம்-திண்மை-மைந்து-மெய்ந்நலம் தீரம்-உம்பல்-முடலை-கொன்-வாய்மை-கூளி-மாரி-ஊக்கம்-மீளி-அடல்-விறல்-ஈடு-எண்-ஆண்மை-திறல்-நோன்மை-முடுகல் மல்லல்-பாழி-மொய்ம்பு உரன்-முரண்-துப்பு உஅ

தானம்-மதம்-தோற்றம்-சத்துவம்-தாவு-ஆற்றல்-மானம்-மல்-உரம்-முன்பு-மதுகை-எறுழ் (௰உ) ஆ௨௰. வீரத்தின்பெயர்—பராக்கிரமம்-சூரம்-செளரியம்-வீரியம்-சேவகம் ஆரு

மாட்சிமையின்பெயர்—அமைதி-ஆன்றல்-சால்பு-செழுமை-வாய்த்தல்-வளம்-நிறை-மாண்பு-மாண்டல்-மாண் ஆ௰. குளிரின்பெயர்—நளிர்-பனி-அளி-சீதம்-தண்-மழை-சாந்தம் ஆஎ. வளப்பத்தின்பெயர்-கொழுப்பு(க) கொழுமையின்பெயர்-செழுமை(க)

அறிவின்பெயர்—மேதை-ஞாபகம்-தெருட்சி-மதி-உணர்வு-ஞானம்-போதம்-தெளிவு-புந்தி-புலன்-உரன் ஆ௰க
சுத்தத்தின்பெயர்—புனிதம் தூ-மேத்தியம்-செளசம்-தூய்மை-தூய்து-பாவனம்-சுசி-பவித்திரம்-துப்பு ஆ௰

வெற்றியின்பெயர்—வலன்-வென்றி-கொற்றம்-வெற்றம்-முனை-விறல்-சயம்-வாகை-ஆடு-விசயம் ஆ௰. செல்வத்தின்பெயர்—சீர் விபவம்-மாடு-வாழ்க்கை-விருத்தி-ஆக்கம்-பொறி-இடம்-திரு-பெருக்கம் வெறுக்கை ஆ௰க

 எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி.

பரிவுநார்வாரமீரம்பற்றளிபாசமன்பாம் *
புரிவாணநேயமும்பேர்போற்றியதயைபிரக்கங் *
கருணையேகிருபைமற்றுக்கருதியதகவிவ்வைந்து *
மருளின்பேருழுவலென்பதெழுமையுந்தொடர்ந்தவன்பு (௩௩)

உன்னமேயகமேசித்தமுள்ளமேயிதயநெஞ்சு *
முன்னமேழ்மனத்தின்பேராமுதிர்சிந்தைநினைவுசேத்துச் *
சொன்னவிங்கிதங்கருத்துச்சூழலெண்ணங்குறிப்பாம் *
வன்மைநாட்டியந்தியானமதம்வினையேடலும்பேர் (௩௪)

கண்ணலேகருதல்பேணல்காணலேநுதலல்சுட்ட *
லெண்ணலேபுகறலெட்டுங்குறித்திடலென்னலாகு *
நண்ணியகணித்தலோடுநாட்டியகுணித்தலெல்லா *
மண்ணுளோர்வரையறுத்தற்பெயரொன்பமதித்தலும்பேர் (௩௫)

உன்னலேபடர்தலூழ்த்தலுள்ளுதலொடுசிந்தித்தன் *
முன்னலேவலித்தலூகமொழிபவேநினைத்தலெண்பேர் *
மன்னுசெம்மாப்பேமாப்புமற்றையெக்கழுத்தமும்பே *
சின்னவையிறுமாப்பாகுமிவையேவீற்றிருத்தலென்ப (௩௬)

தருக்கொடுமதர்ச்சிமத்தந்தன்குபாடவங்களிப்புச் *
செருக்கபிமானமேமந்திகழ்பெருமிதமதர்ப்பு *
பொருத்திடுமதர்வீராறும்புகலுமுள்ளக்கலிப்பா *
முருத்திடுஞானஞ்சீலம்மாதுநல்லுணர்வினுமம் (௩௭)

நகைகடிமகிழ்ச்சியேமநயஞ்சுகந்தொய்யலின்ப *
மகிழுமானந்தமொன்றேமன்னுபேரின்பமென்ப *
திகழ்நனவுணர்வுதேறறேற்றநற்றெளிவுநாற்பேர் *
புகழ்பெருகமித்தலேன்றல்சகித்திடல்பொறைமுப்பேரே (௩௮)

நறுமையேவிழுமஞ்சேடுநயநன்றியாணர்நன்ன *
ருறுதியாங்கடவுளொண்மையுத்தமம்பத்துநன்று *
மறமென்பதருமந்தானேயாகுமேழின்பேர்தெய்வ *
நிருவியவிதியேயுண்மைவரன்முறைநியதியும்பேர் (௩௯)

அன்பின்பெயர்—பரிவு-நார்-வாரம்-ஈரம்-பற்று-அளி-பாசம்-புரிவு-ஆணம்-நேயம் ஆக ௰. அருளின்பெயர்—தயை இரக்கம்-கருணை-கிருபை-தகவு ஆக ௫. எழுமையுந்தொடர்ந்தவன்பின்பெயர்—உழுவல் (௧)

மனத்தின்பெயர்—உன்னம்-அகம்-சித்தம்-உள்ளம் - இதயம்-நெஞ்சு-முன்னம் ஆக ௭. குறிப்பின்பெயர்—சிந்தை-நினைவு-சேத்து இங்கிதம்-கருத்து-சூழல்-எண்ணம் வன்மை-நாட்டியம்-தியானம் மதம்-வினை-எடல் ஆக ௰௩

குறித்தலின்பெயர்—கண்ணல்-கருதல்-பேணல்-காணல்-நுதலல் சுட்டல்-எண்ணல்-புகறல் ஆக ௮
வரையறுத்தலின்பெயர்—கணித்தல்-குணித்தல்-மதித்தல் ஆக ௩

நினைத்தலின்பெயர்—உன்னல்-படர்தல்-ஊழ்த்தல்-உள்ளுதல்-சிந்தித்தல்-முன்னல்-வலித்தல்-ஊகம் ஆக ௮. ஏமாப்பின்பெயர்—செம்மாப்பு-எக்கழுத்தம் ஆக ௨. இவ்விரண்டும் இறுமாப்பிற்கும் பெயராம்-இவையேவீற்றிருத்தற்கும்பெயராம். *

உள்ளக்களிப்பின்பெயர்—தருக்கு-மலர்ச்சி-மத்தம்-த்ன்கு- பாடவம்-களிப்பு-செருக்கு-அபிமானம்-ஏமம்-பெருமிதம்- மதர்ப்பு-மதர்வு ஆக ௰௨
நல்லுணர்வின்பெயர்—ஞானம்-சீலம் ஆக ௨

இன்பத்தின்பெயர்—நகை - கடி - மகிழ்ச்சி- ஏமம்-நயம்-சுகம்-தொய்யல் ஆக ௭. பேரின்பத்தின்பெயர்—ஆனந்தம் (௧)
தெளிவின்பெயர்—நனவு உணர்வு-மீதறல் தேற்றம் ஆக ௪
பொறையின்பெயர்—கமித்தல்-மீநான்றல்-சகித்திடல் ஆக ௩

நன்றின்பெயர்—நறுமம்- விழுமம்-சேடு- நயம்-நன்றி-யாணர்-நன்னர்-கடவுள்-ஒண்மை-உத்தமம் ஆக ௰
தருமத்தின்பெயர்—அறம்(௧) ஊழின்பெயர்—தெய்வம் - விதி-உண்மை-வரன்முறை-நியதி ஆக ௫

தவமென்பவிரதநோன்பாமுவவொடுதவசுமாகு *
முவகைமாராயமற்றையோகையேபிரியமும்பேர் *
நவமதாங்கேண்மைகண்ணேநாகரிகங்கண்ணோட்ட *
மிவைநயப்புணர்வுமாமேயேணிலையுடைமையென்ப (௪௰)

தூக்கியகேண்மையேகேடொடர்பென்பநட்புமுப்பே *
ரூக்கமேயுரனிரண்டுமுள்ளத்தின்மிகுதியென்ப *
நீக்கலாவகைதிறங்கணிகரிலாக்கூறுபாடே *
யாக்கமேபலன்பயன்பேறதிகமூதியமிலாபம் (௪௧)

வெறுப்பொடுமுனைவொர்ல்லாமை வேண்டாமையுவர்ப்பேமாவே
யறுத்திடலவாவின்மைப்பேரலமென்பதமையுமென்ற *
றுறத்தல்சார்பறுத்தலோடுதுறவியேவிரத்திமுப்பேர் *
மறுத்தனாண்சமழ்ப்புவெள்கல்வட்கலுட்கிலச்சைவெட்கம் (௪௨)

ஒருமைதோட்டிமைகுறிப்போடொற்றுமையென்பமுப்பேர் *
தருபெருந்துணையேதுப்புச்சகாயமேயிணையும்பேராம் *
பெருகியமன்னறுஞ்சறிதிநிலைபெறுதன்முப்பேர் *
விரவியதாணுவும்பேர்மேவியவாணையேவல் (௪௩)

செயன்முறைநடையாசாரஞ்செய்திகையறையேகையே *
யியல்புமஞ்சரியேநீள்சாரித்திரமொழுக்கம்பத்தா *
மயலறுநெறிநியாயமறியாதநீதிமுப்பேர் *
வியனுறுமழுக்கின்மைக்குவிமலமுமமலமும்பேர் (௪௪)

தொல்லைமுன்பண்டுமுந்தைதொன்றுபூருவம்புராண *
மொல்லையேபுராதனத்தோடுத்தலூழ்பழமைபத்தா *
நல்லநூதனம்விருந்துநவங்கடிபுத்தேள்கோடி *
புல்லியயாணர்வம்புபுனிறென்பான்புதுமையின்பேர் (௪௫)

நீக்கிலாத்துப்புமல்லனெடியமங்கலமேபூவே *
போக்கமேமலர்ச்சிபொம்மல்பொற்பிவைபொலிவென்பேராந்-
தீர்க்கமேதரிப்புமன்றந்தேறிவைநிச்சயப்பே *
ராக்கமேநந்தலென்பவபிதானநாமம்பேராம் (௪௬)

தவத்தின்பெயர்—விரதம்-நோன்பு-உவசு-தவசு ஆ௫
உவகையின்பெயர்—மாராயம்-ஓகை-பிரியம் ஆ௩
கண்ணோட்டத்தின்பெயர்—கேண்மை-கண்-நாகரிகம்-நயப்புண
ர்வு ஆ௪. நிலையுடைமையின்பெயர்—ஏண் (க)

நட்பின்பெயர்—கேண்மை-கேள்-தொடர்பு ஆ௩
உள்ளத்தின்மிகுதியின்பெயர்—ஊக்கம்-உரன் ஆ௨
கூறுபாட்டின்பெயர்-வகை திறம்-ஆ௨. இலாபத்தின்பெயர்—
ஆக்கம்-பலன்-பயன்-பேறு-அதிகம் ஊதியம் ஆ௬

அவாவின்மையின்பெயர்—வெறுப்பு-முனை-ஒல்லாமை - வேண்
டாமை-உவர்ப்பு-மா-அறுத்திடல் ஆ௭. அமையுமென்றலின்பெ
யர்—அலம் (க) துறத்தலின்பெயர்—சார்பறுத்தல்-துறவி- விர
த்தி-ஆ௩. வெட்கத்தின்பெயர்—மறுத்தல்-நாண்-சமழ்ப்பு-வெ
ள்கல்-வட்கல்-உட்கு-இலச்சை ஆ௭

ஒற்றுமையின்பெயர்—ஒருமை தோட்டிமை-குறிப்பு ஆ௩.சகா
யத்தின்பெயர்—துணை-துப்பு-இணை ஆ௩. நிலைபெறுதலின்பெ
யர்—மன்னல்- துஞ்சல்-திதி - தாணு ஆ௪. ஏவலின்பெயர்—
ஆணை. (க)

ஒழுக்கத்தின்பெயர்—செயல் முறை- நடை - ஆசாரம்- செய்தி-
கைபறை-கை-இயல்பு-மஞ்சரி-சாரித்திரம் ஆ௰
நீதியின்பெயர்—நெறி-நியாயம்-மரியாதம் ஆ௩
அழுக்கின்மையின்பெயர்—விமலம்-அமலம் ஆ௨

பழமையின்பெயர்—தொல்லை-முன்-பண்டு-முந்தை- தொன்று-
பூருவம்-புராணம்-ஒல்லை-புராதனம் ஊழ் ஆ௰
புதுமையின்பெயர்—நூதனம்- விருந்து-நவம் -கடி-புத்தேள்-
கோடி-யாணர்-வம்பு-புனிறு ஆ௮

பொலிவின்பெயர்—திப்பு-மல்லல்-மங்கலம்-பூ-போக்கம்-மலர்
ச்சி-பொம்மல்-பொற்பு ஆ௮. நிச்சயத்தின்பெயர்—தீர்க்கம்-
தரிப்பு- மன்றம்- தேறு ஆ௪. ஆக்கத்தின்பெயர்—நந்தல் (க)
பேரின்பெயர்—அபிமானம் - நாமம் ஆ௨

பாங்கொடுகர்ணிதாயம்பால்கெழுதகைமைபாட்சி *
யீங்கிலைவுரித்திறுமைமெண்ணம்மகணிதமென்ப *
நீங்கருநிலைதண்டாமைநிகரிலாணுமையும்பேர் *
பாங்குறுமரபுபாரம்பரியமேமுறைமையாகும் (௪௭)

வியப்புவிம்மிதத்தினோடுவிசித்திரமிறும்பூதின்ன *
மயக்கிலாவதிசயப்பேர்மற்றையற்புதமுமாகுஞ் *
செயத்தகுகாரணப்பேர்திறமேதுப்பொருட்டுவாயி *
னயத்தகுநிமித்தமும்பேர்நாடுங்கால்வழியேபின்னும் (௪௮)

மல்லொடுவளமேவாரிபகுதியும்வருவாயின்பேர் *
புல்லுதல்கெழுமலென்பபொருந்தலேயமைவுமப்பேர் *
பல்பலமுறையின்பேரோபரியாயந்திணைகுடிப்பேர் *
நல்லதாம்வெகுவிதந்தானுவிதம்விவிதமாமே (௪௯)

அறிவுசேதனஞ்சைதன்னியமசேதனமறிவின்மைப்பேர் *
பிறமுதுக்குறைவுதானேபேரறிவென்றுகூறுங் *
குறைவிலாக்கோணைகன்னிகுமரியேயழிவின்மைப்பே *
ருறவியேயுறவின்பேராநிறைவேறல்சபலமாமே (௫௰)

உம்மையேகழிபிறப்பாமொழிந்திடுவருபிறப்பிற் *
கம்மையுமறுமையும்பேரானவிப்பிறப்பினும *
மிம்மையாமொருபிறப்பேயியம்பிடிலொருமைதானே *
யெம்மையெப்பிறப்புமென்பவேழ்பவமெழுபிறப்பாம் (௫௧)

முருகுதேன்கடியாமோதமோதவங்கந்தம்வேரி *
விரைநறைமன்றல்வம்புவெறிமருமணம்பன்முப்பேர் *
பரிமளமிகுமணப்பேர்பரவிநாறுதல்கந்தித்தல் *
விரவியகமழ்தலும்பேர்மேவுதுர்க்கந்தம்பூதி (௫௨)

தூயசேறமுதுசாரஞ்சுவைதீந்தேமினிமையின்பேர் *
தீயதேங்கனிதித்திப்பாமதுரமுமாகுந்தித்த *
மாயதுகைத்தலின்பேராமிலம்புளிப்பதாகுங் *
காயமேகடுகமோடுகரிலிவைகாழ்ப்புமுப்பேர் (௫௩)

உரிமையின்பெயர்—பாங்கு-காணி-தாயம்-பால்-கெழுதகைமை-ஆட்சிஆ. ௬. கணிதத்தின்பெயர்—எண்ணம் (௧)
நிலையின்பெயர்—தண்டாமை-ஆறுமை ஆ. ௨
முறைமையின்பெயர்—மரபு-பாரம்பரியம் ஆ. ௨

அதிசயத்தின்பெயர்—வியப்பு-விம்மிதம்- விசித்திரம்- இறும்பூது-அற்புதம் ஆ. ரு
காரணத்தின்பெயர்—திறம்-ஏது-பொருட்டு- வாயில்-நிமித்தம்-ஆ. ரு. பின்னின்பெயர்—வழி (௧)

வருவாயின்பெயர்—மல்-வளம்-வாரி-பகுதி ஆ. ௪
பொருந்தலின்பெயர்—புல்லுதல்-கெழுமல்-அமைவு ஆ. ௩
பல்பலமுறையின்பெயர்- பரியாயம்(௧) குடியின்பெயர்—திணை (௧) வெகுவிதத்தின்பெயர்—நானாவிதம்-விவிதம் ஆ. ௨

அறிவின்பெயர்—சேதனம்-சைதன்னியம்ஆ. ௨. அறிவின்மையின்பெயர்—அசேதனம் (௧) பேரறிவின்பெயர்—முதுக்குறைவு (௧) அழிவின்மையின்பெயர்—கோணை-கன்னி-குமரி ஆ. ௩
உறவின்பெயர்—உறவி (௧) நிறைவேறலின்பெயர்—சபலம் (௧)

கழிபிறப்பின்பெயர்—உம்மை (௧) வருபிறப்பின்பெயர்—அம்மை-மறுமைஆ. ௨. இப்பிறப்பின்பெயர்—இம்மை (௧) ஒருபிறப்பின்பெயர்—ஒருமை (௧) எப்பிறப்பிற்கும்பெயர்—எம்மை-(௧) எழுபிறப்பின்பெயர்—எழ்பவம் (௧)

மணத்தின்பெயர்—முருகு-தேன்-கடி-ஆமோதம்-மோதவம்-கந்தம்-வேரி-விரை-நறை மன்றல்-வம்பு-வெறி-மரு ஆ. ௰௩
மிகுமணத்தின்பெயர்—பரிமளம் (௧) நாறுதலின்பெயர்—கந்தித்தல்-கமழ்தல்ஆ. ௨. துர்க்கந்தத்தின்பெயர்—பூதி (௧)

இனிமையின்பெயர்—சேறு-அமுது- சாரம்- சுவை- தீம்-தேம்-ஆ. ௬. தித்திப்பின்பெயர்—தேம்-கனி-மதுரம் ஆ. ௩
கைத்தலின்பெயர்—தித்தம் (௧) புளிப்பின்பெயர்—ஆமிலம்(௧)
காழ்ப்பின்பெயர்—காயம்-கடுகம்-காரில் ஆ. ௩

(௱௭௮) எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி.

வெருவுசூர்பீர்வெறுப்புவெறிவெடிகவலைவீம *
முருவுபேம்பிறப்புக்கொன்னையுட்குநாம்பனிப்புக்கோரந் *
தருபுலம்புடனடுப்புத்தாருணம்பயமச்சப்பேர் *
துரிதமேபிரமம்வந்துசூழ்கதனங்கலக்கம் (௫௪)

நிலைபெருதோட்டறேங்கன்ஞெரோல்லனல்கூசறிட்க *
லுல்மரலனுக்கன்ஞொள்கலொடுதுடுக்கெனலேதுட்கல் *
குலைதல்வெய்துறலேய்ச்சக்குறிப்புத்துண்ணெனலுங்கூறுந் *
தலையிழிபுடனேசாய்ப்புத்தஞ்சமேதண்மைதாழ்வு. (௫௫)

விதிர்ப்பொடுவிதப்புக்கம்பம்விதலைகம்பிதம்பனிப்புப் *
பொதிர்ப்புலைவிவைநடுக்கம்பொருந்திடுமெளிமையெண்மை *
மதிப்பிலாப்பரிபவங்கண்மற்றிழிதகவுமாகும் *
பிதற்றியமருட்சிதானேபேதைமைமடமுமாகும் (௫௬)

ஆசுதோம்பிழையேபோக்கேயரில்கரில்பழியரிப்புக் *
காசுமைதவறேமானங்கறைகுறைமிறைகழிப்பு *
மாசொடுதுகளேதப்புமறுநவைவசைகொழிப்பே *
யேசொடுபுரையேகோதேயேதமூவொன்பான்குற்றம் (௫௭)

வழுக்கொடுமறவிபுன்மைமறலொடுபொல்லாங்கேகீ *
ழிழுக்கொடுசோர்வுபொச்சாப்பிகழ்ச்சியுமறத்தலின்பேர் *
பழித்திடுந்துவ்வுமன்னும்பகர்ந்திடுமிழிவுதானே *
யிழைத்திடுந்தளர்ச்சியேட்டையசாவுமாமினைவிரக்கம் (௫௮)

கடுகியவெம்மைகோரங்கருமையேபுருமம்வெப்ப *
மூடனழலழனந்தாபமுருப்பமுட்டணப்பேரொன்பான் *
கொடுமைபின்பேரோசண்டங்கோடணைகடினங்கோரங் *
கடுமையுக்கிரமுறைப்புக்கலாஞ்சடம்வஞ்சம்பூதி (௫௯)

குறையிலம்பாடுமிச்சைகுறுவாழ்க்கைமிடிநிரப்புச் *
சிறுமையேயொத்கமின்மைதீயநல்குரவேயல்கல் *
வறுமையின்பெயர்பன்னொன்றாம்வருதரித்திரமுமாகு *
மறலிகன்முனைமுரண்டாமடிதெவ்வோடரிபகைப்பேர் (௬௰)

அச்சத்தின்பெயர்—வெருவு-சூர்-பீர்-வெறுப்பு-வெறி-வெடி-கவலை-வீமம்-உருவு-பேம்-பிறப்பு-கொன்-உட்கு-நாம்-பனிப்பு-கோரம்-புலம்பு-அடுப்பு-தாருணம்-பயம் ஆ௨௰
கலக்கத்தின்பெயர்—துரிதம்-பிரமம்-கதனம் ஆ௩

அச்சக்குறிப்பின்பெயர்—ஓடல்-தேங்கல்-ஞெமேலெனல்-கூசல்-திட்கல்-உலமரல்-அஞுக்கல்-ஞொள்கல்-துடுக்கெனல்-துட்கல்-குலைதல்-வெய்துறல்-துண்ணெனல்-ஆ௰௩-தாழ்வின்பெயர்—தலையிழிபு-சாய்ப்பு-தஞ்சம்-தண்மை ஆ௪.

நடுக்கத்தின்பெயர்—விதிர்ப்பு-விதப்பு-கம்பம்-விதலை-கம்பிதம்-பனிப்பு பொதிர்ப்பு-உலைவு-ஆ௮-எளிமையின்பெயர்—எண்மை-பரிபவம்-இழிதகவு ஆ௩
பேதைமையின்பெயர்—மருட்சி-மடம் ஆ௨

குற்றத்தின்பெயர்—ஆசு-தோம்-பிழை ※ போக்கு-அரில்-கரில்-பழி-அரிப்பு-காசு-மை-தவறு-மானம்-கறை-குறை-மிறை-கழிப்பு-மாசு-துகள்-தப்பு-மறு-நவை-வசை-கொழிப்பு-ஏசு-புரை-கோது-ஏதம் ஆ௨௭

மறத்தலின்பெயர்—வழுக்கு-மறவி-புன்மை-மறல்-பொல்லாங்கு-கீழ்-இழுக்கு-சோர்வு-பொச்சாப்பு-இகழ்ச்சி ஆ௰
இழிவின்பெயர்—துவ்வு-மன்-ஆ௨-தளர்ச்சியின்பெயர்—எட்டை-அசா-ஆ௨-இரக்கத்தின்பெயர்—இனைவு (௧)

உட்டணத்தின்பெயர்—வெம்மை-கோரம்-கருமை-உருமம்-வெப்பம்-அழல்-அழனம்-தாபம்-உருப்பம் ஆ௯
கொடுமையின்பெயர்—சண்டம்-கோடணை-கடினம்-கோரம்-கடுமை-உக்கிரம்-உறைப்பு-கலாம்-சடம்-வஞ்சம்-பூதி ஆ௰௧

வறுமையின்பெயர்—குறை-இலம்பாடு-மிச்சை-குறுவாழ்க்கை-மிடி-நிரப்பு-சிறுமை-ஒற்கம்-இன்மை-நல்குரவு-அல்கல்-தரித்திரம்-ஆ௰௨-பகையின்பெயர்—மறல்-இகல்-முனை-முரண்-தா-மடி-தெவ்-அரி ஆ௭

※ போக்கு-எனினுமமையும்.

(௮அம்) எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி

வெறுத்தலேசினங்குரோதம்வெகுளிமற்றரிப்புச்சீற்றஞ் *
செறித்திடுங்கலாங்கதங்கள்செயிரொன்பான்கோபத்தின்பேர் *
கறுப்பொடுசிவப்பும்போதக்கன்றலேபுழுங்கல்சீறிக் *
குறித்திடும்புகைதல்பொங்கிக்கொதித்தல்கோபக்குறிப்பாம் (௯௧)

குருத்தமுன்கோபம்வெம்பல்கொந்தலேகனிதல்சோம்பல் *
பெருத்தகோபம்விடைத்தல்பெருகியமுனைதல்சீற *
லுருத்தலேபுலறல்காய்தலுடற்றறீவிரமுமாகுந் *
தரித்திடும்வைரஞ்செற்றஞ்சலம்பவந்தொந்தம்வேரம் (௯௨)

உபவனுக்கங்கவற்சியுயங்குதல்கசிவணங்கே *
யயர்வொடுநொசிவேநோவேயாய்வொடுமிறைசமழ்த்தல் *
வயர்வொடாகுலமழுங்கல்வருத்தமுமைவந்தும்லைவக்குந் *
கயவுசாலூரஞ்சாயல்காட்டுமேம்பாட்டிஞமம் (௯௩)

விற்றெழுவிகிர்தம்பின்னம்விபரீதம்விரூபம்விள்ளல் *
வேற்றுமைதிரிபுபேதம்விகடமீனைந்துந்தானே *
யேற்றியவேறுபாட்டுக்கியம்பியநாமமாகும் *
போற்றியதனிமையேகப்புலம்புகேவலமுமாமே (௯௪)

இருளுணராமைமத்தமிளமைமாழாத்தல்பித்தம் *
வெருள்களிகழுமன்மோகமேவுமின்மத்தமாழ்கல் *
கருதியவனந்தரோமங்களன்பேதுமையன்மைந்து *
மருண்மறன்மால்றன்மூவேழ்மயக்கமாமயர்வுமப்பேர் (௯௫)

தீங்குகோளந்தராயஞ்செப்புவிக்கினமுட்டுப்பா *
டோங்கியவலாபந்தடேயூறேயந்தராமுந்தீதா *
மாங்குளவலைகலாஞ்சியமுங்கலேமடியேஞொள்க *
றாங்கலேயசைவேமத்தஞ்சோகமாலசியஞ்சோம்பாம் (௯௬)

குடிலம்புள்ளுவமேகூடங்குத்திரமாயைகுய்யம் *
படிறுசாட்டியமேவஞ்சம்பட்டிமைதானுமப்பேர் *
செடிசீத்தைசிதம்பிஞேடுசிரணங்குணமின்மைப்பேர் *
மிடிதருந்தாமதப்பேர்விளம்பனமென்பதாமே (௯௭)

கோபத்தின்பெயர்—வெறுத்தல்-சினம்-குரோதம்-வெகுளி-அரிப்பு-சீற்றம் கலாம்-கதம்-செயிர் ஆக ௯
கோபக்குறிப்பின்பெயர்—கறுப்பு-சிவப்பு-கன்றல்-புழுங்கல்-புகைதல்-கொதித்தல் ஆக ௬

முன்கோபத்தின்பெயர்—வெம்பல்-கொந்தல்-கனிதல்-கோம்பல்-ஆக ௪-பெருங்கோபத்தின்பெயர்—விடைத்தல்-முனைதல்-சீறல்-உருத்தல்-உலறல்-காய்தல்-உடற்றல்-தீவிரம் ஆக ௮
வைரத்தின் * பெயர்---செற்றம்-கலம்-பவம்-தொந்தம்-வைரம் ஆக ௫
வருத்தத்தின்பெயர்—உயவு-அனுக்கம்-கவற்சி-உயங்குதல்-கசிவு-அணங்கு-அயர்வு-நொசிவு-நோ-ஆய்வு மிறை-சமழ்த்தல் - வயர்வு-ஆகுலம்-அழுங்கல் ஆக ௰௫
மேம்பாட்டின்பெயர்—கயவு-சாலூரம்-சாயல் ஆக ௩

வேறுபாட்டின்பெயர்—வீற்று-விகிர்தம்-பின்னம்-விபரீதம்-விரூபம்-விள்ளல்-வேற்றுமை-திரிபு-பேதம்-விகடம் ஆக ௰
தனிமையின்பெயர்—ஏகம்-புலம்பு-கேவலம் ஆக ௩

மயக்கத்தின்பெயர்—இருள்-உணராமை-மத்தம்-இளமை-மாழாத்தல்-பித்தம்-வெருள்-களி-கழுமல்-மோகம்-உன்மத்தம் - மாழ்கல்-அனந்தர்-ஏமம்-களன்-பேது-மையல்-மைந்து-மருள்- மறல்-மான்றல்-மயர்வு ஆக ௨௨

தீதின்பெயர்—தீங்கு-கோள்-அந்தராயம் விக்கினம்- முட்டுப்பாடு-அலாபம்-தட்டு-ஊறு-அந்தரம் ஆக ௯
சோம்பின்பெயர்—அலசல்-ஆஞ்சி-அழுங்கல் மடி -ஞொள்கல்-தூங்கல்-அசைவு-மந்தம்-சோகம்-ஆலசியம் ஆக ௰

வஞ்சத்தின்பெயர்—குடிலம்-புள்ளுவம்-கூடம் - சூத்திரம் - மாயை-குய்யம்-படிறு-சாட்டியம்-பட்டிமை ஆக ௯
குணமின்மையின்பெயர்—செடி-சீத்தை-சிதம்பு-சீரணம் ஆக ௪
தாமதத்தின்பெயர்—விளம்பனம் (௧)

* வைரம்-நெடுங்காலமாக நிகழுங்கோபம்.

சிறந்திடவுயிர்களீசன்செய்திடுஞ்சிலநூலை *
மறஞ்செயாவாறேகற்றுமதிமயக்கத்தினாலே *
குறைந்திடுந்தமதுமேற்கோள்கொளீஇயமற்றதுகரந்தே *
யறிந்துமஃதறியாதாரைப்போறலேயறிமடந்தான் (௬௮)

இழிவொடுதிரிதனந்தவிறுதலேமுறிதல்கந்தல் *
வழுகயஞ்சிலைதவழுங்கன்மடிசுதங்கேட்டாநிந்தை *
யிழிவெள்ளணகலொல்லாமையிகழ்ச்சியாமுவர்ப்புமப்பேர் *
குழைவுருவருவருப்புக்குற்சிதம்பயிர்ப்புமாமே (௬௯)

மறமகங்களுடம்பங்கம்வருஞ்செடிதுரிதம்பாவம் *
வறிதுகொண்வீணவிதாவேமன்னியபயனிலாமை *
பறைதருசந்தேகப்பேரயிர்ப்பையங்கடுத்தல்சங்கை *
கறையிலோர்தலைக்காமப்பேர்கைக்கிளையாகுமென்ப (௭௰)

சிறந்திடுஞ்சன்மந்தோற்றஞ்செனனமேபவஞ்சனிப்புப் *
பிறந்தையுற்பவமென்றேழும்பிறப்பாமுற்பத்தியும்பே *
ரறைந்தசூதகமாசூசம்புனிறீயீன்றணிமையின்பேர் *
துறந்தவாலாமைபூப்புத்தொகைமார்தொடாப்பொருட்டே (௭௧)

அன்றேவோடந்தோவாவோவத்தோவோடச்சோவையோ *
வென்னேயெற்றெவனெனுஞ்சொலதிசயமுறவிரங்கன் *
மன்னுமௌவியமேயென்பமனக்கோட்டமழுக்காற்றின்பேர் *
சொன்னநோனாமைகூரஞ்சூழ்ந்திடும்பொறாமைமுப்பேர் (௭௨)

அல்லலேயலக்கண்மம்மாரந்தைகோட்டாலைபீழை *
செல்லல்கேதங்கலக்கஞ்சிறுமைகுருறுகண்புன்கண் *
சொல்லுமிட்டளமின்னாலைதுனிபருவரலேதுக்க *
மொல்லுநோயழுங்கல்பீடையுலமரலல்லகண்டம் (௭௩)

கவ்வையாதனைபழங்கண்கையாறுநடலையையு *
லெவ்வமேதம்வெறுப்பேயிடும்பையேயிடுக்கணின்னல் *
வவ்வியபட்டர்பணித்தல்வறுமைவெய்துறலேபைதல் *
வெவ்வியகவலைநோயவிழுமமாறேழுந்துன்பம் (௭௪)

## அறிந்துமறியார்போறல்—அறிமடம் (க)

கேட்டின்பெயர்—இழிவு-திரிதல்-நந்தல்-இறுதல்-முறிதல்-கந்தல்-வழு-கயம்-சிதைவு-அழுங்கல்-மடி-சுதம் ஆ ய உ. இகழ்ச்சியின் பெயர்—நிந்தை-இழிவு-எள்ளல்-நகல்-ஒல்லாமை-உவர்ப்பு. ஆ ரு
அருவருப்பின்பெயர்—குற்சிதம்-பயிர்ப்பு ஆ உ

பாவத்தின்பெயர்—மறம்-அகம்-கலுடம்-பங்கம்-செடி-துரிதம் ஆ ரு. பயனிலாமையின்பெயர்—வறிது-கொன்-வீண்-விதா- ஆ ச. சந்தேகத்தின்பெயர்—அயிர்ப்பு-ஐயம்-கடுத்தல்-சங்கை- ஆ ச. ஒருதலைக்காமத்தின்பெயர்—கைக்கிளை (க)

பிறப்பின்பெயர்—சன்மம்-தோற்றம்-செனனம்-பவம்-சனிப்பு-பிறந்தை-உற்பவம்-உற்பத்தி ஆ அ. சூதகத்தின்பெயர்—ஆசூசம் (க) ஈன்றணிமையின்பெயர்—புனிறு (க) தோகைமார்தொடர்ப்பொருட்டின்பெயர்—வாலாமை-பூப்பு ஆ உ

அதிசயமுறவிரங்கலின்பெயர்—அன்னோ-அந்தோ-ஆ-ஓ-அத்தோ-அச்சோ-ஐயோ-என்னே-எற்று-எவன் ஆ ய
மனக்கோட்டத்தின்பெயர்—ஔவியம் (க)
அழுக்காற்றின்பெயர்—நோனாமை-கூரம்-பொறாமை ஆ ரு

துன்பத்தின்பெயர்—அல்லல்-அலக்கண்-மம்மர்-அரந்தை-கோட்டாலை-மிழை-செல்லல்-கேதம்-கலக்கம்-சிறுமை-சூர்-உறுகண்-புன்கண்-இட்டளம்-இன்னா-துனி-பருவரல்-துக்கம்-நோய்-அழுங்கல்-பீடை-உலமரல்-அல்லகண்டம் உரு

கவ்வை-யாதனை-பழங்கண்-கையாறு-நடலை-பையுள்-எவ்வம்-ஏதம் வெறுப்பு-இடும்பை-இடுக்கண்-இன்னல்-படர்-பனித்தல்-வறுமை-வெப்துறல்-பைதல்-கவலை-விழுமம்(யகூ) ஆ சஉ

 எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி.

மாதர்நச்சிச்சையேட்டைவயாநம்புநசைநயப்புக் *
காதல்வெப்பம்விருப்பங்காமமேயிராகம்பற்றே *
யாதரம்பெட்புவேட்கையார்வுமேமேவல்வெஃக *
லோதியவிழைவுமூவேழுறுபெயராசையாமே (௭௫)

சூழ்தருமோகநம்பல்சொற்றிடுமிரதிவெஃகை *
ஞுழ்தலேல்கவர்தல்பெட்டல்சார்புடனிவறல்வேண்டல் *
வீழ்தல்வேணவாவீராறும்வேட்கையின்பெருக்கமென்ப *
மாழ்கியவிரகங்காமமதனமேகாமம்நோயாம் (௭௬)

மாரியாமயமேபுன்கண்மடிநிழன்மடங்கல்லையுள் *
சூர்பிணிபுரோகங்குந்தஞ்சூழணங்கீராறுற்றநோய் *
பாரியவாதைபீதிவேதனைபண்ணுநோயா *
மோரும்யாதனைகொல்லாம்நான்விருறுநரகநோயே (௭௭)

அன்னவேயனையசேத்தேயாங்கொப்பப்புரையப்போல *
வின்னவேபொருவவெள்ளவிகலவேகடுப்பமானச் *
சொன்னவேழ்தகவுராக்குத்துணையிணைநிகரநேர *
மன்னும்வீழ்வுறழவந்தேமலைவெண்மூன்றுவமைப்பேரோ (௭௮)

மாலைநீர்தகவுபெற்றிமரபொடுகிழமைவண்மை *
சால்பொடுதகுதிபான்மைதகைமையேயியல்புதன்மை *
பால்விதிகொள்கைபண்புபடிமுறைபரிசிவ்வெல்லாங் *
கோலமார்குணநாலைந்தாங்குணநிறமிரண்டும்பண்பாம் (௭௯)

கையொழியாமைகைதூவாமையாங்கையொழுக்கங் *
கையறற்செயலறற்பேர்கையடையடைக்கலப்பேர் *
மையிலாவுரிமையின்பேர்வருகெழுதகைமையோடு *
பொய்யிலாக்கிழமைமற்றையுரித்தெனப்புகலலாமே (௮௰)

தொடியொருபலமாங்கஃசுசொற்றகாற்பலமாந்தூக்கு *
நெடியகாத்துலாங்களென்பநிறைநூறுபலமேயாகும் *
படியலொன்றேகமென்பத்தென்பதசமாநூறு *
நொடிதரிற்சதமென்றுகுமாயிரநாற்றப்பத்தே (௮௧)

ஆசையின்பெயர்—மாதர்-நச்சு- இச்சை-எட்பை-வயா-நம்பு- நசை-நயப்பு-காதல்-வெப்பம்-விருப்பம்-காமம்- இராகம்- பற்று-ஆதரம்-பெட்பு-வேட்கை-ஆர்வம்- மேவல்- வெஃகல்- விழைவு- ஆ உக

வேட்கைப்பெருக்கத்தின்பெயர்—மோகம்-நம்பல்-இரதி-வெஃகல்-தாழ்தல்-கவர்தல்-பெட்டல்-சார்பு-இவறல்-வேண்டல்- வீழ்தல் வேணவா ஆ யஉ

காமநோயின்பெயர்—விரகம்-காமம்-மதனம் ஆ ௩

நோயின்பெயர்—மாரி-ஆமயம்-புன்கண்-மடி-நிழல்- மடங்கல்-பையுள்-சூர்-பிணி-உரோகம்-குந்தம்-அணங்கு ஆ யஉ

வேதனைபண்ணுநோயின்பெயர்—வாதை-பீதி ஆ உ

நரகநோயின்பெயர்—யாதனை (க)

உவமையின்பெயர்—அன்ன-அனைய-சேத்து-ஆங்கு-ஒப்ப-புரைய-போல-இன்ன-பொருவ-எள்ள-இகல-கடுப்ப-மான-கேள்-தகவு-தூக்கு-துணை-இணை-நிகர-நேர-வீழ்வு-உறழ- அற்று- மலைவு- ஆ உச

குணத்தின்பெயர்—மாலை-நீர்-தகவு-பெற்றி-மரபு-கிழமை-வண்மை-சால்பு-தகுதி-பான்மை-தகைமை-இயல்பு-தன்மை-பால்-விதி-கொள்கை-பண்பு-படி-முறை-பரிசு ஆ உய

பண்பின்பெயர்—குணம்-நிறம் ஆ உ

கையொழியாமையின்பெயர்— கைதூவாமை (க) ஒழுக்கத்தின்பெயர்—கை(க)செயலறலின்பெயர்—கையறல் (க)

அடைக்கலத்தின்பெயர்—கையடை(க) உரிமையின்பெயர்—செழுதகைமை-கிழமை-உரித்து ஆ ௩

ஒருபலத்தின்பெயர்—தொடி (க) காற்பலத்தின்பெயர்— கஃசு (க) தூக்கின்பெயர்—கா-துலாம்-ஆ உ. தூக்கினிறை-நூறுபலம் (க)ஒன்றன்பெயர்—ஏகம்(க)பத்தின்பெயர்—தசம்(க)நூற்றின்பெயர்—சதம்(க)ஆயிரத்தின்பெயர்—நூற்றுப்பத்து (க)

தேங்கியபுகழான்குன்றைக்குணபத்திரன்றிருத்தாள்போற்றி *
வீங்குநீர்ப்பழனஞ்சூழ்ந்தவீணாமண்டலவன்செய்தான் *
பாங்கினுள்விளங்குபண்புபற்றியபெயரினீட்ட *
மோங்கியகவிதையெண்ணிலொன்பதிற்றென்பதொன்றே(அக)

எட்டாவது - பண்புபற்றியபெயர்த்தொகுதி
முற்றிற்று.

ஆ௨ தொகுதி(அ)க்கு-விருத்தம் - கூாயரு.

ஒன்பதாவது

# செயல்பற்றியபெயர்த்தொகுதி.

## காப்பு.

வியன்மிக்கவைரத்தால்வேர்வீழ்த்துபொற்கவடுகொண்டு *
மயன்மிக்கமரகதத்தால்வண்டழைபொதுளிப்பூந்தொத் *
தியலுற்றபதுமராகமெதிர்பிண்டியிறைதாள்போற்றிச் *
செயல்பற்றும்பெயர்க்கூட்டத்தைச்செப்புவமிப்பாற்கேண்மின் (௧)

செயல்விதிகருமங்கன்மஞ்செய்தொழில்வினையுமப்பே *
ரயர்தலேவினைதலாற்றல்குயிறலோடிழைத்தல்செய்த *
னியமித்தல்விதித்தன்மற்றுநிருமித்தலொடுசிட்டித்தல் *
பயனுறப்படைத்தலோடுபாரித்தல்பிறப்பித்தற்பேர் (௨)

தொடலைபுண்டாட்டுப்பொய்தல்சூழ்விளாசனைபேவண்டல் *
கெடவரல்பண்ணைபுட்பக்கிரீடையம்பகேளியோடா *
புடைமுலையாராடற்பேர்பொழுதுபோக்கேவிநோதம் *
படிபாராட்டுதல்குலாவல்பரிந்துகொண்டாடன்மெச்சல் (௩)

உ

ஒன்பதாவது

# செயல்பற்றியபெயர்த்தொகுதி.

காப்பு.

(இதனது பதப்பொருள்.)

வியன்மிக்க-அதிசயமிகுந்த, வைரத்தால்-வச்சிரத்தினால், வேர் வீழ்த்து-வேரோட்டி, பொற்கவடு-பொன்னாலாகியகொம்புகளை, கொண்டு-பொருந்தி, மயம்-அழகு, மிக்க-மிகுந்த, மரகதத்தால் மரகதத்தினால், வண்டழை-அழகியஇலைகள், பொதுளி- தழைக்கப்பெற்று, இயலுற்ற-குணம்பொருந்திய, பதுமராகம்-பதுமராகத்தாலாகிய, பூங்கொத்து-மலர்த்திரள்கள், எதிர் - தோன்றப்பெறுகின்ற, பிண்டி- அசோகவிருட்சத்தினிழலின்கண் வீற்றிருந்த, இறை-கடவுளுடைய, தாள்-பாதங்களை, போற்றி-துதித்து, இப்பால் இனி, செயல்பற்றும்பெயர்க்கூட்டத்தை - செயல்பற்றிய பெயர்த்தொகுதியை, செப்புவம் (யாம்) கூறுவோம், கேண்மின்-கேளுங்களென்றவாறு. *

செய்தொழிலின்பெயர்—செயல் - விதி -கருமம்-கன்மம்-வினை-ஆ௫. செய்தலின்பெயர்—அயர்தல்-வனைதல்-ஆற்றல்-குயிறல்-இழைத்தல்-ஆ௫. பிறப்பித்தலின்பெயர்—நியமித்தல்- விதித்தல்-நிருமித்தல்-சிட்டித்தல்-படைத்தல்-பாரித்தல். ஆ௬.

மகளிர்விளையாட்டின்பெயர்—தொடலை-உண்டாட்டு-பொய்தல்-விலாசனை-வண்டல்-கெடவரல்-பண்ணை-உப்பு-கிரீடை - கேளி- ஓரை ஆ௰௧. பொழுதுபோக்கலின்பெயர்—விநோதம் (௧) மெச்சலின்பெயர்—பாராட்டுதல்-குலாவல்-கொண்டாடல் ஆ௩.

(௱அஅ) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

வதுவைகைப்பற்றலேதிவலஞ்செய்தன்மணங்கல்யாணம் *
விதியுளிவேட்டன்மன்றல்விவாகமென்பேர்விளங்கும் *
புதுவிழாமுருகுசாறுபுத்தேளுற்சவமாஞ்சேறு *
துதைமலர்கொண்டுபோற்றுந்துணங்கறலிரண்டுமப்பேர் (௪)

புனைதல்கைசெய்தல்வேய்தல்பொற்புடனலங்கரித்தல் *
வனைதலேயணிதல்பூசன்மண்ணலொப்பனையென்பேராம் *
வனமலர்மிலைதல்வேய்தன்மலைதல்சூடுதலிம்முப்பேர் *
சினைமலரடைச்சலோடுசெருகுதல்சொருகுதற்பேர் (௫)

அறுத்திடறுய்த்தன்மாந்தலயிறலேயமுதுசெய்தல் *
பொருந்தவேதாங்கைதொட்டல்புசித்தல்போசனமேயார்தல் *
பரிந்தனர்நுகர்தறின்றல்பாரணமிசைதறுற்ற *
விருந்துணர்பேர்விழுங்கலிசைதருநொண்டலுங்கல் (௬)

துயில்கண்வளர்தல்பள்ளிதுயிறலேயுறங்கறுஞ்சல் *
பயிலுங்கண்படையனந்தர்படைகனவோடுபத்து *
மியலுநித்திரையாந்தூங்கலென்பதுநிரம்பாத்தூக்க *
மயல்வொடுத்தலேற்றலாங்கலுவயெழுப்பலாமே (௭)

விரவியவழுதலின்பேர்விம்மலேகலுழ்கலக்கம் *
பொருமுதல்கசிவேயேங்கலுரோதனமிரங்கலெட்டாந் *
தெரிசனம்பார்வைநோக்கஞ்சிறப்பிற்கண்ணுறல்காண்டற்பே *
ரருமையிற்சிறக்கணித்தல்பாங்கமேகடைக்கணித்தல் (௮)

புரவுதானம்பகுத்தல்பொழிதலேயுதவனீட்டல் *
விரவுபகாரம்வேள்விவிதரணங்கவிகைவண்மை *
யருளல்வேளாண்மையீகையளித்தலேயுதாரம்வீச *
றருதலினெடுதியாகங்கொடைகடப்பாடுஞ்சாற்றும் (௯)

படைமயக்குற்றபோதும்படைமடமொன்றிலாதான் *
மடைசெறிகடகத்தோளான்மதிக்குடைமன்னர்மன்னன் *
கெடிமன்னர்வணங்குந்தாளான்கிருட்டினராயன்கைபோற் *
சொன்மடமென்றுசொல்பவரையாதுகொடுத்தலாமே (௰)

விவாகத்தின்பெயர்—வதுவை-கைப்பற்றல்-திவலஞ்செய்தல்-மணம்-கல்யாணம்-விதியுளி-வேட்டல்-மன்றல் ஆக ௮
உற்சவத்தின்பெயர்—விழா-முருகு-சாறு-சேறு-துணங்கறல்- ஆக ௫

ஒப்பனையின்பெயர்—புனைதல்-கைசெய்தல்-வேய்தல்-அலங்கரித்தல்-வனைதல்-அணிதல்-பூசல்-மண்ணல் ஆக ௮
சூடுதலின்பெயர்—மிலைதல்-வேய்தல்-மலைதல் ஆக ௩
சொருகுதலின்பெயர்—அடைச்சல்-செருகுதல்- ஆக ௨

உண்ணலின்பெயர்—அருந்திடல்-துய்த்தல்-மாந்தல்-அயிறல்-அமுதுசெய்தல் கைதொட்டல்-புசித்தல்-போசனம்-ஆர்தல்-நுகர்தல்-தின்றல்-பாரணம்-மிசைதல்-துற்றல் ஆக ௰௪
விழுங்கலின்பெயர்—நொண்டல்-நுங்கல் ஆக ௨

நித்திரையின்பெயர்—துயிலல்-கண்வளர்தல்-பள்ளி-துயிறல்-உறங்கல்-துஞ்சல்-கண்படை * அனந்தர்-படை-கனவு ஆக ௰
நிரம்பாத்தூக்கத்தின்பெயர்—தூங்கல் (௧)
எழுப்பலின்பெயர்—எடுத்தல்-எற்றல் ஆக ௨

அழுதலின்பெயர்—விம்மல்-கலுழ்-கலக்கம்-பொருமுதல்-கசிவு ஏங்கல்-உரோதனம்-இரங்கல்-ஆக ௮. காண்டலின்பெயர்—தெரிசனம்-பார்வை-நோக்கம்-கண்ணுறல் ஆக ௪
கடைக்கணித்தலின்பெயர்—சிறக்கணித்தல்-அபாங்கம் ஆக ௨

கொடையின்பெயர்—பரவு-தானம்-பகுத்தல்-பொழிதல்-உதவல்-திட்டல்-உபகாரம்-வேள்வி-விதரணம்-கவிகை-வண்மை-அருளல்-வேளாண்மை-ஈகை-அளித்தல் உதாரம்-வீசல்-தருதல்-தியாகம்-கடப்பாடு ஆக ௨௰

வரையாதுகொடுத்தலின்பெயர்—கொடை-மடம் (௧)

* அனந்தலெனினுமமையும்.

(ஈகூ) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

போற்றியப்பியிக்கம்பாகம்பொருந்தியபலியேபிண்டஞ் *
சாற்றியபிடிதமையஞ்சரிதையேழ்பிச்சையின்பே *
ரேற்றலேகுறைகோள்பின்சென்றிரத்தலேவேண்டலும்பேர் *
மாற்றலேகரத்தலாகுமறுத்தலுநிறுத்தலும்பேர் (௰௧)

தெரித்தலேவரைதலோடுதீட்டுதல்பொறித்தல்சீறல் *
வரித்தலேயெழுதுதற்பேர்வரிபொறிகணக்கிரேகை. *
விரித்தவக்கரமெழுத்தாம்விரகொடுசிதைத்தறேய்த்த *
லரக்குதல்கீழ்த்தலும்பேரடைவேதூய்தாக்கல்சீத்தல் (௰௨)

அர்ச்சனைவழிபாடேயாராதனைமூன்றும்பூசை *
யெச்சமேகிருதுவேள்வியிட்டியேயசனமோம *
மெச்சியமகமேயூபம்விதியுளியாகமாகு *
நிச்சயமீதூரற்பேரிடங்கழிநெருங்கலும்பேர் (௰௩)

வியர்த்தலேசுவேதம்வேர்வாங்கசிவுமாமயர்வுயிர்த்தல் *
மயக்கறவருத்தந்தீர்தல்வடுப்படல்கதுவாயாமே *
யுயிர்த்தலேவிடுதலென்பவொருங்கென்பவடங்கறேனை *
தயக்குச்சோர்வாம்பிறக்குக்காட்டியவழுவின்பேரே (௰௪)

மூடுதல்கவித்தன்மூய்தன்மூடியவேயரத்தலூர்த *
னீடியநானமென்பநிகழ்த்துமஞ்சனத்திருமம *
மாடலேபடிதறோய்தலாமிவைகுளித்தலென்ப *
பீடறுப்பிறகிடற்பேர்பிறக்கிடல்பின்றலாமே (௰௫)

முடக்கமேமடங்கல்குத்தி முணங்கொடுநொறிலொடுக்க *
மடக்கமாம்வதிதல்வைகலல்கலேயிருத்தலுறைதல் *
விடுத்தலாறுந்தங்கற்பேர்வசித்தலோடிறையுமப்பே *
ரொடுக்கமேபதுங்கல்பார்த்தலுணாத்தலேயுரிஞ்சறேய்த்தல் (௰௬)

மெலிவின்மைதுனம்புணர்ச்சிவிழைச்சொடுவிழைவுதல்லே *
கலவியேகிரீடையாடல்காதலோர்கூட்டமெண்பேர் *
புலவியேபுலத்தலென்பவூடலுமதன்பொருட்டே *
நலமிகுதுனியெனுஞ்சொன்முட்டியபுலவிநீட்டம் (௰௭)

பிச்சையின்பெயர்—பயிக்கம்- பாகம்-பலி- பிண்டம்- பிடிதம்-
ஐயம்-சரிதை ஆ௭
இரத்தலின்பெயர்—ஏற்றல்-குறைகோள்-வேண்டல் ஆ௩
கரத்தலின்பெயர்—மாற்றல்-மறுத்தல்-நிறுத்தல் ஆ௩

எழுதுதலின்பெயர்—தெரித்தல்-வரைதல்-தீட்டுதல்-பொறித்தல்
கிறல்-வரித்தல் ஆ௬. எழுத்தின்பெயர்—வரி-பொறி- கணக்கு-
இரேகை - அக்கரம். ஆ௫. அரக்குதலின்பெயர்— சிதைத்தல்-
தேய்த்தல்-கீழ்தல் ஆ௩. தூய்தாக்கலின்பெயர்—சீத்தல் (௧)

பூசையின்பெயர்—அர்ச்சனை-வழிபாடு-ஆராதனை ஆ௩
யாகத்தின்பெயர்—எச்சம்-கிருது-வேள்வி-இட்டி-அசனம்-ஓமம்
மகம்-யூபம்-விதியுளி ஆ௯
மீதூரலின்பெயர்—இடங்கழி-நெருங்கல் ஆ௨

வேர்வின்பெயர்—வியர்த்தல்-சுவேதம்-கசிவு ஆ௩. வருத்தந்தீர்
தலின்பெயர்—அயர்வுயிர்த்தல் (௧) வடுப்படலின்பெயர்—கது
வாய்(௧)விடுதலின்பெயர்—உயிர்த்தல் (௧) அடங்கலின்பெயர்—
ஒருங்கு (௧) சோர்வின்பெயர்—கயக்கு (௧) வழுவின்பெயர்—
பிறக்கு (௫)

மூடுதலின்பெயர்—கவித்தல்-மூய்தல்-ஆ௨. பரத்தலின்பெயர்
—ஊர்தல்(௧) மஞ்சனத்தின்பெயர்—நானம் (௧) குளித்தலின்
பெயர்—ஆடல்-படிதல்-தோய்தல் ஆ௩
பிறகிடலின்பெயர்—பிறக்கிடல்-பின்றல் ஆ௨

அடக்கத்தின்பெயர்—முடக்கம்-மடங்கல்-குத்தி- முணங்கு-நொ
தில்-ஒடுக்கம்-ஆ௬. தங்கலின்பெயர்—வதிதல்-வைகல்- அல்கல்-
இறுத்தல்-தாழ்தல்-விடுத்தல்-வசித்தல்-இறை ஆ௮
பாந்தலின்பெயர்—ஒடுக்கம் பதுங்கல் ஆ௨. தேய்த்தலின்பெ
யர்—உரைத்தல்-உரிஞ்சல் ஆ௨

காதலோர்கூட்டத்தின்பெயர்—மைதுனம்-புணர்ச்சி- விழைச்சு-
விழைவு-தல்-கலவி-கிரீடை-ஆடல் ஆ௮.புலத்தின்பெயர்—புல
வி-ஊடல் ஆ௨.புலவிநீட்டத்தின்பெயர்—துனி (௧)

கூடியுங்கூட்டமின்மைகுலவியபுலவியென்ப *
ஊடலேநணுகாராயுமாமறுத்திருத்தலாகு *
மாடவர்நீங்கவுள்ளேயடைத்துறறுனியேயென்ப *
ரூடலைத்தீர்த்தலின்பேருணர்த்தலேயொல்லலாகும் (௰௮)

வந்தனம்பணிதல்காணல்வழிபடல்பணிவிறைஞ்ச *
றந்தலைவணங்கல்பார்த்தறாழ்தலொண்பாறுந்தண்டன் *
முந்தியதழுவல்பிள்ளான்முயங்கலாலிங்கனப்பே *
ரந்தமாத்தொழல்கைகூப்பலஞ்சலிகுழ்பிடற்பேர் (௰௯)

துஞ்சலேவீடன்மாளல்சொற்றிடும்விளிவுவீவு *
முஞ்சலேயுலத்தல்பொன்றன்முடிதலேதுவன்றன்மாய்த *
லெஞ்சியமரணம்வியோகமில்லெனல்கழிவிறத்த *
லஞ்சியதபுதல்சாவினபிதானம்பன்னேழாமே (௨௰)

டரிதலேஞெமிர்தல்பற்றுதொடிதலேயிடிதல்சால் *
முரிதலேபிறுதலாறுமுறிதலேயொசிதலும்பே *
ரிரிதலேநெரிதல்சோரலிடைதலேயுடைதலோடு *
சரிதலேகெடுதலேழுஞ்சாய்தலிறுமமாமே (௨௧)

ஒசித்தலேயசைத்தல்கோடலொடித்தலேமுறித்தலின்பே *
ரசித்தலேஞெமிர்த்தலோடேயிறுத்தலுமதன்பேரொன்ப *
வொசித்திடலசைதல்சாய்ந்தேயுவளலுந்துவள்லாமே *
யிசைப்பின்பேர்புணர்ச்சிமற்றையிசைவுமாமியையுமாமே(௨௨)

வசைப்படவலித்தல்சூழ்தல்வளாகமும்வளைத்தன்முப்பே *
ரிழைத்திடிற்பிடித்தலின்பேர்தொடல்பற்றலிருபேராகும் *
விசித்தலேகொடுத்தல்பந்தம்வீக்குதல்சிமிழ்த்தல்யாப்ப *
யசைத்தலேபிணித்தலார்த்தலொன்பதுங்கட்டலாமே (௨௩)

அரிதலின்பேர்சேதித்தலறுத்திடல்விடுவாய்செய்தல் *
விரிவுறச்சூலல்கொய்தல்விதியுளியீர்தலாறும் *
பரிதல்கண்டித்தலோடுபகுத்திடறடிதலெற்ற *
றாமுறத்துமித்தலாறும்வெட்டலாந்தறித்தலும்பேர் (௨௪)

புலவியென்பது—கூடியுங்கூட்டமின்மை
ஊடலென்பது—நணுகாராகியுளாமறுத்திருத்தல்
துனியென்பது—ஆடவர்நீங்கவுள்ளேயடைத்திருத்தல்
ஊடலைத்தீர்த்தலின்பெயர்—உணர்த்தல்-ஒல்லல் ஆ ௨

தண்டனிடலின்பெயர்—வந்தனம்-பணிதல்-காணல்-வழிபடல்-பணிவு-இறைஞ்சல்-வணங்கல்-பார்த்தல்-தாழ்தல் ஆ ௯
ஆலிங்கனத்தின்பெயர்—தழுவல்-விள்ளல்-முயங்கல் ஆ ௩
கும்பிடலின்பெயர்—தொழல்-கைகூப்பல்-அஞ்சலி ஆ ௩

சாவின்பெயர்—துஞ்சல்-வீடல்-மாளல்-விளிவு-வீவு-முஞ்சல்-உலத்தல்-பொன்றல்-முடிதல்-துவன்றல்-மாய்தல்-மரணம்-வியோகம்-இல்லெனல்-கழிவு-இறத்தல்-தபுதல் ஆ ௰௭

முறிதலின்பெயர்—பரிதல்-ஞெமிர்தல்-ஒடிதல்-இடிதல்-முரிதல்-இறுதல்-ஒசிதல் ஆ ௭
சாய்தலின்பெயர்—இரிதல்-நெரிதல்-சோரல்-இடைதல்-உடைதல்-சரிதல்-கெடுதல் ஆ ௭

முறித்தலின்பெயர்—ஒசித்தல்-அகைத்தல்-கோடல்-ஒடித்தல்-இசித்தல்-ஞெமிர்த்தல்-இறுத்தல் ஆ ௭
துவளலின்பெயர்—ஒசிந்திடல்-அசைதல்-உவளல் ஆ ௩
இசைப்பின்பெயர்—புணர்ச்சி-இசைவு-இயைபு ஆ ௩

வளைத்தலின்பெயர்—வலித்தல்-சூழ்தல்-வளாகம் ஆ ௩
பிடித்தலின்பெயர்—தொடல்-பற்றல் ஆ ௨
கட்டலின்பெயர்—விசித்தல்-தொடுத்தல்-பந்தம்-வீக்குதல்-சிமிழ்த்தல்-யாப்பு-அசைத்தல்-பிணித்தல்-ஆர்த்தல் ஆ ௯

அரிதலின்பெயர்—சேதித்தல்-அறுத்திடல்-விடுவாய்செய்தல்-சூலல்-கொய்தல்-ஈர்தல் ஆ ௬
வெட்டலின்பெயர்—பரிதல்-கண்டித்தல்-பகுத்திடல்-தடிதல்-எற்றல்-துமித்தல்-தறித்தல் ஆ ௭

(௨௩௪) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

கீறலேகீளல்கிண்டல்கிழித்திடல்கீன்றல்கீழ்தல் *
பீறலாறும்பேர்மற்றுப்பிளிறலேஞெண்டல்கிண்டன் *
மாறிடக்கிளைத்தன்முப்பேர்வரன்றறெள்ளுதல்கொழித்த *
லாறலைவழிப்பறித்தலதர்கோளுமப்பேராமே (௨௫)

கட்டலேகளைதல்குற்றல்பறித்தல்கத்தரித்தல்கொய்தல் *
குட்டலேதகர்த்தலாகுமுடைத்தலுங்கூறுமப்பேர் *
தொட்டலேயகழ்தலோடுதொடுதறோண்டுதலின்பேராந் *
தட்டலேதகைத்தலாணைதடுத்தல்வாரித்தலும்பேர் (௨௬)

அடுத்ததுப்புரவுந்துவ்வுமைம்பொதிநுகர்வாகும் *
விடுத்தன்மோசனமேமோக்கம்வீதமாந்தீர்தலும்பே. *
ரடுக்குதற்பேரோயேற்றலாமோவலொழிதலென்ப *
நடுக்கமோடிறங்குதற்பேர்குரங்குதல்குனிவுநாட்டும் (௨௭)

வலத்தலேநினைத்தலென்பமுடைதலாமாற்றலின்பேர் *
விலக்கலாமிசையின்பேரோமீமிசையாந்தாபித்த *
நிலைப்படச்செய்தலின்பேர்நிறுத்தலேதோன்றலென்ப *
சொலித்திடவிடத்தலாகுந்துவர்த்தலேவகிர்தலென்ப (௨௮)

தேர்த்தலேபுகுத்தறாவல்சிந்தலேபுளர்தலும்பே *
ரெதிர்த்துவீசுதலேயோச்சல்செலவிடலெறிதன்முப்பே *
ரீதத்தொடுபொருத்தன்மாட்டலிருபெயர்மூட்டலென்ப, *
நதுத்தலேநொதுத்தலோடுநவித்தலுமவித்தற்பேரே (௨௯)

புடைத்தலேயெறிதலெற்றல்பொத்தெனக்குத்தன்முப்பே *
ரடித்தலேகொட்டன்மொத்தலறைதலேயதைத்தலெற்றல் *
பிடித்தனாதுக்கன்மோதல்பசியவழுக்கலென்ப *
வடித்தலேவசமாக்கற்பேர்மழித்தன்முண்டிதமேயாக்கல் (௩௰)

அளித்தல்பாதீடுபெய்தலாமுப்பேர்செறித்தலென்ப *
துளைத்தலின்பேர்திளைத்தல்குயிறலாந்தொள்ளலும்பேர் *
வளைத்தலேகவர்தல்வெளவல்வாருதல்கொள்ளுமாகுங் *
கிளைத்துங்காற்குறைகொண்டிகேடுறுங்கொள்ளையாமே (௩௧)

கீறலின்பெயர்—கீளல்-கீண்டல்-கிழித்திடல்-கீன்றல்-கீழ்தல்-பீறல்-ஆக ௬-கிளைத்தலின்பெயர்—பிளிறல்-பிறுண்டல் - கிண்டல்-ஆக ௩-கொழிப்பின்பெயர்—வரன்றல்-தெள்ளுதல்-ஆக ௨-வழிப்பறித்தலின்பெயர்—ஆறலை-அதர்கோள் ஆக ௨

பறித்தலின்பெயர்—கட்டல் - களைதல் - குற்றல் - ஆக ௩-கத்தரித்தலின்பெயர்—கொய்தல்(௧)குட்டலின்பெயர்— தகர்த்தல்-உடைத்தல்-ஆக ௨-தோண்டுதலின்பெயர்—தொட்டல்-அகழ்தல் தொடுத்தல்-ஆக ௩-ஆணையின்பெயர்—தட்டல்-தகைத்தல்- தடுத்தல்-வாரித்தல் ஆக ௪

ஐம்பொறிநுகர்வின்பெயர்—துப்புரவு-துவ்வு ஆக ௨
விடுத்தலின்பெயர்—மோசனம்-மோக்கம்-வீதம்-தீர்தல்- ஆக ௪
அடுக்குதலின்பெயர்—எற்றல்(௧)ஒழிதலின்பெயர்—ஓவல்(௧) இறங்குதலின்பெயர்—குரங்குதல்-குனிவு ஆக ௨

முடைதலின்பெயர்—வலத்தல்-நிணத்தல்-ஆக ௨-மாற்றலின்பெயர்—விலக்கல்(௧)மிசையின்பெயர்—மீமிசை(௧) நிலைப்படச்செய்தலின்பெயர்—தாபித்தல்(௧)நிறுத்தலின்பெயர்— நோன்றல்-(௧)சொலித்திடலின்பெயர்—இடத்தல் (௧) வகிர்தலின்பெயர்—துவர்தல் (௧)

சிந்தலின்பெயர்—சிதர்த்தல்-உகுத்தல்-தூவல்-உளர்தல் - ஆக ௪
வீசுதலின்பெயர்—ஓச்சல்-செலவிடல்-எறிதல் ஆக ௩
மூட்டலின்பெயர்—பொருத்தல்-மாட்டல் ஆக ௨
அவித்தலின்பெயர்—நதுத்தல்-நொதுத்தல்-நவித்தல் ஆக ௩

குத்தலின்பெயர்—புடைத்தல்-எறிதல்-எற்றல்-ஆக ௩- அடித்தலின்பெயர்—கொட்டல்-மொத்தல்-அறைதல்-அலைத்தல்- எற்றல்-அதுக்கல்-மோதல்-வழுக்கல் ஆக ௮ வசமாக்கலின்பெயர்—வடித்தல்(௧)முண்டிதமாக்கலின்பெயர்—மழித்தல் (௧)

தெறித்தலின்பெயர்—அலித்தல்-பாதீடு-பெய்தல்-ஆக ௩- துளைத்தலின்பெயர்—திளைத்தல்-குயிறல்-தொள்ளல்-ஆக ௩-வாருதலின்பெயர்—வளைத்தல்-கவர்தல்-வௌவல்-கொளல் ஆக ௪
கொள்ளையின்பெயர்—சூறை-கொண்டி ஆக ௨

வருட்டறைவரலேநீவல்வருமுப்பேர்தடவலாகும் *
விரியலேபரத்தலென்பவிளம்புபாரித்தலும்பேர் *
தெரியவேதோண்டலேஞெண்டல்சரவேமுகத்தலின்பேர் *
சொரிதலேபொழிதறாவல்துயல்வரலசைதலின்பேர் (௯௨)

திதிநிலைபெறுத்தலேனுக்கல்சிறப்பொடுபுரத்தலென்றும் *
விதமுடன்காத்தலின்பேர்வேலியேயேமஞ்சமங் *
கதவரண்காப்புத்தட்டிகடியெட்டுங்காவற்பேரோ *
பதமுறவோம்பல்போற்றல்பாதுகாத்தற்பேராகும் (௯௩)

பகுத்தலேபாத்துப்பாகம்பங்கிடுபாதியும்பே *
ரிகுத்தலேவிரித்தலின்பேரோற்றிடும்பொதிதல்வீக்க *
மிசைப்படப்புதைத்தலின்பேர்தணித்தல்சேமித்தலென்ப *
இசைக்கவேயவைத்தல்குற்றமெறுதலென்பதுநெரித்தல் (௯௪)

எருக்கல்காதுதல்சவட்டலெற்றுதலொழித்தல்கோறன் *
முருக்கல்வீட்டுதல்படுத்தன்முதிர்கொலைசெய்தலொன்பா *
னுரைத்தபாரணமுமப்பேருறுகோளணங்குவேட்டம் *
விரித்திடற்கொலையினற்பேர்வேட்டைபாபத்தியென்ப (௯௫)

குடகமெய்க்கொட்டிக்கையைக்குவித்தலினமைந்தானே *
கடுகியநாடனேடல்கையரிக்கொளலேதேட *
லுடர்புறுதுருவுமாகுந்துவட்டலேநுடக்கலென்ப *
தொடுதலேதிவளலூறுபரிசனந்துவளலும்பேர் (௯௬)

கடத்தலேபடர்தல்சேறல்கழிதலேயிவறலேகல் *
விடுத்திடவிறத்தல்போகன்மெல்லெனவழங்கனீங்க *
றடத்தினிற்செலவேயில்லறணத்தலேயியங்கநீர்த *
னடத்தலின்பேரோட்டமொதுங்கலுநாட்டுமப்பேர் (௯௭)

மிதித்திடலுகளல்பாய்தல்விரைவுடனேயறுக்கல் *
குதித்தலின்பேரோநான்காங்குப்புறலிதுவுமப்பேர் *
கதித்தலேயகைத்தல்பம்பல்கஞறலேபொலிவுபாய்ச்ச *
லிதத்துடனெழுக்கலேர்பென்றெட்டுமேயெழுச்சியின்பேர் ௯௮

தடவலின்பெயர்—வருடல்-தைவரம்-நீவல்-ஆக ௩-பரத்தலின்பெயர்—விரியல்-பாரித்தல்-ஆக ௨-முகத்தலின்பெயர்—மோண்டல்-நோண்டல்-ஆக ௨ - தூவலின்பெயர்—சொரிதல் - பொழிதல்-ஆக ௨-அசைதலின்பெயர்—துயல்வரல் (௧)

காத்தலின்பெயர்-திரி-நிலைபெறுத்தல்-நோக்கல்-புரத்தல்-ஆக ௪
காவலின்பெயர்—வேலி-ஏமம்-சேமம்-கதவு-அரண்- காப்பு-தட்டி-கடி ஆக ௮
பாதுகாத்தலின்பெயர்—ஓம்பல்-போற்றல் ஆக ௨

பங்கீட்டின்பெயர்—பகுத்தல்-பாத்து-பாகம்-பாதி-ஆக ௪- விரித்தலின்பெயர்—இகுத்தல(௧)பொதிதலின்பெயர்—வீக்கம் (௧)
புதைத்தலின்பெயர்—தணித்தல்-சேமித்தல்-ஆக ௨ - குற்றலின்பெயர்—அலைத்தல்(௧)நெரித்தலின்பெயர்—தெறுதல் (௧)

கொலைசெய்தலின்பெயர்—எருக்கல்-காதுதல்-சவட்டல்- எற்றுதல்-ஒழித்தல்-கோறல்-முருக்கல்-வீட்டுதல்- படுத்தல் - மாரணம்-ஆக ௰-கொலையின்பெயர்—ஊறு - கோள்- அணங்கு-வேட்டம்-ஆக ௪-வேட்டையின்பெயர்—பாபத்தி (௧)

மெய்கொட்டிக்கைகுவித்தலின்பெயர்--குடகம்(௧)தேடலின்பெயர்—நாடல்-நேடல்-கையரிக்கொளல்-துருவு ஆக ௪
துவட்டலின்பெயர்—நுடக்கல்(௧)தொடுதலின்பெயர் — தீவளல்-ஊறு-பரிசனம்-துவளல் ஆக ௪

நடத்தலின்பெயர்—கடத்தல்-படர்தல்-சேறல்-கழிதல் - இவறல்-ஏகல்-விடுத்திடல்-இறத்தல்-போகல்-வழங்கல்-நீங்கல்-செலவு-இல்லல்-தணத்தல்-இயங்கல்-தீர்தல்-ஒதுங்கல் ஆக ௰௭

குதித்தலின்பெயர்—மீதித்திடல்-உகளல்-பாய்தல்-உறுக்கல்-குப்புறல்-ஆக ௫-எழுச்சியின்பெயர்—கதித்தல்-அகைத்தல்-பம்பல்-கனறல் பொலிவு-பாய்ச்சல்-ஒதுக்கல்-ஏர்பு ஆக ௮

(ஈகூஅ) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி

கடுமையேகதழ்வுவல்லைகதனமேதுரிதமொல்லை ※
யடைவுளவாறுபெருங்கடுப்பெனவறையலாகு ※
முடுகலேவிசையேயதாரைமுந்தியகவனம்வேகஞ் ※
சடிதிசீக்கிரமேயீண்டேவிரைவின்பேர்விதுப்புஞ்சாற்றும் (ஙகூ)

ஐயெனலொடுபொள்ளென்றலானகுத்திரமேசண்ட [டல்
நொய்தென்றல்கதுமென்றிட்டெனுயினிற்பொருக் கென்றிட்
வெய்தென்றன்றெள்ளல்கோரம்விரைவினிற்குறிப்புப்பத்தா ※
மொய்யெனலொடுமெல்லென்னல்பையெனறூழ்தன்மந்தம் (சய)

தெருமரன்மறுகலோடேயலமரதிரிதல்கோட்டல் ※
சொரிதலேசூர்த்தலோடுபிரமரிசுழலலெட்டாம் ※
பரிகரிதாவல்சேறல்பாறுதலோவன்மீளல் ※
வரிசையிற்றுண்டறத்தலவாவருவுதல்கடத்தல் (சக)

நீதியிற்பாறலோடணிமிர்தனீளுதலுமப்பே ※
ராதியேவீதியென்பவிருபெயரிவைநேரோடல் ※
மாதிசாரிகையேசுற்றுவானிமண்டலமாம்வாட ※
வோதியபவனியொன்றேயுலாப்போதலாகுமென்ப (சஉ)

மருவுதனண்ணல்சார்தன்மற்றையவணுகல்புல்ல ※
லருகுறல்சிவணறுன்னலண்ணலொன்பான்பேர்கிட்ட ※
லொருவுதறுறத்தல்வல்லியுணர்வொடுதணப்புநீங்கல் ※
வருமுறையுலாவலின்பேர்வழங்கலோடசைதலாமே (சங)

நடவலேயுகைத்தலெய்தனலொடுதூண்டலூர்தல் ※
கடவலேயகைத்தலுய்த்தல்கடிதோட்டல்செலுத்தலொன்பா ※
னுடனுராய்ப்போதலின்பேருரிஞ்சலோடுரோஞ்சலாகும் ※
படியவேநெகிழ்தலொல்கலிருபெயர்குழைவின்பாலாம் (சச)

ஆற்றறுத்திடுதருணேயாம்வலியழித்தலின்பே ※
ராற்றியவழிப்படுத்தற்பெயராற்றுப்படையென்றாகு ※
மேற்றல்போதரலெனுஞ்சொலெதிர்கொடுபோதலென்ப ※
மாற்றியவுழுதலோடுமடித்தலேயுழக்கலாகும் (சரு)

கடுப்பின்பெயர்—கடுமை-கதழ்வு-வல்லை-கதனம்-துரிதம்-ஒல்லை-ஆக ௬. விரைவின்பெயர்—முடுகல்-விசை-தாரை-கவனம்-வேகம்-சடிதி-சீக்கிரம்-ஜண்டு-விதுப்பு ஆக ௰.

விரைவுக்குறிப்பின்பெயர்—ஐயெனல்-பொள்ளென்றல்-குத்திரம்-சண்டம்-நொய்தென்றல்-கதுமென்றிட்டல்-பொருக்கென்றிட்டல் வெய்தென்றல்-ஞெள்ளல்-சோரம் ஆக ௰. மந்தத்தின்பெயர்—மொய்யெனல்-மெல்லென்றல்-மையெனல்-தாழ்தல் ஆக ௪

சுழலலின்பெயர்—தெருமரல்-மறுகல்-அலமரல்-திரிதல்-கொட்கல்-சொரிதல்-சூர்த்தல்-பிரமரி ஆக ௮. கடத்தலின்பெயர்--பாரிகரி-தாவல்-சேறல்-பாறுதல்-ஒவல்-மீளல்-தாண்டல்-தத்தல்-வாவல்-தாவுதல் ஆக ௰.

ஓடலின்பெயர்—பாறல்-நிமிர்தல்-நீளுதல் ஆக ௩. நேரோடலின்பெயர்—ஆதி-வீதி ஆக ௨. மண்டலமாவோடலின்பெயர்—மாதி-சாரிகை-சுற்று-வாளி ஆக ௪. உலாப்போதலின்பெயர்—பவனி (௧)

கிட்டலின்பெயர்--மருவுதல்-நண்ணல்-சார்தல்-அணுகல்-புல்லல்-அருகுறல்-சிவணல்-துன்னல்-அண்ணல் ஆக ௯. நீங்கலின்பெயர்—ஒருவுதல்-துறத்தல்-வல்லி-உணர்வு-தணப்பு ஆக ௫. உலாவலின்பெயர்—வழங்கல்-அசைதல் ஆக ௨.

செலுத்தலின்பெயர்—தடவல்-உகைத்தல்-எய்தல்-தூண்டல்-ஊர்தல் கடவல்-அகைத்தல்-உய்த்தல்-ஒட்டல் ஆக ௯. உராய்ப்போதலின்பெயர்—உரிஞ்சல்-உரோஞ்சல் ஆக ௨. குழைவின்பெயர்--நெகிழ்தல்-ஒல்கல் ஆக ௨

வலியழித்தலின்பெயர்—ஆற்றறுத்தல் (௧) வழிப்படுத்தலின்பெயர்—ஆற்றுப்படை (௧) எதிர்கொடுபோதலின்பெயர்—ஏற்றல்-போதரல் ஆக ௨. உழக்கலின்பெயர்—உழுதல்-மடித்தல் ஆக ௨

## (௯) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

மூரண்வினைசமரோயார்ப்புமொய்தும்பைஞாட்புத்தாக்குச் *
செருமறல்காளயங்கள்சினவலேபமர்மலைப்போ *
டிரணமாகவநிகர்த்தலிகலேவெஞ்சமமுடன்றல் *
பொருதல்சங்கிராமந்தெவ்வுப்பூசலாயோதனம்போர் (சசு)

முட்டுதலுடனேதாக்கறலைப்படன்முடுகலேற்றல் *
யிட்டலேயெதிர்தலாகுங்கிடைத்தலுமதன்பேர்தானே *
யொட்டலர்நாடழித்தலுற்றபேர்கொற்றவள்ளை *
யொட்டினர்மேற்சாராமைபுரைத்தபேர்தழிஞ்சியாமே (சஎ)

நடநட்டநடனம்வாணிநாடகநிருத்தந்தாக்குப் *
படிதநாட்டியமேகண்ணுள்பத்துந்தாண்டவமுங்கூத்தா *
நடையுநட்டணமுமப்பேர்நடித்திடல்பெயர்தலாலு *
லடைவிலேயகவறாங்கலசைவொடாதிவையாடற்பேர் (சஅ)

பிரமரிவீரட்டானம்பேசினுப்பிதமலைப்புப் *
புரிபமேயிலயமற்றும்போற்றுமுள்ளாளனம்மே *
கரணமேபரதமொன்பான்கருதுகூத்தின்விகற்பம் *
பருமித்தல்சிரமஞ்செய்தல்பழகலேயுழத்தலென்ப (சகூ)

கொடிகொட்டிபாண்டரங்கங்கூறுகாபாலமுன்றும் *
பொடியணிசிவனிருத்தம்போற்றியபரவைசெய்யாள் *
குடமல்லோடல்லியந்தான்கொண்டல்வண்ணன்றன்கூத்தாங் *
குடையொடுதுடியிரண்டுங்குமரனதாடலாமே (ருய)

துடியென்பதெழுவர்மாதர்தூங்கலினுமமாகுங் *
கடையமேயயிராணிக்குக்காட்டியநாட்டியப்பேர் *
வடிவமைதுர்க்கைதூக்குமற்றதுமரக்காலென்ப *
நெடியகாமன்கொண்டாடுநிருத்தமேவிதித்தபேடாம் (ருக)

அடுத்திடும்வெறிகழங்கோடணங்கிவைவெறியாட்டின்பேர் *
தொடுத்தகைகோத்தாடற்பேர்சொல்லியகுரவையென்ப *
மூடக்கியவிருகைதானும்பழிப்புடைமுறையேயொற்றித் *
துடக்கியநடையிலைமந்துணங்கையென்றியம்பலாமே (ருஉ)

போரின்பெயர்—முரண்-வினை-சமர்-ஆர்ப்பு-மொய்- தும்பை-ஞாட்பு-தாக்கு-செரு-மறல்-காளபம்-சினவல்-அமர்-மலைப்பு-இரணம்-ஆகவம்-நிகர்த்தல்-இகல்-வெஞ்சமம்-உடன்றல்-பொருதல்-சங்கிராமம்-தெவ்வு-பூசல்-ஆயோதனம் ஆ௨௫

எதிர்தலின்பெயர்—முட்டுதல்-தாக்கல்-தலைப்படல்-முடுகல்-எற்றல்-கிட்டல்-கிடைத்தல்-ஆ௭. ஒட்டலர்நாடழித்தலின்பெயர்—கொற்றவள்ளை(௧)ஒட்டினர்மேற்சாராமையின்பெயர்—தழிஞ்சி- (௧)

கூத்தின்பெயர்—நடம்-நட்டம்-நடனம்-வாணி-நாடகம்- நிருத்தம்-தூக்கு-படிதம்-நாட்டியம்-கண்ணுள்-தாண்டவம்- நடை - நட்டணம் ஆ௰௩. ஆடலின்பெயர்—நடித்திடல்-பெயர்தல் -ஆலல் அகவல்-தூங்கல்-அசைவு ஆ௯

கூத்தின்விகற்பத்தின்பெயர்—பிரமரி-வீரட்டாணம்- உப்பிதம்-மலைப்பு-புரியம்-இலயம்-உள்ளாளனம்-சரணம்-பரதம் ஆ௯ சிரமஞ்செய்தலின்பெயர்—பருமித்தல் (௧) பழகலின்பெயர்—உழைத்தல் (௧)

சிவனிருத்தத்தின்பெயர்—கொடுகொட்டி-பாண்டரங்கம்- காபாலம்ஆ௩. திருமகளாடலின்பெயர்—பரவை(௧) கொண்டல்வண்ணன்கூத்தின்பெயர்—குடம்-மல்-அல்லியம்ஆ௩. குமரனாடலின்பெயர்—குடை-துடி ஆ௨

எழுவகைமாதராடலின்பெயர்—துடி(௧) அயிராணியாடலின்பெயர்—கடையம்(௧) துர்க்கையாடலின்பெயர்—மரக்கால் (௧) காமனாடலின்பெயர்—பேடு (௧)

வெறியாட்டின்பெயர்—வெறி-களங்கு-அணங்கு-ஆ௩. கைகோத்தாடலின்பெயர்—குரவை (௧) முடக்கிய விருகை பழிப்புடையொற்றியாடலின்பெயர்—துணங்கை (௧)

(௨௱௩) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

குடந்தங்கைக்கூப்பிமெய்யைக்கோட்பொடுகொட்டிநிற்றல் *
குடங்கலையக்குவித்துக்கொட்டல்கொம்மைகொட்டுதலென்று
மடர்ந்துவாப்பங்கைபாற்கொட்டலாவலங்கொட்டலென்ப *
படங்குந்திநிற்றலின்பேர்பகரிற்குஞ்சித்தலாமே (௫௩)

வட்டித்தலொற்றறுத்தல்வட்டணையுடணைமற்றுந் *
தட்டலென்றிந்தநான்குந்தாளம்போடுதலின்பேரோ *
கிட்டியதாளமொற்றுக்கிளர்ந்தபேர்சதியேசீரொன் *
றிட்டபேரிரண்டுமாமென்றியம்பினர்வியந்தநூலோர் (௫௪)

உவளித்தறாய்மைசெய்தலுபலாளனம்முமப்பே *
ரிவர்தலேமீக்கோளென்பவிரண்டுமேறுதலினும *
மவாமற்றுமிறங்குதற்பேர்சுதமவதாரமாகு *
மவுனப்பேர்மூகமோனம்வாளாகேளாவென்றுமே (௫௫)

திறைமிறைகப்பமேபாகுடமரசிறைப்பேர்செப்பும் *
கறைகடன்வரியிறுப்புக்கரங்குடியிறையைந்தேபேர் *
துறைபடுமுல்கேயாயஞ்சுங்கஞ்சாரிகையுமாகு *
நெறியொடுவலித்தலொட்டணேரலேயுடன்பாடென்ப (௫௬)

முயற்சிதாளாண்மையூக்கமுந்துதாளுத்தியோக *
மியற்றலேயுஞற்றுமுப்போடாள்வினையிவையுற்சாகம் *
வியக்குமூராண்மையொன்றேமிகவோங்கிச்சேறலாகு *
நயக்கும்பேராண்மையொன்றேநாட்டியவருண்மைசெய்தல் (௫௭)

கரப்பொடுகட்டல்பட்டிகரவடங்கயவுகள்ளந் *
திருட்டொடுபடிறுசோரந்தேயமுங்களவினாந்தாம் *
விரித்திடுந்தேனுவோடுசௌரியமீண்டுமப்பேர் *
தரித்தசம்பிரதமென்பதக்கதாஞ்சித்திரன்பேரோ (௫௮)

தரித்தலேபொறுத்தலோடுதாங்குதல்சுமக்கலின்பேர் *
பரித்தலுமாகுமென்பபருவரலருவலின்பேர் *
தெரிந்தொன்றைவனாவேநீக்கறெற்றலேமாறுபாடாம் *
விரித்திடுந்தைத்தலத்தூல்மேவியபொல்லந்துன்னம் (௫௯)

கைகூப்பிமெய்கோட்டிநிற்றலின்பெயர்—குடந்தம்(௧)குடங்கை
யைக்குவித்துக்கோட்டலின்பெயர்—கொம்மை (௧)
வாய்கையாற்கொட்டலின்பெயர்—ஆவலங்கொட்டல் (௧)
குந்திநிற்றலின்பெயர்—குஞ்சித்தல் (௧)

தாளம்போடலின்பெயர்—வட்டித்தல்-ஒற்றறுத்தல்- வட்டணை-த
ட்டல் ஆ-௪
தாளவொற்றின்பெயர்—சதி-சீர் ஆ-௨

தூய்மைசெய்தலின்பெயர்—உவளித்தல்-உபலாவணம் ஆ-௨
ஏறுதலின்பெயர்—இவர்தல்-மீக்கோள் ஆ-௨
இறங்குதலின்பெயர்—அவா-சுதம்-அவதாரம் ஆ-௩
மௌனத்தின்பெயர்—மூகம்-மோனம்-வாளா-கேளா ஆ-௪

அரசிறையின்பெயர்—திறை-மிறை-கப்பம்-பாகுடம் ஆ-௪
குடியிறையின்பெயர்—ககை-கடன்-வரி-இறுப்பு-கரம் ஆ-௫
சுங்கவிறையின்பெயர்—உல்கு-ஆயம்-சாரிகை ஆ-௩
உடன்பாட்டின்பெயர்—வலித்தல்-ஒட்டல்-நேரல் ஆ-௩

உற்சாகத்தின்பெயர்—முயற்சி-தாளாண்மை-ஊக்கம்-தாள்- உத்
தியோகம்-இயற்றல்-உஞற்று-உழைப்பு-ஆள்வினை ஆ-௯
மிக்கசெயலின்பெயர்—ஊராண்மை (௧)
அருமைசெய்தலின்பெயர்—பேராண்மை (௧)

களவின்பெயர்—கரப்பு-கட்டல்-பட்டி-கரவடம் - கயவு-கள்ளம்-
திருட்டு-பஃறு-சோரம்-தேயம்-தேனு-சௌரியம் ஆ-௰௨
சித்தின்பெயர்—சம்பிரதம் (௧)

சுமத்தலின்பெயர்—தரித்தல்-பொறுத்தல்-தாங்குதல்- பரித்தல்-
ஆ-௪. அருவலின்பெயர்—பருவரல்(௧)நீக்கலின்பெயர்—வளை
வு(௧) மாறுபாட்டின்பெயர்—தெற்றல்(௧) தைத்தலின்பெயர்—
அத்து-பொல்லம்-துன்னம் ஆ-௩

(உ௱௪) ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி.

சுறுக்கெனச்சுடல்சந்தாபந்தாபிதமிருபேர்சொல்லு *
மறைப்பேயாவரணமாகுமாய்தலுமப்பேர்தானே *
நெறிப்படவழுந்துதற்பேர்ஞெமுங்குதலென்றுகூறு *
மிறைத்தலையசைத்தல்சாலவேதனையுலைப்புமுப்பேர் (௬௰)

நாம்புலேபழங்கணோடுநாட்டியமெலிவுஞோள்க *
றேம்பலேகிருசம்போதச்சிக்கலேழிளைத்தலின்பேர் *
சாம்பலேகூம்பலென்பவிருபெயரொடுங்கல்சாற்று *
மேம்படச்சொல்லுகின்றமேற்கோளேபூட்கையென்ப (௬௧)

வருட்டலேதெருட்டலின்னவற்புறுத்தற்பேர்தானே *
யுருத்தலேநாறலேருற்றன்முளைத்தலாம்பொடித்தலும்பேர் *
விரித்திடலெதிர்த்தல்விள்ளலவிழ்தலேயலர்தலாகுந் *
திரிப்பதநூக்கலூன்றலேன்றலுந்தள்ளன்முப்பேர் (௬௨)

முறுவலேநகையேயார்ப்புமூரலேயிளியேயாச *
மறிவொடுசிரித்தலாறேயசிபவமதிச்சிரிப்பாங் *
குறியொடுவிடவ்வியோகங்கூடலேயோகமென்ப *
மறலரிலபரமோடுவருத்துவக்கிவைபிணக்காம் (௬௩)

விற்றற்பேர்பகர்தல்கூறல்விலைநொடைமாறலைந்தா *
மொற்றுமைகுறிக்கோளென்பவொற்றுமேய்சொற்றபேரோ *
யிற்றிவைநிற்கமற்றையிளைதலைக்காவற்பேரோ *
பெற்றிடல்பயத்தல்வாய்த்தல்கிடைத்தலாம்பேசுமுப்பேர் (௬௪)

முளித்தலேவறத்தலோடுமுதிர்ந்திடலுலர்தல்காய்தல் *
பிளிற்றலேபில்குல்காலலுமிழ்தல்கொப்பளித்தற்பேரோ *
தளர்ச்சியாமறைபுகற்பேர்சரண்புகலாகுமென்ப *
விளக்கியவியங்கோளேவல்வீதென்பவறுமையாமே (௬௫)

அலைசலேஞெகிழ்தன்ஞொள்கலலையலேயாஞ்சியும்பே *
ருலைவுறுசொறிகண்டூதிதினவெனவிருபேரோதுங் *
கலவலேயளாவலோடுகலப்பகமேகலாவ *
லலைபெறுகின்றசங்கிரணமைந்துந்துழாவலின்பேர் (௬௬)

சூடலின்பெயர்—சந்தாபம்-தாபிதம் ஆ௨
மறைப்பின்பெயர்—ஆவரணம்-மாய்தல் ஆ௨
அழுந்துதலின்பெயர்—ஞெமுங்குதல் (௧)
உலைப்பின்பெயர்—பிறைத்தல்-அலைத்தல்-வேதனை ஆ௩

இளைத்தலின்பெயர்—நாம்பல்-பழங்கண்-மெலிவு - ஞொள்கல்-
தேம்பல்-கிருசம்-சிக்கல் ஆ௭
ஒடுங்கலின்பெயர்—சாற்றுதல்-கூம்பல் ஆ௨
மேற்கோளின்பெயர்—பூட்கை (௧)

வற்புறுத்தலின்பெயர்—வருட்டல்-தெருட்டல் ஆ௨
மூளைத்தலின்பெயர்---உருத்தல்-நாறல்-தோற்றல் - பொடித்தல்
ஆ௪. அலர்தலின்பெயர்---விரித்திடல்-எதிர்தல்-விள்ளல்- அவி
ழ்தல் ஆ௪. தள்ளலின்பெயர்-தூக்கல்-ஊன்றல்-தோன்றல் ஆ௩

சிரித்தலின்பெயர்---முறுவல்-நகை-ஆர்ப்பு-மூரல்-இணி - ஆசம்-
ஆ௬. அவமதிச்சிரிப்பின்பெயர்--- அசி (௧) விடலின்பெயர்---
வியோகம்(௧)கூடலின்பெயர்---யோகம் (௧) பிணக்கின்பெயர்---
மறல்-அரில்-அபரம்-துவக்கு ஆ௪

விற்றலின்பெயர்---பகர்தல்-கூறல்-விலை-நொடை-மாறல் ஆ௫
ஒற்றுமையின்பெயர்---குறிக்கோள்(௧)ஒற்றின்பெயர்---வேய்(௧)
தலைக்காவலின்பெயர்---இளை(௧)கிடைத்தலின்பெயர்---பெற்றிட
ல்-பயத்தல்-வாய்த்தல் ஆ௩

காய்தலின்பெயர்---முளித்தல்- வறத்தல்- முதிர்ந்திடல்- உலரல்-
ஆ௪. கொப்புளித்தலின்பெயர்---பிளிற்றல்-பில்கல்-காலல் உமி
ழ்தல்- ஆ௪. மறைபுகலின்பெயர்---சரண்புகல்(௧)ஏவலின்பெய
ர்---வியங்கோள்(௧)வறுமையின்பெயர்---வீது (௧)

அலையலின்பெயர்---அலைசல் - ஞெகிழ்தல் - ஞொள்கல்- ஆஞ்சி-
ஆ௪.சொறியின்பெயர்---கண்டூ-தினவு ஆ௨. துழாவலின்பெ
யர்---கலவல்-அளாவல்-கலம்பகம்-கலாவல்-சங்கிரணம் ஆ௫

விம்மியேயுமிழ்தல்கான்றன்மேவுமுற்காரஞ்சத்தி *
தும்மலேசுவாசமூச்சாங்கொட்டாவியேயாவித்த *
லம்மவிச்செயல்பற்றும்பேர்க் கறுபத்தேழ்விருத்தஞ்செய்தான்
மைம்முகிற்குண்டபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றானே (௬௭)

ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி
முற்றிற்று
ஆகதொகுதி(௯)க்கு-விருத்தம்-௬௮௨.

உ
முருகன்றுணை.

# பத்தாவது
# ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

## காப்பு.

வலியுற்றவெவ்வினைப்பேர்மாற்றியேயநந்தஞானம் *
பொலிவுற்றகேவலப்பெண்புணர்ந்துவீற்றிருந்தபோதன் *
மலருற்றுநடந்நவாமன்மனைபுனைபாதம்போற்றி *
யொலிபற்றும்பெயர்க்கூட்டத்தை யுணர்த்துவமிப்பாற்கேண்மி
[ன் (௧)

மாற்றமேமொழியேகிரோவாணியேகதையெதிர்ப்புக் *
கூற்றுரைபனுவல்செப்புக்குயில்விளுக்கிளவிகாதை *
யேற்றிடுநொடியியத்தோடிசைபறைவார்க்குப்பாணி *
தோற்றமாநுவலிநாடுமேவெழுஞ்சொல்லின்பேரே (௨)

வசித்தல்பாசுரமேவார்த்தைவாசகம்வசனமும்பேர் *
திசைப்படுமுரையேபாழிசிதைவிலாப்பதமென்றோது *
மிசைத்தலேபிதற்றல்பேசலியம்புதலிறுத்தலும்பேர் *
விசைப்பின்மீதுரையேபல்கால்விளம்புதலாகுமென்ப (௩)

சத்திசெய்தலின்பெயர்---உமிழ்தல்-கான்றல்-உற்காரம் ஆ ரு
மூச்சின்பெயர்---தும்மல்-சுவாசம் ஆ உ
கொட்டாவியின்பெயர்---ஆவித்தல் (க)

பத்தாவது

# ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

காப்பு.

(இதன்பொருள்.)

வலியுற்ற - வலிமைபொருந்திய, வெவ்வினை - கடியவினைகளின், பேர்-பெயரை, மாற்று - ஒழித்து, அநந்தஞானம் - அனந்தஞானமானது, பொலிவுற்ற - பொலியப்பெற்ற, கேவலம் கைவல்லியமாகிய, பெண் - பெண்ணை, புணர்ந்து சேர்ந்து, வீற்றிருந்த-வீற்றிருந்தருளிய, போதன் - ஞானியும், மலர் - தாமரைமலரில், உற்று-பொருந்தி, நடந்த - நடந்தருளிய, வாமன் - அழகினையுடையவருமாகிய அருகக்கடவுளுடைய, மரை - தாமரைப்பூவை, புரை-போலும், பாதம்-பாதங்களை, போற்றி - துதித்து, இப்பால் - இனி, ஒலிபற்றும்பெயர்க்கூட்டத்தை - ஒலியபற்றியபெயர்த்தொகுதியை, உணர்த்துவம் - (யாம்) அறிவிப்போம், கேண்மின்-கேளுங்கள். எ-று. ஏ - அசை.

சொல்லின்பெயர்---மாற்றம்-மொழி-கிளர்-வாணி கதை- எதிர்ப்பு-கூற்று-உரை-பனுவல் செப்பு-குயில்-விளம்-கிளவி-காதை-நொடி-இயம்-இசை-பறை-வாக்கு-பாணி-நுவல் ஆ உக

வாசகத்தின்பெயர்---வசித்தல்-பாசுரம்-வார்த்தை-வசனம் ஆ சு
பதத்தின்பெயர்---உரை - பாழி ஆ உ. இயம்புதலின்பெயர்---இசைத்தல்-பிதற்றல்-பேசல்-இறுத்தல் ஆ ச. பல்கால்விளம்புதலின்பெயர்---மீதுரை (க)

அ) பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

யழிச்சலேத்துதறுதித்தல்பரசுதல்பரவல்போற்றல் *
வழுத்தலேருத்திரமேமெச்சல்வாழ்த்தலாந்துதியுமேற்கு *
மழிப்பிலாவாசிவாழ்த்தேயாசிடையென்றுங்கூறும் *
பழிச்சொலேசிறுசொனீச்சொற்பரிவாதம்பழித்தலென்ப (ச)

விரித்தலேகதைத்தலோடுமிழற்றுதல்விளம்பல்கூற *
லுரைத்தலேநொடித்தல்சாற்றலோதுதல்குயிறல்சொற்ற *
றெரித்தலேநவிலலோடுவலித்திடல்செப்பலாடல் *
பரப்புடன்மொழிதலோடுபணித்தல்பன்னெட்டுஞ்சொல்லல் (ரு)

சாதம்வாய்வாய்மையாணைசத்தியந்திடம்வேளாண்மை *
நீதியார்நிலைமையுண்மைநிச்சயஞ்சரதமெய்ப்பேர் *
வாதையாமிச்சைதள்ளல்வலக்காரம்வழுதுபெட்டுச் *
சாதனைமாயம்வஞ்சஞ்சடம்பிசுபடிறுபொய்ப்பேர் (சா)

படித்தல்வாசித்தலோதல்பாடலத்தியயனமும்பேர் *
பிடித்தொன்றைவிடாதுபேசல்பிதற்றுதலென்றுபேரோ *
யிடக்கரோமறைத்தசொற்பேரொன்பகூகனமுமாமே *
யிடித்தலேகழறலென்பவிருபெயருறுதிச்சொல்லே (எ)

அம்பலேகௌவைபேசலலர்பழிமொழிநாற்பேரோ *
யம்பலேசிலரறிந்திட்டதுபுறங்கூறலாகு *
மம்புவிப்பலருந்தூற்றுமம்மொழியலரோவென்ப *
வெம்பியபெருஞ்சொல்லென்பமிகப்பலரறிசொல்லாமே (அ)

மிழலையேகுதலைகொஞ்சல்வினவுமுல்லாபமுற்ற *
மழலையேயொற்றுநீங்கிவழுப்படாநிரம்பாமென்சொல் *
பிழைபடுங்கொடுவாய்குஞ்சம்பிசுனங்கொண்டியந்தொடுப்பு *
விழைவிலாக்குறளையாறும்வெறுப்புறங்கூற்றின்பேரோ (கூ)

வழுவிலாச்சபதமாணைவஞ்சினமொடுவட்டித்த *
றழுவியபிரமாணஞ்சூள்சத்தியம்விரதமும்பேர் [லும்பேர்
மொழிமைமூதுரைமுன்சொல்லு முதுசொல்லும் பழஞ்சொல்
பழமொழிமுதுமையாகும்படுங்கதைகாரணச்சொல் (ய)

வாழ்த்தலின்பெயர்—பழிச்சல்- எத்துதல்- துதித்தல்- பாசுதல்- பரவல்-போற்றல்-வழுத்தல்-தோத்திரம்-மெச்சல்-துதி ஆ௰ வாழ்த்தின்பெயர்—ஆசி-ஆசிடை ஆ உ. பழித்தலின்பெயர்— பழிச்சொல்-சிறுசொல்-தீச்சொல்-பரிவாதம் ஆ ௪

சொல்லலின்பெயர்—விரித்தல்-கதைத்தல்- மிழற்றுதல்-விளம்பல்-கூறல்-உரைத்தல்-நொடித்தல்-சாற்றல்-ஓதுதல்-குயிறல்- சொற்றல்-தெரித்தல்-நவில்ல்-வலித்திடல்-செப்பல்-ஆடல்-மொழிதல் பணித்தல் ஆ௰௮

மெய்யின்பெயர்—சாதம்-வாய்-வாய்மை-ஆணை-சத்தியம்-திடம்-வேளாண்மை நிலைமை-உண்மை-நிச்சயம்-சரதம் ஆ௰௧ பொய்யின்பெயர்—மிச்சை-தள்ளல்-வலக்காரம்- வழுது- பெட்டு-சாதனை-மாயம்-வஞ்சம்-சட்டம்-பிசி-படிறு ஆ௰௧

படித்தலின்பெயர்--வாசித்தல்-ஓதல்-பாடல்-அத்தியயனம் ஆ ௪ விடாதுபேசலின்பெயர் — பிதற்றுதல் (௧) மறைத்தசொல்லின் பெயர்—இடக்கர்-சூகனம் ஆ உ. உறுதிச்சொல்லின்பெயர்— இடித்தல்-கழறல் ஆ உ

பழிமொழியின்பெயர்—அம்பல்-கௌவை-ஏசல்-அலர் ஆ ௪ அம்பலென்னும்பெயர்—சிலரறிந்துபுலங்கூறல் (௧) அலரென்னும்பெயர்— பலருந்தூற்றல் (௧) பெருஞ்சொலென்னும்பெயர்—பலரறிசொல் (௧)

நிரம்பாமென்சொல்லின்பெயர்—மிழலை-குதலை-கொஞ்சல்- உல்லாபம்-மழலை ஆ ரு. புறங்கூறலின்பெயர்—கொடுவாய்- குஞ்சம்-பிசுனம்-கோண்டியம்-தொடுப்பு-குறளை ஆ ௬

சத்தியத்தின்பெயர்—சபதம்-ஆணை-வஞ்சினம்-வட்டித்தல்- பிரமாணம்-சூள்-விரதம் ஆ எ. மூதுரையின்பெயர்—மொழிமை-முன்சொல்- முதுசொல்- பழஞ்சொல் ஆ ௪. பழமொழியின் பெயர்—முதுமை (௧) கதையின்பெயர்-காரணச்சொல் (௧)

# பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

தரித்திடுத்திசைச்சொலென்பசாருந்தேசிகமென்றுகும் *
விரிச்சியேவாய்ப்புளென்பமிக்கநற்சொன்னிமித்த *
மரிப்புறப்பொரவழைத்தல்றைகூவலாகுமென்ப *
வுரைத்திடுமுகமனின்பேருபசாரநயந்தசம்மானம் (௰௧)

விளுவலேகடாவலாகும்விடையதற்கெதிர்மொழிப்பேர் *
விளுவொடுவிடையுங்கூடிவிருப்பியபொருள்சல்லாபந் *
தருதுமேம்பாட்டுரைப்பேர்தானெடுமொழியென்றுமே *
யிறுநகைநயச்சொலென்பவெய்துமேயசதியாடல் (௰௨)

கடைப்பிடியோர்ப்புவேறுகாட்டியகுறிக்கோடேற்ற *
மடுத்தநற்பொருளில்லாமையநந்தமேயாகுமென்ப *
வெடுத்தவாளாவெனுஞ்சொலிதுகேளாவாகுமென்ப *
கொடுத்திடும்புனருத்தந்தான்கூறியகூறலாமே. (௰௩)

கூவலேல்புளொத்தலோடுகுறுகலேயிருத்தல்கேதல் *
வாவெனல்கனாதலேல்பாகருடணமொடுவிளித்தன் *
மேவுமற்றகவலொன்பான்வினவியேயழைத்தற்பேரோ *
யாவலாற்கீழறுத்தலறைபோதலாகுமென்ப (௰௪)

தோற்றஞ்சீர்சுலோசமெய்ப்பேசொன்மாலைநாற்பேர்சொல்லு *
மேற்றமேகியாதமென்பவியன்றமேம்பாட்டினும *
மூற்றமாஞ்சீர்த்திகீர்த்தியொளிபுகழ்மீக்கூற்றும்பேர் *
மேற்றிகழ்சீர்த்திகீர்த்திமிகுபுகழிருபேர்தானே (௰௫)

இகமியாமதிமோவாழியிகுஞ்சின்முன்னிலையசைச்சொ *
லிகமியாவரோபோமாதோடிருந்தோருமேழசைச்சொல் *
புகலுங்காலொப்பிலாதபோலுமப்பொருட்டேயாகு *
நிகரிலாவொடுவுமோடுநருமேயுடனிகழ்ச்சி (௰௬)

அம்மோடாந்தந்நந்நுட்மேபல்லால்வான்பாக்குத்தில்லே *
யெம்மோடேமன்னேபானேயும்மீறொட்டிடைச்சொல்லென்ப *
வம்மோடிற்றற்றேயத்தேயல்லிலன்றனையேய *
தம்நும்மேயவ்வேகுவ்வேசாரியைபன்மூன்றென்ப (௰௭)

திசைச்சொல்லின்பெயர்—தேசிகம் (௧) நன்னிமித்தத்தின்பெய
ர்—விரிச்சி-வாய்ப்புள்-ஆ௨-பொரவழைத்தலின்பெயர் — அ
றைகூவல்(௧)முகமனின்பெயர்—உபசாரம்- நயம் - சம்மானம்-
ஆ௩

வினாவலின்பெயர்—கடாவல்(௧)எதிர்மொழியின்பெயர்—விடை
(௧)வினாவும்விடையுங் கூடிய பொருளின்பெயர்—சல்லாபம்(௧)
தனதும்மெம்பாட்டைத்தானெடுத் துரைத்தலின்பெயர் — நெடு
மொழி(௧)அசதியாடலின்பெயர்—நகை-நயச்சொல் ஆ௨

தேற்றத்தின்பெயர்—கடைப்பிடி-ஓர்ப்பு-குறிக்கோள் ஆ௩
பொருளின்மையின்பெயர்—அநந்தம்(௧)கேளாவென்பதின்பெ
யர்—வாளா(௧)கூறியது கூறலின்பெயர்—*புனருத்தம் (௧)

அழைத்தலின்பெயர்—கூவல்-உளத்தல்-இகுத்தல்-கேதல் - வா
வெனல்-கரைதல்-ஆக்ருடணம்-விளித்தல்-அகவல். ஆ௯
கீழறுத்தலின்பெயர்—அறைபோதல் (௧)

சொன்மாலையின்பெயர்—தோற்றம்-சீர்-சுலோகம் - மெய்ப்பு-
ஆ௪-ஏற்றத்தின்பெயர்—கியாதம்(௧)மேம்பாட்டின்பெயர்—
ஊற்றம்(௧)புகழின்பெயர்—சீர்த்தி-கீர்த்தி-மீக்கூற்று ஆ௩
மிகுபுகழின்பெயர்—சீர்த்தி-கீர்த்தி ஆ௨

முன்னிலையசைச்சொல்லின்பெயர்—இக-மியா-மதி-மோ- வாழி-
இகும்-சின்- ஆ௭-அசைச்சொல்லின்பெயர்—இக-மியா - அரோ
போ-மாது-இருந்து-ஒரும்-போலும் - ஆ௮ - உடனிகழ்ச்சியி
டைச்சொல்லின்பெயர்—ஒடு-ஓடு ஆ௨

இடைச்சொல்லின்பெயர்—அம்-ஆம் தம் நம்-நும்-ஏ-அல் - ஆ
ல்-வான்-பாக்கு-தில்-எம் ஏம்-மன்-பான்-உம் ஆ௰௬
சாரியையின்பெயர்—அம்-இற்று-அற்று-அத்து-அல்-இல்-அன்-
ஆன்-ஐ-தம்-நம்-அ-கு ஆ௰௩

* புனருத்தியெனினு மொக்கும்.

(௨௱௰௨) பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

கரமொடுகானேகாரங்காட்டியவகரமென்ப ✲
தரமுறவெழுத்துக்கேற்றசாரியைநான்கேசாற்றுங் ✲
கருதிடிலையேயாலேகுவ்வொடின்னதுவேகண்ணே ✲
விரவியவூறுந்தானேவேற்றுமையுருபினுமம் (௰௮)

என்னைகொல்லெனேயாதேயிவையையக்கிளவிநாற்பே ✲
ருன்னிடிலவ்வேயிவ்வேயுவ்வொடுமூன்றுஞ்சுட்டா ✲
மன்னியயாண்டும்யாங்குமற்றிடத்தையறற்சொ ✲
லென்னினியேயேசீச்சீயேளனமிகழ்ச்சியாமே (௰௯)

உலவியவிஞ்சைவித்தையூதியஞ்சாலமோதி ✲
கலையுடனுறுதிகேள்வியிருநான்குங்கல்வியின்பேர் ✲
நலமுறக்கெழுமல்கற்றனவில்லேபயிலலும்பேர் ✲
பலமுறவோதலின்பேர்பாடமையாடலாமே (௨௰)

ஆதிநூலெழுதாக்கேள்வியாரணமோத்துச்சாகை ✲
யேதமில்சுருதிதன்னோடிருக்கிவையேழும்வேதம் ✲
வேதநூற்பொருளினும்விதித்திடுஞானபாகை ✲
யாதியாங்கருமபாகையருத்தபாகையுமாமென்ப (௨௧)

மெய்தெரியாரணந்தான்வேதத்தின்ஞானபாகை ✲
மையிலுட்பொருளினுமற்றுபநிடதமென்ப ✲
வைதிகம்வேதமுற்றமார்க்கமேபார்க்குங்காலை ✲
யையமிலிருக்கினோடுபௌடிகமாதிவேதம் (௨௨)

ஏமமாமிரண்டாம்வேதமிசைதைத்திரியத்தோடு ✲
தோமிலாயசுவாமென்றுசொல்லுவர்நல்லநூலோர் ✲
சாமமேமூன்றாம்வேதந்தகைபெறுகீதஞ்சாரும் ✲
வாமமார்நான்காம்வேதமதர்வணம்வகுக்குங்காலே (௨௩)

தந்துவாடுனேந்துறைத்தல்சார்முகவுரையினோடு ✲
முந்தியபதிகமேநூன்முகமிவைபாயிரப்பே ✲
ரந்தமாமாகமந்தொடாரிடம்பிடகமற்றுத் ✲
தந்திரம்பனுவலோடுசமயஞ்சூத்திரமுநூற்பேர் (௨௪)

எழுத்தின்சாரியையின்பெயர்—கரம்-கான்-காரம்-அகரம் ஆக ௪
வேற்றுமையுருபின்பெயர்—ஐ-ஆல்-கு-இன்-அது கண் ஆக ௬
ஐயச்சொல்லின்பெயர்—என்னை-கொல்-எவன்-யாது ஆக ௪

சுட்டின்பெயர்—அ-இ-உ ஆக ௩-இடத்தை யச்சொல்லின் பெயர்—யாண்டு-யாங்கு-ஆக ௨-இகழ்ச்சிச்சொல்லின்பெயர் — என்-இளி-ஏயே-சீச்சீ-எள்ளல் ஆக ௫

கல்வியின்பெயர்—விஞ்சை-வித்தை-ஊதியம்-சாலம்-ஓதி- கலை-உறுதி-கேள்வி- ஆக ௮. கற்றலின்பெயர்—கெழுமல்-நவில்தல்-பயிலல் ஆக ௩-ஓதலின்பெயர்—பாடம்யால் (௧)

வேதத்தின்பெயர்—ஆதிநூல் -எழுதாக்கேள்வி-ஆரணம்-ஒத்து-சாகை-சுருதி-இருக்கு-ஆக ௭- வேதநூற்பொருளின்பெயர்—ஞானபாகை-கருமபாகை-அருத்தபாகை ஆக ௩

வேதத்தின்ஞானபாகை யின்பெயர்—ஆரணம் (௧) வேதத்துட்பொருளின்பெயர்—உபநிடதம்(௧)வேதமார்க்கத்தின் பெயர்—வைதிகம்(௧) ஆதிவேதத்தின்பெயர்—இருக்கு-பௌடிகம்-ஆக ௨

இரண்டாம்வேதத்தின்பெயர்—தைத்திரியம்-யசு-ஆக ௨-மூன்றாம்வேதத்தின்பெயர்—சாமம்-அது-கீதநடையுள்ளது - நான்காம் வேதத்தின்பெயர்—அதர்வணம் (௧)

பாயிரத்தின்பெயர்—நந்துரை-புனைந்துரைத்தல்-முகவுரை- பதிகம்-நூன்முகம்-ஆக ௫-நூலின்பெயர்—ஆகமம்-ஆரிடம் - பிடகம்-தந்திரம்-பனுவல்-சமயம்-சூத்திரம் ஆக ௭

## பத்தாவதுஒலிபற்றியபெயர்த்தொகுதி.

படலமேசருக்கங்காண்டம்பரிச்சேதமத்தியாய *
மிடாறுமிலம்பகங்கணூன்முடிபிருமுப்பே *
தொடையடிவனாயொன்றிஞ்றிச்சூத்திரங்குறித்தயாப்பாம் *
படிபுகழ்கின்றநூற்பாவகவலேப்பகருங்காலே (௨௫)

நேரினமணியையோர்ந்துநிரல்படவைத்திட்டாங்கே *
யோரினப்பொருளையாய்ந்திட்டொரிவழிவைப்பதொத்தா *
மாருமோர்நெறியேயன்றியருத்தங்கள்விராச்சிறந்த *
பாரியபொதுச்சொற்றூ[illegible]படர்வதுபடலமென்ப (௨௬)

சருக்கத்தின்முடிவின்மற்றுஞ்சாரிலம்பகத்தினீற்றில் *
விருத்தமாநடையேயாகும்வேற்றிசைப்பாவினுமம் *
விர்த்துறையதனிறேடுமெய்புரையுரைப்பொருட்பேர் *
பொருத்திடும்பொழிப்பெனுஞ்சொற்பிண்டமாக்கொண்டு கூறு
[ம் (௨௭)

பலத்தினைத்தருவதாயபதிகம்பல்லசைப்பொருட்க *
டிலக்கமேயாகிக்காணத்தொகுதிசெய்திடுவதாகு *
மிலக்கியமெடுத்துக்காட்டலிதிகாசமுதாரணப்பே *
ரலக்கணர்ஞாபகந்தானரும்பொருள்பிசியுமாமே (௨௮)

காட்டியயாப்புத்தூக்குக்கவிசெய்யுள்கவிதைபாவே *
பாட்டெனப்படுவெண்பாவிற்படும்பெயர்வெள்ளைமுற்பாச் *
சூட்டியவகவற்பேராசிரியமேதொகைகலிப்பா *
மூட்டியபேர்முரட்கைமுடுகியலாகமாமே (௨௯)

குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுளேகுளகமென்ப *
விற்றெனவிருபத்தாறேயெழுத்துநான்கடியுமாகி *
யுற்றதுசந்தப்பாட்டாமதின்மிகலுவந்தநாமஞ் *
சற்றெனுமருங்குநல்லாய்தாண்டகமென்பதாமே (௩௰)

கற்றறியெழுத்துமெண்ணுங்கணக்கெனச்சொல்லுநாமஞ் *
சொற்றிடுங்கரணமோடுசூழ்ந்திடுங்கணிதமெண்ணு *
மற்றுறுமெய்யெழுத்துவடிவுதன்மையிலெழுத்தா *
மொன்றின்பேர்புலுதமாய்தமொடுதனிநிலைமெய்ப்புள்ளி (௩௧)

நூன்முடியின்பெயர்---படலம்-சருக்கம்-காண்டம்-பரிச்சேதம்-அத்தியாயம்-இலம்பகம் ஆக சு. சூத்திரயாப்பின்பெயர்— நூற்பாவகவல் (க)

ஓத்தென்பது—ஒருசாதியாயுள்ளமணிகளை வரிசையாகவைத்தாற்போலஒருசாதியாயுள்ளபொருள்களை ஒருவழிப்படவைப்பது * படலமென்பது — ஒருவழிப்படாமல் கலந்த பொருள்களோடு பொருந்திப்பலபொருள்களைத்தரும்பொதுச்சொற்கள் தொடர்வது. *

வேற்றிசைப்பாவென்பது—சருக்கமுடிவினுமிலம்பகத்தீற்றினும் விருத்தநடையது. உரைப்பொருளின்பெயர் — விரித்துரை-மெய்யுரை ஆக உ. பொழிப்பென்பது—பிண்டமாகக்கொண்டு கூறுவது. *

பதிகமென்பது — பல்வகைப்பொருட்கள் விளக்கமாகிக்காணத்தொகுதியென்பது. உதாரணத்தின்பெயர் — இலக்கியம்-எடுத்துக்காட்டல்-இதிகாசம் ஆக ஙு. அரும்பொருளின்பெயர்— ஞாபகம்-பிசி ஆக உ

பாட்டின்பெயர்—யாப்பு-தூக்கு- கவி- செய்யுள்- கவிதை- பா- ஆக சு. வெண்பாவின்பெயர்—வெள்ளை-முற்பா ஆக உ அகவலின்பெயர்—ஆசிரியம்-தொகை ஆக உ. கலிப்பாவின்பெயர்—துரட்டை (க) அராகத்தின்பெயர்—முடுகியல் (க)

குளகமென்பது—குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுள். சந்தப்பாட்டென்பது -- இருபத்தாறெழுத்து நான்கடியாகி வருவது. தாண்டகமென்பது—இருபத்தாறெழுத்தின்மிக்குவருவது *

கணக்கின்பெயர்—எழுத்து-எண் ஆக உ. எண்ணின்பெயர்—கரணம்-கணிதம் ஆக உ. எழுத்தாவன— பெயரெழுத்து- வடிவெழுத்து-தன்மையெழுத்து. ஒற்றின்பெயர்—புள்ளி-ஆய்தம்-தனிநிலை-மெய்-புள்ளி. ஆக ரு

வரியிராகம்பண்கேயமன்விளிகொளையினோடு *
பரவுகாந்தருவங்கீதம்பாணிகாமரமிசைப்பாட் *
டிரவியபாலையாழேபுலவியகுறிஞ்சியாழே *
மருதஞ்செவ்வழியாழென்னவகுத்தநாலிசையுநாற்பண் (௩௨)

நிறைந்திடுமராகத்தோடுநேர்திறமுறுப்புமற்றைக் *
குறுங்கலியாசானந்தாங்குறித்தபாலைத்திறங்கள் *
பறைந்தநைவளங்காந்தாரம்படுமலைமருளயிர்ப்புச் *
செறிந்தபஞ்சரமெய்யாற்றுச்செந்திறங்குறிஞ்சியென்ப (௩௩)

பெருநவிர்படுகுறிஞ்சிபியந்தையென்றிந்தநான்கு *
மருதயாழ்த்திறனேயாகும்வகுக்குநேர்திறத்தினோடு *
தருபெயர்திறமேயாமைசாதாரிநான்குமுல்லை *
விரவியதிறனில்யாழும்விளரியுநெய்தலாமே (௩௪)

தளர்வறுபேரியாழேசகோடயாழ்மகரயாழே *
வளையுஞ்செங்கோட்டியாழேமற்றைநால்வகையாழ்ப்பேராங் *
களைபறுகுரலேதுத்தங்கைக்கிளையுழையினோடே *
யிளியொடுவிளரிதாரமென்பவேழிசையினாமம் (௩௫)

குரன்மிடற்றுத்துத்தங்கூறுநாக்கிளையேயண்ணஞ் *
சிரமுடையிளியேநெற்றிசேர்ந்திடும்விளரிநெஞ்சாந் *
தரமுளதாரநாசிதனித்தனிப்பிறக்குமென்னப் *
பொருவிலாவாதிமூர்த்திபுலவருக்குணர்த்தவாறே (௩௬)

நான்கொடுநான்குமூன்றுநலம்பெறுமிரண்டினோடு *
நான்குமூன்றிரண்டினோடுநல்லமாத்திரைகளாகு *
மாங்குள ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வென்றுமேழுந் *
திங்கிலாவக்கரங்கள்செப்புமேழிசைக்குந்தானே (௩௭)

கால்கிளர்மௌவன்முல்லைகடம்பொடுவஞ்சிநெய்தன் *
மேலுளவீணைபுன்னைவிரும்பியமணங்களேழாம் *
பாலொடுதேன்கடாமேபகர்தயிர்நெய்யினோடே *
யேலமேவாழையேதாடிமக்கனியேழ்சுவைக்காம் (௩௮

இசைப்பாட்டின்பெயர்—வரி-இராகம்-பண்-கேயம்- விளி- கொளை-காந்தருவம்-கீதம்-பாணி-காமரம்- ஆ ௰

நாற்பண்ணின்பெயர்—பாலையாழ்- குறிஞ்சியாழ் - மருதயாழ்- செவ்வழியாழ் ஆ ௪

பாலையாழ்த்திறங்களின்பெயர்—அராகம்-நேர்திரம்- உறுப்பு-குறுங்கலி-ஆசான்- ஆ ௫. குறிஞ்சியாழ்த்திறத்தின்பெயர்— ஃநவளம்-காந்தாரம்-படுமலை-மருள்-அயிர்ப்பு-பஞ்சுரம்-மெய் ஆற்றுச்செந்திரம்- ஆ ௮

மருதயாழ்த்திறத்தின்பெயர்—நவிர்- படு -குறிஞ்சி - பியந்தை- ஆ ௪. முல்லையாழ்த்திறத்தின்பெயர்—நேர்திறம்-பெயர்திறம்-யாமை-சாதாரி- ஆ ௪. நெய்தல்யாழ்த்திறத்தின்பெயர்— திறனிஃயாழ்-விளரி ஆ ௨

நால்வகையாழின்பெயர்—பேரியாழ்- சகோடயாழ் - மகரயாழ்- செங்கோட்டியாழ் § ஏழிசையின்பெயர்—குரம் - துத்தம்-கைக்கிளை-உழை-இளி-விளரி-தாரம் ❊

ஏழிசைப்பிறப்பிடங்களின்பெயர்—குரல்-மிடறு, துத்தம்- நா, கிளை-அண்ணம், உழை - சிரம், இளி-நெற்றி, விளரி-நெஞ்சு, தாரம்-நாசி ❊

ஏழிசைக்குமாத்திரைகளாவன—குரல்- ௪, துத்தம்-௪, கிளை-௩, உழை-௨, இளி-௪, விளரி-௩, தாரம்-௨. ஏழிசையக்கரங்களின்பெயர்—ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ. ❊

ஏழிசைமணங்களின்பெயர்—மௌவல்-முல்லை - கடம்பு-வஞ்சி- நெய்தல்- வீணை- புன்னை. ஏழிசைச்சுவைகளின்பெயர்—பால்- தேன்-தயிர்-நெய்-ஏலம்-வாழை-தாடிமக்கனி ❊

---

§ பேரியாழிற்கு-நரம்பு-௨௧, சகோடயாழிற்கு-௰௪, மகரயாழிற்கு-௰௯, செங்கோட்டியாழிற்கு-௭.

(௨௱௰௮) பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

வண்டொடுகிள்ளைவாசிமதயானைதவளைதேனு *
வொண்டிறலாடென்றேழுமோதுமேழிசையிலோசை *
திண்டிறல்விசுவாமித்திரன்யமனங்கிதிங்கள்வெய்யோன் *
கண்டசொற்கௌதமன்சீர்க்காசிவனீசராமே (௩௯)

கருதுமந்தரத்திரேடுகாகுளிமந்தவோசை *
மருவியமந்தத்தோடுமத்திமஞ்சமனிசைப்பே *
ருரனுறுதாரநீண்டவுச்சமேவல்லிசைப்பேர் *
குரலினுக்குரித்தாய்நின்றகூறுமாசான்றிறங்கள் (௪௰)

துறையிரண்டென்பவெள்ளைதோற்றுஞ்செந்துறைகளாகு *
நிறைநரம்பதுவேகூடணிகளும்பண்ணுகுமென்ப *
குறைநரம்பதுதிறங்களென்பதுகூறும்யாழி *
னுறையுமின்னிசையெழாலேயோதியநூலின்பண்யாம் (௪௧)

இன்னிசைக்குழலினுமமேற்றவங்கியமேவாரி *
கின்னரம்வீணையின்பேர்கிளத்தியதண்டுமாகு *
மன்னியயாழ்ப்பேர்கோடவதியொடுவிபஞ்சியாகு *
முன்னியகருவியோடுமொழிந்திடுங்கலமுமப்பேர் (௪௨)

வரும்பிரமாணத்தன்னில்வலிக்கட்டுத்திவவென்றேதுந் *
திரும்பியமுறுக்காணிப்பேர்தேரின்மாடகமென்றுமே *
நரம்பின்பேர்குரலேகோலேதுயரியேநாடின்முப்பேர் *
புரிந்ததந்திரியுமப்பேர்போதன்முன்புகன்றவாறே (௪௩)

அரவமேகளனேயோதையாகுலமாரவாரஞ் *
சுருதிகோடணைபுலம்புதொனியியந்துழனியோசை *
யணாயிசையிடியேநாதமுழாத்தகோசணையேபாட்டே *
யினாசும்மைவகுணிமூவேழிவைகளேயொலியினமம் (௪௪)

தெளிறலேமுரலன்முக்கல்சிரற்றுதல்பயிலல்வேறு *
குளிறலேநரலலோடுகுருமித்தனெளிர்தல்சாலப் *
பிளிறலேபத்தும்போதப்பிரற்றலுமெடுத்தலோசை *
யுளையுமாஞ்சிலையொலிப்பேருறுமருமராஞ்சமாமே (௪௫)

ஏழிசையோசையின்பெயர்—வண்டு-கிள்ளை-வாசி-மதயானை-தவளை-தேனு-ஆடு. ஏழிசையீசரின்பெயர்—விசுவாமித்திரன்-இயமன்-அங்கி-திங்கள்-வெய்யோன்-கௌதமன்-காசிபன் ※

மந்தவோசையின்பெயர்—மந்தரம்-காகுளி-ஆ௨. சமனிசையின்பெயர்—மந்தம்-மத்திமம்-ஆ௨. வல்லிசையின்பெயர்—தாரம்-உச்சம்-ஆ௨. குரலினுக்குரியபடுமலைப்பாலைமுதலியதிறமேழும் § பாலையாழ்த்திறனும். ※

துறையிரண்டின்பெயர்—வெள்ளை-செந்துறை. பண்ணென்னும்பெயர்—நிறைநரம்பிற்று. திறமென்னும்பெயர்—குறைநரம்பிற்று. யாழினெழுமின்னிசையின்பெயர்—எழால் ※

இன்னிசைக்குழலின்பெயர்—வங்கியம் (௧)
வீணையின்பெயர்—வாரி-கின்னரம் தண்டு ஆ௩
யாழின்பெயர்—கோடவதி-விபஞ்சி-கருவி-கலம்- ஆ௪

யாழ்வலிக்கட்டின்பெயர்—திவவு (௧)
முறுக்காணியின்பெயர்—மாடகம் (௧)
நரம்பின்பெயர்—குரல்-கோல்-துயரி-தந்திரி ஆ௪

ஒலியின்பெயர்—அரவம்-களன்-ஓதை-ஆகுலம்-ஆரவாரம்-சுருதி-கோடணை-புலம்பு-தொனி-இயம்-துழனி-ஓசை-உரை-இசை-இடி-நாதம்-கோசனை-பாட்டு-இரை-கும்மை-வகுணி ஆ௨௧

எடுத்தலோசையின்பெயர்—தெளிறல்-முரலல்-முக்கல்-சிரற்றுதல்-பயிலல்-குளிறல்-நரலல்-குருமித்தல்-தெளிர்தல்-பிளிறல்-பிரற்றல்-உளை ஆ௰௨
சிலையொலியின்பெயர்—மருமராஞ்சம் (௧)

---

§ திறமேழாவன—படுமலைப்பாலை-செவ்வழிப்பாலை-செம்பாலை-விளரிப்பாலை-கொடிப்பாலை-மேற்செம்பாலை-அரும்பாலை-என்பன.

(உஉய) பத்தாவது- ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

சிரற்றலேதொனித்தலோடுதெழித்தலேகுமிறல்விம்ம *
லுரற்றலேயரற்றல்வேறுமுளைத்தலேயுளைத்தலேங்க *
லிரைத்தலேயிரட்டல்சாலவிடித்தலேயிமிழ்த்தன்மற்றைக் *
குரைத்தலேமுழக்கல்வீசிக்குளிறலேயிசைத்தலோடு (சசா)

சிலம்பலேயியம்பலோடுசிதைத்தலேதுவைத்தல்கூடி *
யலம்பலேகறங்கல்சிறியமுழங்கலேதழுங்கலோடு *
சிலும்பலேகதித்தல்போதத்தெவிட்டலேகனைத்தலோடே *
யுலம்புதல்புலம்பலென்னுமிவையொலித்தலின்பேரென்ப.சஎ

இம்மெனல்கல்லென்றிட்டலிழுமெனல்வல்லென்றிட்டல் [ல்
பொம்மெனலொல்லென்றிட்டல்பொள்ளெனனெரோலென்றிட்ட
கொம்மெனல்விடேலென்றிட்டல் குறிப்பொடுமுகேனென்றிட்ட
லம்மெனல்சரோலென்றிட்டலனுகரணத்திரோசை (சஅ)

படபடென்றொலித்தல்சாலப்பதபதகளகளென்றன் *
மொடுமொடென்றிட்டல்வேறுமொகமொககொளகொளென்ற *
திடுதிடென்றிட்டலோடுநெடநெடநெறுநெறென்றல் *
கடகடகலகலென்றல்கருதியவுபயவோசை (சகூ)

பூசலேதமரமற்றுப்பொருந்தியகுமுறலார்ப்புக் *
கோசணையுலம்பலோடுகோடணைகோலாகாலம் *
வீசியகலகம்வேறுமிகவுளறுதறெழித்தல் *
பேசுமாகுலமொன்றல்லாப்பேரொலியீராறும்பேர் (ருய)

திமிர்தலேயெடுத்துவந்ததிமிலமேகளகளங்கள் *
குமுதமேபேரொலிப்பேர்கூப்பிடலலறல்கத்தல் *
மையிலாதழைத்தலாகுங்கதறலுமார்ந்தெழித்த *
லமைவரவுரப்பல்சீறியதிர்த்திடலதட்டலின்பேர் (ருக)

ஒலித்தலின்பெயர்—சிரற்றல்-தொனித்தல்-தெழித்தல்- குமிறல்-விம்மல்-உரற்றல்-அரற்றல்-உரைத்தல்-உளைத்தல்-எங்கல் - இலாத்தல்-இரட்டல்-இடித்தல்-இமிழ்த்தல்-குரைத்தல்-முழக்கல்-குளிறல்-இசைத்தல் யஅ

சிலம்பல்-இயம்பல்-சிதைத்தல்-துவைத்தல்-அலம்பல் - கறங்கல்-அழுங்கல்-தழங்கல்-சிலும்பல்-கலித்தல்-தெவிட்டல் - கனைத்தல்-உலம்புதல்-புலம்பல் (யச) ஆ௲உ

அனுகரணவோசையின்பெயர்—இம்மெனல்-கல்லெனல் - இழுமெனல்-வல்லெனல்-பொம்மெனல்-ஒல்லெனல்- பொள்ளெனல்-நொலெனல்-கொம்மெனல்-விட்டெனல் - முகேரெனல்-அம்மெனல்-சரேலெனல் ஆ௲ய௲

உபயவோசையின்பெயர்—படபடெனல்- பதபதெனல் - களகளெனல்-மொடுமொடெனல்-மொகமொகெனல் - கொளகொளெனல்-திடுதிடெனல்-நெடநெடெனல்-நெறுநெறெனல்- கடகடெனல்-கலகலெனல் ஆ௲யக

ஒன்றல்லாப்பேரொலியின்பெயர்—பூசல்-தமரம் - குமுறல்-ஆர்ப்பு-கோசனை-உலம்பல்-கோடனை-கோலாகாலம்-கலகம் -ஊறுதல்-தெழித்தல்-ஆகுலம் ஆ௲யஉ

பேரொலியின்பெயர்—திமிர்தல்-திமிலம் - களகளம் - குமுதம்-ஆ௲ச. சமையிலாதழைத்தலின்பெயர்—கூப்பிடல்-அலறல்-கத்தல-கதறல்-ஆ௲ச. அதட்டலின்பெயர்—தெழித்தல்- உரப்பல்-அதிர்த்திடல் ஆ௲௫

இறந்ததுநிகழ்வுமற்றையெதிர்வுமாம்புராணஞ்செய்தோ *
னறந்தருகுணபத்திரன்றாளரணெனச்சரணமானேன் *
மறந்தலைப்படாதவீரைமன்னன்மண்டலவன்செய்தான் *
சிறந்திடுமொலிபற்றும்பேர்ச்செய்யுளைப்பத்திரண்டே. (குஉ)

பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி

முற்றிற்று.

ஆ தொகுதி - ய - க்கு - விருத்தம் - எாஙயசு.

# சூசிபத்திரிகை.


| பக்கம். | தொகுதிப்பெயர். | விருத்தத் தொகை. |
|---|---|---|
| க | சிறப்புப்பாயிரம் | அ |
| சா | முதலாவது-தெய்வப்பெயர்த்தொகுதி | கூரு |
| ருரு | இரண்டாவது-மக்கட்பெயர்த்தொகுதி | ாஎ |
| சாகு | மூன்றாவது-விலங்கின்பெயர்த்தொகுதி | எஅ |
| அஅ | நான்காவது-மரப்பெயர்த்தொகுதி | சாஅ |
| ாஅ | ஐந்தாவது-இடப்பெயர்த்தொகுதி | சாஅ |
| ாஉஅ | ஆறாவது-பல்பொருட்பெயர்த்தொகுதி | ருகு |
| ாருஅ | ஏழாவது-செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி | எசா |
| ாசாஉ | எட்டாவது-பண்புபற்றியபெயர்த்தொகுதி | அஉ |
| ாஅசா | ஒன்பதாவது-செயல்பற்றியபெயர்த்தொகுதி | சாஎ |
| உாசா | பத்தாவது-ஒலிபற்றியபெயர்த்தொகுதி | குஉ |


ஆ தொகுதி-ய-க்கு-விருத்தம்-எாஙச.